# திருஅவையின்
# சமூகப் போதனைகள்

தொகுப்பாசிரியர்

அருள்பணி. சூ. சந்தியாகு ராசா

**நூல்** : **திருஅவையின் சமூகப் போதனைகள்**

**தொகுப்பாசிரியர்** : **அருள்பணி. சூ. சந்தியாகு ராசா**

**முதல் பதிப்பு** : நவம்பர் 2016

**பக்கங்கள்** : xii + 244

**பிரதிகள்** : 1000

**விலை** : ரூ. 100/-

**தாள்** : 70 GSM ஃபப்

**அச்சு** : ஆண்டோ பதிப்பகம், சிவகாசி

**கிடைக்குமிடம்** : தேடல் வெளியீடுகள்
தூய பவுல் குருத்துவக் கல்லூரி
திருச்சிராப்பள்ளி - 620 001
(0431-2412500)



# உள்ளடக்கம்

**வாழ்த்துரை** v

**தொகுப்பாசிரியர் உரை** ix

1. திருஅவையின் சமூகப் போதனை: தோற்றமும் 125 ஆண்டுக்கால வரலாற்று வளர்ச்சியும்
   *முனைவர் அருள்பணி. பவுல் லியோன் வறுவேல்* 1
2. விவிலியக் களஞ்சியத்திலிருந்து திருஅவையின் சமூகப் போதனைகள்
   *முனைவர் அருள்பணி. அ. மரிய அருள் ராஜா சே.ச.* 30
3. திருஅவைப் போதனைகளில் கூட்டுத்தோழமையும் பொதுநலன் பேணலும்
   *முனைவர் அருள்பணி. லூ. ஜீவராஜ்* 41
4. திருஅவையின் சமூகப் போதனைகளில் சமூக நீதி
   *முனைவர் அருள்பணி. ஆ. சூ. ஜான்பீட்டர்* 68
5. திருஅவையின் சமூகப் போதனைகளில் மனித உழைப்பும் தொழிலாளர் நலனும்
   *பேராசிரியர் முனைவர் ம. விக்டர் லூயிஸ் அந்துவான்* 84
6. திருஅவையின் சமூகப் போதனைகளில் மனித உரிமைகளும் கடமைகளும்
   *முனைவர் அருள்பணி. வ. அருள்ராஜ்* 101
7. திருஅவையின் சமூகப் போதனைகளில் போர், அமைதி பற்றிய அறநெறிப் பார்வை
   *முனைவர் அருள்பணி. கஸ்பார்* 115

8. திருஅவையின் சமூகப் போதனைகளில் ஏதிலிகளும் புலம்பெயர்ந்தோரும்

*முனைவர் அருள்பணி. ஆ. குழந்தை க.ச.* 128

9. திருஅவையின் சமூகப் போதனைகளில் வணிக அறநெறி

*முனைவர் அருள்பணி. சகாயராஜ் ஸ்டான்லி சே.ச.* 143

10. திருஅவையின் சமூகப் போதனைகளில் திருமணமும் குடும்பமும்

*திருமதி. தனசீலி திவ்வியநாதன்* 157

11. திருஅவையின் சமூகப் போதனைகளில் பெண்களின் நிலை

*அருள்சகோதரி முனைவர். ஸ்டெல்லா* 175

12. திருஅவையின் சமூகப் போதனைகளில் மருத்துவ அறநெறி

*முனைவர் அருள்பணி. சாமுவேல் சாவியோ* 192

13. சமூகத் தொடர்பு ஊடகங்களில் விளம்பரம்: ஓர் அறநெறிப் பார்வை

*முனைவர் அருள்பணி. அல்போன்ஸ் பிலிப் ச.ச.* 203

14. சுற்றுச்சூழல் பாதுகாப்புப் பற்றிய திருஅவையின் சமூகப் போதனைகள்

*முனைவர் அருள்பணி. சூ. சந்தியாகு ராசா* 212

15. தமிழகத் திருஅவையின் சமூகப் போதனைகளும் முன்னெடுப்புகளும்

*முனைவர் அருள்பணி. ச.தே. செல்வராசு* 223

பிற்சேர்க்கை

திருஅவையின் சமுதாயப் படிப்பினை ஏடுகளில் முக்கியமானவை 243



# வாழ்த்துரை

திருஅவை என்றாலே நம் நினைவுக்கு வருவது பொதுவாக அதன் இரு செயல்பாடுகள். ஒன்று, திருஅவை ஆற்றுகின்ற நற்செய்தி அறிவிப்பு பணி. மற்றொன்று, திருஅவையின் திருப்பலி, அருளடையாளக் கொண்டாட்டங்கள், பிற வழிபாட்டுக் கொண்டாட்டங்கள், பக்தி முயற்சிகள் போன்றவை ஆகும். அதாவது, திருஅவையின் போதனைகள் பெரும்பாலும் கத்தோலிக்கக் கோட்பாடுகள், இறைநம்பிக்கை, வழிபாடு, அறநெறி பற்றியவையாகவே இருந்துள்ளன. ஆனால் பொதுவாகவே உலகு சார்ந்தவை பற்றிய, குறிப்பாகத் திருஅவையின் சமூக ஈடுபாடு பற்றிய சமூகப் போதனைகள் நம் நினைவுக்கு வருவது இல்லை. அதாவது, தொடக்கத் திருஅவை நற்செய்தி நூல்களின் அடிப்படையில் சமூகப் பிரச்சினைகளை ஆய்ந்து சில தீர்வுகளை அவ்வப்போது வழங்கியிருந்தாலும், போதிய அளவுக்கு அழுத்தம் கொடுக்கப்படவில்லை.

18,19-ஆம் நூற்றாண்டுகளில் ஐரோப்பாவிலும் அதைத் தொடர்ந்து அமெரிக்காவிலும் தொழிற்புரட்சி ஏற்பட்டது. அதன் நோக்கம் குறைந்த சம்பளம், உச்சநிலை உற்பத்தி, கொள்ளை இலாபம் போன்ற இலக்குகள் ஆகும்; ஆனால் இவை முதலாளியம் வலுப்பெற மட்டுமே துணையாக இருந்தன. இந்நிலையில் திருஅவையின் சமூகப் போதனைகள் குறிப்பிடத்தகுந்த முறையில் 125 ஆண்டுகளுக்கு முன்பு திருத்தந்தை 13-ஆம் லியோ வெளியிட்ட *தொழிலாளர் நிலைமை* என்ற ஆவணத்துடன் வலுப்பெறத் தொடங்கின. இச்சுற்றுமடல் பொருளாதார உலகை உருவாக்குபவரும் அதன் மையமும் மனிதரே ஆவர்; எனவே மனித மாண்பு எப்போதும் போற்றப்பட வேண்டும்; முழு மனித நலனும் காக்கப்பட வேண்டும்; அவர்கள் சங்கங்கள் அமைக்கவும் நீதியான சம்பளம் பெறவும் உரிமை உண்டு; அவர்கள் தனிச் சொத்துரிமை பெற்றவர்கள்; அது யாருக்கும் மறுக்கப்படக் கூடாது; ஆனால் அதே வேளையில் அது பொதுநலனுக்கு முரணாக அமையலாகாது என்று எடுத்துரைத்தது.

இதைத் தொடர்ந்து திருஅவையில் சமூக ஈடுபாடு பற்றிய பல்வேறு ஆவணங்கள் வெளிவந்தன. அண்மையில் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் வெளியிட்ட *இறைவா உமக்கு நன்றி (Laudato Si)* என்னும் ஏட்டில் அவர் பின்வருமாறு கூறுகிறார்: நமது இல்லமான பூவுலகை நாம் பேணிக்காக்க

வேண்டும்; ஏழைகளின் குரலுக்குச் செவிசாய்க்க வேண்டும். ஆனால் நாமோ அதை ஒரு ''மாபெரும் குப்பைக் குவியலாக'' மாற்றியுள்ளோம். அளவுக்கு மீறிய நுகர்வுக் கலாச்சாரம் நம்மைக் கடவுளிடமிருந்தும் பிற மனிதரிடமிருந்தும் பிரித்து விடுகிறது. இயற்கையை மதித்துச் சுற்றுப்புறச் சூழலை மாசின்றிக் காக்க வேண்டும்.

இயேசு தம் வார்த்தைகள், அரும்செயல்கள் வழியாக ஆற்றிய பணியைத் தலத் திருஅவைகள் இன்றும் தொடர்ந்து ஆற்ற வேண்டும். ஏனெனில் சமூக ஈடுபாடு என்பது திருஅவையின் இன்றியமையா ஓர் அம்சமாகும். நமது அன்புக்கு அடித்தளமாக எப்போதும் சமூக நீதி இருக்க வேண்டும். ஏனெனில் நமது வாழ்வு என்பதே கடவுளின் ஒரு கொடை. இந்த வள்ளன்மை சுயநலத்தைத் தாண்டி சமூக வாழ்வில் பிறரிடமும் காட்டப்பட வேண்டும். ஆகவே கடவுளின் சாயலைத் தாங்கிய மானிடரின் உயிர் எப்போதும் மதிக்கப்பட வேண்டும்; நாம் ஒரு சமூகமாக இணைந்து மானிடரின் உரிமைகளுக்காக குரல் கொடுக்க வேண்டும். ஏனெனில் ஏழைகளின் மேம்பாடே சமூக மேம்பாடு ஆகும். இதை நம் மறைமாவட்டங்களிலும் துறவற இல்லங்களிலும் நிறுவனங்களிலும் செயல்படுத்துகிறோமா எனச் சுய ஆய்வுக்கு நம்மையே நாம் உட்படுத்திக் கொள்வோம். அநீதிகள் இல்லாத ஒரு புதிய சமுதாயத்தை நற்செய்தி அடிப்படையில் உருவாக்குவோம்.

*தொழிலாளர்களின் நிலைமை* என்னும் ஏடு வெளியிடப்பட்ட 125-ஆம் ஆண்டு நிறைவடையும் நேரத்தில் *திருஅவையின் சமூகப் போதனைகள்* என்னும் இந்நூல் வெளிவருவது மிகவும் போற்றுதற்குரியது. அத்துடன் எமது பவுல் குருத்துவக் கல்லூரியில் நடைபெறும் இறையியல் ஆய்வரங்கின் தொடக்கத்திலேயே இது வெளியிடப்படுவது மிகவும் பாராட்டத்தக்கது. நவம்பர் 20-ஆம் நாளுடன் முடிவடைந்த *இறை இரக்கத்தின் ஆண்டு* நிறைவில் இந்நூல் வெளிவருவது இறைவன் நமக்குக் கொடுத்த ஒரு கொடையாகும்.

இந்நூலில் திருஅவையின் சமூகப் போதனைகளின் வரலாற்றுப் பார்வை, விவிலிய அடித்தளம், தொழிலாளர்களின் நலன், மனிதர்களின் உரிமையும் பொறுப்புணர்வும், பெண்களின் நிலை, கூட்டுத் தோழமை, பொது நலன் பேணுதல், நமது தமிழகத் தலத் திருஅவையின் முன்னெடுப்புகள் ஆகிய தலைப்புகளில் ஆழமான இறையியல் கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. இந்த ஏழு கட்டுரைகளையும் சிறப்பாக எழுதி ஆய்வரங்கத்தில் கருத்துரையும் வழங்கிய



கட்டுரையாளர்கள் எழுவருக்கும் எம் நெஞ்சார்ந்த நன்றிகள். இத்துடன் திருஅவையின் சமூக ஈடுபாட்டோடு தொடர்புடைய மேலும் எட்டுக் கட்டுரைகளை எழுதிக் கொடுத்த எண்மருக்கும் எம் நன்றியும் பாராட்டுகளும்.

இறுதியாக, இந்நூலை அழகிய வடிவில் தொகுத்து, அச்சிட்டு வெளியிடும் *தேடல் வெளியீடுகள்* பதிப்பகத்தின் ஒருங்கிணைப்பாளர் முனைவர் அருள்பணி. சூ. சந்தியாகு ராசா அவர்களுக்கு நம் பாராட்டுகள். இதை நீங்கள் வாசித்து, புத்தொளி பெறவும் புதிய சமூகத்தைப் படைக்கவும் உங்களை வாழ்த்துகிறேன்.

**திருச்சிராப்பள்ளி** **முனைவர் அருள்பணி. ச. ஆரோக்கியராஜ்**
**20.11.2016** **அதிபர், புனித பவுல் குருத்துவக் கல்லூரி**

# தொகுப்பாசிரியர் உரை

உலகில் காணப்படும் பல்வேறு சமயங்களோடு ஒப்பிடும்போது கத்தோலிக்கக் கிறிஸ்தவ சமயத்தின் சமூகப் போதனைகள் மிகவும் முற்போக்குத்தன்மை கொண்டதாக உள்ளது. இது காலத்தின் தேவைக்கு ஏற்பக் கடவுளின் சாயலாக உள்ள மானிடத்தின் வளர்ச்சிக்கு வேண்டிய சமூகப் போதனைகளை வழங்கி வந்துள்ளது. 1891-ஆம் ஆண்டு மே மாதம் 15ஆம் நாள் கத்தோலிக்கத் திருஅவையின் நவீனகால வரலாற்றில் மிகவும் முக்கியமான நாள். திருத்தந்தை 13ஆம் லியோ *தொழிலாளரின் நிலைமை* எனும் சுற்றுமடலை வெளியிட்டுத் திருஅவை தொழிலாளர்கள்பால் கொண்டுள்ள அக்கறையை வெளிப்படுத்தினார். 124 ஆண்டுகள் கழித்துத் திருத்தந்தை பிரான்சிஸ் *இறைவா உமக்கே புகழ்* (2015) எனும் சுற்றுமடல் எழுதி நமது பொது இல்லமான பூவுலகைப் பேணிக்காக்க அழைப்பு விடுத்தார். இவ்வாறாக, கடந்த 125 ஆண்டுகளில் வெளிவந்த திருஅவையின் போதனைகள் கத்தோலிக்கத் திருஅவையில் மட்டுமல்ல; உலகில் உள்ள பல தரப்பு மக்களாலும் ஏற்கப்பட்டு மானுட வளர்ச்சிக்கு வழிவகுத்துள்ளது.

கத்தோலிக்கத் திருஅவையின் சமூகப் போதனைகள் அனைத்தும் மானுடமாண்பு, பொதுநலன் பேணல், கூட்டுத் தோழமை, சார்நிலை உரிமை ஆகியவற்றை மையமாக கொண்டு எழுதப்பட்டன. *தொழிலாளர் நிலைமை* (1891) எனும் சுற்றுமடல் தொழிலாளர்கள் சங்கம் அமைக்க ஆதரவாக இருந்தது. 40 ஆண்டுகள் கழித்து 11-ஆம் பியூசு *சமூக ஒழுங்கமைவு* (1931) எனும் ஏட்டில் ஒவ்வொரு குடும்பமும் மாண்புடன் வாழ்வதற்குத் தேவையான ஊதியம் வழங்கப்பட வேண்டும் என்றது.

திருத்தந்தை 12-ஆம் பியூசு இரண்டாம் உலகப் போரின்போது போருக்கு எதிராகப் பேசினார். அவருக்குப் பின் பொறுப்பேற்ற திருத்தந்தை 23-ஆம் ஜான் அவரின் அடியொற்றி *அன்னையும் ஆசிரியமும்* (1961), *அவனியில் அமைதி* (1963) ஆகிய இரண்டு ஏடுகளை வெளியிட்டார். இவர் *அன்னையும் ஆசிரியமும்* எனும் ஏட்டில் உலக அமைதிக்குத் தேவையான காரணிகள் என்ன என்பதைச் சுட்டிக்காட்டினார். ஆயுதப் போர், அணு ஆயுதங்கள் தயாரிப்பு ஆகியவற்றைக்

கண்டித்தார். மேலும், இவ்வேடுகளில் வளரும் நாடுகளில் காணப்படும் பொருளாதார ஏற்றத்தாழ்வுகளுக்குக் காரணம் என்ன என்பதையும் ஆய்வு செய்கின்றார். *அவனியில் அமைதி* எனும் ஏட்டில் அமைதி என்பது போர் இல்லாநிலை என்பது அல்ல; மாறாக அது நீதி, அன்பு ஆகியவற்றை அடித்தளமாகக் கொண்டு கட்டியெழுப்பப்படும் ஓர் அரசியல் ஒழுங்கமைவு என்கிறார்.

இரண்டாம் வத்திக்கான் சங்கத்தில் இறுதியாக வெளிவந்த ஏடு *இன்றைய உலகில் திருஅவை* (1965). இவ்வேடு இன்றைய மனிதரின், குறிப்பாக ஏழைகள் மற்றும் துன்புறுவோர் அனைவரின் மகிழ்வும் எதிர்நோக்கும் ஏக்கமும் கவலையும் கிறிஸ்தவர்களுக்கு முற்றிலும் உரியனவே. கிறிஸ்துவைப் பின்பற்றும் இவர்களின் இதயத்தில் உண்மையாக மனிதக் கூறுகள் யாவும் எதிலொலிக்கவே செய்கின்றன (எண். 1) எனத் தொடங்குகிறது. மேலும், காலத்தின் குறிகளை ஆய்ந்தறிந்து, நற்செய்தியின் ஒளியில் அவற்றின் பொருளை எல்லாக் காலக்கட்டங்களிலும் விளக்கி உரைப்பது திருஅவையின் கடமை என்கிறது (எண், 4).

திருத்தந்தை 6-ஆம் பால் வெளியிட்ட *மக்களின் முன்னேற்றம்* (1967) எனும் ஏட்டில் மானுடத்தை மையப்படுத்தாத பொருளாதார வளர்ச்சி பயனற்றது என்று கூறுகிறார். பொருளைவிட மானுடம்தான் மையம் என்று வலியுறுத்துகிறார். இக்காலத்தில் உருவான விடுதலை இறையியலின் ''ஏழைகளுக்கு முன்னுரிமை'' என்ற கருத்து இதற்கு மேலும் வலுவூட்டியது.


1970இல் ஆயர் மன்றம் வெளியிட்ட *உலகில் நீதி* எனும் ஏட்டில் நீதி நிலைநாட்ட உழைப்பது நற்செய்தி அறிவிப்பின் ஒரு முக்கியக் கூறு என்றது. 1981இல் திருத்தந்தை புனித இரண்டாம் ஜான் பால் *மனித உழைப்பு* என்ற சுற்றுமடலை எழுதி உழைப்பு மனிதருக்காக உள்ளதேயன்றி, மனிதர் உழைப்புக்காகவன்று என்றார். அவர் எழுதிய *நூறாம் ஆண்டு* (1991) எனும் சுற்றுமடலில் 1891 தொடங்கி 1991 வரை உலக வரலாற்றில் நடந்த பல மாற்றங்களைச் சுட்டிக்காட்டி சோஷலிசத்தின் வீழ்ச்சியை ஆய்கின்றார்; அதேவேளையில் முதலாளியம் மக்களின் சமூகப் பொறுப்பை ஆதரிக்கத் தவறிவிட்டது என்று கூறி அரசின் கடமைகள் என்ன என்று சுட்டிக்காட்டுகிறார்.



திருத்தந்தை 16ஆம் பெனடிக்ட் எழுதிய *உண்மையில் அன்பு* (2009) எனும் சுற்றுமடலில் முழுமனித முன்னேற்றம் அன்பு, உண்மை ஆகியவற்றை அடித்தளமாகக் கொண்டு கட்டியெழுப்பப்பட வேண்டும் என்கிறார். திருத்தந்தை பிரான்சிஸ் எழுதிய *மகிழ்ச்சிதரும் நற்செய்தி* (2013) எனும் சுற்றுமடலில் நற்செய்தி அறிவிப்பின் ஓர் இன்றியமையாத அம்சம் அதன் சமூக நீதிப் பார்வை என்கிறார். எந்த ஒரு மனிதரும் மனிதக் குழுவும் ஒதுக்கி வைக்கப்படக்கூடாது என்கிறார். இறுதியாக அவர் எழுதிய சமூகப் போதனைகளைத் தாங்கிய *இறைவா உமக்கே புகழ்* (2015) எனும் சுற்றுமடலில் இறைவன் மானுடத்திடம் ஒப்படைத்த பூவுலகத்தைப் பொறுப்புடன் பேணிக்காக்க வேண்டும் என அழைப்பு விடுக்கின்றார்.

இவ்வாறாக, திருஅவையின் சமூகப் போதனைகள் மானுட வாழ்வின் அனைத்து நிலைகளைப் பற்றியும், ஏன் பூவுலகைப் பற்றியும் பேசியுள்ளது. சில தளங்களில் சமூகப் போதனைகள் செயல்வடிவம் பெறத் திருஅவை முயற்சி எடுத்துள்ளது. ஆனாலும், அது கடக்கவேண்டிய தூரம் இன்னும் நிறையவே உள்ளது. எனவேதான் திருஅவையில் சமூக மாற்றுப் பணிகளை முன்னெடுக்க வலியுறுத்தி திருஅவையின் சமூகப் போதனைகள் எனும் இந்நூல் வெளிவருகின்றது. இந்நூல் *தொழிலாளரின் நிலைமை* எனும் ஏடு வெளிவந்து 125 ஆண்டுகள் நிறைவுறும் இவ்வேளையில் வருவது சிறப்பான ஒன்று. இந்நூல் 2016ஆம் ஆண்டு நவம்பர் 24, 25 தேதிகளில் எமது பவுல் குருத்துவக் கல்லூரியில் *திருஅவையின் சமூகப் போதனைகள்* எனும் தலைப்பில் நடைபெற உள்ள இறையியல் ஆய்வரங்கத்தில் வாசிக்கப்பட உள்ள ஏழு கட்டுரைகளையும், ஏனைய 8 கட்டுரைகளையும் உள்ளடக்கி மொத்தம் 15 கட்டுரைகளைக் கொண்டுள்ளது. இக்கட்டுரைகளை எழுதி வழங்கிய அனைத்து நபர்களுக்கும் எனது நன்றியை உரித்தாக்குகின்றேன். இந்நூலுக்கு வாழ்த்துரை வழங்கிய *எம் பவுல் குருத்துவக் கல்லூரி அதிபர் முனைவர் அருள்பணி ச. ஆரோக்கியராஜ்* அவர்களுக்கும் எனது நன்றி. கட்டுரைகளை மொழித்திருத்தம் செய்ய எனக்கு உதவிய எம் குருத்துவக் கல்லூரிப் பேராசிரியர்கள் *லூ. ஜீவராஜ், மை. வில்லியம் லூர்து ராஜ், ஜோ. விக்டர் இம்மானுவேல்* அவர்களுக்கும், எம் குருத்துவக் கல்லூரி இறையியல் மாணவர்களாகிய *மத்தியாஸ், வளன், ஜேம்ஸ்* ஆகியோருக்கும், *அருட்சகோதரி மாகி ம.ஊ.ச.* அவருக்கும் எனது நன்றியைச் சமர்ப்பிக்கின்றேன்.

கையெழுத்துப் பிரதிகளை கணினிப்படுத்தித் தந்த எம் அலுவலகப் பணியாளர் *அ. ஜான்ஸி* அவருக்கும் என் நன்றி. நூலை அழகுற அச்சிட்டுத் தந்தவர்கள் சிவகாசி, *ஆண்டோ அச்சகத்தார்*, அவர்களுக்கும் நன்றி.



**புனித பவுல் குருத்துவக் கல்லூரி** **அன்புடன்**
**திருச்சிராப்பள்ளி** **அருள்பணி. சூ. சந்தியாகு ராசா**
**20.11.2016** **கல்லூரி முதல்வர்**



# 1. திருஅவையின் சமூகப் போதனை: தோற்றமும் 125 ஆண்டுக்கால வரலாற்று வளர்ச்சியும்

*முனைவர் அருள்பணி. பவுல் லியோன் வறுவேல்*
*கிறிஸ்தவ அறவியல் பேராசிரியர்*
*கிறிஸ்து அரசர் இறையியல் கல்லூரி*
*பஃபலோ, நியூயார்க், அமெரிக்க ஐக்கிய நாடுகள்*

## முன்னுரை

நூற்று இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னர், 1891-ஆம் ஆண்டு மே மாதம் 15-ஆம் நாள் திருஅவையின் வரலாற்றில் சிறப்பான ஒரு நிகழ்ச்சி நடந்தது. அந்த நாளில் தான் திருத்தந்தை 13-ஆம் லியோ *"தொழிலாளரின் நிலைமை"* பற்றி, திருஅவைப் போதனைகள் அடங்கிய சுற்றுமடல் ஒன்றினை உலகிற்கு அளித்தார். அந்தச் சுற்றுமடல் நவீன காலத்தில் திருஅவை வழங்கிய சமூகப் போதனையின் தொடக்கமாக அமைந்தது.

*"தொழிலாளரின் நிலைமை"* பற்றிய அந்தச் சுற்றுமடல் தொடங்கிவைத்த சமூகப் போதனையின் வரலாற்றுப் பயணம் இருபதாம் நூற்றாண்டைக் கடந்து இருபத்தொன்றாம் நூற்றாண்டிலும் தொடர்கிறது. இந்த நெடிய பயணத்தின் முக்கியக் கட்டங்களை அடையாளம் கண்டு அவற்றின் தாக்கத்தைச் சீர்தூக்கிப் பார்க்கும் முயற்சியாக இக்கட்டுரை அமைகிறது.

## 19-ஆம் நூற்றாண்டு வரை...

சமூகப் பிரச்சினைகள் குறித்துத் திருஅவை தனது தொடக்க காலத்திலிருந்தே நற்செய்தியின் ஒளியில் ஆய்ந்து தீர்வுகளை முன்மொழிந்து வந்துள்ளது என்பது உண்மை. தொடக்ககாலத் திருஅவைத் தந்தையர்கள் அக்காலத் திருஅவை சந்தித்த பல சமூகப் பிரச்சினைகளைத் தம் நூல்களில் குறிப்பிடுகின்றனர். அந்தப் பிரச்சினைகளுள் சில: அமைதியின் அரசராக வந்த இயேசுவின் சீடர்களான கிறிஸ்தவ மக்கள்

ஆயுதம் தாங்கி வன்முறையின் வெளிப்பாடான போர்ச்செயலில் ஈடுபடலாமா? கடவுளுக்குக் கீழ்ப்படிய அழைக்கப்பட்ட கிறிஸ்தவ மக்கள் இவ்வுலகப் பாணியில் ஆதிக்கம் செலுத்தும் அரசியல் அதிகாரிகளுக்கு ஏன் கீழ்ப்படிய வேண்டும்? அமைதியை நிலைநாட்டுவதில் கிறிஸ்தவர்களின் பொறுப்பு என்ன? சகோதர உணர்வை வளர்ப்பது எவ்வாறு? உழைப்பின் மூலம் பெறுகின்ற செல்வத்தை ஏழைகளோடு பகிர்ந்துகொள்ள வேண்டுமா? மண்ணுலக அரசுக்கும் இறையாட்சிக்கும் உள்ள தொடர்பு யாது? குடும்ப வாழ்வில் கிறிஸ்தவர்களின் பொறுப்பு என்ன? – இவையும் இவைபோன்ற பிற பிரச்சினைகளும் தொடக்ககாலத் திருஅவையில் விவாதிக்கப்பட்டன.

இடைக்காலத்தில் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட ஒரு முக்கிய பிரச்சினை திருஅவைக்கும் ஐரோப்பிய அரசுகளுக்கும் இடையிலான உறவுகள் பற்றியதாகும். திருஅவைக்கும் அரசுகளுக்கும் இடையே மோதல்கள் ஏற்பட்டன. உலக அதிகாரத்திற்கும் ஆன்மிக அதிகாரத்திற்கும் இடையிலான உறவை வரையறுப்பதில் கருத்தொற்றுமை ஏற்படவில்லை. பின்னர், ஐரோப்பிய நாடுகள் இந்தியாவுக்கும் அமெரிக்காவுக்கும் கடல்வழிப் பாதை கண்டுபிடித்ததைத் தொடர்ந்து வர்த்தகமும் பண்பாட்டுப் பரிமாற்றமும் நிகழ்ந்தன. அக்காலக் கட்டத்தில், அடிமை முறையை ஆதரிப்பது தவறு என்ற கருத்து எழுந்தது. பன்னாட்டு நீதி பற்றிய ஆய்வுகளும் மேற்கொள்ளப்பட்டன.

18 மற்றும் 19–ஆம் நூற்றாண்டுகளில் ஐரோப்பாவிலும் பின்னர் அமெரிக்காவிலும் தொழில் புரட்சி ஏற்பட்டது. கையுழைப்பால் பொருட்களை உருவாக்குவதை விட இயந்திரங்களின் உதவியால் அவற்றைப் பேரளவிலும் விரைவாகவும் செய்யலாம் என்ற அடிப்படையில் தொழிற்சாலைகள் எழுந்தன. ஆனால் தொழிற்சாலைகளில் வேலைசெய்த ஆடவர், பெண்டிர், சிறுவர்களுக்கு உகந்த சூழ்நிலைகள் உருவாக்கிக் கொடுக்கப்படவில்லை. குறைந்த ஊதியம் கொடுத்து உச்ச அளவு உற்பத்தியையும் இலாபத்தையும் எதிர்நோக்கினர் முதலாளிகள். இப்பின்னணியில் பாட்டாளிகளின் உரிமைகளைப் பாதுகாக்கும் வண்ணம் பொதுவுடைமைக் (சோஷலிசம்) கொள்கை எழுந்தது. தனியார் உரிமை மீறப்படலாகாது என்ற அடிப்படையில் முதலாளிகளுக்குச் சாதகமாக முதலாளியக் கொள்கை வாதாடியது.



சமூகப் பொருளாதார நிலையை விளக்கிப் பொருளுரைக்க எழுந்த இக்கொள்கைகளும் கருத்தியல்களும் மனித நலன் முழுவதையும், மனித அறநெறி, சமயநெறி ஆகியவற்றையும் பற்றி வெவ்வேறான கருத்துக்களைக் கொண்டிருந்தன. இந்தப் பின்னணியில்தான் திருத்தந்தை 13–ஆம் லியோ சமூக அறநெறி பற்றிய முதல் சுற்றுமடலை வெளியிட்டார்.

சமூகப் பிரச்சினைகள் பற்றி திருஅவை பல தருணங்களில் அதிகாரப்பூர்வமாகத் தனது போதனைகளை அறிவித்து வந்துள்ளது. திருத்தந்தை நேரடியாகவோ, அனைத்துலக ஆயர்கள் கூடிவருகின்ற பொதுச்சங்கங்களோ, ஆயர் பேரவைகளோ, அப்பேரவைகளின் கூட்டமைப்புகளோ, மேற்கூறிய சமூகப் போதனையை வெவ்வேறு தருணங்களிலும் காலக்கட்டங்களிலும் வழங்கியுள்ளனர்.

திருஅவையின் சமூகப் போதனையைப் புரிந்துகொள்ள சில வழிமுறைகள்:

1) திருஅவையின் சமூகப் போதனையில் அடங்கியுள்ள சிந்தனைகளும் தத்துவங்களும் மனித வரலாற்றில் மக்கள் பெற்றுள்ள அனுபவங்களையும் புரிதல்களையும் இயேசுவின் போதனைகளையும் நற்செய்தி மதிப்பீடுகளையும் அடிப்படையாகக் கொண்டுள்ளன. எனவே திருஅவையின் சமூகப் போதனை மனித வரலாற்று அனுபவத்திற்கும் நற்செய்தி மதிப்பீடுகளுக்கும் முரணாக அமைதல் ஆகாது.

2) திருஅவை சமூக–பொருளாதார–அரசியல்–பண்பாட்டுத் துறைகளில் எழுகின்ற பிரச்சினைகளுக்கு நற்செய்தி ஒளியில் தீர்வுகள் வழங்கும்போது சமூகப் பகுப்பாய்வின் அடிப்படையில் அத்தீர்வுகளை அளிக்கிறது. இத்தகைய பகுப்பாய்வு அறிவியல் பாணியில் அமைந்த அணுகுமுறையாக இருக்கவேண்டும்.

3) திருஅவை வழங்குகின்ற சமூகப் போதனையில் நிலையான, காலங்கடந்த தத்துவங்களும் உண்டு, அதே சமயத்தில் வரலாற்று மாற்றங்களுக்கு உட்பட்ட வழிமுறைகளும் பரிந்துரைகளும் உண்டு. இந்த வேறுபாட்டைக் கருத்தில் கொண்டு திருஅவையின் சமூகப் போதனைகளை நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

4) திருஅவை சமூகப் பிரச்சினைகளை அலசிப் பார்த்து, தீர்வுகள் வழங்கும்போது நமக்கு நேரடியாக இறைவெளிப்பாட்டை எடுத்துரைப்பதில்லை. மாறாக, வரலாற்றுச் சூழ்நிலைகளையும் நிகழ்வுகளையும் அனுபவங்களையும் இறைவெளிப்பாட்டின் ஒளியில் எடுத்துரைத்து, வழிமுறைகளைத் தருகிறது. ஆனால், கால இட சூழ்நிலைகள் வெவ்வேறு நாடுகளிலும் பண்பாடுகளிலும் மாறுபட்டிருக்கலாம் என்பதால், தலத் திருஅவைகள் அளிக்கும் வழிமுறைகளையும் கருத்தில் கொள்ளவேண்டும்.

5) திருத்தந்தையர் 13-ஆம் லியோ, 11-ஆம் பியூசு, 12-ஆம் பியூசு ஆகியோர் வெளியிட்ட சமூகப் போதனை ஏடுகளில் சமூக ஆய்வு பெருமளவில் இல்லை. திருத்தந்தை 23-ஆம் ஜான் எழுதிய சமூகப் போதனை மடல்களிலும், *இன்றைய உலகில் திருஅவை* என்னும் தலைப்பில் இரண்டாம் வத்திக்கான் பொதுச்சங்கம் (1962-1965) வெளியிட்ட ஏட்டிலும், பின்னர் திருத்தந்தையர் 2-ஆம் ஜான் பவுல், 16-ஆம் பெனடிக்ட், பிரான்சிசு ஆகியோர் வெளியிட்ட சமூகப் போதனை ஏடுகளிலும் சமூகப் பகுப்பாய்வு அதிக முக்கியத்துவம் பெறுகிறது. குறிப்பாக, இலத்தீன் அமெரிக்க ஆயர்கள் பேரவைகள் குழுவும் (CELAM), ஆசிய ஆயர் பேரவைக் கூட்டமைப்பும் (FABC) வெளியிட்ட சமூகப் போதனை ஏடுகளில் சமூகப் பகுப்பாய்வு தெளிவாக உள்ளது. இந்த அணுகுமுறை கீழ்வரும் இரண்டாம் வத்திக்கான் சங்கப் போதனை அடிப்படையில் எழுகிறது: ''காலத்தின் அறிகுறிகளைத் துழாவி அறிந்து, நற்செய்தியின் ஒளியில் அவற்றின் பொருளை எல்லாக் காலக் கட்டங்களிலும் விளக்கி உரைப்பது திருஅவையின் கடமையாகும் (காண்: *இன்றைய உலகில் திருஅவை*, எண் 4; மேலும் எண்கள் 11,14).

6. வரலாற்றுப் போக்கில், கத்தோலிக்கத் திருஅவையின் சமூகப் போதனை வளர்ச்சி பெற்று, மாற்றங்களையும் புதுப் பார்வைகளையும் தழுவியுள்ளது என்பது உண்மையாகும். அதுபோலவே, புதிய விவாதப் பொருள்களும் எழுந்துள்ளன. எடுத்துக்காட்டாக, தொழிற்சங்கங்களைக் காட்டலாம். திருத்தந்தை 13-ஆம் லியோ தொழிற்சங்கங்கள் ''தவிர்க்கவியலா தீமை'' என்று கருதினார். ஆனால், திருத்தந்தை 2-ஆம் ஜான் பவுல் தொழிற்சங்கங்கள் ''சமூக நீதி பெற உதவும் கருவிகள்'' என்றும், அவற்றை ஆதரிக்க வேண்டும் என்றும் சுட்டிக்காட்டுகிறார் (காண்: *மனித உழைப்பு*, (1981), எண் 49). சுற்றுச்சூழல் பாதுகாப்புப் பற்றி விரிவான முதல் சுற்றுமடல் 2015-இல் தான் முதன்முறையாக வெளியானது.



7) திருஅவை வழங்குகின்ற சமூகப் போதனைகளுக்கும் முதலாளியம், பொதுவுடைமைத் தத்துவம் போன்ற கருத்தியல்களுக்கும் இடையே உள்ள தொடர்பையும் கருத்தில் கொள்ள வேண்டும். பல தடவைகளில் திருஅவை மேற்கூறிய கருத்தியல்களுள் முதலாளியத்தை ஆதரித்ததற்கான தடயங்கள் உண்டு. ஆயினும், கட்டற்ற, தீவிர முதலாளியம் அதன் அனைத்துச் சிந்தனைக் கூறுகளோடு திருஅவையின் சமூகப் போதனையால் ஏற்கப்படவில்லை என்பதும் தெளிவு. அதுபோலவே, பொதுவுடைமைக் கருத்தியலைத் திருஅவை சமூகப் போதனை சிலவேளைகளில் கண்டனம் செய்திருந்தாலும் பொதுவுடைமைக் கருத்தியல் ஆதரிக்கின்ற உழைப்பாளர் உரிமை, தொழிற்சங்கங்களின் முக்கியத்துவம் போன்ற கருத்துக்கள் திருஅவை போதனையால் ஏற்கப்பட்டுள்ளன.

## திருஅவை சமூகப் போதனை ஏடுகளின் கருத்துச் சுருக்கம்

### 1. ''*தொழிலாளர் நிலைமை*'' (*Rerum Novarum*) - மே 15, 1891

இம்மடலை எழுதியவர் திருத்தந்தை 13ஆம் லியோ. இச்சுற்றுமடல் எழுதப்பட்ட பின்னணி ஐரோப்பிய தொழிற்புரட்சியும் அதன் விளைவாக எழுந்த சமூக நீதி தொடர்பான பிரச்சினைகளும் ஆகும். இச்சுற்றுமடல் வலியுறுத்துகின்ற சில அடிப்படைக் கருத்துக்கள் இதோ:

- *பொருளாதார உலகின் மையம் மனிதரே:* முதலாளிய அமைப்பும் பொதுவுடமை அமைப்பும் மனிதரை முழுமையாக மதிக்கவில்லை. முதலாளியம் மனிதரை ''உழைக்கும் ஓர் இயந்திரமாக,'' பொருளாக்கத் துறைக்குப் பயன்படும் ஒரு கருவியாக மட்டுமே கருதியது. பொதுவுடைமைக் கொள்கையோ தனி மனிதரின் மாண்பை மதிக்காமல், பரந்த குழுவின் உறுப்பினராக மட்டுமே அவர்களைக் கருதிச் செயல்பட்டது. திருத்தந்தை லியோ இவ்விரு கொள்கைகளும் தவறு என்று வாதிட்டார். பொதுவுடைமைக் கொள்கை மதத்தையும் எதிர்த்துப் பேசியதால் அதை அறவே வெறுத்தொதுக்க வேண்டும் என்றார். ஆனால், கட்டற்ற, தீவிர முதலாளியக் கொள்கையின் தீமைகளைக் களைந்து மாற்றங்கள் கொணர வேண்டும் என்றும் வாதாடினார்.

– *பொருளாதார உலகை உருவாக்குபவர் மனிதரே:* பொருளாதாரம் உயிரோட்டம் படைத்த ஒரு செயல்பாடு. அது இயற்கை சக்திகளால் மட்டும் உருவாவதன்று. அதனை உருவாக்கி வழி நடத்துபவர் மனிதரே ஆவர். எனவே, அறநெறியின் அளவீடுகளுக்கு ஏற்ப பொருளாதாரத்தை அமைப்பது மனிதரின் கடமை.

– *நீதியான சம்பளம் பெற உரிமை:* உழைப்பாளருக்கு வழங்கப்படும் சம்பளம் அவர்களது குடும்பத் தேவைகளை நிறைவுசெய்யும் விதத்திலும், சிறிதளவாவது சேமிக்கும் வகையிலும், நீதியின் அடிப்படையில் அமைய வேண்டும். வணிகத் துறையில் எழுகின்ற போட்டி மட்டுமோ, உற்பத்தி-பகிர்வு-நுகர்வு விகித முறை மட்டுமோ சம்பளத்தை நிர்ணயிக்க முடியாது.

– *உழைப்பாளர் சங்கங்கள் அமைக்க உரிமை:* மனிதர்கள் தம்மிலேயே சமூகப் பண்பு கொண்டவர்களாதலால் உழைப்பாளர்கள் தம் உரிமைகளைக் காக்கவும் மேம்படுத்தவும் குழுவாகக் கூடிவந்து செயல்பட உரிமை கொண்டுள்ளார்கள்.

– *தனிச் சொத்துரிமை:* மனிதர் தம்மைப் பேணிப் பாதுகாக்கவும் தமது குடும்பங்களின் தேவைகளை நிறைவுசெய்யவும் வேண்டுமென்றால் அவர்களுக்குத் தனிச் சொத்துரிமை இருக்கவேண்டும். என்றாலும் அவர்கள் தமது சொத்தின் பலனைக் கொண்டு பிறருக்கும் உதவி செய்ய வேண்டும்.

– *பொருளாதாரத் துறைக்கு அரசியல் சமூகம் ஆற்ற வேண்டிய பணி:* மக்களின் பொதுநலனைப் பேணுவது அரசு சமூகத்தின் கடமை. எனவே, பொருள் உற்பத்தி செய்தல், நீதிக்கு அமைந்து பொருள் பகிர்ந்தளிக்கப்படல், அனைத்துக் குடிமக்களின் உரிமைகளையும் பாதுகாத்தல், உழைப்பாளரின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதல், உழைப்பாளரின் உடல் நலம், உள நலம், அறவாழ்வு நலம் வளர உதவுதல் – இவை அனைத்தும் அரசு சமூகத்தின் கடமைகளாகும்.

## 2. ***"சமூக ஒழுங்கமைப்பு"*** *(Quadragesimo Anno)* **– மே 15, 1931**

சமூகப் பிரச்சினைகள் பற்றி, குறிப்பாக உழைப்பாளர் நிலை பற்றி திருத்தந்தை 13-ஆம் லியோ எழுதிய சுற்றுமடலின் நாற்பதாம் ஆண்டு நிறைவின்போது இம்மடலைத் திருத்தந்தை 11-ஆம் பியூசு எழுதினார்.



இம்மடலில் வலியுறுத்தப்பட்ட ஒரு முக்கிய கருத்து, "பொருளாதாரம் அறநெறிக்கு ஏற்ப அமைய வேண்டும்" என்பதாகும். அறநெறி சார்ந்த மதிப்பீட்டுத் தத்துவங்களான நீதியும், சமூக அன்பும் பொருளாதார வாழ்வை நிர்ணயிக்க வேண்டும். மேலும், சமூக-பொருளாதார வாழ்வைப் பொறுத்த மட்டில் "கீழ்மட்டத்திலான குழுக்கள் தாமாகவே செய்யக்கூடுமானவற்றில் மேல்மட்டக் குழுக்கள் தேவையின்றித் தலையிடல் ஆகாது" (principle of subsidiarity) என்ற தத்துவத்தையும்இச்சுற்றுமடலில் காண்கின்றோம். தனிமனிதர்கள், இடைநிலைக் குழுக்கள், நாட்டு அதிகாரிகள் ஆகிய ஒவ்வொருவரும் வரையறுக்கப்பட்ட எல்லைக்குள் நின்று செயல்பட வேண்டும் என்பதே இதன் பொருள்.

## 3. *திருத்தந்தை 12-ஆம் பியூசு வழங்கிய போதனை*

– *மனித உரிமைகள்:* திருத்தந்தை பன்னிரண்டாம் பியூசு எடுத்துரைத்த முக்கியமான தத்துவங்களுள் ஒன்று மனித மாண்பு மற்றும் மனித உரிமைகள் பற்றியதாகும். ஒவ்வொரு மனித ஆளும் – ஆணும் பெண்ணும் – மனிதர்களுக்குரிய மாண்புடைத்தவர்கள். ஆதலால், அவர்களுக்கு அடிப்படையான, மீறத்தகாத உரிமைகள் உண்டு. இவ்வுரிமைகளுள் பின்ருவன அடங்கும்: உடல் வாழ்வையும் அறிவு சார்ந்த வாழ்வையும் அற வாழ்வையும் பேணும் உரிமை, மறையறிவு பெற உரிமை, வழிபாட்டு உரிமை, திருமணம் புரிய உரிமை, சமூகத் தேவைகளைக் கண்முன் கொண்டு பொருள் நலன்களை அனுபவிக்கும் உரிமை (காண்: கிறிஸ்து பிறப்பு விழா வானொலிச் செய்தி, 1942).

– *மனிதச் சமூகங்களின் அடிப்படையும், குறிக்கோளும், முதல் பொருளும் மனிதரே:* எல்லா மனித சமூகங்களும் மனிதரை அடிப்படையாகக் கொண்டு, அவர்களது இயல்பிலிருந்தே பிறக்கின்றன. அறிவும் சுதந்திரமும் சமூகப் பண்பும் மனிதருக்கு இயல்பாகவே உள்ளதால் அச்சமூகங்கள் மனிதரை அடிப்படியாகக் கொண்டிருப்பதோடு, மனிதரின் நலனுக்காகவே உள்ளன. இறுதியாக, சமூகத்தின் முதல் பொருளாக, அதை உருவாக்கும் ஆளாக மனிதரே இருப்பதால், அவர்களை எக்காரணத்தின் பொருட்டும் ஒரு கருவியாகக் கருதுதல் ஆகாது. மனிதர் தன்னறிவோடும்

பொறுப்புணர்வோடும் செயல்படும் திறமை கொண்டவர்கள் ஆதலால், அவர்கள் உயிரற்ற பொருளல்ல, மாறாக, மாண்புடைத்த மனிதப் பிறவிகள்.

### 4. *திருத்தந்தை 23-ஆம் ஜான் வெளியிட்ட "அன்னையும் ஆசிரியையும்" (Mater et Magistra), மே 15, 1961*

– இரண்டாம் வத்திக்கான் பொதுச்சங்கம் (1962-1965) என்ற மாபெரும் திருஅவைக் கூட்டத்தைக் கூட்டுவதற்கு ஓராண்டுக்கு முன்னர் திருத்தந்தை 23-ஆம் ஜான் "சமூகப் பிரச்சினைகள்" பற்றி *"அன்னையும் ஆசிரியையும்"* என்ற சமூகப் போதனைச் சுற்றுமடலை வெளியிட்டார். இச்சுற்றுமடலில் எடுத்துரைக்கப்பட்ட பல கருத்துக்கள் வத்திக்கான் சங்கப் போதனையில் இடம்பெற்றன என்பது குறித்து வியப்பில்லை. முதன்முதலில், இன்றைய உலகில் (1960களில்) ஏற்பட்டு வந்த மாற்றங்களை இந்த ஏடு தெளிவாகப் படம்பிடித்துக் காட்டுகிறது. பொருளாதாரத் துறையில் தனியாரும் பொது அதிகாரிகளும் ஒத்துழைக்க வேண்டும்.

இன்றைய உலகில் பெருகிவருகின்ற சமூக உறவுகளை நல்லெண்ணத்தோடு நோக்குகிறது இந்த ஏடு. இத்தகைய "சமூக மயமாக்கல்" பல நன்மைகளைக் கொணர்வது ஆகும் (எண்கள் 59-67). உழைப்புக்கு வழங்கப்படுகின்ற ஊதியம் நீதியின் அடிப்படையிலும், நேர்மையின் அடிப்படையிலும் நிர்ணயிக்கப்பட வேண்டும். நாட்டின் பொருளாதார வளர்ச்சி அங்குள்ள எல்லாக் குடிமக்களின் வளர்ச்சிக்கும் பயன்பட வேண்டும் என்பது சமூக நீதியிலிருந்து பிறக்கின்ற ஒரு முக்கியக் கோரிக்கை ஆகும் (எண் 78). தனிச்சொத்துரிமை மறுக்கப்படலாகாது. ஆனால் இவ்வுலகப் பொருள்நலன்களைப் பயன்படுத்துவதற்கு எல்லா மனிதருக்கும் உள்ள உரிமை தனிச்சொத்துரிமைக்கு முற்பட்டது (கண் 43).

### 5. *திருத்தந்தை 23-ஆம் ஜான் வெளியிட்ட "அவனியில் அமைதி" (Pacem in Terris), ஏப்பிரல் 11, 1963*

*"அவனியில் அமைதி"* என்ற சுற்றுமடலைத் திருத்தந்தை 23-ஆம் ஜான், இரண்டாம் வத்திக்கான் பொதுச்சங்கம் நடந்துகொண்டிருந்த காலக் கட்டத்தில் (1962-1965) வெளியிட்டார். அவ்வமையம் ஐக்கிய அமெரிக்க



நாடுகள் ஒருபக்கம், 'சோவியத் யூனியன்' மறுபக்கம் என்று இரு வல்லரசு அமைப்புகள் ஒன்றையொன்று எதிர்த்துநின்று பனிப்போரில் ஈடுபட்டிருந்தன. அப்போரின் வெளி அடையாளமாக எழுந்து நின்றது மேற்கு கிழக்கு என்ற பிளவுபட்ட ஜெர்மனி நாட்டின் இருபகுதிகளையும் பிரித்து நின்ற பெர்லின் சுவர் ஆகும். அக்காலத்தில் அமெரிக்காவின் சில பகுதிகளில் கருப்பு இன மக்கள் வேறுபடுத்தப்பட்டு ஒதுக்கிவைக்கப்பட்ட செயல் சட்டப்பூர்வமாக நடைமுறையில் இருந்தது. அந்த அநீதப் பாகுபாட்டை எதிர்த்து, குடியுரிமைப் போராட்டம் நடைபெற்றது. டாக்டர் மார்ட்டின் லூதர் கிங் அமைதிவழியில் போராட்டம் நிகழ வேண்டிய தேவையை வலியுறுத்தினார். அமெரிக்காவின் முதல் கத்தோலிக்க அதிபர் ஜான் எஃப் கென்னடியின் தலைமையில் அந்நாட்டிலும் உலகிலும் ஒரு புதிய எதிர்பார்ப்பு எழுந்தது. ஆனால், அமெரிக்கா, இத்தாலி நாட்டிலும் துருக்கி நாட்டிலும் ஏவுகணைகளைத் தயார் நிலையில் வைத்ததை 'சோவியத் யூனியன்' தம் நாட்டுப் பகுதியைக் குறிவைத்ததாகப் புரிந்துகொண்டு, அமெரிக்காவிற்கு மிக அருகில் உள்ள கியூபா நாட்டில் ஏவுகணைகளை அமெரிக்காவை நோக்கிக் குறிவைத்து நிறுவத் தொடங்கியது. இதனால் இரு நாடுகளுக்கும் இடையே பலத்த இழுபறிநிலை ஏற்பட்டது. அணு ஆயுதப் போர் நிகழ்ந்துவிடுமோ என்ற அச்சம் உலகத்தை உலுக்கியது. இப்பின்னணியில் திருத்தந்தை 23-ஆம் ஜான் அமெரிக்க அதிபர் ஜான் கென்னடியையும், 'சோவியத் யூனியன்' அதிபர் நிகிட்டா குருஷோவையும் தொடர்புகொண்டு அமைதியின் முக்கியத்துவத்தை வலியுறுத்தி, உலகில் அமைதி ஏற்பட வழிசெய்தார். இவ்வாறு "கியூபா ஏவுகணை நெருக்கடி" (Cuban Missile Crisis, 1962 அக்டோபர் 16-28) முடிவுக்கு வந்தது.

திருத்தந்தை ஜான் உலக அமைதி பற்றி வெளியிட்ட சுற்றுமடல் உலக மக்கள் அனைவராலும் ஆர்வத்தோடு வரவேற்கப்பட்டது. திருஅவையின் மக்களுக்கு மட்டுமன்றி முதன் முறையாக "நல்லுள்ளம் படைத்த எல்லா மனிதருக்கும்" என்று எழுதப்பட்ட இந்த ஏடு எளிய நடையில் அமைந்துள்ளது. இரண்டாம் வத்திக்கான் பொதுச்சங்கம், உலக அமைதி பற்றி அளித்த போதனைப் பகுதியில் இச்சுற்றுமடலிலிருந்து பல கருத்துகளை எடுத்துரைக்கிறது.

உலக அமைதி பற்றிப் பேசும் இந்த ஏட்டில் மனித உரிமைகள் தனிப்பட்ட முறையில் வலியுறுத்தப்படுகின்றன. உண்மை, நீதி, அன்பு, சுதந்திரம் ஆகிய நான்கு நற்பண்புகளும் அமைதியைத் தாங்கி நிற்கும் தூண்களாகும் என்கிறது இந்த ஏடு. மனிதர் அனைவரும் ஆட்கள் என்னும் முறையிலும், இறைவனின் பிள்ளைகள் என்ற முறையிலும் பொதுமைப் பண்பு கொண்ட, மீறத்தகாத, அந்நியமயமாக்கப்பட முடியாத உரிமைகளைக் கொண்டுள்ளனர். அதாவது தமக்கென்று உரிமை கோரும் மனிதர், அதே உரிமையைப் பிறரும் கொண்டுள்ளனர் என்பதை உணர்ந்து அதை மதித்துப் போற்றிச் செயல்படக் கடமைப்பட்டுள்ளார்கள். மனித உரிமைகள் எவை என்று இச்சுற்றுமடல் வகைப்படுத்தியுள்ளது.

### 6. *இரண்டாம் வத்திக்கான் சங்கப் போதனை:"இன்றைய உலகில் திருஅவை" (Gaudium et Spes) - டிசம்பர் 7, 1965*

1962-1965 காலக் கட்டத்தில் நடைபெற்ற இரண்டாம் வத்திக்கான் பொதுச்சங்கம் கத்தோலிக்கத் திருஅவை வாழ்வில் மறுமலர்ச்சி கொணர்ந்த மாபெரும் நிகழ்ச்சியாகும். இச்சங்கம் சமூகப் பிரச்சினைகள் பற்றி, குறிப்பாக *"இன்றைய உலகில் திருஅவை"* (Gaudium et Spes) என்ற ஏட்டில் ஆய்ந்தது. இந்த ஏட்டின் முதல் பகுதியில் மனித உழைப்பின் மாண்பு வலியுறுத்தப்பட்டுள்ளது. சமூக மயமாக்கலின் மூலம் மனிதரிடையே வளர்ந்து வரும் உறவுகள் சமூக அன்பின், நீதியின் அடிப்படையில் கட்டியெழுப்பப்பட வேண்டும்; உலகை மாற்றியமைக்கும் பணி கிறிஸ்தவ நம்பிக்கையிலிருந்து பிறக்கும் கடமை - இவை போன்ற கருத்துக்களும் அந்த ஏட்டில் உள்ளன.

இந்த ஏட்டின் இரண்டாவது பகுதியில் சமூக-பொருளாதார-அரசியல் வாழ்வு பற்றிய பல பிரச்சினைகளைச் சங்கம் ஆய்ந்துள்ளது. தனிமனிதரின் சுதந்திரத்திற்குத் தவறாகப் பொருளுரைத்து சமூக மாற்றங்களை எதிர்க்கிறது. ஒருவகையான முதலாளியம்; அதிகாரம் அனைத்தையும் அரசின் கைகளில் ஒப்படைத்துவிட்டு, மனிதரின் மாண்பையே அழிக்கத் தேடுகிறது ஒருவகையான பொதுவுடைமைத் தத்துவம். இவை இரண்டுமே தவறானவை என்பது சங்கத்தின் கருத்து (எண் 65). உழைப்பாளர்களின் உரிமைகளை வலியுறுத்திய பொதுச்சங்கம் தனிச் சொத்துரிமை எவ்வாறு புரிந்துகொள்ளப்பட வேண்டும் என்பதையும் எடுத்துக் கூறுகிறது. தனிச்



சொத்து பொதுநலனுக்கு எதிராகப் போய்விடலாகாது; உலகின் வறுமையை ஒழிக்க வேண்டும் என்றால் நிலச் சீர்திருத்தம் தேவைப்படுகிறது (எண் 71).

*"இன்றைய உலகில் திருஅவை"* ஏடு உலகிற்கும் திருஅவைக்கும் இடையே நிகழ வேண்டிய உரையாடலை வலியுறுத்துகின்றது. எந்தவொரு மனிதரையும் எதிரியாகக் கருதாமல், உரையாடல் வழியாக உறவுகளை வளர்த்துக்கொள்வது தேவை. இறைவனால் படைக்கப்பட்ட உலகு அவரது நன்மைத்தனத்தில் பங்கு பெறுவதால் நலமானதே. இந்தப் படைப்புலகை வளர்த்து, நீதியும் அன்பும் நிலவும் சமூகமாகக் கட்டியெழுப்புவது திருஅவையின் கடமை. "மனிதருக்குத் தம் இயல்பிலேயே சமூக வாழ்வு முற்றிலும் இன்றியமையாதது. இம்மனிதரே எல்லாச் சமூக நிறுவனங்களின் முதலும், பொருளும், முடிவுமாக இருக்கின்றனர்; அவ்வாறே இருக்கவும் வேண்டும்" (எண் 25).

நாடுகளுக்கிடையே உறவுகள் நட்பு, அன்பு, நீதி அடிப்படையில் அமைய வேண்டும். அணு ஆயுதப் போர் எந்த விதத்திலும் நியாயப்படுத்தப்பட முடியாது. அமைதியை வளர்ப்பதற்கான அனைத்து முயற்சிகளையும் திருஅவை மேற்கொள்ள வேண்டும். உலக மக்களோடு ஒத்துழைக்க வேண்டும்.

பொதுச்சங்கம் வெளியிட்ட 16 ஏடுகளுள், *"இன்றைய உலகில் திருஅவை"* தவிர *"மறைச் சுதந்திரம்," "கிறிஸ்தவமல்லா மறைகளோடு திருஅவைக்குள்ள உறவு"* போன்ற வேறு சில ஏடுகளும் சமூகப் பிரச்சினைகள் பற்றிப் பேசுகின்றன.

### 7. *திருத்தந்தை 6ஆம் பவுல் வெளியிட்ட "மக்களின் முன்னேற்றம்" (Populorum Progressio) மடல் - மார்ச் 26, 1967*

இரண்டாம் வத்திக்கான் பொதுச்சங்கம் முடிவடைந்த இரு ஆண்டுகளுக்குப் பின்னர், 1967இல் திருத்தந்தை 6ஆம் பவுல் சமூகப் பிரச்சினைகள் பற்றி முக்கியமானதொரு சுற்றுமடல் விடுத்தார். *"மக்களின் முன்னேற்றம்"* என்று அழைக்கப்படுகின்ற இம்மடலில், பொருளாதாரத்தில் பின்தங்கிய நாடுகள் வளர்ச்சியடையும் பொருட்டு, பொருளாதாரத்தில் முன்னேறிய நாடுகள் கடமை கொண்டுள்ளன என்ற கருத்து மிகவும்

வலியுறுத்தப்படுகிறது. ஆனால், மனிதரின் "முன்னேற்றம்" முழுமையான முன்னேற்றமாக (Integral Development) இருக்க வேண்டுமென்றால் பொருளாதாரத் துறையின் வளர்ச்சி மட்டும் போதாது; மனித மாண்புக்கு உகந்த சூழ்நிலைகள் உருவாக வேண்டும்.

ஒவ்வொரு மனிதருடைய நலனையும், முழு மனிதருடைய நலனையும் வளர்ப்பதே முழுமையான முன்னேற்றமாகும். அனைத்து மனிதரும், மனிதத் தன்மைக்குக் கீழாகவுள்ள நிலையிலிருந்து அதிக மனிதத் தன்மை வாய்ந்த நிலைக்கு உயர்வதே உண்மையான முன்னேற்றத்தின் குறிக்கோளாகும். முழுமையான ஒரு மனிதநல முதன்மைக் கொள்கை (Integral Humanism) எல்லா மனிதருடையவும், முழு மனிதருடையவும், நிறைவான வளர்ச்சியைக் குறிப்பதாகும். முழு முதல் பொருளாம் இறைவனை ஏற்காத மனித நல முதன்மைக் கொள்கை குறையுடைத்த ஒன்றே ஆகும்.

கொடிய வறுமை, அறநெறிப் பண்புகளை மறந்துவிட்டுத் தன்னல வேட்கையால் செயல்படுதல், உடைமையையும் அதிகாரத்தையும் தவறாகப் பயன்படுத்துவதால் எழும் அநீதியான அமைப்புகள், உழைப்பாளரைச் சுரண்டுதல் இவையெல்லாம் மனித மாண்புக்கு எதிரானவை.

தனிச் சொத்துரிமை என்பது நிபந்தனைகளுக்கு அப்பாற்பட்ட ஓர் உரிமையன்று; அது பொதுநலனுக்கு எதிராக ஒருபோதும் செல்லல் ஆகாது. பரந்த நிலப்பகுதிகளைக் கைவசம்கொண்டு, அவற்றைப் பண்படுத்தாது தரிசாக விட்டிருப்போரிடமிருந்து அவற்றைப் பறித்துப் பொது நன்மைக்காகப் பயன்படுத்தலாம் (எண் 23).

முதலாளியத்தை "*மக்களின் முன்னேற்றம்*" என்ற சுற்றுமடல் கடுமையாகக் கண்டனம் செய்துள்ளது. ஆதாயம்தான் இந்த முதலாளியத்திற்கு முக்கியம்; பொருளாதாரத்தின் மிக உயர்ந்த அளவீடு போட்டியே; பொது நலனையும் சமூகக் கடமைகளையும் கண்முன் கொள்ளாமல், பொருள் உற்பத்திக்கான மூலதனம் மற்றும் கருவிகளைத் தனியாரே உடைமையாகக் கொள்வது இங்கு அனைத்திற்கும் மேலாக உயர்த்தப்படுகிறது. இத்தகைய வரம்பற்ற தனிச் சுதந்திரக் கொள்கை ஒரு விதமான சர்வதிகாரப் போக்கையே தோற்றுவித்தது (எண் 26).



சமூக அநீதிகளை ஒழித்து அதிக நீதி நிலவுகின்ற சமுதாயத்தை உருவாக்கும் முயற்சியில் வன்முறையைப் பயன்படுத்தலாமா என்ற கேள்விக்கும் இச்சுற்றுமடல் பதில் வழங்குகிறது (எண்கள் 30-32). படைக்கலக் குவிப்புக்காகச் செலவிடப்படுகின்ற பணத்தை ஏழைகளின் முன்னேற்றத்திற்குச் செலவிடுதல் நலம் என்று இம்மடல் கூறுகிறது (எண் 48). நீதிக்கும் அமைதிக்கும் இடையே உள்ள நெருங்கிய தொடர்பை நன்கு கோடிட்டுக் காட்டியது இந்தச் சுற்றுமடல். போர் நிகழாமல் இருப்பது அமைதியாகி விடாது, மாறாக, மக்களிடையே நீதி நிலவினால் தான் அமைதி உருவாகும். இப்போதனையை இரண்டாம் வத்திக்கான் சங்கமும் ஏற்கெனவே வலியுறுத்தியிருந்தது.

### 8. *இலத்தீன் அமெரிக்க ஆயர்கள் பேரவைகள் குழுவின் போதனை, (1968 முதல் ...)*

திருஅவையின் சமூகப் போதனையின் வளர்ச்சியில் இலத்தீன் அமெரிக்கத் திருஅவையின் பங்கு சிறப்பானதாகும். 1968-ஆம் ஆண்டு கொலம்பியா நாட்டு மெதயீன் நகரில் கூடிய இலத்தீன் அமெரிக்க ஆயர்கள் பேரவைகள் குழு (CELAM) "நீதி," "அமைதி," "ஏழ்மை" என்ற தலைப்புகளில் போதனை ஏடுகளை வெளியிட்டது. அந்த ஏடுகளில் வலியுறுத்தப்பட்ட ஒரு முக்கியக் கருத்து, இயேசு கிறிஸ்துவைப் பின்பற்றி "ஏழைகள் சார்பாகச் செயல்படுதல்" (Option for the poor) எல்லாக் கிறிஸ்தவர்களும் கடைப்பிடிக்க வேண்டிய தத்துவம் என்பதாகும்.

இலத்தீன் அமெரிக்க ஆயர்கள் பேரவைகள் குழு 1989-இல் புவேப்லா நகரிலும் (மெக்சிகோ), 1992-இல் சாந்தோ தொமிங்கோ நகரிலும் (தொமினிக்கன் குடியரசு), 2007-ஆம் ஆண்டில் அப்பரசீதா பெருங்கோவிலிலும் (சான் பவுலோ, பிரேசில்) கூடி இலத்தீன் அமெரிக்காவின் பிரச்சினைகளை விவாதித்துப் போதனை ஏடுகளை வெளியிட்டன. இந்தக் கூட்டங்களில் விவாதிக்கப்பட்ட முக்கியக் கருத்துக்கள் அனைத்துலகத் திருஅவையிலும் தாக்கம் கொணர்ந்துள்ளன. அவற்றுள் சிலவற்றைக் கீழ்வருமாறு பட்டியல் இடலாம்:

- ஏழைகள் சார்பாகச் செயல்படுதல்

- அடிப்படைக் கிறிஸ்தவ சமூகங்களை ஏற்படுத்தி கிறிஸ்தவ வாழ்வை வளப்படுத்தல்
- நற்செய்தி அறிவிப்புப் பணிக்கும் மனித வாழ்க்கை முன்னேற்றத்தை வளமுறச் செய்வதற்கும் இடையே உள்ள உறவை வலியுறுத்தல்
- கிறிஸ்துவின் நற்செய்தி சமூக - அரசியல் - பொருளாதார - கலாச்சாரத் துறைகளை ஊடுருவி புதியதோர் உலகத்தை உருவாக்கத் தூண்டுதலாக உள்ளது என்ற கருத்தைக் கோடிட்டுக் காட்டுதல்
- சமூக மாற்றம் கொணர்வதில் அமைதி வழிமுறைகளைக் கையாள வேண்டுமே ஒழிய வன்முறையைக் கையாளலாகாது.

### 9. *திருத்தந்தை 6ஆம் பவுல் வெளியிட்ட "அரசியல் அதிகாரம், கருத்தமைவு, சமூக ஈடுபாடு" (Octogesima Adveniens), 1971*

தொழிலாளர் நிலை பற்றி திருத்தந்தை 13-ஆம் லியோ 1891இல் வெளியிட்ட சமூகப் போதனைச் சுற்றுமடலின் 80-ஆம் ஆண்டு நிறைவாகத் திருத்தந்தை 6ஆம் பவுல் இந்த மறைத்தூதுத் திருமுகத்தை வெளியிட்டார். இம்மடலின் மையப் பொருள்கள் அரசியல் அதிகாரம், கருத்தமைவு, சமூக ஈடுபாடு ஆகியன.

இம்மடலுக்கு முந்திய காலத்தில் வெளியிடப்பட்ட போதனை ஏடுகள் சமூக-பொருளாதாரப் பிரச்சினைகளையே அதிகம் ஆய்ந்தன. ஆனால் இந்த மடல் அரசியல் சக்திகள் உலக சமுதாயத்தையும் பொருளாதாரத்தையும் எவ்வாறு பாதிக்கின்றன என்பதை விரிவாகக் குறிப்பிடுகிறது. மேலும், உலகில் நிலவுகின்ற முக்கியக் கருத்தியல்களான முதலாளியம், பொதுவுடைமைக் கொள்கை ஆகியவை கிறிஸ்தவ நம்பிக்கையோடு பொருந்திப் போகமுடியுமா என்ற கேள்வியையும் இந்த ஏடு எழுப்பி, அதற்கு விடை அளிக்கிறது. இந்தக் கருத்தியல்களில் நல்ல கூறுகள் உள்ளன என்பதை இந்த ஏடு சுட்டிக் காட்டுகிறது. அதே நேரத்தில், இந்தக் கருத்தியல்களில் குறைபாடுகளும் உண்டு என்பதால், கிறிஸ்தவர்கள் கவனத்தோடு இக்கொள்கைகளை ஆய்ந்து பார்க்க வேண்டும்; ஒத்துழைப்பு



அளிக்கும்போது கிறிஸ்தவ நம்பிக்கை ஊனமுறாமல் இருக்கும்படி பார்த்துக்கொள்ள வேண்டும்.

மேலும், வெறுமனே கருத்தளவில் நின்றுவிடாமல் செயலில் இறங்க வேண்டும் என்ற அறைகூவல் இந்த ஏட்டில் பலமாக ஒலிக்கின்றது (எண் 48). கிறிஸ்தவ நம்பிக்கையின் அடிப்படையில் சமூக ஈடுபாட்டுச் செயல்களைச் செய்யும்போது எல்லாக் கிறிஸ்தவர்களும் ஒரே பாணியில் செயல்படுவர் என்று கூற முடியாது. ஒரே கிறிஸ்தவ நம்பிக்கையால் உந்தப்படும் இருவர் வெவ்வேறு நடைமுறை ஈடுபாட்டைத் தேர்ந்துகொள்ள முடியும். இது நியாயமானதே என்று இந்த ஏடு கூறுகிறது (எண் 50).

திருஅவையின் சமூகப் போதனைகளை மக்களுக்கு எடுத்துரைப்பதிலும், நடைமுறை ஈடுபாட்டை ஊக்குவிப்பதிலும் தலத் திருஅவைகளுக்குச் சிறப்பான பொறுப்பு உண்டு என்று இந்த ஏடு எடுத்துரைக்கிறது (எண் 4).

### 10. *ஆயர் மன்றம் வெளியிட்ட "உலகில் நீதி" ஏடு, 1971*

இரண்டாம் வத்திக்கான் சங்கம் கொணர்ந்த சீர்திருத்தத்தின் ஒரு முக்கியக் கூறு: இயேசு கிறிஸ்துவின் திருஅவை உலகம் அனைத்திலும் பொதுவாக நிலவுகின்ற ஒன்று. அதே சமயத்தில், தலத் திருஅவைகளாக ஆயர்கள் வழிநடத்தலின் கீழ் செயல்படுகின்றது என்பதாகும். இதன் அடிப்படையில் பொதுச் சங்கம் அறிவித்த ஒரு கருத்து "ஆயர் மன்றம்" (Synod of Bishops) பற்றியது ஆகும். சங்கம் முடிந்ததும் திருத்தந்தை 6ஆம் பவுல் "ஆயர் மன்றம்" என்ற அமைப்பை நிறுவினார். இந்த ஆயர் மன்றம், தேவைக்கு ஏற்ப அவ்வப்போது ஒன்றுகூடி அமர்வுகளை நடத்திவந்துள்ளது. இத்தகைய அமர்வுகள் பொது அமர்வுகளாகவோ, சிறப்பு அமர்வுகளாகவோ, மாநில அமர்வுகளாகவோ நிகழ்ந்து வந்துள்ளன.

ஆயர் மன்றத்தின் முதல் பொது அமர்வு 1967-இல் நிகழ்ந்தது. இரண்டாம் அமர்வு 1971-இல் நிகழ்ந்தது. அந்த அமர்வில் விவாதிக்கப்பட்ட ஒரு மையப் பொருள் "உலகில் நீதி" என்பதாகும்.

உலகில் நீதி என்ற தலைப்பில் ஆயர் மன்றம் வெளியிட்ட ஏடு எடுத்துரைக்கின்ற ஒருசில முக்கிய கருத்துக்கள் இவை:

நற்செய்தி அறிவிப்பின் ஒரு முக்கிய கூறு ''நீதி நிலைநாட்ட உழைப்பது'' ஆகும். ஆயர் மன்ற ஏடு கூறுவது: ''நீதிக்காக உழைப்பதும் உலகை மாற்றியமைப்பதில் ஈடுபடுவதும் நற்செய்தி அறிவிப்பின் இன்றியமையாத உட்கூறாக இருப்பதை நாங்கள் (ஆயர்கள்) நன்கு உணர்கிறோம்'' (பிரிவு 6).

அன்பையும் நீதியையும் நாம் பிரித்தலாகாது. பிற மனிதரது மாண்பை மதித்து அவர்களது உரிமைகளை ஏற்றுக்கொள்வது - நீதியைக் கடைப்பிடிப்பது - நீதியின் அடித்தளமான அன்பின் வெளிப்பாடாகும். நீதியின் முழுமை அன்பில் தெரிகிறது (பகுதி 34).

உலகத்தில் நீதியை நிலைநாட்ட திருஅவை உழைக்க வேண்டும். அதே நேரத்தில் திருஅவையின் உள்வாழ்விலும் உள் அமைப்புகளிலும் நீதியான செயல்பாடு இருக்க வேண்டும். நீதிக்கு நாம் சாட்சியாக வாழவேண்டுமென்றால், திருஅவையில் நாம் எவ்வாறு செயல்படுகிறோம், எவ்வளவு சொத்துக்களைக் கைவசம் வைத்திருக்கிறோம், எத்தகைய வாழ்க்கைப் பாணியைக் கடைப்பிடிக்கிறோம் என்று நம்மையே சீர்தூக்கி ஆய்ந்து பார்க்கக் கடமைப்பட்டிருக்கிறோம் (பிரிவு 40). திருஅவைச் சமூகத்திற்கு உள்ளேயே மனித உரிமைகள் மதிக்கப்பட வேண்டும்; திருஅவைச் சொத்துக்களைப் பராமரிப்பதிலும் நிர்வகிப்பதிலும் பொதுநிலையினருக்கு அதிகப் பொறுப்புகள் வழங்கப்பட வேண்டும் (பிரிவு 50).

நீதிக்கான கல்வி வழங்குவது இன்றியமையாதது. தனி மனிதரின் பாவம், சமூகம் முழுவதின் பாவம் ஆகியவற்றை நன்குணர்ந்து மனமாற்றம் அடையத் தூண்டுவதே உண்மைக் கல்வி. நாம் வாழ்கின்ற சமூகத்தையும் அதன் மதிப்பீடுகளையும் கவனமாகத் திறனாய்வுக்கு உட்படுத்த நீதிக் கல்வி வழிவகுக்கும். உறங்கிக் கிடக்கும் மனச் சான்றுகளைத் தட்டியெழுப்பி, நடைமுறை நிலையைச் சரிவரப் புரிந்துகொள்ளவும் அதன் அடிப்படையில் செயல்படவும் தூண்டுதல் அளித்து, உலகை மாற்றியமைக்கத் துணைசெய்யும் விதத்தில் கல்வி அமைந்தால் அது உண்மையிலேயே ''நீதிக்கான கல்வியாக'' துலங்கும் (பிரிவு 51).



### 11. ***திருத்தந்தை 6ஆம் பவுல் வழங்கிய ''இன்றைய உலகில் நற்செய்தி அறிவிப்பு'' (Evangelii Nuntiandi), மறைத்தூது அறிவுரை, டிசம்பர் 8, 1975***

1974-ஆம் ஆண்டில் ஆயர் மன்ற அமர்வு ஒன்று நிகழ்ந்தது. அது நிறைவுபெற்றதும், அது வழங்கிய பரிந்துரைகளை அடிப்படையாகக் கொண்டு திருத்தந்தை 6ஆம் பவுல் ஒரு போதனை ஏட்டினை உருவாக்கி அதை மறைத்தூது அறிவுரையாக வழங்கினார். முன்னுரையும் முடிவுரையும் தவிர இந்த ஏட்டில் 7 பிரிவுகள் உள்ளன. முதல் நற்செய்தி அறிவிப்பாளராக விளங்கியவர் இயேசு; ஏன், இயேசுவே நற்செய்தி (எண் 7). இறையரசு பற்றிய நற்செய்தியை அறிவித்த இயேசு, தம் வார்த்தையாலும், தாம் புரிந்த அருஞ்செயல்கள், தமது வாழ்வு வழியாகவும் அதை விளக்கினார். இயேசுவின் பணியைத் தொடர்ந்து ஆற்றுவது திருஅவையின் பொறுப்பு. நற்செய்தியை அறிவிக்கும் திருஅவை முதன்முதலில் நற்செய்தி மனப்பான்மையில் தோய்ந்திருக்க வேண்டும் (எண் 15). மனித முன்னேற்றம் வளர்ச்சி, விடுதலை ஆகியவற்றிற்கும் நற்செய்தி அறிவிப்புக்கும் இடையே மிக நெருங்கிய பிணைப்புகள் உள்ளன (எண்கள் 30, 31).

### 12. ***திருத்தந்தை 2ஆம் ஜான் பவுல் விடுத்த ''மனித உழைப்பு'' (Laborem Exercens), சுற்றுமடல், செப்டம்பர் 14, 1981***

திருஅவை வழங்கிய சமூகப் போதனை ஏடுகளுள் ''மனித உழைப்பு'' என்பதை மையப் பொருளாகக் கொண்டு விடுக்கப்பட்ட முதல் போதனை ஏடு இதுவே. இந்த ஏடு வெளியிடப்பட்ட ஆண்டு, சமூகப் போதனை பற்றி திருத்தந்தை 13-ஆம் லியோ வெளியிட்ட முதல் ஏட்டின் 90ஆம் ஆண்டு ஆகும். ''உழைப்பு மனிதருக்காக உள்ளதேயன்றி, மனிதர் உழைப்புக்காகவன்று'' என்ற தத்துவம் இந்த ஏட்டின் மூலைக்கல்லாக உள்ளது. உழைப்புக்குப் பயன்படும் ஒரு கருவியாக மனிதரைக் கருதுவது தவறு. உழைப்பின் ஆளுமைப் பண்பு அனைத்திற்கும் மேலாக வலியுறுத்தப்பட வேண்டும்.

மேற்கூறியதிலிருந்து பிறக்கும் இன்னொரு தத்துவம் ''உழைப்பு முதலீட்டை விடவும் முதன்மை வாய்ந்தது'' என்பதாகும். முதலீடு உழைப்புக்கு உதவ வேண்டுமேயொழிய, உழைப்பு முதலீட்டை அதிகரித்துப்

பெருக்குவதற்காகவன்று. எனவே மனித வாழ்வின் அனைத்துக் கூறுகளையும் பொருளாதாரத்துக்குள்ளே அடக்க முனைகின்ற கொள்கையமைப்புக்கள் தவறானவை ஆகும்.

தனிச் சொத்துரிமையை இந்த ஏடு, பிற சமூக ஏடுகளைப் போலவே வலியுறுத்தியுள்ளது. இருப்பினும் ''தனிச் சொத்துரிமை பொது நன்மைக்குப் பிற்பட்டதே'' என்ற கருத்தும் வலியுறுத்தப்படுகிறது. படைக்கப்பட்ட பொருட்கள் அனைத்தும் எல்லா மனிதரின் உபயோகத்திற்காகவும் உள்ளன என்ற அடிப்படைத் தத்துவத்திற்கு அடிபணிந்து இருக்க வேண்டியது தான் தனிச் சொத்துரிமை. இக்கண்ணோட்டம் இரண்டாம் வத்திக்கான் சங்கப் போதனையிலும் உள்ளது (*இன்றைய உலகில் திருஅவை*, எண் 69). சங்கம் வழங்கிய இப்போதனையை 2ஆம் ஜான் பவுலும் எடுத்துரைக்கிறார் (*மனித உழைப்பு*, எண் 14).

சுருங்கக் கூறின், ''*மனித உழைப்பு*'' என்ற சுற்றுமடலின் கண்ணோட்டம் மனிதரை மையமாகக் கொண்டுள்ளது எனலாம். உற்பத்திப் பொருட்களோ முதலீடோ எதுவாயினும் அவை மனிதரை மதிப்பதாக இருத்தல் வேண்டும்; உழைப்பாளரின் மீது ஆதிக்கம் செலுத்துவதாக மாறிவிடல் ஆகாது.

### 13. *விடுதலை இறையியல் பற்றி வத்திக்கான் நம்பிக்கைப் போதனைப் பேராயம் வெளியிட்ட ஏடுகள், 1984, 1986*

நம்பிக்கைப் போதனைப் பேராயம் (Congregation for the Doctrine of the Faith) என்னும் வத்திக்கான் அலுவலகம் 1984ஆம் ஆண்டு, ஆகஸ்டு 6ஆம் நாள் ''*விடுதலை இறையியலின் சில அம்சங்கள் பற்றிய அறிக்கை*'' என்றொரு, ஏட்டினை வெளியிட்டது. சமூகத்தில் நிலவுகின்ற அநீதிகளை அகற்றி, அதிக நீதியும் சகோதர உறவும் சமத்துவமும் நிலவுகின்ற சமுதாயத்தை உருவாக்குவதை கிறிஸ்தவ நம்பிக்கை ஒரு முக்கிய குறிக்கோளாகக் கொண்டிருக்க வேண்டும் என்பது விடுதலை இறையியலின் அடித்தளங்களுள் ஒன்று ஆகும். அதுபோலவே திருஅவையின் சமூகப் போதனையும், இந்த உலகில் நீதியை நிலை நாட்டுவதை முன்னிறுத்திச் செயல்பட வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளது.



இப்பின்னணியில் வத்திக்கான் பேராயம் வெளியிட்ட ஏடு முக்கியத்துவம் பெறுகிறது. விடுதலை இறையியலின் அடிப்படையான நோக்கு கிறிஸ்தவ நம்பிக்கையோடு இயைந்து போகிறது என்றும், விவிலிய விடுதலைக் கருத்தையே அழுத்தமாக எடுத்துரைக்கின்றது என்றும் இந்த ஏடு ஏற்கிறது (எண் 2:1). விடுதலை இறையியலை ஒட்டுமொத்தமாகக் கண்டனம் செய்யவில்லை இந்த அறிக்கை. மாறாக, போதிய முன்னாய்வு இன்றி மார்க்சியக் கருத்துக்கள் விடுதலை இறையியலின் சில பாணிகளில் பயன்படுத்தப்படுகின்றன என்றும், இது தவறு என்றும் இந்த ஏடு கூறியது. ஆயினும் விடுதலை இறையியல் பாணிகளில் நலமான பல போக்குகளும் உள்ளன. மார்க்சியப் பகுப்பாய்வினைத் தகுந்த எச்சரிக்கையோடு ஏற்றுக்கொள்வதில் தவறில்லை என்னும் பொருள்பட இந்த ஏடு எடுத்துரைத்தது.

1986-ஆம் ஆண்டு, மார்ச் 22-ஆம் நாள் நம்பிக்கை அறிக்கைப் பேராயம் ''*கிறிஸ்தவ சுதந்திரம், விடுதலை பற்றிய அறிக்கை*'' என்றொரு ஏட்டினை வெளியிட்டது. இயேசு வழங்கிய நற்செய்தியின் மையக் கருவாகிய ''சுதந்திரம்,'' ''விடுதலை'' என்ற கருத்துருவகங்களின் முக்கியமான கொள்கை சார்ந்த, நடைமுறை சார்ந்த கூறுகளை இந்த அறிக்கை எடுத்துரைக்கிறது. விடுதலை இறையியலின் பல கூறுகளை இந்த அறிக்கை ஏற்றுக்கொண்டது. குறிப்பாக, ஏழ்மை, அடக்குமுறை, அநீதி நிறைந்த சூழமைவு பற்றி இந்த அறிக்கையில் தெளிவான விழிப்புணர்வு உள்ளது; மேற்கூறிய அநீதச் சூழமைவுகள் *அமைப்பு வடிவம்* பெற்றிருப்பனவாதலால், அத்தகைய அமைப்புகளை அகற்ற முயல வேண்டும் என்ற உணர்வு இந்த அறிக்கையில் உள்ளது; நடைமுறையாகச் செயல்படுவதற்கான அறைகூவலும் இந்த ஏட்டில் விடுக்கப்படுகிறது; இறுதியாக, விவிலியம் இங்கு விடுதலை வரலாறாக விளக்கப்படுகிறது. இறைவன் தம் மகன் இயேசு வழியாக எல்லா மனிதருக்கும் விடுதலை அளிப்பவராகக் காட்டப்படுகிறார்.

### 14. *திருத்தந்தை 2-ஆம் ஜான் பவுல் வெளியிட்ட ''திருஅவையின் சமூக ஈடுபாடு'' (Sollicitudo Rei Socialis), சுற்றுமடல், டிசம்பர் 30, 1987*

1987-ஆம் ஆண்டு இறுதியில் எழுதப்பட்ட இச்சுற்றுமடல் 6ஆம் பவுல் 1967இல் ''மக்களின் முன்னேற்றம்'' என்ற தலைப்பில் வெளியிட்ட

சுற்றுமடலின் 20-ஆம் ஆண்டு நினைவாக திருத்தந்தை 2ஆம் ஜான் பவுல் வெளியிட்டதாகும்.

மனித முன்னேற்றம் எதில் அடங்கியுள்ளது என்ற கேள்வியை எழுப்பி, திருத்தந்தை 6ஆம் பவுல் தமது சுற்றுமடலில் எடுத்துரைத்த முக்கிய கருத்துக்கள் "*திருஅவையின் சமூக ஈடுபாடு*" மடலிலும் ஆய்வுசெய்யப்படுகின்றன. இன்றைய உலகில் "பின்தங்கிய நிலை" (backwardness) எதில் அடங்கியிருக்கிறது என்ற பொருளையும் இச்சுற்றுமடல் ஆய்கிறது. மேலும், "முன்னேற்றம்" என்றால் என்ன என்ற கேள்வியை மீண்டும் எழுப்பி, இச்சுற்றுமடல் பதில் காண முயல்கிறது. குறிப்பாக மனித சமுதாயத்தில் எல்லா மக்களும் முன்னேற்றம் அடைய வேண்டும் என்றால், மனிதக் கூட்டுத் தோழமை (Solidarity) வளர வேண்டும். கூட்டுத்தோழமை என்பது உண்மையிலேயே "சமூக அன்பு" ஆகும். சமுதாயத்தில் வாழ்கின்ற அனைத்து மக்களும் ஒருவர் ஒருவரோடு பல்வேறு பிணைப்புகளால் இணைந்துள்ளார்கள் என்பதால் அவர்கள் ஒருவர் ஒருவருடைய நலனை மேம்படுத்துவதில் செயல்முறையில் ஈடுபட வேண்டும். இவ்வாறு, கூட்டுத்தோழமை என்பது அன்பில் தோய்ந்த ஒரு சமூக நற்பண்பு ஆகும்.

### 15. *திருத்தந்தை 2ஆம் ஜான் பவுல் வெளியிட்ட "நூறாம் ஆண்டு" (Centesimus Annus)*, சுற்றுமடல், மே 1, 1991

1891ஆம் ஆண்டு மே மாதம் 15-ஆம் நாளில் திருத்தந்தை 13-ஆம் லியோ "*தொழிலாளர் நிலைமை*" பற்றி திருஅவையின் முதல் சமூகப் போதனை ஏட்டை வெளியிட்டார். இதுவே நவீனகாலத் திருஅவையின் சமூகப் போதனைக்கு அடித்தளமாக அமைந்தது. வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த இந்த சுற்றுமடலின் நூற்றாண்டு நிறைவில் திருத்தந்தை 2ஆம் ஜான் பவுல் "*நூறாம் ஆண்டு*" என்று தொடங்கும் சுற்றுமடலை 1991, மே 1ஆம் நாள் வெளியிட்டார்.

திருத்தந்தை 2ஆம் ஜான் பவுலின் இச்சுற்றுமடல் அவருடைய முன்னோடியான 13ஆம் லியோ எழுதிய முதல் சமூகப் போதனை ஏடான "*தொழிலாளர் நிலைமை*" (Rerum Novarum) என்ற சுற்றுமடல் வழங்கிய அடிப்படைக் கருத்துக்களை அடையாளம் கண்டு, அந்தப் போதனைக்காக



திருத்தந்தை லியோவின் ஏட்டினைப் போற்றுகிறது. இவ்வாறு போற்றப்படுகின்ற கருத்துக்களுள் சில:

- தனிச் சொத்துரிமை யாருக்குமே மறுக்கப்படக் கூடாது.
- தொழிலாளரின் மனித மாண்பு மதிக்கப்பட வேண்டும். தொழிலாளர்கள் தமக்குள்ளே இணைந்து சங்கங்கள் அமைத்துச் செயல்பட உரிமை கொண்டுள்ளார்கள்.
- தொழிலாளர்களுக்கு நீதியின் அடிப்படையில் சம்பளம் வழங்கப்பட வேண்டும்.
- தொழிலாளர் நிலையை மேம்படுத்த பொதுவுடமைக் கருத்தியலும் தீவிர, கட்டற்ற முதலாளியமும் வழங்குகின்ற தீர்வுகள் பொருத்தமானவை அல்ல.
- தொழிலாளரின் நலனை மேம்படுத்தும் செயலில் அரசு அதிகாரிகள் நேரடியாக ஈடுபட்டு, அநீதிகளை அகற்றி நீதியை நிலைநாட்டக் கடமைப்பட்டுள்ளார்கள்.

மேலே கூறப்பட்ட கருத்துக்களைப் போற்றியுரைக்கும் அதே வேளையில், திருத்தந்தை 2ஆம் ஜான் பவுல், கடந்த 100 ஆண்டுக் காலத்தில் உலகத்தில் ஏற்பட்ட பல மாற்றங்களையும் ஆய்வுக்கு எடுத்துக் கொள்கிறார். அந்த மாற்றங்களுள் முக்கியமான ஒன்று 1989-1990 ஆண்டுக் காலத்தில் மேற்கு ஜெர்மனியையும் கிழக்கு ஜெர்மனியையும் பிரித்த பெர்லின் சுவர் இடிக்கப்பட்டு, சோவியத் யூனியனின் சோஷலிசக் கொள்கையும் அதன் அடிப்படையில் எழுந்த பொதுவுடைமைப் பொருளாதார அரசியல் அமைப்பும் பலமிழந்தது ஆகும்.

இதைக் கண்முன் கொண்டு, கிழக்கு ஐரோப்பாவில் பொதுவுடைமை அமைப்பின் கீழும், நாசி ஆட்சியின் கீழும் வாழ்ந்தவரான திருத்தந்தை 2ஆம் ஜான் பவுல், பொதுவுடைமையின் வீழ்ச்சியை ஆய்கின்றார். பொதுவுடைமைக் கொள்கை மனிதரின் மாண்பினை முழுமையாகக் கருத்தில் கொள்ளாதிருந்தது. மனித வரலாறு இவ்வுலகத்தோடு முடிந்துவிடும் என்று பருப்பொருள் வாதத்தை முன்வைத்து, கடவுள் நம்பிக்கையை மறுத்தது. இதுவே அதன் வீழ்ச்சிக்கு அடிப்படைக் காரணம்.

ஆயினும், பொதுவுடமைத் தத்துவம் தோல்வியுற்றதால் முதலாளியம் வெற்றிபெற்றுவிட்டது என்றும் கூறிட முடியாது. தனிச் சொத்துரிமையை ஏற்று, சந்தைப் பொருளாதாரத்தை ஆதரித்து, தேவையற்ற அரசியல் தலையீட்டைக் குறைக்க வேண்டும் என்று முதலாளியம் கூறுவதில் ஓரளவு உண்மை உளது என்று இம்மடல் கூறுகிறது. இருப்பினும், தனி மனித சுதந்திரத்தை மிகைப்படுத்தும் அதே நேரத்தில், முதலாளியம் மக்களின் சமூகப் பொறுப்பை ஆதரிக்கத் தவறுகிறது. கட்டற்ற சந்தை முறையை ஆதரிக்கும் அளவுக்கு முதலாளியம் வறுமை ஒழிப்புக்கான சமூகத் திட்டங்கள் ஏழைகளுக்கும் சமூகத்தில் வலுவற்றோருக்கும் தனிக்கவனம் செலுத்துதல் ஆகிய அணுகுமுறைகளை ஆதரிப்பதில்லை. எனவே இன்று நடைமுறையில் இருக்கின்ற முதலாளிய அணுகுமுறையில் தேவையான மாற்றங்கள் நிகழ வேண்டும் (எண் 42).

### 16. *திருத்தந்தை 16ஆம் பெனடிக்ட் முழு மனித முன்னேற்றம் பற்றி வெளியிட்ட "உண்மையில் அன்பு" (Caritas in Veritate), சுற்றுமடல், ஜுன் 29, 2009*

மனித முன்னேற்றம் எதில் அடங்கியிருக்கிறது என்பதை விளக்கி, திருத்தந்தை 6ஆம் பவுல் 1967-ஆம் ஆண்டு வெளியிட்ட சமூகச் சுற்றுமடலின் 40ஆம் ஆண்டு விழாவைச் சிறப்பிக்கும் வகையிலும், முழு மனித முன்னேற்றம் பற்றிய போதனையை விரிவுபடுத்தும் வகையிலும் திருத்தந்தை 16ஆம் பெனடிக்ட் *"உண்மையில் அன்பு"* ஏட்டினை வெளியிட்டார்.

**இச்சுற்றுமடலில் காணப்படும் சில மையக் கருத்துக்கள் இவை:**

- மனித முன்னேற்றம் முறையாக நிகழ வேண்டும் என்றால் அது "அன்பு, உண்மை" ஆகிய அடித்தளத்தின் மீது கட்டியெழுப்பப்பட வேண்டும். அன்பு மட்டுமே இருந்து உண்மை இல்லாவிட்டால் அது போலி.
- அன்புக்கு அடித்தளமாக நீதி இருக்க வேண்டும். பொதுநலனுக்காகப் பாடுபடுகின்ற மனநிலையும் வேண்டும்.



- மனித முன்னேற்றம் பற்றிய தமது சுற்றுமடலில் திருத்தந்தை 6ஆம் பவுல் "எல்லா மனிதரும் முழு வளர்ச்சி பெற வேண்டும்" என்பதே குறிக்கோளாக இருக்க வேண்டும் என்றும், கடவுளுக்கு இடமளிக்காமல் உண்மையான முன்னேற்றம் நிகழ முடியாது என்றும் கூறிய கருத்து முக்கியமானது.
- சமூக அறவாழ்வில் அன்பும் உண்மையும் நிலவும்போது அங்கே "வள்ளன்மை" அதாவது "கொடை" (gift) முக்கிய இடம் பெறும். ஒவ்வொரு மனிதரும் தம் வாழ்வைக் கடவுளிடமிருந்து கொடையாகப் பெற்றுள்ளனர் (எண் 34). ஒவ்வொரு மனிதரும் பிறரது வாழ்வில் கொடைகளைக் கொணர்கின்றனர். இந்த வள்ளன்மை சமூக வாழ்விலும் பொருளாதார வாழ்விலும் துலங்க வேண்டும். கொடுக்கல்-வாங்கல் நீதியின் அடிப்படையில் மட்டுமன்றி, சுயநல எல்லையைத் தாண்டிச் செல்லும் வகையிலும் அமைய வேண்டும்.
- பொருளாதாரமும் வர்த்தகமும் மனிதர்களால் நடத்தப்படுகின்ற செயல்பாடுகள். எனவே அவை அறநெறி வழிமுறைகளுக்கு உட்பட்டு நிகழவேண்டும்.
- இன்றைய உலகில் வாழும் மனிதர்கள் பல வகை உறவுகள் வழி ஒருவர் ஒருவரோடு இணைந்துள்ளனர். எனவே, மனித முன்னேற்றம் மனித குலம் முழுவதையும் உள்ளடக்கியதாக அமைய வேண்டும். இறைவனே மனித குலத்தின் தோற்றுவாய். அவரை மறக்கும் சமூகம் மனித மாண்பின் முழுமையை ஏற்கவில்லை என்றே கூறவேண்டும். இன்றைய உலகின் தேவை புதியதொரு முழுமையான மனித நலக் கொள்கை (humanism) ஆகும் (எண் 78).

## 17. ***திருத்தந்தை பிரான்சிசு வழங்கும் சமூகப் போதனை "மகிழ்வின் நற்செய்தி" (Evangelii Gaudium), மறைத்தூது அறிவுரை, நவம்பர் 24, 2013***

***"இறைவா உமக்குப் புகழ்" (Laudato Si) சுற்றுமடல், மே 24, 2015***

திருத்தந்தை பிரான்சிசு திருஅவையின் சமூகப் போதனையை மிகச் சிறப்பான விதத்தில் வளப்படுத்தியுள்ளார். ஐரோப்பாவிற்கு வெளியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் திருத்தந்தை இவர் மார்ச் 13, 2013இல் திருத்தந்தையாகப் பொறுப்பேற்றார். தொடக்கத்திலிருந்தே அவர் "திருஅவை ஏழையரின் அவையாக இருந்து, ஏழையர் நலனுக்குத் தன்னை அர்ப்பணிக்க வேண்டும்" (Church of the poor, for the poor) என்று வலியுறுத்தியுள்ளார்.

திருத்தந்தை பிரான்சிசு வழங்கும் சமூகப் போதனை அவர் வெளியிட்டுள்ள போதனை ஏடுகளில் மட்டுமல்ல, அவருடைய உரைகள், பயணங்கள், செயல்கள் வழியாகவும் தெளிவாகத் துலங்குகிறது.

திருத்தந்தை பிரான்சிசு "ஏழைகள் சார்பாகச் செயல்படுதல்" என்ற அடிப்படைத் தத்துவத்தைத் தமது அருட்பணியின் உயிர்மூச்சாகக் கொண்டுள்ளார். நாட்டையும் வீட்டையும் விட்டுவிட்டு வேறிடத்தில் அடைக்கலம் தேடிச் செல்லும் அகதிகளைத் தேடிச் சென்று சந்தித்து அவர் ஆறுதல் கூறுகிறார். உடல் மற்றும் குறைபாடுகளால் பாதிக்கப்பட்டோரை அன்போடு அரவணைக்கிறார். உலகில் சமாதானம் கொணர்வதற்காக அரசியல் தலைவர்களையும் சமயங்களின் பிரதிநிதிகளையும் சந்தித்து, அவர்களோடு சேர்ந்து இறைவேண்டல் நிகழ்த்துகிறார்.

திருத்தந்தை பிரான்சிசு வெளியிட்ட இரு முக்கிய போதனை ஏடுகளில் திருஅவையின் சமூகப் போதனை சிறப்பிடம் பெறுகிறது.

### ***மகிழ்வின் நற்செய்தி (Evangelii Gaudium), மறைத்தூது அறிவுரை, நவம்பர் 24, 2013)***

இந்த ஏடு மறையறிவிப்புப் பணியை மையப் பொருளாகக் கொண்டுள்ளது. கிறிஸ்து கொணர்ந்த நற்செய்தி உண்மையிலேயே மகிழ்ச்சி தரும் நற்செய்தி என்பதால், அதை அறிவிப்போர் இறைவன் தரும் மகிழ்ச்சியால் நிரம்பியிருக்க வேண்டும். சோகம் வழியும் முகத்தோடு



செல்லாமல், உள்ளார்ந்த மகிழ்ச்சி வெளிப்படுகின்ற முகமலர்ச்சியோடு அவர்கள் "தூதுசெல்லும் சீடர்களாக" (Missionary disciples) மக்களை அணுக வேண்டும் (எண்கள் 119-122).

இந்தப் போதனை ஏட்டின் இரண்டாம் அதிகாரத்திலும் நான்காம் அதிகாரத்திலும் திருஅவையில் சமூகப் போதனையின் சில கூறுகள் விளக்கப்படுகின்றன. நற்செய்தி அறிவிப்பின் ஓர் இன்றியமையாத கூறு அதன் சமூக நீதிப் பார்வை ஆகும். எந்த ஒரு மனிதரும் மனிதக் குழுவும் ஒதுக்கிவைக்கப்படல் ஆகாது. கடவுள் மனித குலத்திற்கு வழங்குகின்ற நலன்கள் எல்லா மனிதருக்கும் மனித குழுக்களுக்கும் பயன்தரும் விதத்தில் பகிர்ந்துகொள்ளப்பட வேண்டும். நீதிகோரி எழுகின்ற ஏழைகளின் குரலுக்கு நாம் செவிமடுக்க வேண்டும் (எண்கள் 187-196). "காலம் என்பது இடத்தை விடப் பரந்தது" (Time is greater than space) என்ற கருத்தைத் திருத்தந்தை முன்வைக்கிறார் (எண்கள் 122-125). அதுபோலவே "ஒற்றுமை என்பது போராட்டத்தை விடச் சிறந்தது," "எதார்த்தம் என்பது கருத்தியல்களுக்கு மேலானது," "முழுமை என்பது பகுதியைவிடப் பரந்தது" என்ற தத்துவங்களையும் அவர் எடுத்துரைக்கிறார்.

*"இறைவா உமக்குப் புகழ்" (Laudato Si) சுற்றுமடல், திருத்தந்தை வெளியிட்ட முதல் சமூகப் போதனை ஏடு ஆகும். அது 2015ஆம் ஆண்டு, மே 24இல் வெளிவந்தது.*

இந்த ஏட்டின் முக்கிய கருப்பொருள் இறைவன் மனிதரிடம் ஒப்படைத்துள்ள படைப்புலகத்தை, குறிப்பாக நாம் பொது இல்லமாகப் பெற்றுள்ள பூவுலகத்தைப் பொறுப்போடு பேணிக் காக்க வேண்டும் என்பதாகும். இந்தச் சுற்றுமடல் திருஅவையின் சமூகப் போதனை ஏடுகளுள் ஒன்றாகக் கருதப்படும் என்று திருத்தந்தை பிரான்சிசு அம்மடலின் தொடக்கத்திலேயே சுட்டிக் காட்டுகிறார் (எண் 15).

1. சுற்றுச்சூழல் பாதுகாப்பு, காலநிலை மாற்றம் (climate change) போன்ற பொருள்கள் பற்றிய விவாதம் அரசியல், அறிவியல், பொருளாதாரம் போன்ற கோணங்களிலிருந்து நிகழ வேண்டும் என்றாலும், சமய நம்பிக்கை அடிப்படையிலும் அந்த விவாதமும் உரையாடலும் நிகழவேண்டும்.

2. சுற்றுச்சூழல் மாசுபடுவதாலும் காலநிலை மாறுவதாலும் எல்லா மனிதரும் பாதிக்கப்படுகின்றனர். ஆனால் ஏழைகளும் ஏழை நாடுகளும்

பிறரை விட அதிகப் பாதிப்புக்கு உள்ளாகின்றனர். கடவுள் படைத்த இப்பூவுலகின் நலன்கள் ஒரு சிலருக்கு மட்டுமன்றி, உலக மக்கள் அனைவருக்கும் பயன்பட வேண்டும். இந்த உண்மை நற்செய்தி நூல்களிலும் திருஅவை மரபிலும் தெளிவாக உள்ளது. ஏழை மக்களின் மாண்பு அனைவராலும் மதிக்கப்பட வேண்டும் (எண் 158).

3. மனித முன்னேற்றம் என்பது பொருட்களையும் செல்வங்களையும் குவித்து வைப்பதால் நிகழ்ந்துவிடாது. அறிவியலும் தொழில் துறையும் தமது கண்டுபிடிப்புகள் வழியாக மட்டுமே உலகத்தை முன்னேற்றி விடலாம் என்பது தவறு. அளவுக்கு மிஞ்சிய நுகர்வு நம்மைக் கடவுளிடமிருந்து பிரிக்கின்ற சக்தியாக மாறிவிடல் ஆகாது. போதும் என்ற மனமே பொன் செய்யும் மருந்து, குறைவான உடைமையே நிறைவான மகிழ்ச்சி (எண் 222).

4. சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றம் பற்றிய விவாதம் இப்போது கத்தோலிக்க சமூகப் போதனையின் ஒரு முக்கிய பகுதியாக மாறியுள்ளது. (எண் 15). 1963இல் திருத்தந்தை 23ஆம் ஜான் *"அவனியில் அமைதி"* பற்றிய தமது சுற்றுமடலில், அணு ஆயுதங்கள் உலக அமைதிக்கு ஆபத்தாக இருப்பதைச் சுட்டிக்காட்டியதுபோல, இந்தச் சுற்றுமடலில் திருத்தந்தை பிரான்சிசு சுற்றுச்சூழல் பிரச்சினை நமது காலத்தில் எழுந்துள்ள ஒரு புதிய பிரச்சினை என்றும் அதற்குத் தீர்வு காண்பதில் அனைவரும் ஒத்துழைக்க வேண்டும் என்றும் சுட்டிக்காட்டியுள்ளார் (எண் 5).

5. சுற்றுச்சூழல் சீர்கெடுவதாலும் காலநிலையில் மாற்றங்கள் ஏற்படுவதாலும் உலகில் தண்ணீர் பற்றாக்குறை, உயிரினங்கள் அழிந்து மறைதல், கடல்நீர் மட்டம் உயர்ந்து மக்களின் வாழிடங்களை அழித்தல் போன்ற பல பிரச்சினைகள் எழுந்து மனித இனத்தையே அச்சுறுத்தத் தொடங்கியுள்ளன. சுற்றுச்சூழல் மாசுறுவதால் எழுந்துள்ள நெருக்கடிக்குத் தீர்வுகாண்பதற்கு மனித அனுபவ அறிவு துணைசெய்ய வேண்டும். அதே நேரத்தில், விவிலியமும் திருஅவை வரலாற்று மரபும் நமக்கு அரிய கருத்துக்களை அளிக்கின்றன. ஆனால் இம்மண்ணுலகைப் பண்படுத்திப் பாதுகாப்பதற்குப் (தொநூ 2:15) பதிலாக மனிதர்கள் அதைச் சூறையாடத் தொடங்கிவிட்டார்கள் (எண்கள் 66, 67). ஆனால் இறைவன் தம் ஒரே மகனை இவ்வுலகிற்கு அனுப்பி இவ்வுலகத்தோடு தம்மை ஒன்றித்துக்கொள்ளச்



செய்தார். இவ்வாறு கடவுளுடைய தனிப்பட்ட உடனிருப்பு இவ்வுலகிற்கு உண்டு. இயற்கையுலகத்தை நாம் மதித்து அன்புசெய்திட அசிசி நகர் புனித பிரான்சிசு போன்றோர் வழிகாட்டியுள்ளனர்.

6. சுற்றுச்சூழல் பாதுகாப்புப் பற்றியும் காலநிலை மாற்றம் பற்றியும் இச்சுற்றுமடல் விரிவாகவும், தெளிவாகவும் பகுத்தாய்ந்துள்ளது. மனிதர்கள் இப்புவியுலகத்திற்கு அப்பாற்பட்டவர்கள் அல்லர். நாம் எல்லோருமே இவ்வுலகத்தோடு இணைந்து பிணைந்தவர்கள் (எண் 139). இயற்கையான இம்மண்ணுலகம் சீரழியும்போது, அதில் வாழ்கின்ற மக்கள், குறிப்பாக ஏழைகள் பாதிக்கப்படுகிறார்கள்; உலக அமைதியும் சீர்குலைகிறது, மனிதர்களின் உள்ளத்திலும் அமைதியின்மை ஏற்படுகிறது (எண் 10). இலாபத்தை மட்டுமே குறிக்கோளாகக் கொண்டு பொருள் பரிமாற்றம் நிகழ்ந்தால் நமது பொது இல்லமாகிய இப்பூவுலகம் சீர்குலையத்தான் செய்யும் (எண் 187).

7. சுற்றுச்சூழல் எவ்வகைகளில் மாசுபடுகிறது என்றோ, காலநிலை மாற்றத்தால் புவியுலகம் எவ்வாறு பாதிக்கப்டுகிறது என்றோ, அதற்கு எவ்வகையான தீர்வுகள் பொருத்தமானவை என்றோ அறிவியல் முறைப்படி எடுத்துரைப்பது திருஅவையின் பணியன்று. ஆனால் சுற்றுச்சூழல் பற்றிய அறிவியல் துறைகள் அளிக்கின்ற தகவல்களையும் தீர்வுகளையும் நாம் கருத்தோடு கவனத்தில் கொள்ள வேண்டும் (எண் 15).

8. சுற்றுச்சூழல் மாசுபடுவதாலும் நாம் வாழ்கின்ற பொது இல்லமாகிய இப்புவியுலகத்தைக் காலநிலை மாற்றம் சீர்குலைப்பதாலும் ஏழைமக்களே பெரும் பாதிப்புக்கு ஆளாகின்றனர் என்பது தெளிவு. வசதிபடைத்த பலர் இதை உணராமல் செயல்படுவது கண்டு திருத்தந்தை வருத்தம் தெரிவிக்கிறார் (எண் 26). சாதாரண மக்களின் அன்றாட வாழ்வை அனுபவத்தின் வழி அறியாதவர்களே அரசியலிலும் சமூகத்திலும் அதிகாரம் கொண்டவர்களாக இருப்பதால் அவர்கள் சுயநலத்திற்கு இடம் கொடுத்து, பொதுநலனை மறந்துவிடும் ஆபத்து உள்ளது (எண் 90, 91).

9. நமது பொது இல்லமாகிய புவியுலகத்தைப் பேணிக்காத்தல் பற்றிய இச்சுற்றுமடலின் ஒரு சிறப்புக் கூறு. அது உலக மக்கள் அனைவரோடும் உரையாடலில் ஈடுபட்டு உலகப் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண அழுத்தமான

அழைப்பு விடுப்பது ஆகும். சுற்றுச்சூழல் சார்பான பிரச்சினைகள் குறித்து பிரேசில், நியூசிலாந்து, தென்னாப்பிரிக்கா, பொலிவியா, போர்த்துகல், ஜெர்மனி, அர்ஜெண்டினா, தொமினிக்கன் குடியரசு, பிலிப்பைன்ஸ், ஆஸ்திரேலியா, ஐக்கிய அமெரிக்க நாடுகள் போன்ற நாடுகளின் ஆயர் பேரவைகள் விடுத்துள்ள அறிக்கைகளைத் திருத்தந்தை பிரான்சிசு தமது சுற்றுமடலில் குறிப்பிடுகிறார். சுற்றுச்சூழல் பற்றி உலகளாவிய உரையாடல் நிகழ்வதை அவர் ஆதரிப்பதன் ஓர் அடையாளம், அவர் 'ஆர்த்தடாக்சு' மறைமுதுவர் பர்த்தலமேயுவையும், ஓர் இசுலாமியப் புனிதரையும் மேற்கோள் காட்டுவதாகும்.

10. இச்சுற்றுமடலில், நாம் வாழ்கின்ற புவியுலகில் உள்ள எல்லா மனிதரையும் அழைத்துப் பேசுகிறார் திருத்தந்தை பிரான்சிஸ். உலகில் ஒரு பெரிய பண்பாட்டுப் புரட்சி நிகழ வேண்டும் (எண்கள் 3, 114). மனிதர்கள் இப்புவியுலகின் நலனைப் பற்றி அக்கறை கொள்ளாமல் செயல்படுவதால் அது ஒரு "மாபெரும் குப்பைக் குவியலாக" மாறியிருக்கிறது (எண் 21). இருப்பினும், இச்சுற்றுமடல் உலக மக்களுக்கு ஒளிமயமான ஓர் எதிர்காலம் உண்டு என்று நம்பிக்கை அளிக்கிறது. கடவுள் நம்மோடு இருக்கின்றார் என்ற நம்பிக்கை நமக்கு இருப்பதால் நாம் அனைவரும் நமது பொறுப்பை உணர்ந்து, செயல்பட்டு, இப்புவியுலகத்தை முறையாகப் பேணிப் பாதுகாத்திட முடியும் என்ற நம்பிக்கை இன்னும் மறைந்துவிடவில்லை. ஆகவே, உலக மக்கள் அனைவரும் "இப்புவியுலகத்தின் அபயக் குரலுக்கு, ஏழைமக்களின் கூக்குரலுக்குச் செவிமடுத்து" (எண் 49), "சுற்றுச்சூழல் நலன் பேணும் மனமாற்றம்" (ecological conversion) பெற்றிட வேண்டும் (காண்: எண்கள், 5, 216-220).

**நிறைவுரை**

கடந்த 125 ஆண்டுகளாகத் கத்தோலிக்கத் திருஅவை எடுத்துரைத்துள்ள சமூகப் போதனையை ஒட்டுமொத்தமாகக் கருதும்போது அப்போதனையில் ஒருசில அடிப்படைக் கருப்பொருள்கள் மீண்டும் மீண்டும் ஆயப் பெற்றுள்ளதைக் காணமுடிகிறது. அவற்றைச் சுருக்கமாகப் பட்டியலிட்டு இக்கட்டுரையை நிறைவுக்குக் கொணர்கிறோம்:



1. ஒவ்வொரு மனிதரும் கடவுளின் சாயலாகப் படைக்கப்பட்டிருப்பதால் தம்மிலேயே மாண்பு கொண்டுள்ளனர்.

2. மனித உயிரை அதன் தொடக்கத்திலிருந்து இறுதிவரை பாதுகாத்துப் பேணும் பொறுப்பு அனைவருக்கும் உண்டு.

3. குழுவாக இணைந்து தம் உரிமைகளைப் பாதுகாக்கும் உரிமை அனைவருக்கும் உண்டு.

4. சமூக - பொருளாதார - அரசியல் - பண்பாட்டு வாழ்வில் செயல்முறையில் பங்கேற்கும் உரிமை அனைவருக்கும் உண்டு.

5. ஏழைகளையும் ஒடுக்கப்பட்டோரையும் சார்ந்துநின்று அவர்களது நலனை மேம்படுத்தும்போது சமுதாயம் முழுவதுமே மேம்படும்.

6. மனிதரிடைய நிலவும் உறவுகள் வளர்ந்து, அவர்கள் ஒருவர் மற்றவர் நலனைப் பேணுவதில் ஈடுபட வேண்டும்.

7. கடவுளின் படைப்பான நமது புவியுலகத்தை நாம் பொறுப்போடு பேணிக் காத்திட வேண்டும்.

8. மேல்நிலை அமைப்புகள் கீழ்நிலை அமைப்புகள் நன்முறையில் செயல்படுவதிலிருந்து அவற்றைத் தடைசெய்யாமல், அவை முறையாகச் செயல்பட உதவிட வேண்டும்.

9. மனிதரிடையே ஏற்றத்தாழ்வு கற்பிக்காமல் அனைவரும் சம மாண்பு கொண்டவர்கள் என்பதை ஏற்றுச் செயல்பட வேண்டும்.

10. மக்களின் பொதுநலனை வளர்ப்பதில் அனைவரும் ஈடுபட வேண்டும்.

# 2. விவிலியக் களஞ்சியத்திலிருந்து திருஅவையின் சமூகப் போதனைகள்

*முனைவர் அருள்பணி. அ. மரிய அருள் ராஜா சே.ச.*
*அருள்கடல், சென்னை*

விடுதலைப் பயண நிகழ்வு – இயேசு நிகழ்வு என்னும் இரட்டை வரலாற்று ஊடாட்டமும் இறை ஆவியானவரின் உயிர் மூச்சும் கலந்து உருவாக்கிய படைப்பினை விவிலியத் தொகுப்பு எனலாம். கிட்டத்தட்ட மத்திய மேற்கு ஆசியாவின் மத்தியத் தரைக் கடலை ஒட்டிய பகுதிகளில் கி.மு. 1200 – கி.பி. 100 காலக் கட்டங்களில் ஏற்பட்ட பல்வேறு வளர்சிதை மாற்றங்களில் இருந்து உருவான பல்வேறு இலக்கிய வடிவங்களின் தொகுப்பினை விவிலிய உலகம் கருக்கொண்டுள்ளது.

புலம் பெயர்க்கப்பட்டோரின் அவலங்கள், பாலைவனப் பயணிகளின் ஆபத்துக்கள், வேரறுக்கப்பட்டோரின் தோல்விகள், நிலம் மறுக்கப்பட்டோர் எதிர்கொண்ட நிந்தனைகள், அநாதைகளின் கூக்குரல்கள், காலனி ஆதிக்கத்தின் அடாவடிகள் மற்றும் ஆதரவற்றோரின் ஏக்கங்கள் போன்ற அனைத்துக் கண்ணீர்க் கதையாடல்களுக்கு மத்தியில் நம்பிக்கை முளைக்குமா? நல்ல நேரம் பிறக்குமா? தெய்வீகக் குறுக்கீடு நிகழுமா? உயிர்ப்பின் பண்பாடு கண் விழிக்குமா?

இவ்வாறு மரணப்பண்பாட்டுக்கும் மனிதாபிமானப் பண்பாட்டுக்கும் இடையே நிகழ்ந்த போராட்டங்களின் கதையாடல்களில் கடவுளின் கரத்தை அடையாளம் காண்கிறது விவிலியம். இறையூக்கம் பெற்றுள்ள இந்த அருள் களஞ்சியமே திருஅவையின் சமூகப் போதனைகளாகக் கடந்த 125 ஆண்டுகளாக நீதிக்கான பாதையில் நம்மை வார்த்தெடுத்து வளர்த்து வளம் பெற்று நடக்க வழிகாட்டிக் கொண்டிருக்கின்றன. இதன் விவிலிய உள்ளொளிகளை 1. மானிடருக்கு மரியாதை 2. எளியோருக்கு மரியாதை 3. இயற்கைக்கு மரியாதை போன்ற பகுதிகளில் மிகச் சுருக்கமாகத் தொகுத்து வழங்கிட முயல்கிறோம். ஒருங்கிணைந்த மானிடக் குடும்பமாகக் கைகோர்த்து இவற்றை எப்படி வரலாறாக மாற்ற முடியும் என்பதையும் முன்வைக்கத் தலைப்படுகிறோம்.



## 1. மானிட உயிருக்கும் உழைப்புக்கும் உரிமைக்கும் தெய்வீக மரியாதை

கருச்சிதைவு, கருணைக்கொலை, சாதிய ஆதிக்கம், உயிரணுக்களின் மூலக் கூறுகளைப் பிரித்து மானிடக் கருவின் கட்டமைப்பைத் தான்தோன்றித்தனமாக உருக்குலைப்பது, வகைவகையான மரணத் தண்டனை, வேற்று இன / நாட்டு / மொழி மானிடரைக் குறி வைத்துக் கொல்லத் துடிக்கும் நேரடி / மறைமுகப் போர்ப் படையெடுப்பு போன்ற கொலைகாரப் பண்பாட்டுக் கூறுகள் மானிட உயிருக்கும் மாண்புக்கும் எதிராகச் செயல்படுகின்றன. எனவேதான் மானிடப் பிறவியின் உள்ளுயிர் மாண்பும், அனைத்து மானிடருக்குமான நன்மை மட்டுமே முதல் மரியாதை பெற வேண்டியவை. ஒருசில மேட்டுக்குடியினர் மற்றும் ஆளும் வர்க்கத்தினரின் சொகுசுகளுக்கும் வசதிவாய்ப்புக்களுக்கும் முன்னால் மானிட மாண்பையும் ஒட்டுமொத்தமான மானிட நலன்களைச் சீர்குலைப்பதை அனுமதிக்க முடியாது. (நற்செய்தியின் மகிழ்ச்சி, எண் 218; உண்மையில் அன்பு, எண் 25,32,36,63; வாழ்வின் நற்செய்தி, எண் 3,54; நூறாவது ஆண்டு, எண் 11,43; கத்தோலிக்க திருஅவையின் மறைகல்வி, எண் 1938; இன்றைய உலகில் திருஅவை, எண் 27,63; அன்னையும் ஆசிரியமும், எண் 219; அரசியல் அதிகாரம், கருத்தமைவு, சமூக ஈடுபாடு, எண் 14; மானிட உழைப்பு, எண் 9,16,20).

### 1.1. கடவுளின் சாயலை மானிட மாண்பில் கொண்டாடு

ஆசை ஆசையாகத் தன் உள்ளுயிர்ச் சக்தியை ஊதிப் பொழிந்து ஆணாக-பெண்ணாக-திருநங்கையாக உருவாக்கப்பட்ட மானிடரின் உடலையும், உயிரையும், உறவு வலைப் பின்னலையும் ஆனந்தக் கூத்தாடிக் கொண்டாடி மகிழ்பவர் இறைவன் (தொநூ 1:26-31; திபா 8:1-9; 139:13-16). இவ்வாறு முழுமுனைப்போடு முதல் ஆளாக நின்று மானிட மாண்புக்கு முதல் மரியாதை செய்து முத்தமிட்டு மகிழும் கடவுளால் ஒவ்வொரு மானிடரும், அந்தக் கடவுளே குடியிருக்கும் கோயிலாக அர்ச்சிக்கப்படுகிறார் (1யோவா 4:7-12; 1கொரி 3:16). எனவே தெய்வீக அரவணைப்பினால் கடவுளின் மகளாகவும் மகனாகவும் உருவாக்கப்பட்டுள்ள ஒவ்வொரு மானிடருமே இன்னொரு மானிடரை உயர்வாகக் கருதிப் போற்றிடும்

அரவணைப்புப் பண்பாட்டை உருவாக்கி வளர்த்திட வேண்டும் (1யோவா 3:1-2; உரோ 12:9-18; பிலி 2:1-4).

மானிட மாண்பு உருக்குலைக்கப்படும் போதெல்லாம், இயேசுவும் அவர் வணங்கிய தெய்வமும் எல்லாவிதமான சமயப் பண்பாட்டு, சடங்கு சம்பிரதாய மரபுகளை உடைத்தெறிந்துவிட்டு மனித உயிருக்கான தெய்வீக மாண்பினை மீட்டெடுப்பதில் தனிப்பெரும் ஆவேசத்தில் செயல்படுகின்றனர் (லூக் 10:25-37; யோவா 4:1-42; இச 10:17-19 யாக் 2:1-8). இனம், மொழி, சாதி, சமயம், பொருளாதாரம், நாடு போன்ற காரணிகளால் மானிடர் கூறு போடப்பட்டு ஏற்றத் தாழ்வினால் சிதைக்கப்பட்டிருந்தாலும், கடவுளின் பார்வையில் போற்றப்பட வேண்டிய தெய்வீக வாரிசுகள் வேதனைப்பட்டுக் கதறுவோரின் கண்ணீரைத் துடைக்கும் சொந்தங்களாகத் தம்மைத்தாமே மாற்றிக்கொள்ளும் நல்ல சமாரியர்களாக உருவாகி சமத்துவப் பண்பாட்டை நோக்கி அனைவரையும் வழிநடத்தும் மானிடர்களே மீட்பின் முழுமையை அனுபவித்திடவும் பகிர்ந்தளித்திடவும் முடியும் (லூக் 10:25-37; கலா 3:26-28). இவ்வாறு மானிட மாண்பு மையப்படுத்தப்படும்போதெல்லாம் சமூக ஏற்றத்தாழ்வுகள் அகற்றப்பட்டும் தெய்வீக இதயத்துடிப்புடன் கூடிய சமத்துவப் பண்பாட்டை நிரந்தரமாக வாழ்ந்து காட்டிட இயலும்.

தான் வழங்கிய கொடையான மானிட மாண்பினை மதித்துப் போற்றுபவராகக் கடவுள் உலகின் படைப்புக்களை மானிடக் குடும்பத்திடம் பொறுப்பாக ஒப்படைக்கிறார். அவற்றை வளம் பெறச் செய்து கனி தரும் படைப்பாற்றலோடு இயக்கிடும் சவாலையும் ஆசிரையும் முன் வைக்கிறார் (தொநூ 2:15; இச 14:28-29). இயற்கை வளமும் மானிட உழைப்பும் கைகோர்த்து அருள்வளங்களை ஈன்றெடுக்கும் உற்பத்திக் கட்டத்தில் உழைக்கும் ஒவ்வொருவருக்கும் உழைக்கும் நிலம் - உழைக்கும் மிருகம் - உழைக்கும் மானிடர், உழைக்கும் அதிகாரத்தைப் படைப்பாற்றலோடு இறைவன் வழங்குகிறார் (தொநூ 2:1-3; இச 5:13-15; மாற் 2:27). எனவே உழைக்கும் ஒவ்வொரு மானிடரும் நெஞ்சுக்கு நீதியோடு உழைத்திட வேண்டும் (லூக் 3:10-14).

இவ்வாறு உழைத்து உழைத்து உண்ண வேண்டிய உழைப்பாளர்க்குரிய நியாயமான கூலியை (மத் 20:1-16) தடுப்பதும் தாமதிப்பதும் மறுப்பதும் மறப்பதும் கொலை செய்வதைவிடக் கொடிய



குற்றமாகும் (இச 24:14-15; சீரா 34:20-22; யாக் 5:1-6). ஏழை எளியோரின் உழைப்பினைச் சுரண்டும் ஆதிக்கவாதிகளின் செபமும் தபமும் நகைப்புக்குரிய பரிசேய நாடகக் கூத்தேதான் (எசா 58:3-7; எரே 22:13). இவ்வாறு குவிக்கப்படும் பொன்னும் பொருளும் முதலாளித்துவத்தை முன்னிறுத்துபவர்களின் 'மனித மாண்பை' எள்ளி நகையாடுகின்றன. உழைப்பாளரின் உயிரையும் உடலையும் உரிமையையும் உழைப்பையும் கொச்சைப்படுத்திப் புதைக்கின்றன. மனித மாண்பைப் படைப்பாற்றலோடு கொண்டாடி மகிழும் இறைவனையே நையாண்டித்தனமாக நடைபிணமாக்கத் துடிக்கின்றன.

## 2. ஒடுக்கப்பட்ட உயிர்களைத் தாங்கிப்பிடிக்கும் ஒட்டுமொத்த மீட்புக்கான குறுக்கீடு

ஆதிக்கவாதிகளின் பாதுகாப்புக்கு அனைத்துலகமும் மண்டியிட்டுச் பணி செய்ய வேண்டிய அவல நிலை நிலவுகிறது. சமத்துவப் பண்பாட்டுக் கூறுகளுடன் பரிவிரக்கப் பகிர்வு மனப்பான்மை இல்லாததனால் ஒருபுறம் செல்வக்குவிப்பும் மறுபக்கம் உயிரின் பறிப்பும் அருகருகேயும் அடுத்தடுத்தும் நிகழ்கின்றன. பசி, பஞ்சம், பட்டினி, சாவு, நீதி மறுப்பு, சுமத்தப்பட்ட ஏழ்மை என இப்பூமியைப் புண்படுத்தியுள்ளது பொருளைக் குவித்துக்களிக்கும் பேராசை மனப்பான்மை. இதனால் உயிருக்கான, நலனுக்கான, வேலைவாய்ப்புக்கான, குடும்பவாழ்வுக்கான உரிமை மறுக்கப்படுகின்றன. தனி மனித உரிமைகள் மட்டுமல்ல இனக் குழுக்களின் மானுட வாழ்வுக்கான அனைத்து உரிமைகளையும் கொச்சைப்படுத்திச் சீர்குலைக்கும் அரசு அமைப்புக்களும், சட்டதிட்டங்களும், போர்ச்சூழலும் உருவாக்கப்பட்டுக் கொண்டே இருக்கின்றன. இந்த உயிர்க்கொல்லிப் பண்பாட்டுச் சூழலில் "எங்கே நிம்மதி? எதுதான் முன்னேற்றம்? எப்படித்தான் உரிமை வாழ்வு?" என ஏழைஎளியோரும், புலம்பெயர்க்கப்பட்டோரும், சாதித்தீயில் சாம்பலாக்கப்பட்டோரும், நிறவெறியால் மனிதம் பறிக்கப்பட்டோரும் கத்திக் கதறிக் கொண்டிருக்கும்போது கடவுளின் பதிலிறுப்புதான் என்ன? (*உலகில் அமைதி*, எண் 11,30; *மானிட உழைப்பு*, எண் 37; *அரசியல் அதிகாரம், கருத்தமைவு, சமூக ஈடுபாடு*, எண் 23; *மானுட முன்னேற்றம்*, எண் 23; *இன்றைய உலகில் திருஅவை*, எண் 59; *நூறாவது ஆண்டு*, எண் 58;

*அன்னையும் ஆசிரியமும்*, எண் 20; *உண்மையில் அன்பு*, எண் 43; *பொதுநிலையினரின் அழைப்பும் பணியும்*, எண் 38; *நற்செய்தியின் மகிழ்ச்சி*, எண் 59).

### 2.1. எளியோருக்கு நற்செய்தி: நீதியின் வடிவில் கண்ணீருக்குத் தீர்வு

வஞ்சிக்கப்பட்ட ஏழைஎளியோரை ஏறிமேய்த்து அடாவடி செய்தால் அவர்தம் கண்ணீரின் வெப்பம் இடிமுழக்கமாக இறைவனின் இதயத்தைத் தாக்கிவிடும். அவரும் ஓடோடி வந்து ஒடுக்கப்பட்டோரின் வக்கீலாகக் குறுக்கிட்டு வாதிட்டு நீதியைப்பெற முன்வருவார் (விப 22:20-26; யோபு 34:20-28; எசா 25:4-5). ஓரம்கட்டப்பட்டும் ஒடுக்கப்பட்டும் இருப்போரின் சார்பில் தாமதமின்றி வாதிட முன்வருவோரும், அவர்தம் தேவைகளை நிறைவேற்றிடும் நீதிக் குறுக்கீடுகளை மேற்கொள்வோரும் கடவுளின் வாரிசுகளாகவும், இயேசுவின் சீடர்களாகவும், ஆவியாரின் அருட்கனிகளாகவும் கொண்டாடப்படுகின்றனர் (பழ 31:8-9; சீரா 4:1-10; மத் 25:35-40). ஏழையர் பேறுபெற்றோர்; ஏனெனில் அவர்கள் இயேசுவின் நெஞ்சுக்கு நெருக்கமானோர் (லூக் 4:16-21; 6:20-23). இந்த உண்மையை அறிந்திருந்தும் நன்மை செய்ய மறுத்திடும் நெஞ்சம் ஆயிரம் வழிபாடுகளை மேற்கொண்டாலும் அவை போலிகளே (எசா 58:5-7; 1யோவா 3:17-18). வஞ்சிக்கப்பட்டும் வயிற்றிலடிக்கப்பட்டும் சிதறடிக்கப்பட்ட ஏழைஎளியோரின் அடைக்கலமாகக் கடவுளே அவர்களை அரவணைப்பதால், அறுவடைக்காலங்களில் அவர்கள் வந்துபோகும் பாதைகளில் அங்கொன்றும் இங்கொன்றுமாகத் தானியக் கதிர்களை விட்டு வைத்திடவேண்டும் (எசா 25:4-5; லேவி 19:9-10). பசித்தோரை நலன்களால் நிரப்புவதுதானே கடவுளின் கனிந்த பேரிரக்கம் (லூக் 1:53).

கொடுத்ததெல்லாம் கொடுத்தானே கடவுள். தான்தோன்றித்தனமாகத் தன் சொந்த வயிற்றை மாத்திரம் களஞ்சியமாகக் கட்டிக் கொண்டு அகன்ற கோட்டையாகவும் உயர்ந்த கோபுரமாகவும் எழும்பி நின்றுபின் விழுந்து சாவதற்கா? மானிடர் பெற்றுள்ள அருள்வளங்களும் பொருள்வளங்களும் இல்லாதவர்களுக்கு வழங்கி மகிழ்வதற்குத்தானே? (தோபி 4:5-11). ஊரார் பிள்ளையை ஊட்டி வளர்த்தால் தான் பெற்ற பிள்ளை தகைமையோடு



வளருமே (எரே 29:4-7). ‘நீதியைத் தேடு – ஒடுக்கப்பட்டோரை விடுவி. அநாதையைக் காப்பாற்று. விதவைக்காக நீதியைக் கேள் – இதற்காகத்தானே ஒவ்வொரு மானிடமும், மானிட சமூகமும், அரசும் கட்டியமைக்கப்படவேண்டும்? (எசா 1:16-17; எரே 22:13-16; ரூத் 2:2-23). புண்பட்ட ஏழை இலாசரை நாயோடு நாயாக ஒட்டி உறவாடச் செய்த பணக்காரத் திமிரின் பாராமுகம், பகிரப்படாத செல்வம், அனைத்துமே இயேசு என்கிற இறைமகனையும் ஏழை என்கிற மானிட மகனையும் பசியோடும் குளிரோடும் உடையின்றி உயிரின்றித் தெருவோரத்து அனாதையாகவும் ஆளும் வர்க்கத்துக்குச் சிறைக்கைதியாகவும் மாற்றுகின்றன (மத் 25:31-46; லூக் 16:19-31; 2கொரி 9:6-15). பகிரப்படாத வளங்கள் பாழாகித்தான் போகும். நீதிச் செயல்களாக ஆக்கப்படாத வழிபாடு நெறி கெட்டுத்தான் போகும் (1கொரி 12:1-21; யாக் 2:14-18).

கொத்தடிமைக் கூட்டமாக நடத்தப்பட்டோரை மீட்பதன் வழியாக எகிப்திய ஆளும் வர்க்கத்துப் பாரவோன் மன்னர்களையும் மீட்புக்கென அழைப்பது விவிலிய இறைவனின் நுணுக்கமான மீட்புத்திசை. பாவிகள் எனப் பெயரிடப்பட்ட பாமர நோயாளிகளை உறுதிப்படுத்தித் தலைநிமிர்த்துவதன் வழியாக பரிசேயப் பார்ப்பனிய மேட்டுக் குடி வாசிகளையும் மனிதராக்கத் துடிப்பது இயேசுவின் மீட்புக்கான பாணி. இவ்வாறு சேதார உடைப்பினின்று ஆதார உறுதிப்பாட்டை நோக்கி நகரும் ஆவியாருக்குரிய ஆக்கப்பூர்வமான நகர்வினைத்தான் ‘இறையாட்சி’ என்கிறோம். அதுவே இயேசுவின் உயிர்மூச்சு.

## 3. மண்ணும் மரமும் விண்ணும் விவசாயமும் உயிரை வளப்படுத்தும் அருள் வளங்களே

மண்ணை விஷமாக்கிப் புதைத்து விட்டு, கடலைப் பாலைவனமாகச் சிதைத்து விட்டு விண்ணை நோக்கிப் பறக்கப்போவதாக மானுடம் போலிக் கனவைக் காண்கிறது. அண்டசராசரத்தின் அனைத்துக் கூறுகளுமே அனைவருக்கும் சொந்தம். நேற்றைய வரலாறு – இன்றைய நிஜம் – நாளைய எதிர்பார்ப்பு என அனைத்துக் காலங்களிலும் நடமாடும் அனைத்துயிர்களுக்கும் இது ஆண்டவன் கொடுத்த சீர்வரிசை.

படைப்புலகின் செல்வங்களை ஆதிக்க வாதிகளின் அரக்கத்தனமான இதயங்களும் இயந்திரங்களும் அபகரித்துக் கொண்டு ஏழை எளியோரை அந்நியப்படுத்தித் துரத்தி விடும் அவலத்தை நாம் கண்டித்திட வேண்டும் (*உண்மையில் அன்பு*, எண் 48,51). தானே ஒரு படைப்புலகின் ஒரு சிறுதுகள் என்பதை மறந்து விட்ட மானிடர் தன் வரம்பற்ற இன்ப வேட்கைக்கும், திக்குத் தெரியாத உற்பத்தி வெறிக்கும் அடிமையாகிப் போவதால் எதிர்காலச் சந்ததியின் மீது அடாவடி ஆதிக்கம் செய்கின்றார். தான் பிறந்து வளர்வதன் மெய்ப்பொருளை மறந்தும் மறுத்தும் வருகிறார் (*நூறாவது ஆண்டு*, எண் 37, *நீவிர் போற்றப்படுவீராக*, எண் 11). இதனால் இயற்கை அன்னை கதறிக் கண்ணீர் வடிக்கிறார் (*நீவிர் போற்றப்படுவீராக*, எண் 2). வஞ்சிக்கப்பட்ட ஏழைகளுக்கு எதிரான அநீதி அகற்றப்பட்டு அவர்களுடன் கரம் கோர்த்து நடந்திடும் நல்மனத்து இதயங்களே 'அனைவருக்கும் நன்மையான அனைத்தையும்' உருவாக்கிப் பகிர்ந்தளித்திட முடியும் (*நீவிர் போற்றப்படுவீராக*, எண் 158). மிருதுவான பாசத்தோடும் மென்மையான பரிவோடும் இயற்கையைப் பேணி வளர்த்திடும் தாயாக நம் மானுடம் மனம் மாறிட வேண்டாமா? (*நீவிர் போற்றப்படுவீராக*, எண் 220).

### 3.1. உலகம் பிறந்தது நமக்காக ஓடும் நதியும் நமக்காக

மிகச் சின்னஞ்சிறு புழுபூச்சியிலிருந்து மிகப் பிரமாண்டமான அண்டசராசரக் கோள்கள் வரை கடவுளின் ஆவியார் நடனமாடி இரசித்து உருவாக்கிய இந்தப் பிரபஞ்சம் தன்னிலையிலேயே நல்லது. கொண்டாடப் படவேண்டிய அருளின் தளம் இது. படைப்பாளியான கடவுளையும் உடன்படைப்பாளியான மானிடரையும் சந்திக்கச் செய்யும் திருத்தலம் இது (தொநூ 1:1-31; 1கொரி 10:26). கடவுளின் அருள் இரக்கத்தையும், மாட்சிமையின் வீச்சுக்களையும் மிகத்தெளிவாக வெளிப்படுத்தும் படைப்பாற்றல் மிக்க தளம் இது (தானி 3:56-82; உரோ 1:20). இத்தகைய வானமும் பூமியும் கடவுளுக்கு மட்டுமே சொந்தம் என்பதால் (இச 10:14; திபா 24:1-2), இவற்றை மானிடர் தம் வாழ்வை வளப்படுத்திக் கொள்ள மட்டுமே பயன்படுத்திக் கொள்ளவேண்டும். கடவுள் படைத்த இந்த வானத்தையும், பூமியையும், அவற்றில் காணப்படும் வளங்களையும் தம் பேராசைக் குவியலுக்காக அவர்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.



இப்பிரபஞ்சத்திலுள்ள எல்லா உயிர்களையும் பாரபட்சமின்றி தாயுள்ளத்தோடு கடவுள் கண்காணிக்கிறார் (மத் 6:25-34). வானத்துக் குருவிகள் என்றாலும் வயல்வெளிப் புற்கள் என்றாலும், மானிடத் தலையின் முடி என்றாலும், மாபெரும் கடல் அலை என்றாலும் கடவுளின் அதிகாரத்தின் கீழ்தான் செயல்படமுடியும் (மத் 10:29-31; லூக் 8:23-25). உயிருக்கான கரு, பயிருக்கான முளை, கருப்பையின் பாதுகாப்பு, இரைப்பையின் இயக்கம், கடல்களின் அடித்தளம், ஆகாயத்தின் வேர்கள், மழைமேகம் - குடிநீர் - பனிக் கட்டி என்னும் வளர்சிதைமாற்றம், காட்டு மிருகம் - வீட்டு விலங்கு - ஊர்வன - கால்நடை - பறப்பன போன்றவற்றிற்கான உணவு - இனப்பெருக்கச் சூழல் போன்றவற்றை தொடக்கத்திலிருந்தே இயக்கிவருபவர் தாயுள்ளம் கொண்ட கடவுளே (யோபு 38:1-39:30). எனவே என்னதான் மானிடர் கடவுளுக்கு நெருக்கமாகவும் படைப்பினை நிர்வகிக்கும் பொறுப்பில் இருந்தாலும் (தொநூ 1:28-30; திபா 8:5-8), இப்படைப்புலகை அக்கறையுடன் நிர்வகித்துப் பேணிப் படைப்பாற்றலுடன் அவற்றை வளம்பெறச் செய்திட வேண்டிய கடமை அவர்களுக்கு உண்டு (தொநூ 2:15). வரம்பற்ற இலாப வெறிக்காகவோ இன்பவெறிக்காகவோ பூமியையும், உழைப்பாளர்களையும், உடன் உழைக்கும் மிருகங்களையும் ஓய்வின்றி விளைச்சலை உற்பத்தி செய்யும் இயந்திரங்களாக மாற்றிவிடக்கூடாது (லேவி 25:1-7).

## 4. புதிய வானம் புதிய பூமியை நோக்கி

புண்பட்ட பூமியை சமத்துவத்தின் சொர்க்கமாக்குகின்ற நம் கூட்டுத்திருப்பயணம் புதிய வானம் - புதிய பூமியை நோக்கித் தொடர வேண்டும். இதற்கு

(1) மானிட மாண்புக்கும் உரிமைக்கும் மரியாதை

(2) ஏழை எளியோருக்கு மரியாதை

(3) உடன் பிறப்பான இயற்கைக்கு மரியாதை

போன்ற வழிமுறைகளில் நாம் நம் கூட்டுப் பயணத்தைத் திட்டமிட வேண்டும்.

ஒட்டுமொத்த மானுடம் - படைப்புலகம் என்கிற ஒன்றிப்பின் வளர்ச்சியில் கடவுளை நோக்கிய ஒரு சாதகமான மானுடச் சுற்றுச் சூழலை ஏற்படுத்தும் அருள்தளமே திருமணம் என்கிற அடித்தளம் (நூறாவது ஆண்டு, எண் 39). வேர்ப் பிடிப்பில்லாத ஆண்-பெண் உறவு, வேரோடு பிடுங்கி எறியப்படும் புலம் பெயர்க்கப்பட்டோர், கருக்கலைப்பு - கருச்சிதைவுப் பண்பாடு, மானிட உடலை வெறும் இயந்திரப் பண்டமாகக் குறுக்கிவிடும் அறிவியல் திமிர், பெண் உடலை வெறும் போகப்பொருளாகவும் மாற்றிவிடும் பாலுணர்ச்சிப்பார்வை, சின்னஞ்சிறுசுகளை அவலமான பாலுறவுக்கு ஆளாக்கி விடுவது போன்றவற்றால் திருமணம் - குடும்பம் - பாலுறவு போன்றவற்றின் மாண்பு சீர்குலைக்கப்படுகிறது (அன்பின் மகிழ்ச்சி, எண் 31-57). சமூக உறவுப் பின்னலால் வளர்க்கப்படும் ஒவ்வொரு மானிடரும் தத்தம் அருள்வளங்களை மற்றவருக்குக் கொடுத்துப் பரிமாறுவதால் நிறைவுபெறுகிறார் (*இன்றைய உலகில் திருஅவை*, எண் 12; *உண்மையில் அன்பு*, எண் 57).

ஒட்டு மொத்தமான மானிடக் குடும்பத்தின் பொதுநலனை முன்னிறுத்தவும், மானிட உரிமையை வென்றெடுக்கவும் ஒவ்வொரு மானிடக்கரமும் உறவுப் பின்னலை ஏற்படுத்தி பொறுப்புணர்வுடன் உலகின் பாவங்களுக்கும் அநீதிகளுக்கும் எதிராகச் செயல்பட வேண்டும் (*உண்மையில் அன்பு*, எண் 7,66; *திருச்சபையின் சமூக ஈடுபாடு*, எண் 39; *வாழ்வின் நற்செய்தி*, எண் 19; *அன்னையும் ஆசிரியமும்*, எண் 157).

### 4.1. மீட்புக்கான தெய்வீக-மானிட-இயற்கைக் கூட்டணி

மானிடர் தனித் தீவு அல்ல. திருமண பந்தத்தோடும், குழந்தைகுட்டிகளோடும், உற்றார் உறவினரோடும், உலகம் தழுவிய பந்த பாசங்களோடும், பிரபஞ்சத்தின் அனைத்துப்படைப்புக்களோடு கூடிய உயிருள்ள உறவுப் பரிமாற்றத்திற்காக ஒவ்வொரு மானிடரும், மானிட இனக்குழுவும், மானிடச் சமூகமும் அழைக்கப்பட்டுள்ளனர் (தொநூ 2:18; 4:8-15). கடவுள் கொடுத்த அனைத்துக் கொடைகளும் குவிக்கப்படுவதற்கல்ல. பகிரப்படுவதற்கே. அன்பான கருணையோடும், கனிவான இரக்கத்தோடும், பரிவான பாசத்தோடும் எளிய மனத்தோடும் எல்லோரையும் அரவணைத்து அனைத்தையும் பகிர்ந்து மகிழும்



உலகளாவிய மானிடக் குடும்பமே இறைவன் காணும் கனவு (மீக் 6:6-8; யோவா15:12-17; திப 2:43-47; உரோ 12:4-8).

இறையன்பையும் பிறரன்பையும் ஒருங்கிணைத்துள்ள நம் நம்பிக்கை வேரோட்டமானது. நம் உடமைகளைப் பகிர்ந்தளிக்கும். பிறரை வளர்த்துக் காட்டும் அருள்பணிக்கென ஒருவர் ஒருவரைத் தூண்டியெழுப்பும். தேவையில் இருப்போரைத் தேடிப்போய் அரவணைத்துக் காத்திடும். உடைமைகள், உடல், உரிமை, உயிர் என அனைத்தையுமே ஏழைகளுக்குத் தாரை வார்த்துக் கொடுத்திட முன்வரும் (லேவி 25:23-43; எரே 7:5-7; யாக் 2:14-17; 1பேது 4:8-11; 1யோவா 3:16-18; 1யோவா 4:19-21).

தான் பெற்ற அமைதியையும் ஆனந்தத்தையும் பொதுமைப்படுத்திடவே ஆபிரகாமைப்போல ஒவ்வொரு மானிடரையும் கடவுள் அழைக்கிறார். நெஞ்சில் துணிவு - இதயத்தில் அமைதி - பயணத்தில் துணிவு என்கிற திசையில் மக்களுக்கெல்லாம் மாபெரும் மகிழ்ச்சி நிறை நிம்மதியைப் பறைசாற்றவே ஒவ்வொரு மானிடருக்கும் கடவுள் சவால் விடுக்கிறார் (திபா 72; 122; செக் 8:16; மத் 5:9,21-24; லூக் 2:10,20; கொலோ 3:9-17).

பகிர மனமில்லாத இடத்தில் ஒப்புரவுக்கான குறுக்கீடு, புண்பட்ட சூழல்களில் சிகிச்சைக்கான மருத்துவம், அடாவடிகளுக்கு மத்தியில் அமைதிக்கான செயல்பாடு, இயற்கைச் சீரழிவுக்கு மத்தியில் இடைவிடாத உயிர்காக்கும் பண்பாடு என மீட்புக்கான வழிமுறைகளை உருவாக்கிட வேண்டும் (உரோ 5:20-21; 13:8-10; 1கொரி 12:12-26). இவ்வாறு நம் மானிடப் பயணத்தில்

1. கடவுளோடு உதவிப் படைப்பாளர்களாக
2. மானிடரோடு உடன் உழைப்பாளர்களாக
3. இயற்கையோடு உடன் பிறப்பாளர்களாக

இயங்கும் திறந்த மனத்தை உருவாக்குகின்றபோது கீழ்க்கண்ட அடிப்படைமாற்றங்கள் ஏற்படத்தான் வேண்டும்.

| | | |
|---|---|---|
| பிரிவினைப் பண்பாடு | - | ஒருங்கிணைப்புப் பண்பாடு |
| நுகர்வுவெறிப் பண்பாடு | - | பரிவிரக்கப் பண்பாடு |
| குவிக்கும் பண்பாடு | - | பகிரும் பண்பாடு |

| | | |
|---|---|---|
| போதைப் பண்பாடு | – | புத்தெழுச்சிப் பண்பாடு |
| புறந்தள்ளும் பண்பாடு | – | அரவணைக்கும் பண்பாடு |
| செயற்கைச் சுவாசப் பண்பாடு | – | இயற்கை மூச்சுப் பண்பாடு |
| உயிரை வாங்கும் பண்பாடு | – | உயிரை வழங்கும் பண்பாடு |

வெறுமையுற்ற உருவமற்ற வானத்தையும் பூமியையும் (தொநூ 1:1-2) புத்தம் புதிய வானமாகவும், பூமியாகவும் (திவெ 21:1-2) நகர்த்திடும் உயிர்த்துடிப்புள்ள நகர்வினைத்தானே 'இறையாட்சி' (மாற் 1:14) என இயேசு நடைமுறைப்படுத்தினார். அதனை தினந்தோறும் நிறைவேற்றிக்காட்டிடவே ஊர் ஊராகச் சென்று நாதியற்றோரைத் தன் சொந்த உடலாகவும் உயிராகவும் கருதினார். தீண்டாமைக்குள்ளாக்கப்பட்ட பெண்களையும் நோயாளிகளையும் புறவினத்தாரையும் தொட்டுத்தூக்கி அரவணைத்து அவர்களுக்கு முதல் மரியாதை கொடுத்துக் கொண்டாடியதற்காக அவர் தன் உயிரை இப்பூமித்தாயின் கருவறைக்குள் இரத்தமாகச் சிந்தினார். இந்த இரத்த விதைதான் இப்பிரபஞ்சத்து அனைத்துத் திசைகளிலும் நற்கருணைப் பண்பாடாகத் தழைத்து பரிவிரக்கப் பண்பாட்டின் கனிகளாக நன்மனத்தோரின் அர்ப்பண வாழ்வின் வழியாக அனைத்துயிர்களுக்கும் பகிர்ந்தளிக்கப்படுகின்றன.



# 3. திருஅவைப் போதனைகளில் கூட்டுத்தோழமையும் பொதுநலன் பேணலும்

*முனைவர் அருள்பணி. லூ. ஜீவராஜ்*
*தூய பவுல் குருத்துவக் கல்லூரி*
*திருச்சி*

## முன்னுரை

திருத்தந்தை 13-ஆம் லியோவின் 'தொழிலாளர் நிலைமை' என்ற சுற்றுமடல் திருஅவையின் சமூகப் போதனைகளின் தொடக்கம் என்று கூறுகின்றனர். அப்படியானால் அதற்குமுன் திருஅவை சமூகத்திற்கான செய்தி எதையும் வழங்கவில்லையா என்ற கேள்வி வரும். திருஅவையின் அதிகாரப்பூர்வமான ஆசிரியத்திற்கு முன்பு பல்வேறு தலத்திருஅவைகள் தங்கள் மக்களின் சமூகப் பொருளாதாரத் தேவைகளுக்கு ஏற்ப போதனைகளை வழங்கிவந்தன. இவ்வாறு தலத்திருஅவைகள் கொடுத்துவந்த சமூகச் சிந்தனைகளின் வளர்ச்சியாக அகில உலக இறைமக்களுக்காக, நல்லுள்ளம் படைத்தவர்களுக்காக அதிகாரப்பூர்வமான சுற்றுமடல்கள் வெளிவந்தன. அதில் சிறப்பு வாய்ந்ததுதான் சமூகப்போதனையின் முதலாவது ஏடு 'தொழிலாளர் நிலைமை' என்ற சுற்றுமடலாகும். இச்சுற்றுமடலை அடுத்து ஏறக்குறைய இருபத்து ஐந்துக்கும் மிகுதியான சமூகச் சிந்தனைகள் இடம் பெற்ற சுற்றுமடல்கள், திருத்தூது ஊக்கவுரைகள், கடிதங்கள், திருத்தந்தையின் பேராயக் கோட்பாடுகள் வெளிவந்துள்ளன. அதில் அதிகமான சுற்றுமடலை எழுதியவர் புனித இரண்டாம் ஜான் பால் என்பவராவார். இந்தச் சுற்றுமடல்களில் வெளிவந்துள்ள பல்வேறு தலைப்புகளாக இருப்பவை: மனித மாண்பு, மனித உரிமை, பொறுப்புணர்வு, பொதுநலன், கூட்டுத்தோழமை, உதவிசார் பண்பு, படைப்பின் மேல் அக்கறை மற்றும் ஏழைகள்பால் நிலைப்பாடு என்பனவாகும். இந்த ஏழு கோட்பாடுகள் அனைத்தும் நான்கு கோட்பாடுகளுக்குள் உள்ளடக்கப்படுகின்றன என்று 'கத்தோலிக்கத் திருஅவையின் மறைக்கல்வி' என்ற ஏடு தெரிவிக்கின்றது. அவையே: மனித மாண்பு, பொதுநலன், கூட்டுத்தோழமை மற்றும் உதவிசார் பண்பு. இந்த நான்கு முக்கியமான கோட்பாடுகளில் இரண்டையே இக்கட்டுரை

முன்வைக்கிறது. அவை கூட்டுத்தோழமையும் பொதுநலனும் ஆகும். இந்த இரண்டு கோட்பாடுகளுக்கும் பொருள் புரிதலில் நெருங்கிய தொடர்பு உண்டு. பொதுநலன் பேணுவதில் அனைவருக்கும் கூட்டுத்தோழமை என்ற பண்பு மிகவும் அவசியம். இரண்டு கோட்பாடுகளுமே மனிதருக்கான சமூகப்பண்பிலிருந்தே எழுகின்றன. இவை இன்றையக் காலத்தில் காணப்படும் சமூகப் பிரச்சினைகளான வறுமை, வேலையில்லாத் திண்டாட்டம், சமய அடிப்படைவாதம், பல்வேறு சமூகப் பொருளதாரப் பண்பாட்டு வேறுபாடுகள் ஆகியவற்றினைக் களைய உதவுகின்றன. இக்கோட்பாடுகள் எவ்வாறு திருஅவையின் சமூகப்போதனை ஏடுகளில் கையாளப்பட்டுள்ளன என்பதையும் அதன் விளக்கத்தையும் இக்கட்டுரையில் காண்போம்.

## 1. கூட்டுத்தோழமை

திருத்தந்தை பிரான்சிஸ் நம்மிடையே இருக்கும் அநீதி, ஏற்றத்தாழ்வுகள், வறுமை ஆகியவற்றிற்கு மனிதர்களிடையே சகோதரத்துவமும் கூட்டுத்தோழமையும் இல்லாததுமே அடிப்படை என்கிறார். யார் இறந்தால் என்ன? பிழைத்தால் என்ன? தான் வாழ்ந்தால் மட்டும் போதும் என்ற மனநிலையில் வாழும் நிலையை அகில உலகத்திலும் காணமுடிகிறது. பலர் பாதிக்கப்பட்டாலும் தான் பாதிக்கப்படவில்லையே என்ற எண்ணம் உள்ளவர்களிடமிருந்து எத்தகைய சமூகச் சிந்தனையும் எழப்போவதில்லை. நாட்டின் ஒரு மூலையில் நடக்கும் சமூகப்பிரச்சினை, விவசாயப் பிரச்சினை, பேரழிவை உண்டாக்கும் அரசின் திட்டங்கள் சார்ந்த பிரச்சினை எல்லாம் பொதுப்பிரச்சனைகளாக மாறி சமூகத்தில் மாற்றத்தினை ஏற்படுத்தாதற்குக் காரணம் மக்களிடையே கூட்டுத்தோழமை காணப்படாததால்தான். விவசாயிகள் பிரச்சனை அவர்களின் பிரச்சனையாக மட்டும் காணப்படாது, பெண்களுக்கு எதிராக நிகழ்த்தப்படும் வன்கொடுமைகள் அவர்களுக்குரிய பிரச்சனை என்று மட்டும் காணாது ஒவ்வொருவரின் பிரச்சினை என்று கருதி அனைவரும் சேர்ந்து நிற்கும் பொழுதுதான் இப்பிரச்சினைகளுக்குத் தீர்வு காணமுடியும். மனிதர்களின் தேவைகளுக்கு ஒருவர் மற்றவரைச் சார்ந்து வாழும் நிலை ஏற்படும் பொழுது



ஏன் அவர்களின் பிரச்சினைக்கு நம்மால் சேர்ந்து நிற்கமுடியவில்லை? என்ற கேள்வியை முன்வைத்தே கூட்டுத்தோழமை என்ற அறக்கோட்பாட்டை கத்தோலிக்கத் திருஅவையின் போதனை வெளிப்படுத்துகிறது.

### கூட்டுத்தோழமை என்றால் என்ன?

கூட்டுத்தோழமை என்ற சொல் சில இடங்களில் தோழமையுணர்வு அல்லது கூட்டொருமைப்பாடு என்று பொருள்புரிந்துகொள்ளப்படுகிறது. கூட்டு + தோழமை = கூட்டுத்தோழமை என்பதாகும். அதாவது அனைவரையும் ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்காக ஒன்று கூட்டி ஒற்றுமையாகச் செயல்படத் தூண்டுவதே இப்பண்பாகும். ‘தனிமரம் தோப்பாகாது’ என்ற முதுமொழிக்கேற்ப மனிதர்கள் தாங்கள் தனித்து நிற்க இயலாது; தங்களின் தேவைகளுக்கு ஒருவரை ஒருவர் சார்ந்து வாழும் பண்பைக் கொண்டவர்கள். மனிதர்களில் இருக்கும் இந்தச் சமூக உறவினை முன்வைத்து சமூகப்பண்பை எடுத்துரைக்கும் கோட்பாடே கூட்டுத்தோழமை என்பதாகும். மனிதர்கள் ஒரே குடும்பத்தைச் சார்ந்தவர்கள் என்பதால் மனித மாண்பிலும் மனித உரிமையிலும் அனைவரும் இணைந்து செயல்பட்டு வேறுபாடுகளைக் களைந்து தனிமனித சமூக ஒற்றுமையைப் பேணுவதில் கொண்டிருக்கவேண்டிய பொதுவழிகளைக் கூட்டுத்தோழமை என்ற அறக்கோட்பாடு முன்னிருத்துகிறது. நவீன தொழில்நுட்பப் புரட்சியால் ஏற்பட்டுள்ள தகவல் தொழில்நுட்பம் முன்பு கண்டிராத அளவுக்கு மனிதர்களை இணைத்துள்ளது; அவர்களிடையே ஒற்றுமையையும் கூட்டுத்தோழமையும் வளர்த்தெடுத்துள்ளது. ஆகவேதான், துயரமான செய்திகளோ, நல்ல செய்திகளோ கட்செவி அஞ்சல் (Whats App) அல்லது சுட்டுரை (Twitter) ஆகியவற்றில் பதிவுசெய்யப்படும் பொழுது பலர் இக்கருத்துகளைப் பகிர்ந்துகொள்பவரோடு இணைகின்றனர். பகிரப்படும் கருத்துக்களுக்கேற்ப செயல்பாடுகளிலும் இறங்குகின்றனர். எனவே, தொழில்நுட்பம், கனிணி அறிவியல் ஆகியவை வழியாகப் பகிரப்படும் தகவல்கள் வெகுதொலைவில் உள்ளவர்களையும் அருகில் இருப்பவர்களோடு தொடர்புகொள்வதுபோல் மாற்றுகின்றது. இவ்வாறு ஒருவர் ஒருவரை இணைத்து ஒருவர் ஒருவரோடு சார்ந்து வாழும் பண்பு வேகமாக வளர்ந்துவந்தாலும் உலகின் பலபகுதிகளில் வலுவான பல்வேறு

பிரச்சினைகளைக் காண்கிறோம். வளர்ந்த நாடுகள் - வளரும் நாடுகளிடையே காணப்படும் சுரண்டல், ஒடுக்குமுறை, ஊழல் ஆகியவை இதற்குத் தகுந்த எடுத்துக்காட்டுகளாகும். இவற்றையெல்லாம் வேரோடு களைய வேண்டுமெனில் தனிநபர்களிடையே சமூகங்களிடையே உருவாக்கப்படவேண்டிய பண்பே கூட்டுத்தோழமை என்பதாகும்.

## வரையறை

திருஅவையின் சமூகப் போதனை ஏடுகளின் அடிப்படையில், கூட்டுத்தோழமை என்பது நாம் ஒருவர் ஒருவரைச் சார்ந்துள்ளோம் என்பதையும் ஒருவர்மேல் நாம் கொள்ளவேண்டிய பொறுப்புணர்வை சுட்டிக்காட்டும் பண்பு என்று வரையறை கொடுக்கப்படுகின்றது.

மேலும் இக்கோட்பாடானது, ஒரு பொது நோக்கத்திற்காக தனிநபர்களிடையே இருக்கும் ஒற்றுமை, ஒத்த கருத்துணர்வு அல்லது செயல்பாடு என்றும், இவ்வாறு இணைந்திருப்பவர்களிடையே ஒருவருக்கொருவர் உறவு மற்றும் உதவிப் பரிமாற்றமும், ஒத்துழைப்பும் ஆதரவும் முக்கிய பண்புகளாகக் கொண்டு வாழ்வதும் கூட்டுத்தோழமை என்றும் பலர் வரையறை செய்கின்றனர்.[1] இந்தக் கூட்டுத்தோழமை சமூகங்களில், குழுக்களில், இயக்கங்களில், இல்லங்களில், தொழிலாளர் அமைப்புகளில் காணப்படும் பண்பாக விளங்குகிறது.

## கூட்டுத்தோழமைக்கான விவிலிய அடிப்படை

தொடக்க நூலில் ''உன் சகோதரன் எங்கே'' என்று இறைவன் கேட்ட கேள்விக்கு ''நான் என்ன என் சகோதரனுக்குக் காவலாளியா?'' (தொநூ 4:5) என்ற பதிலை முன்வைத்து இக்கோட்பாட்டிற்கான விவிலிய அடிப்படையை விளக்குகிறார் திருத்தந்தை பிரான்சிஸ். உலகமயமாக்கம் என்பது ஒருவர் ஒருவரை அருகில் கொண்டுவந்துள்ளது. ஆனால் ஒரே சகோதரமாக மாற்றவில்லை என்று கூட்டுத்தோழமை பற்றிய விளக்கத்தில் திருத்தந்தை குறிப்பிடுகின்றார். அவருடைய கூற்றின் படி, இக்கோட்பாடு நம்மை உலகில் உள்ள அனைவரோடும் இணைக்கிறது; ஒரே மனித குல குடும்பமாக மாற்றுகிறது. மேலும், ''என் அயலான் யார்?'' (லூக் 10:25) என்ற கேள்வியை



அடிப்படையாகக் கொண்டு 'கத்தோலிக்கத் திருஅவையின் மறைக்கல்வி' இக்கோட்பாட்டை விளக்குகிறது. இந்த ஏடு கூட்டுத்தோழமை என்பது ''மனித மற்றும் கிறித்தவ சகோதரத்துவத்தின் நேரடியான தேவை'' (எண். 1939) என்று குறிப்பிடுகிறது. புனித இரண்டாம் ஜான் பால், கடவுள் நம்மோடு என்ற இறையியல் கோட்பாடு கூட்டுத்தோழமைக்கு அடிப்படையாக அமைகிறது என்று கூறுகிறார். ஏனெனில் கிறிஸ்து அடிமையின் தன்மை பூண்டு சிலுவைச் சாவை ஏற்கும் அளவுக்குக் கீழ்ப்படிபவரானார் (பிலி 2:7-8). நம்மில் ஒருவராக வாழ நமது வடிவம் ஏற்றார். ஆகவேதான், அவர் நோயாளிகளோடு நடந்தார்; நலம் தந்தார். பாவிகளோடு அவர் கொண்ட தோழமை அவர்களுக்கு மன்னிப்பு அளித்தது; மாண்பைப் போற்றியது; புது மனிதர்களாய் மாற்றியது. எனவேதான், கிறித்தவ அன்பின் வெளிப்பாடாகக் கூட்டுத்தோழமையை புனித இரண்டாம் ஜான் பால் பார்க்கின்றார். இந்த அன்பின் வெளிப்பாடாக, ஊக்கமளிப்பதும் ஒப்புரவாதலும் ஆகியவை கூட்டுத்தோழமையின் பரிமாணமாக அமைகின்றன. புனித இரண்டாம் ஜான் பாலின் கூற்றுப்படி, மனிதரின் உரிமை, மாண்பு, சமத்துவம் ஆகிய எல்லாவற்றிற்கும் மேலாக மனிதர் இறைவனின் சாயல் என்பதே கூட்டுத்தோழமைக்கு அடிப்படையாக அமைகிறது (*திருஅவையின் சமூக ஈடுபாடு*, எண், 40).

## கூட்டுத்தோழமை என்ற அறக்கோட்பாட்டின் வரலாறு

பிரெஞ்சு புரட்சியின் மூன்றாவது தத்துவமான சகோதரத்துவம் என்பதே கூட்டுத்தோழமை என்ற கோட்பாடு வடிவத்தில் வந்துள்ளது. இச்சொல் திருஅவையின் சமூகப்போதனை ஏடுகளில் 1965முன் காணப்படுவதில்லை. இலத்தீன் ஆயர் பேரவையின் புவேப்புலா ஏட்டின் தொகுப்பிலும்கூட இச்சொல் காணப்படவில்லை. ஆனால் இச்சொல் 'மக்களின் முன்னேற்றம்' என்ற 6ஆம் பவுலின் சுற்றுமடலில் அழுத்தம் பெற்றுள்ளது. இவ்வாறு கூட்டுத்தோழமை என்னும் சொல் சமூகப் போதனை ஏடுகளில் அரிதான சொல்லாகக் காணப்பட்டாலும் புனித இரண்டாம் ஜான் பால் தனது சமூகப்போதனை ஏடுகளில் அதிக அழுத்தம் கொடுத்துப் பேசியுள்ளார். இரண்டாம் வத்திக்கான் சங்க ஏடான, 'இன்றைய உலகில் திருஅவை' நவீன உலகத்தில் காணப்படும் பல்வேறு பிரச்சினைகளைச்

சந்திக்க உலக மாந்தர் அனைவரும் கூட்டுத்தோழமையோடு செயல்படவேண்டும் என்றும் உண்மையான சகோதரத்துவத்தை உருவாக்க, அனைவரும் தங்கள் திறமைகளிலிருந்து கூட்டுத்தோழமைக்குப் பங்களிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறது (3,4,32,57,84). இரண்டாம் வத்திக்கான் சங்கத்திற்குப் பின்பு வெளிவந்த 'மக்களின் முன்னேற்றம்' என்ற சுற்றுமடல் கூட்டுத்தோழமையின்றி எந்த மனித முன்னேற்றமும் இல்லை என்றும், இது அனைவரின் மேல் சுமத்தப்பட்ட கடமை என்றும் இந்தக்கடமை பன்னாடுகளுக்கும் பொருந்தும் என்றும் குறிப்பிடுகின்றது (17,43,44,48,80,85).[2] புனித இரண்டாம் ஜான் பால், இந்தக் கோட்பாட்டிற்கு மிகவும் அழுத்தம் கொடுத்து தனது 'திருஅவையின் சமூக ஈடுபாடு,' 'மனித உழைப்பு,' 'நூறாமாண்டு' ஆகிய சுற்றுமடல்களில் கூட்டுத்தோழமை பற்றி அதிகமாகப் பேசியுள்ளார்.

புனித இரண்டாம் ஜான் பால் எழுதிய சமூகப் போதனை ஏடுகளுக்கு முன்பு வரை கூட்டுத் தோழமை என்பது பொதுநலன் பற்றிய போதனையோடு தொடர்புபடுத்திப் பேசப்பட்டது. அதாவது உலகில் இருப்பது ஒரே ஒரு குடும்பம் மட்டுமே. அக்குடும்பத்தில் வாழும் ஒவ்வொருவரும் மற்றவரின் நலத்தின் மீது பொறுப்புணர்வு கொண்டுள்ளனர் என்பதைக் கூட்டுத்தோழமை முன்னிருத்துகிறது,

புனித இரண்டாம் ஜான் பால் 'மனித உழைப்பு' என்ற ஏட்டில் உழைப்பாளிகளின் கூட்டுத்தோழமை என்பது தொழிலாளர்களின் அநீத நிலைகளுக்கு எதிரான பதிலீடு என்று குறிப்பிடுகின்றார் (*மனித உழைப்பு*, எண். 8). 'திருஅவையின் சமூக ஈடுபாடு' என்ற மடலில் அறம் சார்ந்த கடமை என்று குறிப்பிடும் இவர் பன்னாடுகள் இந்தக் கூட்டுத்தோழமை என்ற தத்துவத்தைக் காக்கப் பன்னாடுகளின் கூட்டுச்சார்பை எடுத்துக்கூறுகிறார் (எண், 38). இவ்வாறு தனிமனிதர்களிடையே நாடுகளிடையே இந்த உணர்வு அதிகமாக வளர்ந்துவருவதால் அமைப்பு சார்ந்த பாவங்களை நீக்கிவிடமுடியும் என்று தெரிவிக்கின்றார் (எண்கள் 36,37). நமது அயலார் என்பவர் மற்றவரைப்போல மாண்பு, உரிமை மற்றும் அடிப்படை சமத்துவம்



கொண்ட ஒருவர் என்று மட்டும் கருதாமல் அவர் இறைவனின் திருச்சாயல் என்று கருதும் பொழுதும், அவரும் கிறிஸ்துவின் இரத்தத்தினால் மீட்கப்பட்டவர் என்றும் தூய ஆவியின் செயல்பாடுகளுக்குள் அவரும் இருக்கிறார் என்று கருதும் பொழுது இந்தக் கூட்டுத்தோழமை துலங்குகிறது. 'திருஅவையின் சமூக ஈடுபாடு' என்ற ஏட்டில் (எண், 49) குறிப்பிடுகின்றார். அதன்பின் வெளிவந்த 'நூறாமாண்டு' என்ற சுற்றுமடலில் கூட்டுத்தோழமை என்பது குடும்பங்களில், மானிட உறவுகளில் துலங்கும் ஒருவர் மற்றவருக்கான உறவு என்று இவர் சுட்டிக்காட்டுகின்றார் (எண், 41).[3] இவ்வாறு கூட்டுத்தோழமை என்ற அறக்கோட்பாடு திருஅவைப் போதனைகளில் படிப்படியாக வளர்ச்சி பெற்று வந்துள்ளது.

'உண்மையில் அன்பு' என்ற சுற்றுமடலில் திருத்தந்தை 16-ஆம் பெனடிக்ட், ஒருவர் மேல் ஒவ்வொருவர் கொண்டிருக்கும் பொறுப்புணர்வு என்று குறிப்பிடுகின்றார் (எண் 38). 'கத்தோலிக்கத் திருஅவையின் மறைக்கல்வி' என்ற ஏடு நலன்களைப் பகிர்ந்துகொள்வதில், வேலைக்கான தகுந்த ஊதியம் வழங்குவதில் காணப்படவேண்டிய சகோதரத்துவம் கூட்டுத்தோழமை என்று (எண் 1939) குறிப்பிடுகிறது.

### திருஅவைப் போதனை ஏடுகளில் கூட்டுத்தோழமை

கூட்டுத்தோழமை என்ற சொல் திருஅவையின் சமூகப்போதனை ஏடுகளில் நூறு முறை[4] பயன்படுத்தப்பட்டுள்ளது. ஒருசில மடல்களில் கூட்டுத்தோழமை என்று பயன்படுத்தாமல் வேறு பிற சொற்களில் பயன்படுத்தப்பட்டுள்ளது என்பதைப் பின்வரும் அட்டவணை வழியாக நாம் அறியலாம். திருஅவையின் சமூகப்போதனை ஏடுகள் கூட்டுத்தோழமையின் பண்புகளைப் பல சொற்கள் வழியாக எடுத்துக்கூறினாலும் புனித இரண்டாம் ஜான் பால் மட்டுமே கூட்டுத்தோழமை என்று சொல்லின் உண்மையான பொருளை எடுத்துக் கூறுகிறார். அவரைத் தொடர்ந்து திருத்தந்தையர்கள் 16-ஆம் பெனடிக்ட், பிரான்சிசு பல முறை இச்சொல்லைக் காலத்தின் தேவை கருதிப் பயன்படுத்தியுள்ளனர்.

| ஆசிரியர் | சுற்றுமடல் மற்றும் ஆண்டு | கூட்டுத்தோழமை பற்றிய புரிதல் |
|---|---|---|
| 13ஆம் லியோ | தொழிலாளர் நிலைமை, 1891 | நட்பு (Friendship) |
| 11ஆம் பியுஸ் | சமூக ஒழுங்கமைவு, 1931 | சமூகம் சார்ந்த அன்பு (Social Charity) |
| 6ஆம் பால் | மக்களின் முன்னேற்றம், 1968 | நாகரீகமான அன்பு (Civilazation of Love) |
| 2ஆம் ஜான் பால் | திருஅவையின் சமூக ஈடுபாடு, 1987<br>நூறாமாண்டு, 1991 | அறநெறி விழுமியம் (Moral Virutue)<br>ஒருவர் ஒருவரை சார்ந்துவாழும் பண்பு (Interdependence) |
| திருத்தந்தையின் இறையியல் கோட்பாட்டுப் பேராயம் | கத்தோலிக்கத் திருஅவையின் மறைக்கல்வி | சகோதரத்துவம் (Fraternity) |
| 16ஆம் பெனடிக்ட்<br>பிரான்சிஸ் | உண்மையில் அன்பு 2009<br>இறைவா உமக்குப் புகழ் 2015 | பொறுப்புணர்வு (Common Responsibility)<br>ஒவ்வொருவருக்குள்ள உறவுத் தொடர்பு (Interconnectedness) |

கூட்டுத்தோழமை என்னும் கோட்பாட்டை மூன்று விதமாகத் திருஅவையின் சமூகப் போதனை காண்கிறது.

1. கூட்டுத்தோழமை – சமூகக் கோட்பாடு / அறம் சார் விழுமியம்
2. கூட்டுத்தோழமை – மானுட முன்னேற்றம்
3. கூட்டுத்தோழமை – அயலவர் நலனுக்கான பொறுப்புணர்வு



### 1. கூட்டுத்தோழமை – சமூகக் கோட்பாடு / அறம் சார் விழுமியம்

புனித இரண்டாம் ஜான் பால், கூட்டுத்தோழமை என்பது உலகில் வாழும் மக்கள் அனைவருக்கும் பொருத்தமான ஓர் அறநெறி விழுமியம் என்று குறிப்பிடுகின்றார். இப்பண்பு ‘அன்பு’ என்ற மற்றொரு விழுமியத்தோடு நெருங்கியவிதத்தில் தொடர்புபடுத்தப்பட்டு “கிறிஸ்துவின் சீடர்களுக்கான தனிச்சிறப்பானது” என்று “திருஅவையின் சமூக ஈடுபாடு” என்ற ஏட்டில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. அதாவது, கிறிஸ்து நம்மை எவ்வாறு அன்பு செய்கிறாரோ அவ்வாறே அதே அன்பில் நாமும் அயலாரை அன்பு செய்யவேண்டும் என்பதே. இதையே புனித இரண்டாம் ஜான் பால், நமது அயலாருக்காக நம்மையே தரும் அன்பே நம்மைத் தியாகத்திற்குத் தயார்செய்கிறது என்கிறார் (*திருஅவையின் சமூக ஈடுபாடு*, 40) கூட்டுத்தோழமை, மற்ற அறம்சார் விழுமியங்கள் போல, நம்மை விரைவாய் செயல்படத் தூண்டுகிறது. ஒரு நபர் தேவையில் இருக்கும் பொழுது உதவுவதும், போர் வன்முறையை எதிர்ப்பதும், மற்றவரின் தேவைகளுக்குப் பதில்தரும் வண்ணம் நமது வாழ்வினை மாற்றிக்கொள்ளவும் அழைப்பு விடுக்கிறது. இப்பண்பு நன்றியுணர்வு, மன்னிக்கும் மனப்பாங்கு மற்றும் ஒப்புரவு ஆகியவற்றோடும் இணைக்கப்பட்டுள்ளது. கூட்டுத்தோழமை வழியாக, நம் அருகிலும், வெகுதொலைவிலும் வாழும் கிறிஸ்துவின் இரத்தத்தால் மீட்கப்பட்டு வாழும் இறைவனின் உயிருள்ள சாயலாக நாமும் நமது அயலாரைக் காண இயலும். நமது உரிமைகளை மனித மாண்பை நாம் அனுபவிப்பது போல கூட்டுத்தோழமை வழியாகவே இறைவனின் சாயலாக விளங்கும் ஒவ்வொருவரின் உரிமையை, மாண்பை நாம் ஏற்றுக்கொள்கிறோம்.

ஒவ்வொருவரிடையே விளங்கும் ‘சார்ந்து வாழும் பண்பு’ என்பது கூட்டுத்தோழமை என்பதாகும். இப்பண்பு இயல்பான அறம் சார்ந்த சமூக கூட்டுத்தோழமையை உருவாக்கவேண்டும். இது மனித உறவின் அறத் தேவையாகும். ஏனெனில் அனைத்திற்கும் மேலாக, இக்கோட்பாட்டின் அடிப்படையில்தான் மனித உறவுகளை ஆதிக்கம் செய்யும் நபர்களுக்கிடையேயான சமூகப் பாவங்கள் ஆகியவற்றை வெற்றிகொள்ள முடியும். அதாவது கூட்டுத்தோழமை அமைப்புகள், நீதிச் செயல்பாடுகள், நீதியான வணிக ஒழுங்குகள், மாற்றம் செய்யப்பட்ட சட்டத்திருத்தம் ஆகியவை மூலம் அந்த அமைப்புகளைச் சுத்தம் செய்யமுடியும்.

நன்மை செய்வதற்கான நம்மிடையே இருக்கும் ஒரு தொடர் விருப்பமே விழுமியம் என்று நமது இறையியலில் கூறுகிறோம். கூட்டுத்தோழமை என்ற விழுமியம் இதிலிருந்து வேறுபட்டதல்ல. அதாவது, நாம் எவ்வாறு ஒவ்வொருவரோடும் இணைந்திருக்கிறோம் என்று காணும் மனநிலையை இந்த விழுமியம் கூறுகிறது. இந்த ஒரே குடும்பத்தில் நாமும் ஒரு உறுப்பினர் என்ற வகையில் இப்பண்பை நாம் வளர்த்தெடுக்க வேண்டும்.

கூட்டுத்தோழமை உண்மையான அற விழுமியமாகும். ''பாதிக்கப்பட்டவர்கள் மீது உணர்வில்லா இரக்கத்தைக் குறிப்பதல்ல மாறாக, உறுதியான, விடாமுயற்சியான பொதுநலனைப் பேணுவதற்கான அர்ப்பணமாகும்'' (*திருஅவையின் சமூக ஈடுபாடு*, 38) அதாவது ஒவ்வொருவரின் நலனைப் போற்றுவதும் அற்கான பொறுப்பும் ஆகும். இது நீதியிலிருந்து புறப்படுவதாகும். பொதுநலனைப் வளர்த்தெடுக்க உதவும் விழுமியம் ஆகும். ''அடுத்தவர் நலனில் அக்கறைகொள்வதும், நமது தேவைக்காகப் பிறரைச் சுரண்டுவதைவிட பிறருக்காக நம்மை இழப்பதே கூட்டுத்தோழமையாகும்'' (*திருஅவையின் சமூக ஈடுபாடு*, 40). கூட்டுத்தோழமை என்பது அநீதிக்கான போராட்டத்தில் ஒன்று சேர்ந்து நிற்பது; உடன்உழைப்பது, ஒத்துழைப்பது என்று திருத்தந்தை புனித இரண்டாம் ஜான்பால் வலியுறுத்துகிறார். மேலும் இவர் கூட்டுத்தோழமையின் பண்புகளாகக் கூட்டுச்சார்பு; மனித மாண்பு, சமத்துவம் மற்றும் பரஸ்பர உறவு; பொதுநலன் பேணுவது என்று மூன்று விதங்களில் காண்கிறார்.

### அ. கூட்டுத்தோழமை காட்டும் கூட்டுச்சார்பு

ஏழ்மை, வறுமையால் பாதிக்கப்பட்ட மக்களின் ஒருங்கிணைந்த முன்னேற்றத்திற்கான சூழ்நிலைகளை மேம்படுத்துவது நீதியான சமூகத்தினை உருவாக்க வழிவகுக்கும் என்று திருத்தந்தை ஆறாம் பால் குறிப்பிடுகிறார். போரின் கொடுமையை எதிர்க்கவும், அநீதிக்கு எதிராகப் போராடவும், மக்களின் ஆன்மீக மற்றும் பொருளாதார நலன்களையும் மனிதத்தின் பொதுநலன்களை மேம்படுத்துவதற்குக் கூட்டுச்சார்பு அவசியம் என்று திருத்தந்தை குறிப்பிடுகிறார் (*மக்களின் முன்னேற்றம்*, எண் 76). இச்செயல்கள் துன்பப்படுபவர்களுக்கு மட்டுமல்ல உதவுவது. மாறாக,



துன்பத்திலிருந்து விடுவிக்கவும், மனித மாண்பினை அவமதிக்கும் சூழல்களை எதிர்த்துநிற்கவும் உதவுகின்றன. அதாவது ஆன்மீக வளர்ச்சியில், நிறைவுகண்டவர்கள் பொருளாதாரத்தில் பின் தங்கியவர்களோடு தங்களை இணைத்துக் கொள்ளவேண்டும். இதையே புனித 23-ஆம் ஜான், ஒரு நாடு மற்ற நாட்டின் உதவியின்றி வளர்ச்சியடைந்த நாடாக மாறிவிட முடியாது என்று 'அவனியில் அமைதி' என்ற ஏட்டில் (எண் 131) சுட்டிக்காட்டுகிறார். மற்ற நாடுகளின் முன்னேற்றம் அல்லது மேம்பாடு இன்றி தனது வளமையில் நீண்டகாலம் இருந்துவிடமுடியாது என்று புனித 23-ஆம் ஜானின் கருத்தாகும்.

### ஆ. கூட்டுத்தோழமை காட்டும் மனித மாண்பு, உரிமை, சமத்துவம்

நாடுகளிடையே இருக்கும் இந்தக் கூட்டுச்சார்பு கூட்டுத்தோழமைக்கு வழிவகுக்கிறது. ஒரு நாட்டின் பொதுநலன் என்பது மனித குலத்தின் முழுநலனில் அடிப்படையில் காண கூட்டுச்சார்பு வழிவகுக்கிறது. இதனால் அனைவருக்கும் பலன்தரும் பொதுவான திட்டங்கள் வகுத்து அதன்மூலம் ஒவ்வொரு நாடுகளுக்கும் உள்ள உறவை வளர்த்தெடுக்கமுடியும். உலகில் உள்ள மக்கள் அனைவரும் ஒரே மனித மாண்பினையையும், சமத்துவத்தையும் உரிமையையும் கொண்டிருப்பதால் அவர்கள் ஒவ்வொருவரின் நலனையும் கருததில்கொள்ள கூட்டுச்சார்வு வழிவகுக்கிறது.

### இ. கூட்டுத்தோழமை காட்டும் பொதுநலன் பேணல்

கூட்டுத்தோழமையின் இலக்குப் பொதுநலன் பேணுவதே. மனிதர்களையும் சமூகக் குழுக்களையும் இணைக்கும் சக்தி, அனைவரும் பகிர்ந்து பங்கெடுக்கும் வண்ணம் பொது வளர்ச்சிக்கான தன்னுரிமை, இவற்றை அடைவதற்கு நேர்மறையான பங்களிப்பு, ஆகியவை கூட்டுத்தோழமையின் கூறுகளாகும். ஒருவருடைய தனிப்பட்ட, தனிநபர் சார்ந்த விருப்பு வெறுப்புகளைக் கடப்பதின் மூலம் பொதுநலனை வளர்க்கக் கூட்டுத்தோழமை அழைக்கிறது. குறிப்பாக வறுமை ஒழிப்பில், இயற்கையைக் காப்பதில், இருக்கிற வளங்களைப் பகிர்ந்துகொள்வதில் நாம் கொள்ளவேண்டிய கூட்டுத்தோழமை பற்றி விரிவாகத் திருத்தந்தை பிரான்சிசு கூறுகிறார் (*இறைவா உமக்குப் புகழ்*, எண் 110). பிளவுபடாத, முறிவுபடாத

சட்டங்கள், பண்பாடு, அறிவியல் தொழில் நுட்பங்கள் ஆகியவை மூலம் மானுட முன்னேற்றம் ஏற்படுகிறது. புனித இரண்டாம் ஜான் பால், திறந்த மனதோடு உரையாடுவது, சில சமயங்களில் தவறைத் தட்டிக்கேட்பது, நேர்மறையான விமர்சனம் செய்வது (*திருஅவையின் சமூக ஈடுபாடு*, எண், 39) வழியாகவும் கூட்டுத்தோழமையை உருவாக்கிப் பொதுநலன் பேண முடியும் என்று கூறுகிறார்.

## 2. கூட்டுத்தோழமை – மானுட முன்னேற்றம்

கூட்டுத்தோழமை தனிநபர்களை மக்களோடு இணைக்கிறது. பொதுநன்மைக்கு நேர்மறை விதத்தில் அனைவரையும் பங்கெடுக்கவும் பங்களிக்கவும் இணைந்து பாதுகாக்கவும் தூண்டுகிறது. பிரிவினை மற்றும் பிளவுகளைத் தவிர்க்க முடிந்த அளவிற்குத் தனிமனிதரிடையேயும் சமூகங்களிடையேயும் நாடுகளிடையேயும் ஒத்தகருத்தைப் பெற முயற்சிப்பது இக்கோட்பாட்டின் செயல்பாடாகும். ஒருவருடைய தனிப்பட்ட ஆர்வம், நோக்கம் ஆகியவற்றைத் தவிர்த்து ஒருவருடைய நன்மைக்காக தன்னையே கொடுக்கும் பண்புதான் கூட்டுத்தோழமையாகும். மேலும் தனிநபர்கள் தனக்கு நல்லது செய்யும் சமூகத்திற்கு கடன்பட்டவர்களாய் இருப்பதால் தான் வாழும் சமூகத்திற்கு எத்தகைய சிறு கீறலைக்கூட ஏற்படுத்தக்கூடாது என்பதை இக்கோட்பாடு மிகவும் வலியுறுத்துகிறது.

நாம் அனைவரும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் எனவே எல்லாருக்கும் இக்குடும்பத்தின் மீது பொறுப்புணர்வு உண்டு. நமது வாழ்வின் இலக்கை மற்றவரின் துணையின்றியோ அல்லது மற்றவரோடு நாம் ஒத்துழைக்காமலோ அடைய முடியாது. எனவேதான், புனித இரண்டாம் ஜான் பால் கூட்டுத்தோழமை உள்ளார்ந்த மனநிலையாக உருவாகி மற்றவர் நலனை உயர்த்த பல்வேறு செயல்பாடுகளில் ஈடுபடும் அர்ப்பணமாக வெளிப்படவேண்டும் என்று கூறுகிறார். எடுத்துக்காட்டாக, குழந்தைகள் தங்களைப் போலுள்ள மற்ற குழந்தைகளிடம் பழகுவது மற்றும் இயல்பான மனப்பாங்கை (Propensity) பெற்றுக்கொள்ளவும் சமூக உறவை உருவாக்கிக் கொள்ளவும் செய்கின்றனர். அதைப்போல கூட்டுத்தோழமை மனிதர்களின் சமூகப்பண்பின் அங்கமாக இருப்பதால் இப்பண்பு அனைவரின் சமத்துவ



மாண்பிற்காகவும், உரிமைக்காகவும் தனிமனித மற்றும் சமூக ஒற்றுமைக்காகவும் சேர்ந்து செயல்படுவதை அடிக்கோட்டிட்டுக் காட்டுகிறது.

## 3. கூட்டுத்தோழமை – அயலவர் நலனுக்கான பொறுப்புணர்வு

வளர்ந்துவரும் உலகளாவிய தொடர்பு என்பது உலகில் உள்ள பல்வேறு மக்களின் தேவைகள் பற்றிய அறிவின் அடிப்படையில் எழுகிறது. மேலும் ஒரு நாட்டு மக்களின் மேன்மையான வாழ்வு என்பது ஒருவர் மற்றவரைச் சார்ந்து வாழும் பண்பில் அடங்கி இருக்கிறது. ஒவ்வொருவரும் தம் வாழ்வில் நன்மையை அடைவதற்கு நாம் மேற்கொள்ளும் அர்ப்பணமே கூட்டுத்தோழமை காட்டும் பொறுப்புணர்வு ஆகும். ஏனெனில் நாம் ஒவ்வொருவரும் மற்றவரின் நலனில் அக்கறை கொள்வதற்குப் பொறுப்புள்ளது என்று 'திருஅவையின் சமூக ஈடுபாடு' என்ற சுற்றுமடல் (எண் 38) கூறுகிறது. இந்தக் கூட்டுத்தோழமை என்ற விழுமியம் வழியாக மற்ற நபர்களை, குழுக்களை, நாடுகளை நமது அயலாராக, உதவியாளர்களாக நாம் கருத நம்மை அழைக்கிறது. ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் என்றும் கடவுளை நோக்கிய நமது பயணத்தில் ஒவ்வொருவரின், ஒவ்வொரு பண்பாட்டின் தனித்தன்மையை ஏற்றுக்கொண்டு மதிப்பளித்து அதைக் கொண்டாடக் கூட்டுத்தோழமை அழைக்கிறது. இதையே புனித 23-ஆம் ஜான் ஏழைகளை ஒரு பிரச்சினையாகக் கருதாது அவர்கள் மனிதத்தின் புதிய எதிர்காலத்தைக் கட்டியெழுப்பும் மக்கள் என்றே கருதவேண்டும் என்று 'அவனியில் அமைதி' (எண் 14) என்ற ஏட்டில் சுட்டிக்காட்டுகிறார். எனவே வளமையான நாட்டில் வாழ்பவர் பிறர்நாட்டினுடைய ஞானத்தையும், பண்பாட்டையும் போற்றி அவையும் நாட்டை உருவாக்கும் செயல்பாடுகள் என்று கருதவேண்டும். இதுவே கூட்டுத் தோழமைக்கு வழிவகுக்கும். 'நாம் அனைவரோடும் இணைந்துள்ளோம்' என்ற விழிப்புணர்வில் வாழ்வது இன்று சவால் மிக்கதாக இருக்கிறது. மேலும், இந்த ஒரே குடும்பத்தின் தேவை எங்கிருந்தாலும் அவைகளை நிறைவேற்றுவதும், மனிதர்களின் நிலைபற்றி இக்குடும்பம் கற்றுக்கொடுப்பதை நன்றியுணர்வோடு தாழ்ச்சியோடு ஏற்றுக்கொள்வதும் சவால்மிக்கதாக இருக்கிறது என்று திருஅவையின் சமூகப் போதனை தெரிவிக்கின்றது. இச்சவால்களை நேர்மறையாக அணுகக் கூட்டுத்தோழமை என்ற கோட்பாடு அனைவரையும் அழைக்கிறது.

# 2. பொதுநலன்

"எல்லோரும் இன்புற்றிருப் பதேயன்றி
வேறொன்றும் அறியேன் பராபரமே"

என்று தாயுமானவர் இறைவனை நோக்கிப் பாடுகின்றார். எல்லோரும் எல்லாம் பெற்று இன்புற்று வாழும் நிலையை உணர்த்துவதுதான் பொதுநலன் என்ற கோட்பாடாகும். எல்லோரும் என்று மனிதர்களை மட்டும் தாயுமானவர் குறிப்பிட்டாலும் வள்ளுவப் பெருந்தகை அதையே "பகுத்துண்டு பல்லுயிர்" என்று இந்தப் பிரபஞ்சத்தில் வாழும் அனைத்து உயிர்களின் நலனையும்காக்க விடும் அழைப்பையே பொதுநலன் பேணல் என்ற கோட்பாடு முன்னிருத்துகிறது. இவ்வாறு உலகில் தனது இருப்பைக் கொண்டுள்ள அனைத்து மனிதர்களும், பல்லுயிர்களும் வாழ்வதற்குக் கட்டியெழுப்பப்பட வேண்டிய நிலைகளையே பொதுநலன் பற்றிய திருஅவையின் சமூகப் போதனை குறித்துக்காட்டுகிறது. இன்று சமூகத்தில் நிகழும் மனித மாண்பைக் குலைக்கும் மனித உரிமை மீறல்கள், ஆணவக் கொலைகள், ஆழியில் அலைக்களிக்கப்படும் அகதிகள், சொந்த இருப்பிடத்தைச் சிதைக்கும் உள்நாட்டுப் போர்கள், வறுமையை நிலைநிறுத்தும் பொருளாதார வேறுபாடுகள், பன்னாட்டு நிறுவனங்கள் ஏற்படுத்தும் வேலை இழப்புகள், ஒரு நாட்டின் பாரம்பரியப் பன்மையைச் சிதைக்கும் ஒரே சட்டம், ஒரே மொழி, ஒரே பண்பாடு ஆகிய குறுகிய சிந்தனைகள், முன்னேற்றத்தின் பெயரில் ஏற்படுத்தப்பட்டு வரும் பேரழிவிற்கான திட்டங்கள், இயற்கைச் சீரழிவை ஏற்படுத்தும் தொழில்நுட்பங்கள்... ஆகியவை வாழ்வுச் சூழ்நிலைகளைச் சிதைத்து தனிமனிதரின் சமூகத்தின் இருப்பை மெல்ல மெல்ல அழித்துவருகின்றன. இதனால் மனிதர்களின் வாழ்வே இன்று கேள்வியாக உள்ளது. இத்தகைய சூழலில்தான் தனிமனித, சமூகத்தின் இருப்பை மேன்மைப்படுத்தி, வாழ்வில் நிறைவை அடைவதற்குப் பொதுநலன் பேணல் என்ற திருஅவையின் சமூகப் போதனைக் கோட்பாடு மிகவும் அவசியமாகிறது.



## பொதுநலன் என்றால் என்ன?

மனிதர் இயல்பிலே சமூகப்பண்பைக் கொண்டிருப்பதால் மனித மாண்பையும், சமத்துவத்தையும் உருவாக்கி சமூகத்தில் வாழும் ஒவ்வொருவரும் தனிப்பட்ட மற்றம் சமூகம் சார்ந்த நலன்களை வாழ்வின் ஒவ்வொரு நிலைகளிலும் அனுபவித்து வாழ்வின் நிறைவை அடைய உதவுவதே பொதுநலனாகும். சமூகத்தில் வாழும் அனைவரின் நலனில் கொள்ளும் அக்கறையும் அத்தகைய நலன்களை அனுபவிக்க நாம் மேற்கொள்ள வேண்டிய நடைமுறைகளே பொதுநலன் பேணுதல் என்று பலர் குறிப்பிடுகின்றனர். அனைவரின் நலனைக் காக்கவேண்டுமெனில் அடிப்படை உரிமைகளை அனுபவிப்பதற்குத் தேவையான வாய்ப்புகள் வழங்கப்படுவதை உறுதிசெய்ய சமூகத்தின் அடிப்படை அறமாக பொதுநலன் பேணல் மாற்றப்படவேண்டும். இந்த அறம்தான், சமூகத்தின் நலன்களில் ஒருவர் பங்கெடுப்பதும் அதைப் பகிர்ந்துகொள்வதும் அவசியம் என்று தெரிவிக்கின்றது. பல்வகைச் சுரண்டல்கள், ஆதிக்கமனப்பான்மை, ஒடுக்குமுறை மற்றும் வன்முறை ஆகியவை முற்றிலும் பொதுநலன் பேணலுக்கு எதிரானவை ஆகும்.

## வரையறை

இரண்டாம் வத்திக்கான் சங்க ஏடு, 'இன்றைய உலகில் திருஅவை' குறிப்பிட்டப் பொதுநலன் பற்றிய வரையறையே, திருஅவையின் சமூகப்போதனை ஏடுகளில் காணப்படுகிறது. அதாவது, "குழுக்களும் தனி உறுப்பினர்களும் தத்தம் நிறைவை அதிக முழுமையோடும் அதிக எளிதாகவும் அடைவதற்கு உதவுகின்ற சமூக வாழ்வுச் சூழ்நிலைகளின் தொகுப்பே பொதுநலன்" என்று அழைக்கப்படுகிறது (எண் 26).[5]

## பொதுநலன் பேணுவதற்கான விவிலிய அடிப்படை

இறைவன் அனைத்து நலன்களோடும் செல்வங்களோடும் உலகைப் படைத்து மாந்தர்கள் கையில் ஒப்படைத்து இந்த நலன்களை அனைவரும் பேண அழைப்பு விடுத்துள்ளார். எனவேதான், பொதுநலன் பேணல் என்ற அறக்கோட்பாட்டிற்கான வரையறை உருவாவதற்கு அடிப்படை ஆதாரமாக

இருப்பது விவிலியம் என்று அறநெறி இறையியலாளர்கள் தெரிவிக்கின்றனர். எனவே, விவிலியத்தில் பொதுநலன் என்ற சிந்தனை எவ்வாறு வளர்ந்து வந்துள்ளது என்று காண்பது இங்கு அவசியமாகும்.

வாழ்வைத் தருவதுதான் இறைவனின் இயல்பு. இந்த வாழ்வை ஒரு நபர், ஒரு சமூகம் அல்லது ஒரு குழு மட்டுமே அனுபவிக்க வேண்டும் என்பது இறைவனின் விருப்பமல்ல. அல்லது தற்போது உயிர் வாழுபவர்கள் மட்டும் அனைத்து நலன்களையும் அனுபவித்துவிட்டு பின் பிறக்கும் குழந்தைகள் வாழுவதற்குத் தகுதியற்ற இடமாக இவ்வுலகை மாற்ற இறைவன் விரும்பவில்லை. எனவேதான், இஸ்ரயேல் மக்கள் அனைவரும் அவர்களின் சந்ததியினரும் வாழ்வையே தேர்ந்தெடுக்கவேண்டும் என்ற அழைப்பை இறைவன் விடுக்கிறார் (இச 30:19). இவ்வாறு தாங்கள் அனுபவித்து வந்த சமூகப் பொருளாதார, பண்பாடு சமய நலன்கள் முழுவதும் அந்நியரின் ஆதிக்கத்தால் அழிக்கப்பட்டபொழுது இந்த நலன்களையெல்லாம் மீண்டும் கட்டியெழுப்பி அனைவரையும் அனுபவிக்கச் செய்ய நெகேமியா அழைப்புவிடுப்பது பொதுநலன் பேணுவதற்கான அடிப்படையாகும் (நெகே 2:17-18). இவ்வாறு கட்டியெழுப்பப்பட்ட நாட்டில் பொதுநலன்களை ஒரு குறிப்பிட்ட வகுப்பினர் மட்டும் அனுபவிப்பதும், பிற ஏழை எளிய மக்களுக்கு இந்நலன்களை முற்றிலும் மறுப்பதை இறைவன் விரும்பவில்லை. குறிப்பாக கைம்பெண்கள், திக்கற்றோர், அனாதைகள், வறியவர் மற்றும் ஆதரவற்றோர் நாட்டின் பொதுவளங்களை அனுபவிக்கத் தடையாய் இருக்கும் தனிநபர்களையும், சமூகத்தின் ஆதிக்க அமைப்புகளையும் இறைவன் கண்டிக்கின்றார் (எசா 10:1-2). தொடக்கத் திருஅவையில் அனைத்தையும் பொதுவில் வைத்து அவரவர் தேவைக்கேற்ப பகிர்ந்துகொண்ட வாழ்வு (திப 2:44-45), பொதுநலன் என்ற அறக்கோட்பாட்டின் முன்னோடியாகத் திகழ்கிறது. தனக்கு ஏதுமில்லை என்று எவருமே இருக்கக்கூடாது என்பதற்கு இயேசு ஓர் உவமை வழியாக சின்னஞ் சிறியவர்களுக்கு செய்ததெல்லாம் அவருக்கே செய்ததாக சுட்டிக்காட்டுகிறார். பசியால் துடிப்பவர்கள், தாகமாய் இருப்பவர்கள், அந்நியனாக இருப்பவர்கள், ஆடையின்றி இருப்பவர்கள், நோயுற்றவர்கள் மற்றும் சிறையில் வாடுபவர்கள் ஆகியோர்களுக்குப் பொதுநலன்களை அனுபவிக்க வாய்ப்பு வழங்குவோர் இறையாட்சிக்கு உரியவராகின்றனர் (மத் 25:35-40) என்று இயேசு குறிப்பிடுகின்றார். அனைவரும் அனைத்தையும் பெற்று நிறைவை அடைந்து அவரிடம் செல்வதே நமக்குக் கொடுக்கப்பட்ட அழைப்பு. இந்த அழைப்பிற்கேற்ப வாழவேண்டும் என்பதே (எபே 4:1-7,12) தூய பவுலடியாரின் சுட்டுரைக்கும் செய்தியாகும். தூய பவுலடியார் குறிப்பிடுவதுபோல ஆவியாரின் கனிகள் (கலா 5:22-25) அனைத்தும் பொதுநலனைக் குறிப்பதாகும். இந்தக் கனிகளைப் போற்றுவதும் அனைவரும் அனுபவிக்கச் செய்வதும் இறைவன் நமக்கு வழங்கிய அழைப்பாகும். இந்த அழைப்பை வாழவே பொதுநலன் பேணுதல் என்ற அறக்கோட்பாடு அனைவரையும் அழைக்கிறது.



## பொதுநலன் வரலாற்றில் வளர்ந்த விதம்

கிரேக்க மெய்யியலாளர் பிளேட்டோ, அரிஸ்டாட்டில், சாக்ரடிஸ், சிசரோ என்பவர்களின் எழுத்துக்களில் காணக்கிடக்கும் ‘மேன்மையான வாழ்வு’ (good life) என்ற தத்துவம் பொதுநலன் பேணல் என்ற கருத்திற்கு வரலாற்று அடிப்படையாக அமைகிறது. இவர்களின் ‘நகர சபை’ (City State) என்ற அமைப்பு, நகரத்தில் வாழுவோர் தாங்களாக தங்கள் அனைவரின் நலன்களுக்காகவும் அவற்றைச் சரியான முறையில் அனுபவிக்க ஏற்படுத்தப்பட்ட நடைமுறைகளும் பொதுநலன் பற்றிய செய்தியை முன்வைக்கின்றது. அதாவது, மக்களின் “பொதுவான நலன்” (General welfare) என்பது பின்பு பொதுநலனாக உருவெடுப்பதற்குக் காரணமாக அமைந்தது, இவ்வாறு மெய்யியலை அடிப்படையாகக் கொண்ட அறத்தத்துவத்தை தூய அகுஸ்தினார் பொதுவான நலன் என்பதை இவ்வுலகில் ஓரளவிற்குத்தான் அனுபவிக்க முடியும் என்றும் அதனை முழுமையாக இறைவனோடு இம்மையில்தான் அனுபவிக்க முடியும் என்று பொதுநலனை இறையியலாக்கம் செய்கின்றார். இவரைப் பின்பற்றி, தூய தாமஸ் அக்குவினாஸ் என்பவர் முழுமையான பொதுநலனைப் பேணுவதற்கு, அனுபவிப்பதற்கு இறைவனின் விருப்பத்தை எடுத்துரைக்கிறார். எனவே, பொதுநலன் பேணல் என்பது அரசுகளின் நோக்கம் மட்டுமல்ல; மாறாக, பொதுநலன் பேணல் என்பது இறைவனின் நோக்கமாக இருக்கிறது என்று மெய்யியல் கோட்பாட்டை இறையியல் கோட்பாடாக தாமஸ் அக்குவினாஸ் மாற்றுகிறார். ஏனெனில் பொதுநலனை

அனைவரும் பெற்று வாழ்வில் நிறைவடைவது என்பது இறைவனின் விருப்பமாகும் என்பது இவரின் கருத்தாகும். இவ்வாறு இறையியலாக்கம் செய்யப்பட்ட இக்கோட்பாடு, 18-ஆம் நூற்றாண்டில் எழுந்த சிந்தனைப் புரட்சியின் விளைவாக பரவலாக்கப்பட்ட தன்னுரிமை, சுயஆட்சி, சமத்துவம் ஆகிய கருத்துக்கள் திருஅவையில் பொதுநலன் பற்றிய போதனையை விரிவுபடுத்த உதவின. மேலும், 1940களில் ஜேக்கு மாரிட்டைன் (Jacques Maritain) பொதுநலனோடு மனித உரிமைகளை இணைத்து எழுதியதால் பொதுநலன் என்ற அறக்கோட்பாட்டை மேலும் பரந்த பொருளில் திருஅவை எடுத்துரைத்தது. இந்த வரலாற்றுப் பின்புலத்தின் பின்னணியில் பொதுநலன் பேணல் என்ற கோட்பாடு திருஅவைப் போதனை ஏடுகளில் எவ்வாறு வளர்ந்தது என்பது பற்றியும், அக்கோட்பாடு பற்றி திருஅவை எவ்வாறு போதிக்கிறது என்பது பற்றி இங்கு குறிப்பிடுவது அவசியமாகும்.

## திருஅவைப் போதனை ஏடுகளில் பொதுநலன்

1888-ஆம் ஆண்டு திருத்தந்தை 13-ஆம் லியோ என்பவரால் வெளியிடப்பட்ட 'லிபர்தாஸ்' என்ற ஏடு தொடங்கி 2015-ஆம் ஆண்டு திருத்தந்தை பிரான்சிஸ் வெளியிட்டுள்ள 'இறைவா உமக்குப் புகழ்' என்ற சுற்றுமடல் வரைக்கும் வெளியிடப்பட்டுள்ள அதிகாரப்பூர்வமான சுற்றுமடல்களில் பொதுநலன் என்ற சொல் 241முறை[6] தோன்றுகிறது. இச்சொல்லை அதிகமாகப் பயன்படுத்தியவர் புனித 23ஆம் ஜான் (*அவனியில் அமைதி*, (1963) 47 முறை) ஆவார். இவ்வாறு தோன்றும் இடங்களில் எல்லாம் பொதுநலன் என்ற சொல் ஒரேவிதப் பொருளைக் கொண்டதாகக் காணப்படுவதில்லை. காலத்தின் மாற்றங்களுக்கு ஏற்பக் குறுகிய பொருளைச் சுட்டிக்காட்டிய இச்சொல் பிற்காலத்தில் பரந்துபட்ட பொருளில் வழங்கப்பட்டு வந்துள்ளது என்பதை ஏடுகளைப் படிக்கும் பொழுது நமக்குப் புலப்படுகிறது. கீழ்க்காணும் அட்டவணை, பொதுநலன் பேணல் என்ற கோட்பாடு சமூகப்போதனை ஏடுகளில் எவ்வாறு வளர்ச்சி பெற்று வந்துள்ளது என்பதையும் பொதுநலனைப் பேணுவதில் யாருக்கு அதிகப் பொறுப்புணர்வு உள்ளது என்பதையும் சுட்டிக்காட்டுகிறது.



| ஆசிரியர் | சுற்றுமடல் மற்றும் ஆண்டு | பொதுநலன் பற்றிய விளக்கம் | பொதுநலன் பேணுவதற்கான பொறுப்புணர்வு |
|---|---|---|---|
| 13ஆம் லியோ<br><br>11ஆம் பியுஸ் | தொழிலாளர் நிலைமை, 1891<br><br>சமூக ஒழுங்கமைவு, 1931 | நாட்டில் வாழும் மக்களின் பொதுவான தேவைகள்<br><br>தொழிலாளர்கள் நலன்களே பொதுநலன் | அரசின் தலையாய பொறுப்பு |
| 23ஆம் ஜான் | அன்னையும் ஆசிரியையும், 1961<br><br>அவனியில் அமைதி, 1963 | பொதுவளங்கள், முழுமனித வளர்ச்சிக்கான கூறுகள்<br><br>அடிப்படை மனித உரிமைகள் | குறிப்பிட்ட நாட்டின் பொறுப்பு மட்டுமன்று; அனைத்து நாடுகளுக்கும் உலகளாவிய பொதுநலனைக் காக்கப் பொறுப்பு உண்டு |
| இரண்டாம் வத்திக்கான் சங்கம் | இன்றைய உலகில் திருஅவை, 1965<br><br>சமயச் சுதந்திரம் 1965 | தன்னிறைவை அடைய உதவும் அனைத்து வாழ்வு நிலைகளும் கூறுகளும்<br><br>நீதி, அமைதி மற்றும் ஒழுங்கு | தனிமனிதருக்கும் சமூகத்திற்கும் பொறுப்பு<br><br>அரசும் சமயமும் பொறுப்பு கொண்டுள்ளன. சமயம்சார் நடவடிக்கையில் தன்னுரிமை தேவை. |

| | | | |
|---|---|---|---|
| 2ஆம் ஜான் பால் | திருஅவையின் சமூக ஈடுபாடு, 1987<br><br>நூறாமாண்டு, 1991 | இயற்கையைக் காப்பதும் பொதுநலனாகும். நுகர்வுப் பண்பாடு, இயற்கையைச் சுரண்டல், பொருளாதாரச் சந்தை, போர் மற்றும் வன்முறை பொதுநலனுக்கு எதிரானது | நாட்டின் ஒவ்வொருவரின் கடமையாகும். |
| 16ஆம் பெனடிக்ட் | உண்மையில் அன்பு, 2009 | நீதி மற்றும் அன்பின் அடிப்படையில் அனைவரின் ஒட்டுமொத்த நலனே பொதுநலன் (தனிநபர், குடும்பம், சமூகம், குழுக்கள்) | அரசு, சட்டம், நீதித்துறை, பண்பாடு மற்றும் குடிமைச் சமூகம் |
| பிரான்சிசு | இறைவா உமக்குப் புகழ் 2015 | தனிமனித, சமூக ஒட்டுமொத்த வளர்ச்சி மற்றும் முன்னேற்றத் -திற்கான கூறுகள் (உரிமைகள், சமூக அமைதி, நிலைத்த தன்மை, பாதுகாப்பு) | தனிமனிதரும் சமூகமும் |



திருஅவை சமூகப்போதனை ஏடுகளில் பொதுநலன் பேணுதல் என்ற கோட்பாட்டை மூன்று விதங்களில் காணலாம். முதலாவது, பொதுநலன் என்ற கோட்பாட்டின் அடிப்படைக் கூறுகள், இரண்டாவது பொதுநலன் பேணுவதற்கான பொறுப்புணர்வு, மூன்றாவது பொதுநலன் அக்கறையில் சமூகம், குழுக்கள், அரசுகளின் செயல்பாடு.

### அ. பொதுநலன் கோட்பாட்டின் அடிப்படைக் கூறுகள்

திருஅவையின் சமூகப்போதனை, மாந்தர் அனைவரின் மாண்பு, ஒற்றுமை, சமத்துவம் ஆகியவற்றிலிருந்து எழும் பண்பே பொது நலனாகும் என்று குறிப்பிடுகிறது.[7] எனவேதான், மக்கள் அனைவரும் நிறைவை அடைய உதவும் அனைத்துச் சமூகப் பொருளாதார அரசியல் சமயக் கூறுகள் அனைத்தோடும் பொதுநலன் தொடர்புபடுத்தப்பட்டுள்ளது. பொதுநலன் என்பது மேற்கூறிய கூறுகளை உள்ளடக்கிய ஒருவரின் தனிப்பட்ட நலனோ அல்லது ஒரு குறிப்பிட்ட குழுவின் நலன்களின் தொகுப்போ அல்ல. மாறாக, ஒவ்வொரு நபருக்கும் உரித்தானது. பொதுநலனைப் பெறுவதற்கும் பெருக்குவதற்கும் பாதுகாப்பதற்கும் அனைவரும் சேர்ந்தே செயல்படவேண்டும். அதனால்தான் அதைப் பொதுநலன் என்று அழைக்கிறோம். தனிமனிதரின் அறம் சார்ந்த செயல்கள் எவ்வாறு நன்மையைக் கொண்டுவரமுடியுமோ அவ்வாறே ஒரு சமூகத்தின் அறம்சார் செயல்கள் பொதுநலன் என்ற நன்மையைக் கொண்டுவரமுடியும். எனவே பொதுநலன் என்பது சமூகத்தின், குழுமங்களின் அறம் சார்ந்த செயல்களை உள்ளடக்கியுள்ளது என்று 'கத்தோலிக்கத் திருஅவையின் மறைக்கல்வி' ஏடு தெரிவிக்கிறது (எண் 1912). அதாவது, ஒரு சமூகம் தன்னைச் சார்ந்த அனைத்து நபர்களுக்கும் நன்மை செய்யவேண்டும் என்ற சிந்தனை கொண்டிருந்தால் அது பொதுநலனைக் கொண்டுள்ளது என்பது பொருளாகும். அனைத்து மக்களின் நலனும் ஒவ்வொருவரின் முழுநலனுமே பொதுநலனின் முதன்மையான நோக்கமாகும். பிறரோடு பிறருக்காக வாழும் நிலையைத் தவிர்த்துவிட்டு தனிமனிதர் தானாக தனது நிறைவை அடைந்துவிட முடியாது. அதாவது, ஒருவர், சமூகவாழ்வின் பல்வேறு நிலைகளில் பிறருக்காக வாழ்கின்றார் என்பது மட்டும் போதுமானதல்ல; மாறாக அத்தகைய சமூகவாழ்வின் நிலைகளில் இருக்கும் உண்மையைக்

கண்டறியவேண்டும். சமூகத்தின் எந்தவொரு நிலையும் எடுத்துக்காட்டுகளாக, குடும்பம், குழுக்கள், சமூக இயக்கம், வணிக நிறுவனங்கள், நகரம், மாநிலம், நாடு ஆகியவை பொதுநலனைப் பேணுவதற்காகவே இருக்கின்றன என்று '*அன்னையும் ஆசிரியையும்*' (எண் 54) என்ற ஏடு தெரிவிக்கிறது. எனவேதான் வளர்ச்சியை நோக்கிய தனிமனித, சமூகப் பாதுகாப்பும் மனித வளமையுமே பொதுநன்மையின் நோக்கங்களாக விளங்குகின்றன.

பொதுநலன் என்ற கோட்பாட்டின் முக்கிய அடிப்படைக் கூறுகளாக இருப்பவை: அனைவருக்கும் மதிப்பளிப்பது, சமூக நலம் காத்தல், அமைதியும் பாதுகாப்பும் அளிப்பது (*கத்தோலிக்கத் திருஅவையின் மறைக்கல்வி*, எண் 1925).

• **அனைவருக்கும் தகுந்த மதிப்பளிப்பது** என்பது ஒவ்வொருவரின் பங்களிப்பையும், உரிமையையும் மதிப்பதாகும். அதாவது ஒவ்வொருவரும் தங்களின் முழுநலனை அனுபவிக்கக் கொடுக்கப்பட்டுள்ள அத்தனை உரிமைகளையும் அனுபவிக்கவேண்டும் (*உண்மையில் அன்பு*, 7). பொதுநலன் என்பது ஒருவர் தன் வாழ்வில் நிறைவை அடையவேண்டிய சமூக வாழ்வு நிலைகள் என்றால், அந்த நிலைகளை அனைவரும் பெறுவதற்கு உரிமையுண்டு. இதில் வேறுபாடு பாராட்டி மறுத்தால் அது பொதுநலனுக்கு ஊறுவிளைவிப்பதாகும் என்று புனித 23–ஆம் ஜான் தனது மடலில் தெளிவாகத் தெரிவிக்கின்றார் (*அன்னையும் ஆசிரியையும்*, எண் 147). திருத்தந்தை பிரான்சிசு இக்கருத்தை மேலும் வலியுறுத்திக் கூறுகிறார் அதாவது அனைவருக்கும் மதிப்பளிப்பது என்பது ஒவ்வொருவரின் உரிமையைப் போற்றுவதும் அவரின் மாண்பை வளர்த்தெடுப்பதும் ஆகும் (*இறைவா உமக்குப் புகழ்*, எண் 34).

• **சமூக நலம் –** அரசு சமூக நலத்தைப் பாதுகாக்க எல்லாவிதக் கட்டமைப்புகளை உருவாக்கி மக்களின் அடிப்படைத் தேவைகளான நலவாழ்வு, சாலை, வீட்டுவசதி, தண்ணீர், கல்வி, பண்பாட்டுச் சூழல் ஆகியவை மூலம் மேம்பட்ட (Decent) வாழ்வு வாழத் தேவையான எல்லாக் கூறுகளையும் கொடுக்கவேண்டும் (*இறைவா உமக்குப் புகழ்*, எண் 34).

இவ்வாறு மக்களின் வாழ்வு நிலைகளை உயர்த்தும் தனியார் மற்றும் அரசின் செயல்பாடுகளை ஊக்குவிப்பது நமது கடமையாகும். இத்தகைய நலன்களைப் பெரும்பான்மை மக்கள் மட்டும் நலன்களை அனுபவிக்க



வழிவகை செய்யாது சிறுபான்மை மக்கள் அனைவரும் எவ்வித வேறுபாடுமின்றி பொதுநலன்களை அனுபவிக்க ஆவண செய்யவேண்டும். இதையே பொதுநலன் என்ற கோட்பாடு தெரிவிக்கிறது.

• **அமைதியும் பாதுகாப்பும் –** பொதுநலன் என்பது அமைதிக்கும் பாதுகாப்பிற்கும் எத்தகைய இன்னலும் இடையூறும் ஏற்படாவண்ணம் இருக்கும் சூழல்களைச் சுட்டிக்காட்டுகிறது (*அவனியில் அமைதி*, எண் 120; *திருஅவையின் சமூக ஈடுபாடு*, எண்கள் 10, 24, 3;9; *நூறாமாண்டு*, எண்கள் 14,28). ஏனெனில் வன்முறையும் போரும் நடைபெறுகின்ற சூழலில் ஒருவர் தனது முழு நலனை அனுபவிக்க முடியாது. எனவேதான் பொதுநலன் இக்கருத்தை மிகவும் வலியுறுத்திக் கூறுகிறது. அமைதியையும் பாதுகாப்பையும் உறுதிசெய்ய நீதியான வழிமுறைகளைக் கையாள அரசுக்கும் அனைவருக்கும் பொறுப்புள்ளது. அமைதியையும் பாதுகாப்பையும் உறுதி செய்திட நீதியோடு கூடிய செயல்பாடுகளை உருவாக்கிட வேண்டும் (*உண்மையில் அன்பு*, 38). நீதி மலிந்துள்ள இடங்களில் பொதுநலனாகிய அமைதிக்கும் பாதுகாப்பிற்கும் மிகப்பெரிய ஆபத்து உள்ளது.

## ஆ. பொதுநலன் பேணுவதற்கான பொறுப்புணர்வு

பொதுநலன் பேணுதல் என்பது மனிதரின் ஒருங்கிணைந்த முன்னேற்றம், அவரது அடிப்படை உரிமைகளான உணவு, உடை, உறைவிடம் ஆகியவற்றோடு தொடர்புபடுத்தப்பட்டுள்ளது. அமைதிக்கான அர்ப்பணம், நாட்டின் வலிமைக்கான அங்கீகாரம், சரியான நீதித்துறை, இயற்கையைப் பேணுதல், அனைவருக்கும் தேவையான பணிகளைச் செய்தல், உணவு, உடை, உறைவிடம், வேலை, கல்வி, பண்பாட்டு உரிமை, சமூகத் தொடர்பில் தன்னுரிமை, போக்குவரத்து வசதி, சமயச் செயல்பாட்டிற்கான பாதுகாப்பு, ஆகியவற்றைப் பேணுவதில் அனைத்து நாடுகளும் உதவிபுரிய வேண்டும் (காண்: *இன்றைய உலகில் திருஅவை*, 26). பொதுநலனைப் பாதுகாப்பதற்கு அனைத்து நிலையில் வாழும் மக்கள் அனைவரும் அழைக்கப்படுகின்றனர். இதில் யாருக்கும் விதிவிலக்கு வழங்கப்படவில்லை (*அன்னையும் ஆசிரியையும்*, 147). *அரசியல் அதிகாரம், கருத்தமைவு*, (*சமூக ஈடுபாடு*, எண் 46; *அவனியில் அமைதி*, எண் 55).

நாடாளுமன்றம் வழியாக சட்டங்கள் இயற்றி பொதுநலனைப் பேணுவதில் சமூகமும் அரசும் அக்கறைகாட்ட வேண்டும். நீதி மற்றும் அன்பு ஆகியவற்றிற்கான பொறுப்பு, ஒருவர், மற்றவர் தேவையினை நிறைவு செய்யும் பொது நலனுக்கு நமது பங்களிப்பாகும்.

**இ. பொதுநலன் பேணலில் சமூகம், குழுக்கள், அரசுகள்**

தூய தாமஸ் அக்குவினாஸின் இறையியல் தொகுப்பில் கூறப்பட்டுள்ளது போல, பொதுநலன்களைப் பாதுகாப்பதில் தனிநபரைத் தவிர்த்து ஒரு நாட்டின் அரசுக்கு மிகப்பெரிய பொறுப்பு உண்டு என்பதை கத்தோலிக்கப் போதனை வலியுறுத்துகிறது. ஏனெனில் பொதுநலன்களைப் பாதுகாப்பதற்கும் பராமரிப்பதற்கும் பங்கிட்டு வழங்குவதற்கும்தான் அரசு இயங்குகிறது (*கத்தோலிக்கத் திருஅவையின் மறைக்கல்வி*, எண் 1910). ஒருநாடு தன் நாட்டு குடிமக்களிடையேயும் குழுக்களிடையேயும் நல்ல தொடர்பை உருவாக்கி ஒற்றுமையையும் நல்லுறவையும் உறுதிசெய்திட வேண்டும். இவ்வாறு செய்வதின் மூலமும் நாட்டு மக்கள் ஒவ்வொருவரின் பங்களிப்பின் வழியாகவும் பொதுநலனைக் காத்திடமுடியும். தனிநபர், குடும்பங்கள் அல்லது குழுக்கள் எல்லாம் தாங்களாகவே வாழ்வில் பொதுநலனை அனுபவித்து முழுமையை அடைய முடியாதாகையால் அரசு நிறுவனங்கள் பொருள்சார்ந்த, பண்பாடு சார்ந்த, அறம் சார்ந்த மற்றும் அருள்வாழ்வு சார்ந்த நலன்களை எல்லோருக்கும் எப்பொழுதும் கிடைக்கும் வண்ணம் செய்திடவேண்டும். ஏனெனில் அரசு, சமூகங்கள் இருப்பதற்கான நோக்கமே பொதுநலனைப் பராமரிப்பதற்காகவே என்று 'தொழிலாளர் நிலைமை' என்ற சுற்றுமடலில் திருத்தந்தை 13-ஆம் லியோ குறிப்பிடுகின்றார் (எண்கள், 133-135). அதிலும் குறிப்பாகப் பொதுநலனை வளர்க்கவே, பாதுகாக்க தனியார் நலன்கள், சொத்துகள் இருக்கின்றன என்பதை திருஅவையின் போதனை தெளிவுபடக் கூறுகிறது. (*அன்னையும் ஆசிரியையும்*, எண்கள் 78-80).

தனிமனித, குடும்ப, பல்வேறு இயக்கங்கள் ஆகியவை முழுமையான நிறைவை அடையத் தேவையான சமூக வாழ்வின் ஒட்டுமொத்த நிலைகளை (*அவனியில் அமைதி*, எண் 65) எவரும் ஒருகுழுவுக்கே அல்லது தனிப்பட்ட நபருக்கு உரியது என்று மாற்றிவிடாமல், நாம் ஒருவரை ஒருவர் நம்முடைய



தேவைக்காகச் சார்ந்து வாழ்வதால் எல்லோரும் சமூகத்தேவைகளில் ஒத்துழைத்துச் சமூகநலத்தைப் பேண வேண்டும். மேலும் பொதுநலன் என்பது தன்னிலே தானே ஓர் இலக்காக அமைந்துவிடாது கடவுளிடம் அனைவரையும் அழைத்துச்செல்ல வேண்டும். ஏனெனில் இறைவனே மனிதர்களின் இறுதி இலக்கு (*நூறாமாண்டு*, 41).

## முடிவுரை

பொதுநலன், கூட்டுத்தோழமை ஆகிய கோட்பாடுகள் இரண்டும் திருஅவையின் சமூகப்போதனையின் தாகத்தை எடுத்துரைக்கின்றன. பொதுநலன் என்பது தனிநலன் என்று மட்டுமல்ல; சமுதாய, உலக நலன் என்று பரந்துபட்ட பார்வையில் பார்க்கப்படுகிறது. தனிநலன், பொதுநலனைக் காக்கத் தியாகம் செய்ய வேண்டும் என்பது இக்கோட்பாடு பற்றிய பகுதியில் திருஅவை வலியுறுத்திக் கூறுகிறது. பொதுநலன் பேணுவதில் இந்த உலகத்தில் பிறந்தவர்கள் அனைவருக்கும் உரிமை உள்ளது. கூட்டுத்தோழமை என்ற கோட்பாடு இந்த உலகத்தில் உள்ள பல்வேறு அமைப்பு சார்ந்த, பண்பாடு சார்ந்த, அரசியல் சார்ந்த தீமைகளை வென்றெடுக்க வேண்டுமெனில் அனைவரும் சேர்ந்தே செயல்பட வேண்டும். பாதிக்கப்பட்டவர் மேல் தோழமை கொண்டு அனைவரும் மாற்றத்திற்கான நடவடிக்கையில் ஈடுபடவேண்டும். குறிப்பாகக் கூட்டுத்தோழமை என்பது நாம் அனைவரும் ஒருவர் ஒருவரைச் சார்ந்து வாழ்வதால் ஒன்றாக இணைந்து மேற்கொள்ள வேண்டிய சமூகப்பணிகளை மானுட முன்னேற்றத்திற்காகச் செய்வது அவசியம் என்று கூறுகிறது. மேலும், கூட்டுத்தோழமை, ஒருவர் மாண்புமிக்கவர் என்பதற்காக மட்டுமன்றி அவர் கடவுளின் சாயல். ஆகவே அயலான் அவர்மீது நமக்குப் பொறுப்பு உண்டு என்பதை அழுத்தமாக இக்கோட்பாடுகள் கூறுகின்றன.

## அடிக்குறிப்புகள்

[1] Andreas Wildt, "Solidarity: Its History and Contemporary Definition", in *Solidarity*, ed., Kurt Bayertz (London: Kluwer Academic Publishers,1999), 218.

2 Michael P. Hornsby-Smith, *An Introduction to Catholic Social Thought* (Cambridge: Cambrige University Press, 2006), 81-83.

3 Michael P. Hornsby-Smith, *An Introduction to Catholic Social Thought*, 81-83.

4 *இன்றைய உலகில் திருஅவை* என்ற ஏட்டில் 3 முறையும், 1967-இல் வெளியிடப்பட்ட *மக்களின் முன்னேற்றம்* என்ற ஏட்டில் இச்சொல் 9 முறையும், 1987-இல் வெளியிடப்பட்ட *திருஅவையின் சமூக ஈடுபாடு* என்ற ஏட்டில் 22 முறையும், 1991ஆம் ஆண்டு வெளிவந்த *நூறாவது ஆண்டு* என்ற ஏட்டில் 6 முறையும், *கத்தோலிக்கத் திருஅவையின் மறைக்கல்வி* என்ற ஏட்டில் 27முறையும், 2009-ஆம் ஆண்டு வெளிவந்த *உண்மையில் அன்பு* என்ற ஏட்டில் 19 முறையும், 2015-இல் வெளிவந்த *நீவீர் புகழப்படுவீராக* என்ற ஏட்டில் 14 முறையும் கூட்டொருமைப்பாடு என்ற சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது.

5 காண்: *கத்தோலிக்கத் திருஅவையின் மறைக்கல்வி* ஏடு, 1905-1912; *அன்னையும் ஆசிரியையும்,* 417-421; *அவனியில் அமைதி,* 272-273; *அரசியல் கருத்தமைவு சமூக ஈடுபாடு,* 433-435. மேலும், "Pontifical Council for Justice and Peace," *Compendium of the Social Doctrine of the Church* (Vatican: Liberia Editrice Vaticana, 2004), 93.

6 Dennis P. McCann, "The Common Good in Catholic Social Teachings: A Case Study in Modernisation" in *In search of the Common Good*, ed., Dennis P. McCann and Patrick D. Miller (New York: T&T, 2005) p.121-146. திருத்தந்தை லியோ 1888இல் தான் வெளியிட்ட *லிபர்தாஸ்* என்ற ஏட்டில் 3 முறையும் 1891-இல் வெளியிட்ட *தொழிலாளர் நிலைமை* என்ற ஏட்டில் 7 முறையும் இச்சொல்லைப் பயன்படுத்தியுள்ளார். திருத்தந்தை 11-ஆம் பியுசு அவர்கள் 1931-ஆம் ஆண்டில் வெளியிட்ட தனது நாற்பதாம் ஆண்டு என்ற ஏட்டில் 16 முறை இச்சொல் கையாளப்பட்டுள்ளது. 1961-இல், 23-ஆம் யோவான் தான் வெளியிட்ட *அன்னையும் ஆசிரியையும்* 20 முறையும், 1963-இல் வெளியிட்ட *அவனியில் அமைதி* 47 முறையும் பயன்படுத்துகிறார். 1965-இல் *இன்றைய உலகில் திருச்சபை* 28 முறையும் ஆறாம் பவுல் 1967-இல் வெளியிட்ட தனது சுற்றுமடலான *மக்களின் முன்னேற்றம்* என்ற ஏட்டில் 6 முறையும், 1971இல் வெளியிட்ட *கருத்தமைவு, அதிகாரம் அரசியல் ஈடுபாடு* என்ற ஏட்டில் 8 முறையும் பயன்படுத்தியுள்ளார். அவரைப் பின்தொடர்ந்து புனித இரண்டாம் யோவான் பவுல், 1981-இல் வெளியிட்ட *மனித உழைப்பு* என்ற ஏட்டில் 7 முறையும், 1987-இல் வெளியிட்ட *திருஅவையின் சமூக ஈடுபாடு* என்ற சுற்றுமடலில் 11 முறையும், 1991-இல் வெளிவந்த *நூறாவது ஆண்டு* என்ற சுற்றுமடலில் 16 முறையும், 1995-இல் வெளிவந்த *வாழ்வின் நற்செய்தி* என்ற சுற்றுமடலில் 12 முறையும் இச்சொல்லைப் பயன்படுத்துகிறார்.



16-ஆம் பெனடிக்ட், 2009-ஆம் ஆண்டு தான் வெளியிட்ட *உண்மையில் அன்பு* என்ற மடலில் 20 முறையும், 2015-ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட *நீவீர் புகழப்படுவீராக* (2015) என்ற ஏட்டில் திருத்தந்தை பிரான்சிசு 30 முறையும் பயன்படுத்துகிறார்.

7. "Pontifical Council for Justice and Peace," *Compendium of the Social Doctrine of the Church*, 93.

# 4. திருஅவையின் சமூகப் போதனைகளில் சமூக நீதி

*முனைவர் அருள்பணி. ஆ. சூ. ஜான் பீட்டர்*
*பங்குப் பணியாளர்*
*சம்மனசூர், தஞ்சாவூர் மறைமாவட்டம்*

## முன்னுரை

திருஅவையின் பணிகளில் மிகவும் இன்றியமையாதது "இறையரசைக் கட்டி எழுப்புவதாகும்." "ஏழைகளுக்கு நற்செய்தியை அறிவிக்கவும், உள்ளம் நொறுங்கியோரைக் குணப்படுத்தவும்" (லூக் 4:18), "இழந்து போனதைத் தேடி மீட்கவுமே" (லூக் 19:10) கடவுள் கிறிஸ்துவை அனுப்பினார். கிறிஸ்துவைப் போலவே திருஅவையும் தனது இயல்பிலே இத்தகையப் பொறுப்பினை இறைவனின் அழைப்பாகக் கருதி பணி செய்து வருகின்றது (காண்: திருச்சபை. 8). இறைமக்கள் விண் மண் ஆகிய இரு நகர்களின் குடிமக்கள் என்பதால் விண்ணகம் சார்ந்த கடமைகளையும், மண்ணகம் சார்ந்த கடமைகளையும் பொறுப்புணர்வுடன் ஏற்றுச் செயல்படுவதே உண்மையான சீடத்துவ வாழ்வு என்பதை *இன்றைய உலகில் திருச்சபை* என்னும் ஏடு (எண் 47) ஆழமாக வலியுறுத்திச் சொல்கிறது. மனிதச் சமூகத்தை இறையாட்சி மதிப்பீட்டின் ஒளியில் கட்டி எழுப்புவதே தமது பணி என்பதை உணர்ந்த திருஅவை இத்தகைய பணியைச் செய்ய தமது போதனைகளை சமூகம் சார்ந்த பார்வையில் ஒளியூட்டியது. 1891-ஆம் ஆண்டு *திருத்தந்தை 13-ஆம் லியோ* அவர்கள் வெளியிட்ட "*மனித உழைப்பு*" என்ற ஏடு அதற்கான தொடக்கமானது. அதன் பிறகு வந்த திருத்தந்தையர்கள் சமூகம் சார்ந்த பிரச்சனைகளை உணர்ந்து அவைகளை இறையாட்சி மதிப்பீட்டு ஒளியில் அலசிப் பார்த்து திருஅவையின் கருத்துக்களைப் பதிவு செய்துள்ளனர். பல்வேறு ஏடுகளின் வழியாக திருஅவையின் கருத்துக்களைத் தெரிவித்துள்ளனர். இந்தக் கட்டுரை ஆரோக்கியமான சமூகத்தைக் கட்டி எழுப்பத் திருஅவையின் சமூகப் போதனைகளில் சமூக நீதி சார்ந்த கருத்துக்கள் பொதிந்து கிடப்பதை வெளிக்கொணர்வதின் ஒரு முயற்சியாகும்.



## திருஅவையின் புரிதலில் சமூகம்

மனித சமூகம் அடிப்படையில் கடவுளின் திட்டத்தில் உருக்கொண்டது, ஆன்மீகத் தன்மைக் கொண்டது, உண்மையில் வேர் ஊன்றியது, நீதியின் அடிப்படையில் இயங்குவது, அன்பினால் உந்தப்பட்டு, நிறைவடைவது, நடுநிலைமை தவறாமல் சுதந்திரத்தினை தன்னிலே கொண்டிருப்பது என்பதை '*அவனியில் அமைதி*' என்ற ஏட்டில் திருத்தந்தை 23-ஆம் யோவான் குறிப்பிட்டுள்ளார். இந்த மனித சமூகம் மனிதரிடையே கூட்டுறவை ஏற்படுத்தவும், நாடுகளிடையே சமூக உறவை வளர்க்கவும், மனிதரின் ஒட்டு மொத்த வளர்ச்சியை தனது இலக்காகக் கொண்டிருக்க வேண்டும். மனித குலம் முழுவதும் ஒரே சமூகம் என்னும் இலக்கைக் கொண்டு எல்லோரும் செயல்பட வேண்டும் என்பதை திருஅவை மிகவும் வலியுறுத்தியது. இயற்கை நீதியின்படி செயலாற்றி இத்தகையச் சமூக உருவாக்கத்தை முன்னிலைப்படுத்துகின்றன திருஅவையின் சமூகப் போதனைகள்.

## காலத்தின் அறிகுறிகளும் திருஅவையின் பணியும்

திருஅவையின் மிக இன்றியமையாத பணி மனித சமூகத்தைக் கட்டி எழுப்புதல் ஆகும். எனவே, "காலத்தின் குறிகளைத் துளாவி அறிந்து, நற்செய்தியின் ஒளியில் அவற்றின் பொருளை எல்லாக் காலக் கட்டங்களிலும் விளக்கி உரைப்பது திருஅவையின் கடமையாகும்" (இஉதி 4). மனித சமூகம் மாறிக்கொண்டே இருக்கின்றது. மாற்றம் தேடும் மனிதர் நடுநிலைமை தவறி தவறான வழியில் செல்ல வாய்ப்புகள் உள்ளன. எனவே சமூகத்தின் மனச்சான்றாகத் திருஅவை பணியாற்ற வேண்டியது தனது கடமை என உணர்கின்றது. சிறப்பாக உலகத்தில் நடக்கும் அனைத்து நிகழ்வுகளையும் அறிவதும், ஆய்வுக்கு உட்படுத்துவதும், அடிமைக் கூறுகளை அடையாளம் கண்டு விடுதலைக்கு வித்திடுவதும் திருஅவையின் பணியாகும். நீதியின் அடிப்படையிலான பார்வை மிகவும் சிறப்பிடம் பெறுகின்றது. திருத்தந்தை பிரான்சிசும் '*மகிழ்ச்சியின் நற்செய்தி*' என்ற ஏட்டில் "கருத்துக்களை விட எதார்த்தங்கள் முதன்மை பெறுகின்றன" என்கிறார். அன்றாட நிகழ்வுகளும், எதார்த்தங்களும் புதுமைக்கான விதைகள். எனவே எதார்த்தங்களைத் தடை போட்டு நிறுத்த முடியாது. மாறாகக் கவனித்து சமூக வளர்ச்சிகானவையா? இல்லையா? என விழிப்புடன் இருத்தல் மிகவும் அவசியமாகும். இத்தகைய

விழிப்புணர்வு ஒரு சமூகத்தை ஆரோக்கியமான சமூகமாகக் கட்டி எழுப்ப உதவுகின்றது. விழிப்புணர்வு அற்ற சமூகம் அடிமைச் சமூகமாக மாறும் அபாயம் அதிகமாக உள்ளது. இத்தகையச் சூழலில் தனது இறைவாக்குப் பணியின் ஒளியில் சமூக நீதியை அளவுகோலாகக் கொண்டு செயல்படத் தூண்டுவது திருஅவையின் கடமையாகும் என்பதை திருத்தந்தையர்கள் பல்வேறு தருணங்களில் விளக்கியுள்ளனர்.

## சமூக நீதி

சமூக நீதி என்ற சொல் முதன் முதலாக லூயிஜி தாப்பரெல்லி அசிலியோ (1793-1862) என்ற இயேசுஅவை அருட்பணியாளரால் அறிமுகப்படுத்தப்பட்டது. திருஅவையின் அதிகார ஏட்டில் 1894-ஆம் ஆண்டு சமூக நீதி என்ற சொல் முதன் முதல் பயன்படுத்தப்பட்டது (*Acta Sanctae Sedis,* 1894-95 Pg. 131). *லக்குந்தா சானே (Lacunda Sane)* என்ற திருமடலில் திருத்தந்தை புனித கிரகோரி "சமூக நீதியின் பொது பாதுகாவலர்" என்று எழுதிய போது இந்த வார்த்தையை திருத்தந்தை 9-ஆம் பியூசு மீண்டும் பயன்படுத்தியுள்ளார்.

## சமூக நீதியின் திருத்தந்தை 9-ஆம் பியூசு (1922-39)

சமூக நீதி என்ற கருத்தை திருஅவையின் போதனையில் அதிகமாகவும் முதன் முதலாகவும் பயன்படுத்திய திருத்தந்தை பியூசு ஆவார்.

தாமசு அக்குவினாசு பற்றி எழுதிய (*Studiorum Ducem,* 1923) என்ற திருமடலில் சமூக நீதி பற்றிய புரிதலை முன்வைக்கிறார். நவீன காலத்து மெய்யியலார்களான காப்சு, ஜான் லாக், கெகல், மார்க்சு போன்றோர் சமூகத்தின் நலனை முன்னிலைப்படுத்தி 'தனிமனிதரின் நலனைவிட பொதுநலனே தேடப்பட வேண்டும்' அல்லது 'தனிமனிதரின் நலன் பொதுநலனுக்கு எதிரானது' என்றும் 'அரசு சார்ந்த நலன் மனித மீட்பு சார்ந்த நலன்களை விட மேலானது' என்றனர். ஆனால் பொது நலன் தனிமனித நலனுக்கு எதிரானது அல்ல மாறாக பொது நலனில் தனிமனிதரின் நலன் பங்கெடுப்பதாகும்: உலகம் சார்ந்த நலன்கள் மனிதரின் மீட்பு சார்ந்த நலனுக்குத் துணையாக வேண்டும் என்ற புனித தாமசு அக்குவினாசின் கருத்தை திருத்தந்தை வலியுறுத்தினார்.



சமூகத்தின் மாற்று அமைப்பை முன்வைத்து *சமூக ஒழுங்கமைப்பு (Quadragasimo Anno)* (1931) என்ற திருமடலில் சமூக நீதியின் கோட்பாட்டு ஒளியில் சமூகப் பிரச்சனைகளை விளக்குகிறார்.

சமூகத்தின் பொருளாதார - சமூக வளங்களை முழுமையாகப் பகிர்ந்து கொள்வதே கடவுளின் திட்டமாகும். அது ஒரு வேளை பலருக்கு சாத்தியம் இல்லாதது போல தோன்றினும் சமூகத்தின் பொது நலனே தலையானது என உணர்ந்து தனி நபர் மற்றும் அனைத்துத் தரப்பினரும் பகிர்ந்து கொள்வது தவிர்க்க முடியாதது ஆகும்.

சமூக நீதியின் அடிப்படையில் எந்த வகுப்பினரும் மற்ற வகுப்பினரோடு வளங்களைப் பகிர முடியாது என்ற வாதம் தவறானது. மனித உழைப்பினால் கிடைக்கும் இலாபத்தை அடையாளம் காணாமல் உழைப்பாளர்களின் உரிமைகளைக் கண்டுணராமல் இருக்கும் முதலாளிகள், தங்களின் மூலதனமே எல்லாம் என்றும் நினைப்பது சமூக நீதிக்கெதிரானது (காண் 57). எனவே, மிகப் பெரிய சவால்களுக்கிடையே உழைப்பாளர்களின் நிலை, சமூகத்தில் நிலவும் ஏற்றத்தாழ்வுகளை மனத்தில் கொண்டு உழைப்பாளர்களின் பங்கு சமூகப் பொது நன்மையின் அடிப்படையில் கொடுக்கப்படுதலே சமூக நீதியாகும் (காண் 58) என்கிறார் திருத்தந்தை 9-ஆம் பியூசு.

ஊதியத்தைப் பற்றிய கருத்தாக்கத்தில் சமூக நீதியை வெளிப்படுத்துகிறார் திருத்தந்தை. உழைக்கும் குடும்பத்தலைவர் குடும்பத்தை நடத்தக் கூடிய விதத்தில் ஊதியம் நிர்ணயிக்கப்பட வேண்டும். தற்போதுள்ள நிலையில் இது சாத்தியம் இல்லை என்றாலும், மாற்றங்கள் செய்து ஊதியத்தை உயர்த்துவது சமூக நீதியின் தேவையாகிறது என்கிறார் (காண் 71). ஊதியத்தை அளவில்லாமல் உயர்த்துவதோ அல்லது குறைப்பதோ சமூக நீதிக்குப் புறம்பானது. எனவே, ஊதியத்தை முறையான திட்டமிடலாலும், நல்லெண்ணத்தினாலும் முறைப்படுத்துவதும், வேலை வாய்ப்பினை அதிகப்படுத்துவதும் சமூக நீதியின் கட்டாயத் தேவையாகின்றது. (காண் 74)

சமூகத்தில் பொருளாதார வாழ்வு என்பது மதிப்பீடுகளுக்கு உட்படுத்தப்பட்டு, வழிகாட்டப்பட வேண்டும். கட்டிலடங்கா பொருளாதார சர்வாதிகாரம் தன்னைத்தானே ஆட்சி செய்துகொள்ள முடியாது. எனவே சமூக நீதி மற்றும் சமூக அன்புக் கோட்பாட்டின் ஒளியில் வழிநடத்தப்பட

வேண்டும். முதலாளித்துவம் தன்னிலே தீமையானது அல்ல மாறாக உழைப்பாளர்களை நடத்தும் விதத்தில் மனித மதிப்பு மதிக்கப்படுவதில்லை, சமூகப் பொது நலனும் காக்கப்படாத நிலை இருப்பதால் சமூக நீதியே வழிநடத்த வேண்டும். மூலதனமும், உழைப்பும் சம நிலையில் சமூக நீதியின் அடிப்படையில் பார்க்கப்பட வேண்டும் என்கிறார் (காண் 88, 101, 110, 126).

*Divini Redemptoris* (1937) மற்றும் *Firmissimam Constantiam* என்ற ஏடுகளில் சமூக நீதிப் பற்றிப் பேசுகிறார் *Divini Redemptoris* ல் (1937) தொழிலாளர்களின் எதிர்கால நலன், நோய் காலத்தில் இழப்பீடு, வேலையற்ற நேரங்களில் இழப்பீட்டுத்தொகை வழங்குதல் சமூக நீதியாகும் என்கிறார். (52) *Firmissimam Constantiam* என்ற ஏட்டில் தனிப்பட்ட சொத்து என்பது அடிப்படை உரிமை என்றாலும் சமூகப் பொது நன்மை முன்வைக்கும் நிபந்தனைகளைச் சமூக நீதியின் பார்வையில் கவனத்தில் கொள்ள வேண்டும் என்கிறார் (காண் 16).

திருத்தந்தை 9-ஆம் பியூசு பயன்படுத்திய சமூக நீதி என்ற சொல்லானது பல விவாதங்களுக்கு வழி வகுத்தது. பலரும் சமூக நீதியை வரையறுக்க முயற்சித்தனர். தாமசு ஸ்டார்க் என்பவர் பின் வருமாறு வரையறுக்கிறார். "சமூக நீதி என்பது பொது நன்மை மட்டில் தனி மனிதருக்கு இருக்கக்கூடிய கடமையைப் பற்றியதானாலும் அது தனிச் செயல்களைக் (வரி செலுத்துதல்) குறித்ததல்ல மாறாக பொது நன்மைக்குப் பங்களிக்கும் நிறுவனங்களைக் கட்டி எழுப்புவதாகும்." ப்ரையன் பேனஸ்டாட் என்பவர் "குடும்பம், தன்னார்வத் தொண்டு குழுக்கள், பள்ளிக்கூடம், அயலார், உள்நாட்டு, மற்றும் உலக நாட்டு அரசியல் ஆகியவை சமூகங்களின் பொது நன்மைக்கு உழைக்கத் தூண்டும் ஆழ்உணர்வே *(virtue)* சமூக நீதி" என்கிறார். "தனி மனிதர் மற்றும் சமூகம் அவரவர் நிலைக்கேற்ப பொதுநன்மைக்கான பங்களிப்பும், மற்றும் அனைத்துக் கூட்டு உறவு நிலையுமே திருத்தந்தை 9-ஆம் பியூசு அவர்கள் முன்வைக்கும் சமூக நீதி என்கிறார் இரஸ்ஸல் கிட்டின்கர்.

## திருத்தந்தை 12-ஆம் பியூசும் திருத்தந்தை 23-ஆம் யோவானும்

திருத்தந்தை 12-ஆம் பியூசு சமூக நீதி என்ற பொருளில் அவ்வளவு அதிகமாகப் பேசவில்லை என்றாலும் ஒரு சில உரைகளில் அதைப் பற்றி



விவரித்துள்ளார். 1939-இல் எழுதிய *Sertum Laetitiae* என்ற திருமடலில் திருத்தந்தை 11-ஆம் பியூசு அவர்களின் குடும்பத்தில் ஊதியம் என்ற கருத்தை மேற்கோள் காண்பித்து சமூக நீதியைப் பற்றிக் கூறியுள்ளார். இந்தத் திருமடல் வெளியான நான்கு நாட்களுக்குப் பிறகு குரோவாசிய திருப்பயணிகளிடம் உரையாடும் போது "நிலை உண்மைகளை விளக்குவதில் வழுவாவரமும், சமூக நீதியின் சக்தி வாய்ந்த காவலரும், நாடுகளிடையே உறவை ஏற்படுத்துவதில் களைப்படையாததும் திருஅவை" என்று கூறியுள்ளார். 1944-இல் உரோமை நகர் அருட்பணியாளர்களுக்கு உரையாற்றிய போது "தமக்கு முன்னால் இருந்த திருத்தந்தையின் சமூக நீதி பற்றிய போதனையின் அடிப்படையில் உழைப்பாளர் வர்க்கம் பாதுகாப்பான, நிலையான சூழலில் வாழ ஏதுவான பொருளாதாரச் சூழலை" உருவாக்குவதே திருஅவையின் பணி என்றார். 1949-ஆம் ஆண்டு செர்மன் நாட்டு திருஅவைத் தலைவர்களுக்கு எழுதிய *Testes obsequii* என்ற கடிதத்தில் சமூக வளங்களை பயன்படுத்துவதிலும், பகிர்வதிலும் ஞானம், தாராளகுணம், நேர்மைத்தன்மை ஆகியவைகளைச் சரியான விதத்தில் ஒருங்கிணைப்பதில் சமூக நீதி பெரும் பங்காற்றுகிறது என்றார். 1952-இல் மரியாயின் சேனையாளர்களுக்கு எழுதிய கடிதத்தில் "பிறரன்பு, சமூக நீதியினால் உந்தப்பட்டு சமூக ஆர்வத்தில்" சிறப்புப் பெற வேண்டும் என்றார். 1956-இல் தூய இலாரன்சு ஜுஸ்தினியானின் ஐநூறாவது இறப்பு ஆண்டில் *Hadriatici Maris Urbs* என்ற கடிதத்தில் "சுதந்திரமும் சமூக நீதியும் இணைந்து செயலாற்றும் காலம் விரைவில் வரவேண்டும்" என்று எழுதியுள்ளார்.

திருத்தந்தை 23-ஆம் யோவான் (1858-63) தாம் எழுதிய *அன்னையும் ஆசிரியமும்* என்ற திருமடலில் (1959) சமூக நீதியின் அடிப்படையிலான பல கருத்துக்களை முன்வைத்துள்ளார். பொது நிறுவனங்களும், தன்னார்வ நிறுவனங்களும் பொருளாதாரக் காரியங்களில் ஈடுபடும்போது சமூக நீதியின் கோட்பாடுகளின் அடிப்படையில் தனிப்பட்ட நலன்களைப் பொது நலன்களோடு இணைக்க வேண்டும் என்கிறார் (காண் 40). ஒரு நாட்டில் உற்பத்தியாகும் செல்வம் நாட்டின் எல்லாக் குடிமக்களுக்கும் இடையே பகிர்ந்தளிக்கப் பெறுவது தேவையும் சமூக நீதியுமாகும் என்கிறார் (காண் 73). தனியார் முயற்சிகளும் (109) அதை எல்லோரும் பெறும்

வாய்ப்பும் (114-115) தொழிலாளரின் நியாயமான ஊதியமும் (68) அவர்களுக்கு தொழிலக இலாபத்தில், நிர்வாகத்தில், உடைமையில் உள்ள உரிமையும் (75) அரசால் உறுதி செய்யப்படுவது சமூக நீதியின் தேவையாகின்றது.

*அவனியில் அமைதி (1963)* என்ற ஏட்டில் ஒரு குறிப்பிட்ட சாராரின் உரிமைகளைக் காப்பதில் அதிகக் கவனம் செலுத்தாமல், அனைவரின் அடிப்படை உரிமைகளையும் காத்து சமூகத்தில் ஒரு சமநிலையை நிறுவ வேண்டியது அரசின் கடமை (98, 101) என்கிறார். இவ்வாறு சமூக நீதியின் அடிப்படையிலான கட்டமைப்பை முன்னிலைப்படுத்துகிறார்.

## இரண்டாம் வத்திக்கான் சங்கம் (1962-1965)

இரண்டாம் வத்திக்கான் சங்கம் 'சமூக நீதி' என்ற வார்த்தையை மூன்று முறை பயன்படுத்தியுள்ளது. கிறித்தவமல்லாச் சமயங்களோடு திருஅவைக்குள்ள உறவு என்ற ஏட்டில் கிறித்தவர்களும் இசுலாமியர்களும் கடந்த காலத்தை மறந்து ஒருவரை ஒருவர் அறிந்து கொள்வதற்காக நேர்மையுடன் ஈடுபடவும், எல்லா மனிதருடையவும் நன்மைக்காகச் சமூக நீதி, ஒழுக்க நலன்கள், அமைதி, சுதந்திரம் ஆகியவற்றைப் பேணிக் காத்து மேம்படுத்துவதில் ஒத்துழைக்கவும் திருச்சங்கம் எல்லாருக்கும் வேண்டுகோள் விடுக்கிறது (காண் 3). *இன்றைய உலகில் திருஅவை* என்ற ஏட்டில் மனிதரிடையே நிலவுகின்ற ஏற்றத் தாழ்வுகள் சமூக நீதி, நடுநிலைமை, மனித மாண்பு, அனைத்துலக அமைதி ஆகியவற்றிற்கு எதிராக உள்ளன என்கிறது (காண் 29). திருச்சங்கத் தந்தையர்கள் உலகளாவிய அளவில் நீதியையும் அமைதியையும் நிலைநாட்ட ஓர் அமைப்பு வேண்டும் என்று அழைப்பு விடுத்தனர். திருத்தந்தை 6-ஆம் பவுலும் 'நீதி மற்றும் அமைதி'க்கான திருத்தந்தைப் பணிக்குழு அமைத்தார். இரண்டாம் வத்திக்கான் சங்கம் வலியுறுத்திய 'சமூக நீதி' என்பது ஒட்டு மொத்த மனித குடும்ப உருவாக்கம் ஆகும். மண்ணுலக முன்னேற்றம் கடவுளின் ஆட்சிக்கு அடிப்படைக் கூறுகளில் ஒன்றாகும் என்பதனை வலியுறுத்தி புதிய சமூகத்தைக் கட்டி எழுப்புவதே நீதியானதாகும் என்பதனை இரண்டாம் வத்திக்கான் சங்கம் ஆணித்தரமாகக் கூறுகின்றது. "நீதியும் நடுநிலை நேர்மையும் எழுப்புகின்ற கோரிக்கைகளை நிறைவுசெய்ய வேண்டுமெனின், தனி மனிதரையும்



சமூகங்களையும் அநீதியாகப் பாகுபடுத்துவதற்கு அடிப்படையாயுள்ள மாபெரும் பொருளதார ஏற்றத்தாழ்வுகளை எவ்வளவு விரைவில் ஒழிக்க முடியுமோ அவ்வளவு விரைவில் ஒழிக்கும்படியாகத் தீவிர முயற்கிள் எடுக்க வேண்டும்" என்கிறது (இஉதி 66).

## அருளாளர் திருத்தந்தை 6-ஆம் பவுல் (1963-1978)

மக்களின் முன்னேற்றம் (1967) என்பதாண்டு வருகையிலே (செயல்பாட்டுக்கான அழைப்பு 1971) *உலகில் நீதி* என்ற உலக ஆயர்கள் மன்ற ஏடு (1971) ஆகியவை திருத்தந்தை பவுலின் காலத்தில் வெளிவந்த ஏடுகளில் மிகவும் குறிப்பிடத்தக்கவை. திருஅவையின் சமூக ஈடுபாட்டை வெளிப்படுத்தும் ஏடுகளாகவே திகழ்கின்றன. இவைகளோடு இலத்தின் அமெரிக்காவில் நடந்த இலத்தின் அமெரிக்க ஆயர்களின் கூட்டத்தில் (1968) பங்கேற்ற திருத்தந்தை பவுல் அந்த நாடுகளின் உண்மை நிலைமையை வெளிப்படுத்தியும், ஆயர்களின் முடிவுகளுக்கு உலகத் திருஅவையின் ஆதரவை நல்குவதிலும் தமது நிலைப்பாட்டை வெளிப்படுத்தினார். எனவே மெதயீன் முடிவுகள் அடங்கிய இலத்தீன் அமெரிக்க ஆயர்களின் பேரவை ஏடு சிறப்பிடம் பெறுகின்றது.

சமூக நீதி என்ற வார்த்தையை *மக்களின் முன்னேற்றம்* என்ற ஏட்டில் மூன்று முறை குறிப்பிடுகின்றார் (காண் 44,59,61). வணிகத்தில் சமூக நீதி கோட்பாடுகளான பாதிக்கப்பட்டோர் சார்பாக நிலைப்பாடு எடுப்பதும், சம வாய்ப்புகள் கிடைக்கச் செய்வதும் போன்றவை கடைப்பிடிக்கப்பட்டால் மட்டுமே அது உண்மையான, நேர்மையான வணிகமாக இருக்கும் என்றார். *மனித உயிர்* என்ற ஏட்டில் கருவில் உயிரைக் காப்பாற்றுவது கடமையாகும். அவ்வாறு செய்யாத அரசுகள் போதிய அளவு சமூக நீதிக் கோட்பாட்டு புரிதல் இல்லாதவை என்றார் (காண் 23).

திருத்தந்தை பவுல் *'செயல்பாட்டிற்கான அழைப்பு'* என்ற ஏட்டில் கிறித்தவர்கள் தங்கள் நாட்டின் எதார்த்தங்களை நன்றாக ஆய்வுக்கு உட்படுத்தி விவிலிய மதிப்பீடுகளை உள்வாங்கி, திருஅவையின் போதனைகளைக் கொண்டு வழிகாட்டு விதிமுறைகளை அமைத்துக் கொள்ள வேண்டும் என்கிறார் (காண் 4). தொழிலாளர் நிலைமை என்ற திருத்தந்தை 13-ஆம் லியோ அவர்களின் திருமடலை மேற்கோள் காண்பித்து சமூக நீதி

சார்ந்த நிலைப்பாடுகளை எடுப்பது தலத்திருஅவையின் கடமையாகும் என்பதை வலியுறுத்தியுள்ளார் (காண் 1,5,12).

திருத்தந்தை பவுல் சமூக நீதிபற்றியப் போதனையில் நாடுகளுக்கிடையேயான உறவை முதன்மைப்படுத்துவதைக் காணலாம். சிறப்பாகப் பணக்கார நாடுகள் ஏழை நாடுகள் மட்டில் கொண்டிருக்க வேண்டிய கடமைகளை வெளிப்படுத்துகிறார்.

## திருத்தந்தை புனித 2-ஆம் ஜான் பவுல் (1978-2005)

திருஅவையின் சமூகப் போதனைகளில் மனித மாண்பும், உரிமைகளும் வலியுறுத்தப்பட்டு வந்த போதிலும் திருத்தந்தை புனித ஜான் பவுல் சமூக நீதியின் படிப்பினைகளில் மனித மாண்பையும், உரிமைகளையும் அதிகமாக வலியுறுத்துவதைக் காணலாம். 1979-இல் தாம் எழுதிய *மனிதரின் மீட்பர்* என்ற ஏட்டில் தனிநபர்களின் உரிமைகள் பாதுகாக்கப்படும்பொழுதுதான் பொதுநலம் உறுதிசெய்யப்படுகிறது என்றும் அதுவே சமூக நீதியின் அடிப்படை வெளிப்பாடு எனவும் கூறுகிறார் (காண் 17). மனித உரிமைகள் பற்றிப் பேசிய திருத்தந்தை தமக்கு முன்னால் இருந்த திருத்தந்தையர்கள் 13-ஆம் லியோ மற்றும் 11-ஆம் பியூசு அவர்களின் மனித உழைப்பு பற்றிய கருத்தை சமூக நீதியோடு தொடர்புபடுத்தி அவர்களைப் போலவே எழுதுகிறார் (*மனித உழைப்பு* 8, 20).

1983-ஆம் ஆண்டு வெளியிட்ட திருஅவையின் சட்டத் தொகுப்பில் கிறித்தவ விசுவாசிகள் சமூக நீதியை நிலைநாட்டுவதிலும், ஏழைகளுக்கு உதவுவதிலும் கருத்தாய் இருக்க வேண்டும் என்கிறது. (காண் திருஅவைச் சட்டம் எண் 222:2). பங்குப் பணியாளர்கள் நற்செய்தி மனநிலையை வெளிப்படுத்தும் செயல்களில் அதுவும் சமூக நீதி குறித்தவைகளில் கருத்தாய் செயல்பட வேண்டும் என்கிறது (காண் திருஅவைச் சட்டம் எண் 528:1).

பல்கலைக்கழகங்களுக்கான விதிமுறைகள் தொகுப்பில் கத்தோலிக்கப் பல்கலைக்கழகங்களில் பணியாற்றும் பேராசிரியர்கள் சமூக நீதிக் கூறுகளை உணர்வதும் மாணவர்களிடம் ஊட்டுவதும் கடமையாகும் என்கிறார்.



1987-ஆம் ஆண்டு எழுதிய *திருஅவையின் சமூக ஈடுபாடு* (1987) என்ற ஏட்டில் சமூக மற்றும் உலக நாடுகளிடையேயான நீதியின் அடிப்படையில்தான் அமைதி உருவாகும் என்கிறார் (எண் 39). நாடுகளுக்கிடையேயான சார்புத்தன்மையை வெளிக்கொணர்கிறார்.

1991-இல் எழுதிய *நூறாவது ஆண்டு* என்ற ஏட்டில் உழைப்பாளர்களின் சமூக நீதிக்கான போராட்டங்களைப் பற்றி எழுதுகிறார் (எண் 14). இயற்கைப் பாதுகாப்பு குறித்ததில் மனிதர் இயற்கை படைக்கப்பட்டதின் நோக்கத்தை உணர்ந்து அதனைப் பாதுகாப்பதின் வழியாக விசாலமான சமூக உணர்வைப் பெறுகிறோம் என்கிறார் திருத்தந்தை. பாதிக்கப்பட்ட இயற்கையின் சார்பாக நிலைப்பாடு எடுப்பது சமூக நீதியாகும். (*மனித உழைப்பு* 21).

2000-ஆம் ஆண்டில் *மூன்றாம் ஆயிரமாண்டு வரும் வேளையிலே* என்ற ஏட்டின் வழியாக யூபிலி ஆண்டின் நோக்கமாகி 'மீண்டும் தன்னிலைக்கு வருவது' அதாவது ஏற்றத்தாழ்வு நீங்கி சமத்துவ சமூகம் உருவாதல் என்பதை முன்னிறுத்தி சமூக நீதி பற்றி, திருத்தந்தை புனித ஜான் பவுல் கூறுகிறார். "தம்மை நோக்கி மன்றாடும் ஏழைகளையும் திக்கற்ற எளியோரையும் அவர் விடுவிப்பார்; வறியோர்க்கும் ஏழைகளுக்கும் அவர் இரக்கம் காட்டுவார்; ஏழைகளின் உயிரைக் காப்பாற்றுவார் (தி.பா 72:12-13) என்ற திருப்பாடலின் பின்புலத்தில் படைப்பின் பலன் அனைத்து மனித குல முழுமைக்கும் உரிய பொதுச் சொத்து எனக் கருதப்பட வேண்டும். இறைவனே அனைத்தின் உரிமையாளர் மற்ற அனைவரும் பணியாளர்களே என்ற நிலையே சமூக நீதியின் புரிதலாகப் பார்க்கப்படுகிறது (எண் 13).

1999 முதல் 2003 வரையிலும் உரோமையில் நடந்த உலகின் பல்வேறு பகுதிகளின் ஆயர் பேரவைக் கூட்டத்திற்குப் பிறகு வெளியிட்ட ஏடுகளில் சமூக நீதி பற்றிய போதனையை வெளிப்படுத்துகிறார்.

*அமெரிக்காவில் திருஅவை* (1999) என்ற ஏட்டில் திருஅவையின் அறநெறிப் பார்வைக்கு அடிக்கல்லாக இருப்பவை மனித மாண்பு, கூட்டுறவு, தனிபொறுப்புரிமை (subsidiarity). இந்தப் பின்னணியில் உலக வணிகம், சமூக நீதிக் கோட்பாட்டு அடிப்படையில் ஏழைகள் சார்பாக நிலைப்பாடு எடுப்பதும் அவர்கள் பங்கெடுக்க வாய்ப்புக்கள் கொடுப்பதும் அவசியம் என்கிறார். (55)

*ஆசியாவில் திருஅவை* (1999) என்ற ஏட்டில் மக்கள் மத்தியில் நிலவும் அநீத அமைப்புகளை கட்டவிழ்ப்புச் செய்யும் விழிப்புணர்வும், அரசியல் பொருளாதார அமைப்பு முறையில் பங்கெடுப்பதும், படிப்பு குறித்த வாய்ப்புக்கள், நாட்டின் வளங்கள் எல்லோருக்கும் கிடைக்கப் பெறுவதும் சமூக நீதியின் தேவையாகிறது என்கிறார்.

*பெருங்கடல் நாடுகளில் திருஅவை* (2001) என்ற ஏட்டில் சமூக நீதி என்ற வார்த்தையை ஆறு முறை பயன்படுத்துகிறார். தலத்திருஅவை தன் அருகில் இருக்கும் எதார்த்தங்களை கண்டுகொள்ளாமல் இருக்கமுடியாது. சமூக நீதி சார்ந்த காரியங்களையும், ஆன்மீகத் தாகத்தையும் கவனத்துடன் நோக்க வேண்டும் என்கிறார். (13)

*ஐரோப்பாவில் திருஅவை* (2003) என்கிற ஏட்டில் மனித மாண்புதான் சமூக, பொருளாதார, அரசியல் ஆகியவற்றின் இலக்காகும். சமூக நீதிக்கும் மனித மாண்பைக் கட்டி காப்பதே அடிப்படை நோக்கம் என்கிறார். (98)

## திருஅவையின் மறைக்கல்வி ஏடு (1992)

1992-இல் வெளியிடப்பட்ட *திருஅவையின் மறைக்கல்வி ஏடு* சமூக நீதியை இரண்டு தளங்களில் விவாதிக்கிறது: மனித சமூகம் (எண்கள் 1928-48) ஏழாவது கற்பனையாகிய பிறர் பொருளுக்கு ஆசைபடாதிருப்பது (எண்கள் 2426-36).

மனித சமூகம் கீழ்வரும் அடித்தளங்களில் கட்டமைப்புச் செய்யப்பட்டுள்ளது: தனிமனித மாண்பு (1930), சமத்துவம் (1931-33), மனிதரிடையேயான வேறுபாடுகள் (1934-37), ஒருமைப்பாடு (1941-42). சமூகத்தில் நிலவும் அடிமைக் கூறுகளை (1938) எடுத்துச் சொல்லி இவைகளைக் களைவதும் சமூக விடுதலைக்கூறுகளை வெளிக்கொணர்வதும் சமூக நீதியாகப் பார்க்கப்படுகிறது.

ஏழாவது கற்பனையின் அடிப்படையில் எல்லோருக்கும் இருக்கக்கூடிய தொழில் தொடங்கும் உரிமையும், அதனை மேற்பார்வை செய்யும் அதிகாரம் அரசுக்கும் உள்ளது (2429). தொழில் முனைவோர் சமூகத்தின் மீதும், இயற்கையின் மீது ஏற்படுத்தும் பாதிப்புக்கள் குறித்தும் கவனத்தில் கொள்ள வேண்டும். இலாபத்தை மட்டும் கணக்கில்



கொள்ளாமலும் (2432) அநீதமான சமூக ஏற்றத்தாழ்வுகளை வளர்த்தெடுக்காமலும் (2433) மாண்புடைய வாழ்வு வாழத் தேவையான அடிப்படை ஊதியத்தை உறுதி செய்யப்படுவதே சமூக நீதியாகப் பார்க்கிறது. (2434)

திருத்தந்தை 11-ஆம் பியூசு கோட்பாடாகிய தனிமனிதர் சமூகத்தின் ஒட்டு மொத்த நலனை முன்னிலைப்படுத்துவது சமூக நீதி என்று கூறிய கருத்தின் மறுபக்கமாகிய சமூக அமைப்புகள் தனி மனிதரின் உரிமைகளையும் கடமைகளையும் உறுதிசெய்வது சமூக நீதி என்கிறது திருஅவையின் மறைக்கல்வி ஏடு.

## திருத்தந்தை 16-ஆம் பெனடிக்ட் (2005-13)

திருஅவையின் சமூகப் போதனைகளின் தொகுப்பு (2005) என்ற நூலை திருத்தந்தை வெளியிடப் பணித்தார். மனிதரின் மாண்பு, உரிமைகள் உறுதியாக்கப்படும் இடத்தில்தான் சமூக நீதி உறுதிசெய்யப்படுகிறது. (411-414) சமூக நீதி செயல்பாடுகள் பிறரன்பு செயல்பாடுகளினால் திரைக்குப்பின்னால் தள்ளப்படக்கூடாது என்கிறார். உலக வர்த்தகம் பற்றிய பார்வையில் உலக வளங்கள் அனைத்தும் உலக மக்களின் நலனுக்காக என்று பார்ப்பதே சமூக நீதி என்கிறார் (இத்தாலிய தொழிலதிபர்களுக்காற்றிய உரை, 2006).

## திருத்தந்தை பிரான்சிசு

திருத்தந்தை பிரான்சிசு கத்தோலிக்க திருஅவையின் தலைவராகப் பொறுப்பேற்ற நாளிலிருந்து சமூக நீதியை தமது உரைகளிலும், எழுத்துக்களிலும் வெளிப்படுத்துவதை எல்லோரும் அறிவர். *இரக்கத்தின் முகம்* என்ற ஏட்டில் ஊதாரி மகன் திரும்பி வருதலும், தந்தை அவரை ஏற்றுக் கொள்வதும் வெறுமனே இரக்கச் செயல் மட்டுமல்ல மாறாக நீதியின் அடிப்படையிலான செயலாகப் பார்க்கத் தூண்டுகிறது; மகனின் மாண்பையும், மேன்மையையுமே தந்தை முன்வைப்பதாக விளக்குகிறார் திருத்தந்தை (எண் 6). சமூகத்தில் இரக்கச் செயலும் சமூக நீதி அடிப்படையிலே பார்க்கப்பட வேண்டும் என்பதை விளக்குவதாக அமைகின்றது.

*இறைவா உமக்கே புகழ்* என்ற திருத்தந்தையின் இயற்கை பற்றிய சுற்றுமடல் முழுக்க முழுக்க சமூக நீதியை முன்வைப்பதைக் காணலாம். இயற்கை நாம் வாழ கடவுளால் கொடுக்கப்பட்ட பொது இல்லம் என்பதை வலியுறுத்தி மனிதர் மட்டுமல்ல உயிரினம் முழுவதும் ஒரே குடும்பத்தில் இணைக்கப்படுவது சமூக நீதியின் அடிப்படைக் கோட்பாட்டை தெளிவுபடுத்துகிறது. பாதிக்கப்பட்டோரின் உண்மை நிலையை உணர்ந்து, விடுதலைக்கான கூறுகளை முன்வைப்பதும் உழைப்பதும் சமூகநீதியாகும்.

நமது பொது இல்லம் என்ற சிந்தனையை முன்வைத்து இயற்கைக்கு நடக்கும் எந்த விபரீதமும் மனிதருக்கும் மற்ற படைப்புக்களுக்கும் மிகப்பெரிய பாதிப்பை உருவாக்கும் என்று கூறுவது நீதியின் அடிப்படையிலான புரிதலாகும். சமூகத்தில் பாதிப்புக்கள் நடக்கும்போது அது சமூக அநீதியாகத்தான் பார்க்கப்பட வேண்டும். இயற்கைக்கு என்றால் அது மனிதருக்கு அல்ல என்ற சிந்தனையை முறியடித்து சமூக நீதி கருத்துக்களை அந்த ஏடு முழுவதும் இழையோடச் செய்திருக்கிறார் திருத்தந்தை பிரான்சிசு. இயற்கையின் அழுகுரல் ஏழையின் அழுகுரல் போன்றது என்றெண்ணி நீதியின் அடிப்படையில் விடைதேட வேண்டும் என்கிறார் (எண் 49).

இயற்கையின் இருத்தலே எல்லோரின் பொது நன்மைக்கே. எனவே எல்லோரின் நலத்தை முன்வைத்து இயற்கை வளங்களைப் பயன்படுத்துவதும் காப்பாற்றுவதும் சமூகக் கடமையென ஆகின்றது (156-158).

இயற்கையைப் பாதுகாத்து அதனை எதிர் காலச் சந்ததியினருக்குக் கொடுப்பது ஒரு தலைமுறையினர் மற்றொரு தலைமுறையினருடன் ஏற்படுத்திக் கொள்ளும் கூட்டுறவை உறுதி செய்கிறது, அதுவே நீதியாகின்றது (159-162). இயற்கையை மனித குடும்பத்தோடு இணைத்து சமூக நீதிச் சிந்தனையை மையப்படுத்தியது '*இறைவா உமக்கு நன்றி*' என்ற ஏடு ஆகும்.

உண்மையான பொதுநலம் சண்டையற்ற அல்லது வன்முறை இல்லாததால் அல்ல மாறாக மனிதர் அரசியல் பொருளாதார பங்கேற்கும் சக்தியின் வழியாகத்தான் உண்மையான பொதுநலத்தை சுவைக்கிறார்கள். எனவே, நீதியின் அடிப்படையிலான பங்கேற்பே உண்மையான பொதுநலமாகின்றது (*நற்செய்தியின் மகிழ்ச்சி*, எண்கள் 217-221).



திருத்தந்தை பிரான்சிசு சமூக நீதியின் புரிதலை ஆழப்படுத்தி அதன் பின்னணியில் படிப்பினைகளைப் புரிந்து கொள்வதிலும், செயல் வடிவம் பெறச் செய்வதிலும் சமூக நீதிக்கு மிக இன்றியமையாத இடம் தருகிறார்.

**திருஅவையின் சமூகப் போதனைகளில் சமூக நீதி குறித்த பார்வைகள்**

சமூக நீதி என்ற புரிதல் அரிசுடாட்லின் நீதி பற்றிய அடிப்படைப் புரிதலையும், பங்கீட்டு நீதி, பரிமாற்ற நீதியைப் பற்றிய புரிதலையும் உள்ளடக்கியிருக்கக் கூடியது. சமூகத்தில் பாதிக்கப்பட்டோர் சார்பாக நிலைப்பாடு எடுத்து மனிதர் மற்றும் சமூக அங்கத்தினரின் ஒட்டு மொத்த நலனைக் கருத்தில் கொண்டு விடுதலையை முன்வைப்பதுதான் சமூக நீதியாகப் பார்க்கப்படுகிறது. எனவே, திருஅவையின் பல்வேறு ஏடுகளில் தேவைக்கேற்ப பல கருத்துக்கள் சிறப்பிடம் கொடுக்கப்படுவதைப் புரிந்து கொள்ள வேண்டும். கீழ்வரும் கருத்துக்கள் திருஅவையின் ஏடுகளில் பரவிக்கிடப்பதைக் காணலாம்.

1. தனிமனித உயிரும் அதன் மாண்பும்

   கருமுதல் கல்லறை வரை ஒவ்வொரு மனிதரும் மாண்புடையவர். மாண்பு என்பது உள்ளார்ந்த மதிப்பு. இந்த மதிப்பு எவராலும், எந்தப் பொருளாலும் கொடுக்கப்பட்டதில்லை. மாறாக, மனிதராகப் பிறப்பிலே பெற்ற மதிப்புதான் மாண்பு. சமூக நீதியின் அடித்தளமாக இருக்க வேண்டியது இந்த மனித மாண்பு.

2. சமூகத்தின் குடும்பத்தின் பங்களிப்பு

   மனிதர் தனித் தீவு அல்ல. மாறாக சமூகமாக வாழ வேண்டியவர். சமூகத்தின் அடித்தளம் குடும்பம். குடும்பங்களின் கூட்டுச் சமூகம், சமூகத்தில் அனைவரும் தங்களின் திறமைகளைக் கொண்டு பங்களிக்க வாய்ப்புக் கொடுக்கப்பட வேண்டும். அரசியல், பொருளாதார அமைப்புக்களை உருவாக்குவதின் கடமையை உணர வேண்டும்.

3. உரிமைகளும் பொறுப்புகளும்

   சமூகத்தின் உறுப்பினர்களுக்கு அடிப்படையானது அவர்கள் கொண்டிருக்க வேண்டிய உரிமைகள். அடிப்படை உரிமைகள்

உட்பட அவரவர் நிலைக்கேற்ப பல்வேறுபட்ட உரிமைகளைச் சட்டங்கள் கொடுக்கலாம். உரிமைகள் மட்டுமல்ல மாறாக மனிதர் அயலார்க்குச் செய்ய வேண்டிய கடமையைத்தான் பொறுப்புக்கள் என்கிறோம். சமூக நீதி இந்த இரண்டையும் மிகவும் கவனத்தோடு நிலை நிறுத்த வேண்டும்.

4. ஏழைகள், பாதிக்கப்பட்டோர் சார்பான நிலைப்பாடு

மனிதர் குறையுள்ளவர். முழுமையை நிறைவாகக் கொள்ளாதவர். எனவே, சமூகத்தில் சமத்துவம் நிறைவாக இருப்பதில்லை. எனவே, காலத்தின் கட்டாயத்தாலும், விபத்துக்களாலும் ஏற்படும் ஏற்றத்தாழ்வுகளை கவனத்தில் கொண்டு ஏழைகள், பாதிக்கப்பட்டோர் சார்பாக நிலைப்பாடு எடுப்பது திருஅவையின் சமூக நீதிப் புரிதலில் மிகவும் குறிப்பிடத்தக்கதாகும்.

5. மனித உழைப்பின் மாண்பும் உழைப்பாளரின் உரிமைகளும்

உழைப்பு உன்னதமானது, மனிதரை மாண்புள்ளவராக்குவது, உழைப்பினால் உயர்வு தாழ்வு இல்லை, உழைப்பாளர் யாருக்கும் அடிமை இல்லை, உழைப்பாளர்களுக்கு உரிமை உண்டு அதை யாரும் மறுக்க முடியாது என்று வலிமையாக அழுத்தம் கொடுக்கின்றது திருஅவையின் போதனைகள். குடும்பத்தை வழி நடத்தக்கூடியப் போதுமான நியாயக் கூலி உழைப்பாளரின் உரிமை என்கிறது திருஅவையின் சமூகப் போதனை.

6. கூட்டொருமைப்பாடு

மனிதர் நாடு, மொழி, பண்பாடு என வேறுபட்டிருப்பது எதார்த்தம். ஆனால், இவை அனைத்தையும் கடந்து மனிதர் தங்களது ஒற்றுமை உணர்வையும் பகிர்ந்து கொள்ளும் மனதையும் வளர்த்தெடுப்பது அவசியம் என்கின்றது திருஅவை.

7. கடவுளின் படைப்பு குறித்த பொறுப்புணர்வு

மனிதர் படைப்பின் ஓர் அங்கமே. மனிதரே எல்லாம் அல்ல. மனிதர் ஆண்டு அனுபவிக்க அல்ல உலகம். உலகத்தின் பொருட்களை தேவைக்கேற்ப பயன்படுத்தி அதனைப் பாதுகாப்பது கடமையாகின்றது.



இவை அனைத்தும் சமூக நீதியின் புரிதலுக்கு உதவிபுரியக் கூடியவை. இந்தக் கருத்துக்களைப் பரப்புவது மட்டுமல்ல மாறாக வாழ்வோடு தொடர்புபடுத்த வேண்டும். இவைகளை வாழ்வின் இலட்சியங்களாக்க வேண்டும். அப்பொழுதுதான் சமூக நீதியிலான சமூகத்தைக் கட்டி எழுப்ப முடியும். அதற்கான தேவைகள்:

1. சமூக எதார்த்தங்களை அடையாளம் கண்டு ஆய்வுக்கு உட்படுத்துவது.
2. நீதியினை அளவு கோலாகக் கொண்டு சமூக நோய்களுக்கு விடை கொடுக்க முடிவெடுப்பது.
3. அடிமைக் கூறுகளுக்கு மாறாக மாற்று மதிப்பீடுகளை முன்வைப்பது.
4. திருஅவையின் சமூக நீதி பற்றியப் போதனைகளைப் பரவலாக்கம் செய்வது.

இத்தகையச் சிந்தனைகள் ஆரோக்கியமான சமூகத்தைச் சமூக நீதியின் அடிப்படையில் கட்டி எழுப்ப உதவும்.

# 5. திருஅவையின் சமூகப் போதனைகளில் மனித உழைப்பும் தொழிலாளர் நலனும்

*பேராசிரியர் முனைவர். ம . விக்டர் லூயிஸ் அந்துவான்*
*'லிபா' - சென்னை 34*

## முன்னுரை

இந்தியாவில் இன்று 15 முதுல் 65 வயதுக்கு இடைப்பட்ட தொழிலாளர்கள் 49 கோடிக்குமேல் இருக்கின்றனர். இவர்களில் 92 சதவிகிதம் பேருக்கு நிரந்தர வேலையில்லை. ஏழு முதல் எட்டு சதவிகிதத்தினரே நிரந்தர வேலையில் உள்ளனர். மற்றவர்களுக்கு மறுநாள் என்பது கேள்விக்குறியாகவே இருந்து வருகிறது. இவர்களுள் 100 முதல் 200 நாள்கள் மட்டுமே ஓராண்டில் நிரந்தரமற்ற வேலைகளுக்குச் சென்றுவருவோர் கணிசமான சதவிகிதத்தினர் உள்ளனர். நிரந்தரவேலையில் இருப்பவர்களுக்கும் இன்றைய சூழ்நிலையில் ஓய்வூதியம் இனிஇல்லை; பணிப்பாதுகாப்பும் மற்றசாராருக்கு இல்லை; மருத்துவப் பாதுகாப்பு இல்லை; சங்க அமைப்பு இல்லை; அல்லது இருந்தாலும் சங்கம் வலுவாக இல்லை; ஒருங்கிணைக்கப்படாத தொழிலாளர் என்னும் பிரிவினர் நிலை, படுமோசமாகவே உள்ளது. இன்று பள்ளி செல்லும் சிறார் எண்ணிக்கை அதிகரித்து 95 சதவீகிதமாக இருப்பதால் சிறார் தொழிலாளர் தடுப்புச் சட்டம் காரணமாகக் கடந்த 20 ஆண்டுகளில் அவர்களுள் சிறார்த்தொழிலாளராகத் தள்ளப்படும் நிலை குறைந்தது; ஆனால் உயர்நிலைப்பள்ளிப் படிப்பு நோக்கிய நிலையில் பள்ளியைவிட்டு இடையில் நின்றுவிடுவோர் எண்ணிக்கை அதிகரித்துவருகிறது.

இன்று கல்லூரிகள் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரிகளில் இந்தியாவில் 15 சதவிகிதம் பேர்தான் மேற்படிப்புக்குச் செல்கிறார்கள். 85 சதவிகிதம் இருபால் இளையோர் 18-25 வயதினர் கல்லூரிக்கு வெளியே இருப்பதால் மனிதவள இழப்பு ஏராளம். வளர்ந்த நாடுகளில் 85 சதவிகிதம் இருபால் இளையோர் உயர்கல்வி பயிலுகின்றனர். சான்றாக, பின்லாந்தில் 88 சதவிகிதம் இளையோர் உயர்கல்லூரிக் கல்வி பயிலுகின்றனர் இந்தியாவில் மனிதவளமும், தேசத்தை முன்னேற்றுவதற்கான உழைக்கும்



திறனும் பெருமளவில் பாழ்படுவது கவலைதருகிறது. இச்சூழலில் தொழிலாளர்களின் நிலைமை பற்றியும், உழைப்பாளிகளின் மேன்மை மற்றும் உரிமை பற்றியும், திருஅவையின் சமூகப் போதனைகள் எவ்வாறு கூறுகின்றன என்பது பற்றியும் இக்கட்டுரையில் காண்போம்.

## தொழில் புரட்சியும் திருஅவையின் சமூகச் சிந்தனைகளின் தோற்றமும்

18-ஆம் நூற்றாண்டின் முடிவில் பொருளாதாரத் தாராளவாதம் கடைப்பிடிக்கப்பட்டதுடன், மரபுக் கட்டமைப்புகளிலும் பெருமளவில் அடிப்படை மாற்றங்கள் கொண்டுவரப்பட்டன. நகரங்களில் வாழ்ந்த உழைப்பாளிகளான ஆண்கள், பெண்கள், மற்றும் குழந்தைகள் மீது மனிதத்தன்மையற்ற செயல்கள் கட்டவிழ்க்கப்பட்டன. ஒப்பந்தமின்றி பணி அமர்த்தப்பட்டனர்; 14லிருந்து 18 மணி நேரம் வரை வேலைசெய்யக் கட்டாயப்படுத்தப்பட்டனர். இவ்வாறு வேலைசெய்பவர்களுக்கு மிகக் குறைந்த ஊதியம் கொடுக்கப்பட்டது. இவர்களுக்கென்று ஓய்வுநேரமோ, தூய்மையான கழிவறைகளோ, சரியான உணவோ கொடுக்கப்படவில்லை. இச்சூழலில் தொழிலாளர்களுக்கு எதிராகக் கட்டவிழ்க்கப்பட்ட அநீதச் செயல்களுக்கு திருஅவை பதில்தரவேண்டிய கட்டாயம் ஏற்பட்டது[1] எனவே, தொழிலாளர் நிலைமையைக் குறித்துத் திருஅவை சிந்தித்தது. இச்சூழல்களைச் சந்திக்கவும், பொருளாதாரத்திற்கு புதிய அறநெறிகளை வகுக்கவும் திருஅவை முயன்றது. அதன் அடிப்படையில் ஜெர்மனியின் ஆதம் மியூலர் (1779-1829), ஆயர் வில்ஹெல்ம் இம்மானுவேல் ஃபோன் கெட்டிலர் (1811-1877), ஹைன்ரிக் பெஷ்ச் (1854-1926), பிரான்ஸ் ஹிட்ஸ் (1851-1921) மற்றும் அருள்பணியாளர் அடோல்ஃப் ஹோல்பிங் என்பவர்கள் திருஅவையில் சமூகச் சிந்தனையை வளர்க்க உதவியவர்கள். இவர்களுடைய சிந்தனை விரைவான வளர்ச்சியைப் பெற்று 1870களில் ஐரோப்பா முழுவதும் இவை பரவின. கெட்லரது கத்தோலிக்கச் சமூகச் சிந்தனைகளின் பங்களிப்பு முக்கியத்துவம் வாய்ந்தது. ஏனென்றால் இவர் சமூகப்பகுப்பாய்வுடன் தொழிற்சாலைகளையும் அங்குப் பணிபுரியும் தொழிலாளர்களையும் கண்ணோக்கி அதனடிப்படையில் தொழிலாளர்களுக்கான அறநெறியை வகுத்ததால், இவரின் சமூகச் சிந்தனைகள் ஒருங்கிணைந்த அரசியல்

செயல்பாட்டுக்கு இயக்க ஆற்றல் மிக்க அழைப்பு விடுத்தது. இதனால்தான் திருத்தந்தை 13-ஆம் லியோ, ''நம் மகத்தான முன்னோடியான அவரிடமிருந்து நான் மிகுதியாகக் கற்றுக்கொண்டேன்'' என்று கருத்துத் தெரிவித்துள்ளார்.[2] இவ்வாறு தலத் திருஅவைகளில் வேரூன்றிய சமூகப் போதனைக் கருத்துக்கள் திருஅவையின் அதிகாரப்பூர்வ ஆசிரியமாக, ஏடாக, சுற்றுமடலாக, திருத்தூது ஊக்கவுரையாக வெளிவந்தன.

### 1. தொழிலாளர் நிலைமை

திருத்தந்தை 13-ஆம் லியோவின் சுற்றுமடலான 'தொழிலாளர் நிலைமை' (1891) என்பது ஒரு வரலாற்று நிகழ்வாகும். வரலாற்றில் முதன் முறையாக ஒரு திருத்தந்தையின் ஆவணம் சமூகப்பிரச்சினைகளாக அவரது காலத்தில் நிகழ்ந்தவை பற்றிய ஒட்டுமொத்த நோக்கினையும் அதற்கான தீர்வுகளையும் உருவாக்கும் முயற்சிகளையும் தொழிலாளிகளது குறிப்பிட்ட வேலைச் சூழமைவுகளை மனதில்கொண்ட இந்தப் போதனை ஏடு உருவாக்கப்பட்டது. இச்சுற்றுமடல் ஒரு புதிய அணுகுமுறையே என்றே கூறவேண்டும். ஏனென்றால் ஓர் உரையாடல் மூலமாக, புதிய தொழிற்சாலை உலகத்துடன் திருஅவை மக்களை நோக்கிய நேரடியான வேண்டுகோள்களை இச்சுற்றுமடல் விடுத்துள்ளது. இந்தச் சுற்றுமடலில் திருத்தந்தை 13-ஆம் லியோ, வாழ்வில் வக்கற்றவர்களாக வாழ்ந்த எண்ணற்ற ஆண்கள், பெண்கள், குழந்தைகள் ஆகியோரது வேதனை குறித்து உலகின் கவனத்தை ஈர்த்தார். திருஅவை, அரசு, தன்னுரிமை இயக்கங்கள் ஆகியவற்றின் ஒருங்கிணைந்த தீர்வுக் குறுக்கீட்டினைப் பரிந்துரையாக அவர் முன்வைத்தார். தொழிற்புரட்சியின் விளைவாக அனுபவித்த வேதனைகளிலும் துயரங்களிலும் மூழ்கியுள்ளவர்கள் எதிர்கொண்டுள்ள அநீதிகளது அழுத்தங்களிலுள்ள பெருவாரியான தொழிலாள வகுப்பினர்களுக்குப் பொருத்தமான தீர்வுகளை இவர் முன்வைத்தார். திருத்தந்தை 13-ஆம் லியோ தாராளவாத முதலாளித்துவத்தைத் தீவிரமாக விமர்சனம் செய்ததுடன், அதன் முறைகேடுகளைக் கண்டனம் செய்தார். இந்தச் சிந்தனை திருஅவையின் உள்ளேயும் வெளிப்புறத்திலும் பெரும் மாற்றங்களைக் கொண்டுவந்தது.



#### அ. சுமையேற்றப்பட்ட தொழிலாளிகள்

'தொழிலாளர் நிலைமை' என்ற ஏடு விரிந்துள்ள தொழிற்சாலை முயற்சிகள், வியத்தகு அறிவியல் கண்டுபிடிப்புகள், மாற்றங்கண்டுள்ள முதலாளி – தொழிலாளி உறவு முறைகள், சில தனியாரிடத்திலே குவிந்துள்ள அதிகபட்ச செல்வம்'' ஆகியவை தொழிலாளிகளிடத்தில் அதிகமான சுமையை ஏற்றிவைத்துள்ளது என்று சுட்டிக்காட்டுகிறது. அதாவது, ''சிறுபான்மையினரது செல்வம் கொழிக்கும் கரங்களில் வாணிப நெறிமுறைகளும், உழைப்பினை வாங்கிப் பயன்படுத்தும் வகையும் தரப்பட்டிருப்பதால், ஏழைத் தொழிலாளர்கள் மீது சுமையை ஏற்றியிருக்கின்றார்கள்'' (எண் 32) என்று திருத்தந்தை லியோ தெரிவித்துள்ளார்.

#### ஆ. இலாபங்களிலிருந்து ஒதுக்கி வைக்கும் நிலை

'தொழிலாளர் நிலைமை' என்ற சுற்றுமடலைத் தொடர்ந்து 'சமூக ஒழுங்கமைவு' என்ற சுற்றுமடலை திருத்தந்தை 11-ஆம் பியூசு எழுதினார். இவர் தொழிலாளியின் கரங்கள் கருவியைக் கொண்டோ அல்லது கருவியைப் பயன்படுத்தாமலோ மனிதர்களுக்கான செல்வங்களையும், அளவற்ற உடைமைகளையும் உருவாக்குகின்றனர் (எண் 53) எனக் குறிப்பிடுகின்றார். ஆனால் சமூக நீதியின்படி தொழிலாளிகளைத் தொழில் தரும் முதலாளிகள் தொழில் முனைதலிருந்து பெறப்படும் இலாபங்களிலிருந்து ஒதுக்கி வைக்கின்றனர். இந்நிலை மாறவேண்டும் என்று குறிப்பிடுகின்றார். இப்போக்கினைத் தடைசெய்ய வேண்டும் (எண் 57). மேலும், தொழிலாளர்கள், தொழில், நிர்வாகம், மற்றும் இலாபம் இவைகளில் முதலாளிகளோடு இணைந்து கூட்டுப்பொறுப்பு மேற்கொள்ள ஆவணசெய்யவேண்டும் என்று இச்சுற்றுமடல் கருத்துத் தெரிவித்துள்ளது (எண்கள் 64, 65, 81-97). இந்தச் சுற்றுமடல் தொழிற்சாலைகளில் வேலைசெய்யும் தொழிலாளர்கள் மட்டுமன்றி நிலங்களில் வேலைசெய்பவர்களையும், நிலமற்ற விவசாயிகள் பற்றியும் கவனம் செலுத்தியுள்ளது. இதையே திருத்தந்தை 23-ஆம் ஜான், கிராமத்தில் வாழும் தொழிலாளர்களின் நலன்களும் பாதுகாக்கப்பட வேண்டும் என்று 'அன்னையும் ஆசிரியையும்' என்ற தனது சுற்றுமடலில் தெரிவித்துள்ளார் (144-146).[3]

**இ. தொழிலாளர் நிலைமை பற்றி ‘இன்றைய உலகில் திருஅவை’ என்ற ஏடு**

இரண்டாம் வத்திக்கான் சங்கத்தின் இந்த ஏடு, ‘வேலை’ மற்றும் ‘தொழிலாளர்களின் நிலைமை’ குறித்துப் பேசியுள்ளது. அதாவது, தொழில்கள் வழியாக மனிதர்கள் பலவற்றை அறிந்துள்ளனர் என்று கருத்துத் தெரிவிக்கும் இந்த ஏடு, மனிதர்கள் இயற்கைப் பொருள்கள் மீது தங்கள் முத்திரையைப் பதித்துள்ளனர் என்றும் இயற்கையைத் தங்களது திறன்களையும், செயலாற்றல்களையும் நிறைவுசெய்ய ஏதுவாக வளர்த்துள்ளனர் என்றும் குறிப்பிடுகின்றது. மேலும் தொழில்கள் மூலம் ஒருவரோடு ஒருவர் ஒன்றித்தனர்; மக்களுக்குப் பணிசெய்தனர்; பிறரன்பை செயலில் காட்டினர்; படைப்பை நிறைவுசெய்வதில் கடவுளின் பங்குதாரராக மாறினர் என்றும் தெரிவித்துள்ளது.

‘இன்றைய உலகில் திருஅவை’ என்ற ஏடு மனிதருக்குப் பணிபுரிவதே தொழில் வளர்ச்சியின் நோக்கமாக இருக்கவேண்டும் என்று கூறுகிறது. எத்தகைய பொருளாதார வளர்ச்சியும் மனிதருக்குக் கட்டுப்பட்டதாக இருக்கவேண்டும் (எண்கள் 64-65) என்று எடுத்துக்கூறுகிறது. தொழில் புரட்சியின் போது தொழிலாளிகளை வேலைசெய்யும் வெறும் இயந்திரங்களாகப் பார்க்கும் பார்வை இருந்தது. தொழிலாளர்கள் நிறுவனங்களின் பல பொறுப்புகளிலிருந்து ஒதுக்கிவைக்கப்பட்டனர். எனவேதான், உழைப்பாளிகள், வேலை தருபவர்கள், வேலையை நிர்வகிப்போர், நிறுவன உரிமையாளர்கள் அனைவரும் தொழில் நிர்வாகத்திற்கு ஊறு விளைவிக்காமல் எல்லோரையும் நிர்வாகத்திற்குத் தேவையான பங்களிப்பைத்தர ஊக்கவிக்க வேண்டும் (எண் 68) என்று ‘இன்றைய உலகில் திருஅவை’ எடுத்துரைக்கிறது.

## 2. மனித உழைப்பு

### அ. உழைப்பு என்றால் என்ன?

ஒருவர் ஒன்றை உருவாக்க, ஒன்றை அடைய அல்லது தான் விரும்பியதை உற்பத்தி செய்ய எடுக்கும் கடும் முயற்சியே உழைப்பு எனப்படும். உழைப்பு என்பது ஒருவர் செய்யும் வேலையைவிட



மேன்மையானது. ஏனெனில் ஒருவரின் அடிப்படைத் தேவைகளை உழைப்பு பெற்றுத் தந்தாலும் வேலை செய்வது மட்டும் உழைப்பில்லை.

உழைப்பு என்பது ஒரு நபரின் செயல்பாடு. இதன் வழியாக ஒருவர் மற்றவரிடம் புதிய உறவுகளை உருவாக்குகிறார். தன்னுடைய திறமைகளை பயன்படுத்துகிறார். தன்னுடைய தாண்மையை வளர்த்து அதில் முன்னேற்றமடைகிறார்.

### ஆ. விவிலியமும் உழைப்பும்

படைப்பின் தொடக்கத்தில் மனிதர்கள் பூமியில் பாடுபட்டுழைக்க அழைக்கப்படுகின்றனர் (தொநூ 2:5-6). பண்படுத்தி நிலத்தை அக்கறையோடு பாதுகாக்க அழைப்புக் கொடுக்கப்படுகிறது (தொநூ 2:15). மேலும் தொடக்கப் பெற்றோர்களிடம் படைப்பு முழுவதும் ஒப்படைக்கப்பட்டுள்ளது (தொநூ 1:28). ஆதாம் ஏவாளிடம் கடவுள் படைப்பை ‘ஆண்டு நடத்துங்கள்’ என்ற கட்டளையைக் கொடுக்கின்றார். இதற்குப் படைப்பைச் சுரண்டாமல் அதன்மேல் அக்கறை கொள்ளுதலும் நிலத்தைத் தேவைக்கேற்ப பண்படுத்துதலும் பயன்படுத்துதலுமாகும். மேலும் மனிதன் கடவுளின் சாயலாகப் படைக்கப்பட்டுள்ளதால், கடவுள் எவ்வாறு படைப்பைப் பாதுகாக்கின்றாரோ அவருடைய சாயலாக உள்ள மானிடரும் படைப்பின் மேல் அக்கறைகொள்ளப் படைத்தவரைப் பின்பற்றக் கடமைப்பட்டுள்ளனர் (யோவா 5:17; விப 20:9-11). இவ்வாறு படைப்பைப் பாதுகாக்க, பயன்படுத்த, மற்றும் பண்படுத்தவே உழைப்பிற்கான கட்டளையை மனிதர்கள் பெறுகின்றனர் (தொநூ 1:28; 3:17-19).

இருந்தாலும் ஆதிப்பெற்றோரின் பாவம் உழைப்பைப் பாதித்துள்ளது. அதாவது, மனிதர்கள் படைப்பின்மீது படைத்தவரின் விருப்பமின்றி வரம்பற்ற அதிகாரம் கொள்ள ஆசைப்பட்டதால் கடவுளோடு கொண்ட உறவிலும், இணக்கத்திலும் பிளவு ஏற்பட்டது (தொநூ 3:6-8). இந்த நிகழ்வுக்குப் பிறகு நிலம் மிகவும் மோசமானது. பலன் தராமல் கரடுமுரடாக மாறியது (தொநூ 4:12). உழைப்பு மிகவும் கடினமாக, துன்பம் மிகுந்ததாக மாறியது (தொநூ 3:17-19). பாவமே உழைப்பை மிகவும் கடினமாக மாற்றியது. காலப்போக்கில் முதலாளிகள் தொழிலாளிகளை வஞ்சித்தனர். உழைப்பாளர்கள் ஊதியம் பெறவில்லை (எரே 22:13-17). வரிமூலம் ஏழை விவசாயிகள்

சுரண்டப்பட்டனர் (ஆமோசு 5:11). உழைப்பாளிகள் சில சமயங்களில் அடிமைகளாக நடத்தப்பட்டனர் (சீஞா 33:25-28). இவையெல்லாம் விவிலிய மரபில் உழைப்பாளிகளுக்கு எத்தகைய மதிப்புக் கொடுக்கப்பட்டுள்ளது என்பதை விளக்குகின்றன. ஆனால் இறைவன் தொழிலாளிகளின் பாதுகாவலாக இருப்பதால், தொழிலாளர்களை மேற்கூறியவற்றிலிருந்து பாதுகாக்கச் சட்டங்களைத் தந்துள்ளார். எடுத்துக்காட்டாக, ஏமாற்றுகளிலிருந்து உடனடியாகக் கூலி கொடுக்கச் சட்டம் (லேவி 19:13; இச 24:14-15); பேராசையிலிருந்து வரி வாங்காமல்இருக்க (விப 20:10-11); கூடுதலான வேலையிலிருந்து ஓய்வு பெறச் சட்டம் (விப 20:20-11) மற்றும் துன்புறுத்தி அடிமைப்படுத்தலின்றி சுதந்திரம் பெறச் சட்டம் (விப 21:20-27). இவ்வாறு கொடுக்கப்பட்ட சட்டங்கள் உழைப்பின் மாண்பையும் உழைப்பாளிகளின் மாண்பையும் போற்றியுள்ளன.

**இ. இயேசுவின் உழைப்பு**

இயேசுவின் வாழ்க்கையில் அதிக காலம் அவர் உழைப்பாளியாகவே இருந்துள்ளார். இந்த இயேசுவின் உழைப்பு மனித உழைப்பிற்கு மதிப்பையும் மகத்துவத்தையும் தேடித்தந்தது (மத் 13:55; மாற் 6:3). ‘மனித உழைப்பு’ என்ற ஏட்டில் (எண் 6), அவரின் பணி என்பது தொடர்ந்து மக்களுக்காக உழைப்பதுதான் என்று குறிப்பிடுகின்றது. அதாவது, ‘‘தந்தை தொடர்ந்து பணியாற்றுகிறார். நானும் பணியாற்றுகிறேன்’’ (யோவா 5:17) என்பதாகும். இயேசு உழைப்பு என்பது மனிதவாழ்வின் இன்றியமையாப் பண்பு என்று கண்டதாலும் மனித வாழவோடு பின்னிப் பிணைந்தது உழைப்பு என்று அறிந்ததாலும் மனித உழைப்பு பற்றிய உவமைகள் வழியாக நற்செய்தியையும் அறிவிக்கின்றார். உழைப்பு என்பது மனித வாழ்வின் மிக முக்கியமாக இருந்தாலும் அதுவே முதன்மையானதல்ல. மாறாக ஆன்மீக வாழ்விற்கும், ஆன்மீக வாழ்வு மேம்படுவதற்கும் உழைப்பு பயன்படவேண்டும் (மாற் 6:33; 16:26).

**ஈ. தொடக்கத் திருஅவையும் உழைப்பும்**

புனித பவுல் ‘‘யாரையும் சார்ந்திருக்க வேண்டாம்’’ (1தெச 4:12) என்றும் ஒருவர் மற்றவரின் உழைப்பில் வாழவேண்டாம் (2தெச 3:6-12)



என்றும் குறிப்பிடுகின்றார். ஏனெனில் அவரே கூடாரம் அடிக்கும் தொழில் செய்து அதன்மூலம் பெற்ற வருவாயைக் கொண்டு மற்றவருக்குப் பாரமாக இல்லாமல் வாழ்ந்துள்ளார் (1தெச 2:9; 2தெச 3:17; 1கொரி 9:3-15). தொடக்கத் திருஅவையில், திருஅவைத் தந்தையர்கள் உழைப்பு என்பது ஒருவரைச் சுதந்திரம் பெற்றவர்களாக மாற்றுகிறது என்று கூறியுள்ளார்கள். மனித உழைப்பு படைத்தவரோடு உலகை மேலாண்மை செய்கிறது. ஒருவர் உழைப்பு வழியாக தங்களுக்கும் மற்றவருக்கும் தேவையான நன்மைத்தனத்தைப் பெறமுடிகிறது என்ற கருத்தைத் தொடக்க திருஅவை கொண்டிருந்தது. சோம்பேறித்தனம் மனித உழைப்பைக் கேலிக்குள்ளாக்குகிறது; ஆனால் மனித உழைப்பு உடலுக்கும் ஆன்மாவுக்கும் நன்மையைப் பெற்றுத்தருகிறது என்று ஜான் கிறிஸ்தோஸ்தம் கூறியுள்ளார். பேசில் என்பவர் கிறித்தவர்கள் தங்களுக்காக மட்டும் உழைக்காமல் ஏழைகள் அனைவரும் எல்லாம் பெற்று வாழ உழைக்க அழைப்பு விடுக்கிறது என்று குறிப்பிடுகிறது. இரேனியுசு என்பவர் மனித உழைப்பு உலகை அழகாக மாற்றுகிறது என்று கருத்துத் தெரிவித்துள்ளார். இவ்வாறு திருஅவைத் தந்தையர்கள் உழைப்பின் மேன்மை பற்றிப் பேசியுள்ளனர்.

**உ. உழைப்பின் மாண்பு**

மனித உழைப்பு (மஉ) என்ற ஏடு உழைப்பின் மாண்பை மூன்று விதங்களில் அணுகுகிறது.

1. தன்னிலை சார்ந்தது (subjective)
2. பொருண்மை சார்ந்தது (objective)
3. இயல்பானது (intrinsic)

***தன்னிலை சார்ந்தது (மஉ 6)***

மனித உழைப்பு மனிதத்தின் அடிப்படையான வெளிப்பாடாகும். மனிதர்களின் செயல்பாடாக மனித உழைப்பு விளங்குவதால் மனிதர்கள் பல்வேறுபட்ட செயல்பாடுகளை இதன் மூலம் வெளிப்படுத்த முடியும். மனிதர்கள் எதை உருவாக்குகிறார்களோ அல்லது எதை கையாளுகின்றார்களோ அதன் அடிப்படையில் உழைப்பு அமையாமல்,

மனிதர்களே மனித உழைப்பிற்கு அளவீடாக இருக்கின்றார்கள். மனிதர்களை வெறும் உற்பத்தி இயந்திரங்களாகப் பார்ப்பதோ அல்லது உற்பத்திப் பொருட்களாகப் பார்ப்பதோ மனித உழைப்பின் இயல்புக்கே எதிரானது. உழைப்பு என்பது மனிதரோடு நேரடியாகத் தொடர்பு கொண்டுள்ளதால் அதற்கென்று அறநெறி மதிப்பீடும் உண்டு. ஏனெனில் மனிதர்கள் உழைப்பில் நேரடியாக ஈடுபடுவதால் அதனுடைய தரத்தையும் அதனுடைய நுகர்வு மதிப்பீட்டையும் தீர்மானிக்கின்றனர். ஒருபோதும் தொழில் நுட்பங்கள் மனிதமாண்பைவிட மேலாகக் கருதப்படக்கூடாது.

***பொருண்மை சார்ந்தது***

மனித உழைப்பிற்குத் தேவையான ஒட்டுமொத்த செயல்பாடுகள், உற்பத்திக்கான மூலங்கள், தொழில் கருவிகள், தொழில்நுட்பங்களின் கூட்டுத் தொகுதியே பருப்பொருள் அல்லது பொருண்மை சார்ந்த மனித உழைப்பு என்று கூறுகிறோம். மனிதர்களின் செயல்பாடுகள் என்பது பயன்படுத்தப்படும் தொழில்நுட்பங்கள், பண்பாடு, அரசியல், சமூக நிலைகளின் அடிப்படையில் மாறுபடும்.

***இயல்பு சார்ந்தது***

உழைப்பு மனித இயல்போடு பின்னிப் பிணைந்துள்ளது. மற்றவர்களோடு மற்றவர்களுக்காக உழைப்பதுதான் மனித உழைப்பு; அல்லது மற்றவர்களுக்காக ஏதாவது ஒன்றை ஆக்கப்பூர்வமாகச் செய்வது மனித உழைப்பாகும்.

### ஊ. மனித உழைப்பிற்கும் மூலதனத்திற்கும் உள்ள தொடர்பு

மனித உழைப்பு பற்றிய தன்னிலை சார்ந்த விளக்கத்தின்படி மனித உழைப்பு என்பது உற்பத்திப் பொருள்களைவிட, உற்பத்திக்கான பணபரிவர்த்தனையைவிட உயர்ந்தது. ஏனெனில் மனிதர்கள் தங்கள் அறிவை மூலதனமாக்கிப் படைப்பாற்றலோடு உற்பத்தியில் ஈடுபடுகின்றனர். எனவே உழைப்பு என்பது உற்பத்திக்குப் பயன்படும் பிற காரணிகளைவிட அதிகமதிப்பு வாய்ந்ததாக இருக்கிறது. இருப்பினும் உழைப்பிற்கும், உற்பத்தி மூலதனத்திற்கும் நெருங்கிய உறவு என்பது உற்பத்தியில் விளங்குவதை நாம் காண்கின்றோம். அதாவது "மூலதனமின்றி உழைப்பு இல்லை;



உழைப்பின்றி மூலதனமில்லை." இரண்டிற்கும் உள்ள நெருங்கிய உறவு ஒருபோதும் உழைப்பில் ஈடுபட்டுள்ள உழைப்பாளிகளை உற்பத்திப் பொருட்களாகப் பார்க்காது.

### எ. தொழிலாளர் உரிமை பற்றிய திருஅவையின் சமூகப் போதனை

கீழ்க்காணும் சுற்றுமடல்கள் தொழிலாளர்களின் நிலைமை, உழைப்பிற்கான உரிமைகள் பற்றிப் பேசுகின்றன.

1. திருத்தந்தை 13-ஆம் லியோ - தொழிலாளர் நிலைமை (*Rerum Novarum* - On the Condition of human Labour, 1891)

2. திருத்தந்தை 11-ஆம் பியூசு - சமூக ஒழுங்கமைப்பு (*Quadragesimo Anno* - The Reconstruction of the Social Order, 1931)

3. திருத்தந்தை 23-ஆம் ஜான் - அன்னையும் ஆசிரியையும் (*Mater et Magistra* - Mother and Teacher (Christianity and Social Progress), 1961).

4. திருத்தந்தை 23-ஆம் ஜான் - அவனியில் அமைதி (*Pecem in Terris* - Peace of Earth, 1963)

5. இரண்டாம் வத்திக்கான் சங்கம் - இன்றைய உலகில் திருஅவை (*Gaudium et Spes* - The Church in the Modern World, 1965)

6. திருத்தந்தை 2-ஆம் ஜான் பால் - மனித உழைப்பு (*Laborem Exercens,* On Human Work, 1981)/

7. திருத்தந்தை 2-ஆம் ஜான் பால் - நூறாமாண்டு (*Centesimus Annus* - One Hundred Years, 1991)

8. திருத்தந்தை 16-ஆம் பெனடிக்ட் - உண்மையில் அன்பு (*Caritas in Veritatae,* Charity in Truth, 2009)

### 1. உழைப்பாளிகளின் மேன்மையைப் பறைசாற்றுவது

மேற்கூறிய சுற்றுமடல்கள் தொழிலாளர்களின் பெருமையை உலகிற்கு அறிவிக்கின்றன. அதாவது, 'தொழிலாளர்களின் நிலைமை' (எண் 1) என்ற மடல் மனித உழைப்பின் பெருமையினை எடுத்துரைத்துப் பொருளாதார உலகின் மையம் மனிதரே என்பதை விளக்குகிறது. 'சமூக

ஒழுங்கமைப்பு' (எண் 53) என்ற மடல், தொழிலாளியின் கரங்கள், கருவியைக் கொண்டோ அல்லது கருவியைப் பயன்படுத்தியோ மனிதர்களுக்கான செல்வங்களையும், அளவற்ற உடைமைகளையும் உருவாக்குகின்றன என்றும் உழைப்பாளர்கள் அல்லது உழைப்புக் கொடுப்போரின் கூட்டுமுயற்சியின்றி ஒரு நாட்டினை ஏழ்மை நிலையிலிருந்து முன்னேற்ற முடியாது என்று தொழிலாளர்களின் பெருமையைப் பறைசாற்றுகிறது (எண் 53). திருத்தந்தை 2-ஆம் ஜான் பால் சமூகப் பிரச்சனைகளை மனித நலம் கொண்டு நோக்கும் பொழுது, தங்களின் உழைப்பு வழியாக, உழைப்பாளிகள் எவ்வாறு சமூகப் பிரச்சனைக்கு உதவுகிறார்கள் என்று தனது மனித உழைப்பு என்ற மடலில் (எண் 3) தெரிவிக்கின்றார். மேலும், தனது மற்றொரு மடலில் உழைப்பிற்கும் மூலதனத்திற்கும் முதன்மைப்படுத்த வேண்டியவர் மனிதர்களே என்று கூறுகிறார். இவ்வாறு செய்வதின் மூலம் உற்பத்தியைப் பெருக்குவது மட்டுமன்றி உழைப்பினைப் பொருள்ள விதத்தில் உருவாக்க முடியும் (நூறாமாண்டு, 43) என்று தொழிலாளர்களின் சிறப்பைத் திருத்தந்தை எடுத்தியம்பியுள்ளார்.

## 2. தொழிலாளர் நிலையும் கண்டனக்குரலும்

திருத்தந்தையரின் சுற்றுமடல்கள், உழைப்பாளிகள் உரிமையற்ற, சிந்தனையற்ற கருவிகளாக நடத்தப்படும் நிலையினைத் தொழிலாளர்கள் இயல்பாகவே வெறுக்கின்றனர் என்று தொழிலாளர்களின் நிலையை எடுத்துக் கூறியுள்ளன. திருத்தந்தை 13-ஆம் லியோ, "விரிந்துள்ள தொழிற்சாலை முயற்சிகள், வியத்தகு அறிவியல் கண்டுபிடிப்புகள், மாற்றங்கண்டுள்ள முதலாளி - தொழிலாளி உறவு முறைகள், சில தனியாரிடத்லே குவிந்துள்ள அதிகபட்ச செல்வம், மக்களிடம் காணும் ஏழ்மை, தொழிலாளர்களின் மாண்பைச் சிதைத்துள்ளன" என்று கூறியுள்ளார் (தொழிலாளர் நிலைமை, எண் 1). இச்சூழ்நிலையில், "சிறுபான்மையினரது செல்வம் கொழிக்கும் கரங்களில் வாணிப நெறிமுறைகளும், உழைப்பினை வாங்கிப் பயன்படுத்தும் வகையும் தரப்பட்டிருப்பதால், ஏழைத் தொழிலாளர்கள் அடிமைகள் போன்று நடத்தப்படுகின்றனர் (*தொழிலாளர் நிலைமை*, 32) என்று தொழிலாளர்களின் நிலையைப்



படம்பிடித்துக்காட்டுகிறார். திருத்தந்தை 23-ஆம் ஜான் தனது 'அன்னையும் ஆசிரியையும்' என்ற மடலில், தொழிற்சாலைகளில் பெண்கள் பல்வேறு துறைகளில் ஆர்வத்தோடு ஈடுபட்டு வருவதால் குடும்ப வாழ்விலும் பொது வாழ்விலும் உயிரற்ற பொருள்களாய் நடத்தப்படுவதைக் கண்டித்து, இத்தகையச் செயலைப் பெண்களும் சமூகமும் செய்யலாகாது என்றும் இச்செயலை எதிர்த்து மனித உரிமையையும், மாண்பையும் நிலைநாட்டப் பெண்கள் முனைப்புடன் செயல்படவேண்டும் (*அன்னையும் ஆசிரியையும்*, 41) என்று எடுத்துக்கூறியுள்ளார்.

## 3. உழைப்பாளிகளின் அடிப்படை உரிமைகள்

திருத்தந்தை 11-ஆம் பியூசு, தொழிற்சாலையில் இருக்கும் தொழிலாளர்கள் மட்டுமல்லாமல் நிலங்களில் வேலைசெய்யும் தொழிலாளர்கள், நிலமற்ற விவசாயிகளின் உரிமையைப் பற்றியும் தனது மடலில் தெரிவித்துள்ளார் (*சமூக ஒழுங்கமைவு*, 53). இவரைத் தொடர்ந்து 23-ஆம் ஜானும் கிராமத்தில் வாழும் தொழிலாளர்களின் நலன்கள் பாதுகாக்கப்பட வேண்டும் (*அன்னையும் ஆசிரியையும்*, 144-149) என்று குரல் எழுப்பியுள்ளார். இதன் அடிப்படையில்தான், ஒவ்வொருவரும் தமது தகுதிக்கேற்ற வேலையைத் தேடும் உரிமை, வேலையில்லாத் திண்டாட்டத்தை எதிர்க்கும் உரிமை, வேலையில்லாமல் வாழுவோர்கள் தங்களையும், தங்களைச் சார்ந்தவர்களையும் பேணத் தேவையான ஊதியம் பெற உரிமை ஆகிய அடிப்படை உரிமையை 'மனித உழைப்பு' என்ற ஏடு பட்டியலிடுகின்றது (எண், 19). மேலும் விவசாயிகளுக்குச் சட்டப் பாதுகாப்பு உரிமை, பல்லாண்டுகளாகப் பயிரிட்டு வந்த நிலங்களைச் சட்டப்படி உடைமையாக்க உரிமை, மாற்றுத் திறனாளிகள் தத்தம் திறமைகளுக்கு ஏற்ப வேலைபெற உரிமை (*மனித உழைப்பு*, 21), இடம் பெயர்ந்து செல்லும் உழைப்பாளிகளுக்கான உரிமை (*மனித உழைப்பு*, 23) போன்றவற்றை 'மனித உழைப்பு' என்ற மடல் உறுதிபடத் தெரிவிக்கின்றது. இவ்வேட்டின் நான்காம் அதிகாரம் முழுவதும் உழைப்பாளிகளின் உரிமை பற்றிப் பேசுகிறது. தொழிலாளர்கள் கைத்தொழில் புரிபவராகவோ, அறிவு சார்ந்த தொழில் புரிபவராகவோ அல்லது வேளாண்மைத் தொழிலாளர்களாக இருக்கலாம் (எண் 17). எல்லாத் தொழிலாளர்களுக்கும் தொழிற்சங்கங்கள்

அமைக்கவும், தொழிற்பயிற்சிகளின் அடிப்படையில் கிளைத் தொழிற்சங்கங்கள் அமைக்கவும் வேலைநிறுத்தம் செய்யவும் உரிமை உண்டு (எண் 20) என்று தொழிலாளர்களின் அடிப்படை உரிமையைப் பற்றி 'மனித உழைப்பு' என்ற ஏடு தெளிவாகத் தெரிவிக்கின்றது.

### அ. நீதியான கூலி

மனித வாழ்வினை நேரிய முறையில் பேணவும், குடும்பப் பொறுப்பைச் சரிவர நிறைவேற்றவும் தேவையான ஊதியத்தை முதலாளிகள் தொழிலாளர்களுக்குத் தரவேண்டும் (*அன்னையும் ஆசிரியையும்,* 91-103). மேலும், தன்னையும், தன்னைச் சார்ந்தவர்களையும் பராமரிக்கவும், தான் வாழ்கின்ற சமூகப் பண்பாடு மற்றும் ஆன்மீக நலன்களைப் பாதுகாக்கவும் தேவையான ஊதியம் தொழிலாளர்களுக்குத் தரவேண்டும் (*இன்றைய உலகில் திருஅவை,* 67). நீதியின் அடிப்படையில் ஊதியம் பெற உரிமை, முழுமையாகத் தம் குடும்பத்தைப் பேணவேண்டிய நிலையில் இருக்கும் உழைப்பாளர்களின் மனைவியர்களுக்கு உதவிப்பணி மற்றும் சமூக உதவி பெற உரிமை, ஊதியம் அல்லாத பிற சமூக உரிமைகள் பெற ஒவ்வொரு தொழிலாளிக்கும் உரிமை உண்டு (*மனித உழைப்பு,* 19). மேலும், ஓய்விற்கான உரிமை, ஓய்விற்கான சம்பளம் பெற உரிமை, மற்றும் முதுவயதுக் காப்பீட்டு உரிமை, ஆகிய உரிமைகளைத் தொழிலாளிகளுக்கு உரிமையாளர்கள் தரவேண்டும் என்பது கத்தோலிக்க சமூக நீதியின் படிப்பினையாகும் (*மனித உழைப்பு,* 19).

### ஆ. உழைப்பின் பலனில் பங்கெடுக்க உரிமை

கத்தோலிக்க சமூக நீதி, தொழிலாளர்கள், தொழில், நிர்வாகம், மற்றும் இலாபம் இவைகளில் முதலாளிகளோடு இணைந்து கூட்டுப்பொறுப்பு மேற்கொள்ளவேண்டும் (*சமூக ஒழுங்கமைவு,* 64, 65, 81-97) அதற்கான வழிமுறைகளை நிறுவன உரிமையாளர்கள் எல்லாத்துறைகளிலும் தொழிலாளிகளுக்குச் செய்துதர வேண்டும் என்று தெரிவிக்கின்றது. சமூகப் பொருளாதார, அரசியல் துறைகளில் தொழிலாளிகளின் பங்கேற்பை ஊக்கப்படுத்த வேண்டும் (*அன்னையும் ஆசிரியையும்,* 91-103) என்றும் உழைப்பாளிகள், வேலை தருபவர்கள், வேலையை நிர்வகிப்போர், நிறுவன



உரிமையாளர்கள் அனைவரும் தொழில் நிர்வாகத்திற்கு ஊறு விளைவிக்காமல் எல்லோரையும் நிர்வாகத்திற்குத் தேவையான பங்களிப்பைத்தர ஊக்குவிக்க (*இன்றைய உலகில் திருஅவை,* 68) வேண்டும் என்று திருஅவை கேட்டுக்கொண்டுள்ளது. தொழிலாளர்கள் உழைப்பின் முழுப்பயன் பெறவும், உரிமைகளைப் பெற்று மகிழவும் வேண்டுமெனில் நிர்வாகத்தில் முழுப்பங்கேற்பு அவசியம் என்பதைத் திருத்தந்தை 2-ஆம் ஜான் பால் வலியுறுத்துகிறார் (*மனித உழைப்பு,* 23). மேலும் மனித வளம் அனைத்து வளங்களுக்கும் அடிப்படையாக அமையும் பொழுது அனைத்து உரிமைகளிலும் (உற்பத்திக்கருவிகளிடத்து உரிமை, நிர்வாகத்தில் பங்குகொள்ளும் உரிமை, இலாபங்களில் உரிமை, உழைப்பிலிருந்து ஓய்வு பெற உரிமை மற்றும் ஓய்வூதியம் பெற உரிமை) பங்கெடுக்க உழைப்பாளிகளுக்கு உரிமை என்று கத்தோலிக்க சமூகப்போதனை வலியுறுத்துகிறது (*நூறாமாண்டு,* 43).

### இ. தொழிற்சங்க உரிமையும் வேலைநிறுத்த உரிமையும்

தொழிலாளர் நலன்களைப் பொறுத்தமட்டில், அறநெறி தொடர்பானவற்றைத் திருஅவையும், பொதுநலம் தொடர்பானவற்றை அரசும், பலன்களை அனுபவிக்க சங்கங்கள் அமைக்கும் பணியை தொழிலாளர்களும் மேற்கொள்ளவேண்டும் என்று திருத்தந்தை 13-ஆம் லியோ கூறியுள்ளார் (*தொழிலாளர் நிலைமை,* 32). தொழிலாளர்கள் தங்கள் உரிமைகளைப் பாதுகாக்கும் பொருட்டும், தங்கள் நேர்மையான கோரிக்கைகளை நிறைவேற்றும் பொருட்டும் செய்கின்ற வேலைநிறுத்தம் ஒருவித வழிவகையாக இருக்கலாம் (இன்றைய உலகில் திருஅவை, 68; மனித உழைப்பு, 6, 9, 22, 32, 34-35, 41-43, 53, 60, 64-68, 86) என்று தொழிலாளர்களுக்குள்ள உரிமையை 13-ஆம் லியோ ஆதரித்துள்ளார். தொழிற்சங்கங்களின் வேலைநிறுத்தம் எச்சூழலிலும் வன்முறையை ஆதரிக்கக்கூடாது என்று கத்தோலிக்க சமூகப் போதனை தெரிவித்துள்ளது. 23-ஆம் ஜான், தொழிலாளர் நலச் சங்கங்கள் சமூகநீதி வெளிப்படுத்தும் கருவிகள் என்றும் வர்க்கப் போராட்டத்தின் வெளிப்பாடுகள் என்றும் தொழிற்சங்கத்தை ஆதரித்துப் பேசியுள்ளார்.

## 4. உழைப்பாளிகள் மட்டில் திருஅவை முன்னெடுக்கவேண்டியவை

உழைப்பாளிகளின் உரிமையை வென்றெடுக்க, அவர்களுக்கான சமூக நீதியைக் காத்திட கத்தோலிக்கர்கள் சமூக நீதிக்காக உழைக்கும் இயக்கங்களோடும் குழுக்களோடும் ஒத்துழைக்க வேண்டும் என்பதை 23-ஆம் ஜான் தெரிவித்துள்ளார் (*அன்னையும் ஆசிரியையும்*, எண் 103). தொழிலாளர்களின் மாண்பைச் சிதைக்காத தொழில் நுட்ப முன்னேற்றம், புதிய தொழில் முயற்சிகளை உருவாக்குதல், உற்பத்தி முறைகளைத் தழுவி அமைத்தல் இவைகளை திருஅவை உழைப்பாளிகளின் வளர்ச்சிக்காக ஆதரிக்கவேண்டும். இதன் வழியாக உற்பத்திப் பொருட்களைப் பெருகச்செய்வது திருஅவையின் நோக்கமல்ல. மாறாக, மனிதருக்குப் பணிபுரிவதும் மனித மாண்பைக் காப்பதும் ஆகும். எத்தகைய பொருளாதார வளர்ச்சியும் மனிதருக்குக் கட்டுப்பட்டதாக இருக்கவேண்டும் (*இன்றைய உலகில் திருஅவை*, 64-65) என்பதில் திருஅவையின் சமூக நீதிக்கான போதனை தெளிவுபடுத்துகிறது. எனவேதான் 'மனித உழைப்பு' என்ற மடல், முதலீட்டை விட உழைப்பே முதன்மையானது. ஏனெனில் பொருள் உற்பத்தியில் உழைப்பு ஆக்கவினைமுதலாகவும் (Efficient Cause) முதலீடு மற்றும் பொருள் உற்பத்திக் கருவிகள் கருவிமுதலாகவும் (Instrumental Cause) அமைகின்றன (எண், 12) என்று தெரிவிக்கின்றது. மேலும் உழைப்பாளர்களின் நீதிக்கான போராட்டத்தில் திருஅவை வெறும் பார்வையாளராக மட்டும் இருந்துவிடாமல் அநீதியை வென்றெடுக்க, உழைப்பாளர்களின் உரிமைகளை வெறும் சலுகைகளாகவோ எண்ணாமல் அவற்றைச் சமூக நீதியாகப் பார்க்க வேண்டும் (*நூறாமாண்டு*, 43). எனவே, சமூக நீதியின் படி ஒரு வர்க்கம் மற்றொரு வர்க்கத்தினரை தொழில் இலாபங்களிலிருந்து ஒதுக்கி வைக்கும் போக்கினைத் தடைசெய்ய வேண்டும் (*மனித உழைப்பு*, 57).

## முடிவுரை

இறையாட்சியை இங்குக் கொண்டு வருவதற்கான உழைப்பின் மதிப்புத் தொடர்பாக இரண்டாம் வத்திக்கான் சங்கம் மிக எச்சரிக்கையான பதில் தருகிறது. புதிய வானமும் புதிய பூமியும் இவ்வுலகில் தொடர்ச்சிகளாக



இருக்கப் போவன அல்ல! அல்லது இவ்வுலகிற்கு முற்றிலும் தொடர்பற்றும் இருக்கப் போவன அல்ல! இப்பூவுலகை மேம்படுத்த நாம் பாடுபட்டாக வேண்டும்; "இங்குதான் மனித குடும்பமாகிய உடல் வளர்ச்சி அடைகிறது. ஏதோ ஒருவழியில் இனிவரும் யுகத்தின் முன்குறித்த – முன்னிழலாக இருக்கிறது." பேதுருவின் காலத் திருஅவை தன்னலமற்றுத் திகழ்ந்தது; தங்களுக்கு இருந்தவை அனைத்தையும் விற்று அன்றைய மக்கள் சேர்த்துத் திருத்தூதர்களிடம் கொடுத்துத் தேவைக்கேற்ப அவரவர்களுக்குப் பகிர்ந்து வழங்கினார்கள்.

இயேசு வாழ்ந்த காலத்தில் திராட்சை பயிரிடும் விவசாயிகள் இருந்தனர். ஆனால் விவசாய சங்கம் இல்லை; தச்சர் முதலான கைவேலை செய்வோர் இருந்தனர்; ஆனால் தொழிலாளருக்கான திட்டவட்ட வேலைநேரம் இல்லை. தொழில்புரட்சி நிகழ்ந்த பதினெட்டு நூற்றாண்டுக்கு முந்தையகாலம் அது! வெவ்வேறு வேலைகளில் வேலைக்கு வந்தவர்கள் அனைவருக்கும் – உழைப்பாளர்கள் எல்லோருக்கும் சமமான கூலி வழங்கவேண்டும் என்றார் இயேசு. அவரது கருத்துப்படி எல்லோருக்கும் சரிநிகரான – நியாயமான – குறைந்தபட்ச – அன்றைய வாழ்க்கைத் தேவைகளை, அடிப்படைகளை நிறைவு செய்யக் கூலி வழங்கப்பட வேண்டும். "உமக்குக் கொடுத்தபடியே கடைசியில் வந்த இருவருக்கும் கொடுப்பது என் விருப்பம்" (மத் 20:14) என்பதே இயேசுவின் விருப்பமாகும். வேலையில்லாமல் இருப்பவர்களை, அன்றையநாளில் வேலை கிடைக்காமல் இருப்பவர்களைக்கண்டு, உடனே வேலைக்கு அனுப்புகிறார் நிலக்கிழார்; அன்று எவரும் பட்டினி கிடக்கக் கூடாது என்றே கூலிவழங்குகிறார். வேலையின்மையைச் சமாளித்துக் குறைத்தாக வேண்டும். வேலை செய்வது கௌரவிக்கப்பட வேண்டும்; தொழிலாளிகள் அங்கீகரிக்க வேண்டும். தொழிலாளர்கள் கடவுளுடன் இணைந்து செயலாற்றும் உடன்-படைப்பாளர்கள். இந்தப் பூவுலகில் கடவுள் படைத்துள்ளவை அனைத்தையும் உழைப்பாளர்கள் மூலமாகவே உருவாக்கம் செய்துள்ளார்.

உழைப்பாளிகள் பளபளப்புக்கான மெருகூட்டுகிறவர்கள் அல்ல!
அவர்கள் உடன் – படைப்பாளர்கள்!

## அடிக்குறிப்பு

1 Jose Kuttiani Mattathil, *Theological Anthropology: A Christian Vision of Human Beings,* The Theological Publications in India, Bangalore.

2 Herve Carrier, *The Social Doctrine of the Church Revisited,* Vatican City, 1990, p.20.

3 Herve Carrier, *The Social Doctrine of the Church Revisited,* Vatican City, 1990, p.20.



# 6. திருஅவையின் சமூகப் போதனைகளில் மனித உரிமைகளும் கடமைகளும்

*முனைவர் அருள்பணி. வ. அருள்ராஜ்*
*பணிக்குழுக்களின் ஒருங்கிணைப்பாளர்*
*கோட்டாறு மறைமாவட்டம்*

### மனித வரலாற்றில் மனித உரிமைகள்

மனித உரிமை சிந்தனைகளுக்கு மனித வரலாற்றில் நீண்ட நெடிய ஒரு பாரம்பரியம் உண்டு. சர்வதேச அளவில் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைப் பிரகடனம் 1948-ஆம் ஆண்டு டிசம்பர் 10-ஆம் நாளில்தான் ஏற்றுக் கொள்ளப்பட்டாலும் இதன் வேர்கள் கிறிஸ்துவுக்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே காணக்கிடக்கின்றன.

கி.மு. 539-ஆம் ஆண்டில், மதச் சுதந்திரம், அடிமைகள் விடுதலை, இனச் சமத்துவம் ஆகியவற்றைப் பிரகடனப்படுத்திய பாரசீக மன்னன் சைரசின் ஆணைகள் பொறிக்கப்பட்ட களிமண் உருளைகள்தான் மனித வரலாற்றில் பதிவு செய்யப்பட்ட முதல் மனித உரிமை ஆவணங்களாகக் கருதப்படுகின்றன. ஆனால் 4000 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த சுமேரிய மன்னனின் ஹம்முராபியில் 282 அம்சங்கள் கொண்ட இந்தச் சட்டத்தொகுப்பிலும் தனிமனித உரிமைகள் பற்றியக் குறிப்புகள் அடங்கியிருப்பது குறிப்பிடத்தக்கது.

அடிமை வணிகம், நிலப்பிரபுத்துவம், காலனி ஆதிக்கம், ஏகாதிபத்தியம், இன அழிப்பு, உலகப் போர்கள், நாசி மற்றும் பாசிசக் கோட்பாட்டுச் செயல்பாடுகள், இன மற்றும் சாதிய அடக்குமுறைகள் என்பவை அலை அலையாக வந்து மனிதத்தைச் சிதைத்த போது மனித மாண்பை உயர்த்திப் பிடிக்கும் உரிமைக் குரல்களும் மனித வரலாற்றில் எங்கும்காணமுடிகிறது. இங்கிலாந்து மன்னன் ஜான் கையெழுத்திட்ட மகா சாசனம் (1215), அமெரிக்க ஐக்கிய நாடுகளின் விடுதலைப் பிரகடனம் (1776), பிரான்சின் மனித உரிமைப் பிரகடனம் (1789) ஆகியவை அகில உலக மனித உரிமைப் பிரகடனத்தின் முன்னோடிகள். கருத்தியல் மற்றும் செயல்பாடுகளை உள்ளடக்கிய பல்வேறு

நீண்ட போராட்டங்களின் விளைவு தான் ஐக்கிய நாடுகள் அவையின் மனித உரிமைப் பிரகடனம்.

இருப்பினும் மனித உரிமை என்னும் கருத்தாக்கம் விவாதங்களுக்கும் விமர்சனங்களுக்கம் அப்பாற்பட்டது அல்ல. மனித உரிமைத் தத்துவமே கேள்விக்குள்ளாக்கப்படும் நிலையையும் காணமுடிகிறது.[1] அதன் அடிப்படைகள், தன்மைகள், அதன் படிநிலைகள் குறித்த விவாதங்கள் இன்னும் ஓயவில்லை. யாருடைய உரிமைகள் முன்னுரிமை பெறவேண்டும் என்பது குறித்தும் வேறுபட்ட பார்வைகள் உள்ளன.

இது ஒருபுறம் இருக்க, இன்று மனித உரிமைச் சொல்லாடல் சர்வதேச அரசியல் வழக்கு மொழியிலும், அறவியல் உரையாடல்களிலும் தனியிடத்தைப் பெற்றுள்ளது என்பதை மறுக்க இயலாது. நாடுகளுக்குள்ளும் நாடுகளிடையேயும் வணிகம், வளர்ச்சி, ஒத்துழைப்பு எனப் பல்வேறு நிலைகளிலும் தரநிர்ணயக் கோட்பாடாக மனித உரிமை விளங்குவதைக் காணமுடிகிறது. நாடுகளின் அரசுகள் தங்கள் மக்களை நடத்தும் விதங்களையும், அவைகளின் திட்டங்களையும் எடைபோடும் அறவியல் அளவுகோலாக மனித உரிமை இன்று பரிணமித்துள்ளது. நீதி மறுக்கப்படும் தனிமனிதர்களும் சமூகங்களும் தங்களைப் பாதுகாக்கும் ஆயுதங்களாக மனித உரிமையைப் பயன்படுத்த முயல்கின்றனர். இரண்டாம் உலகப்போர் மற்றும் நாசிகளின் இனஅழிப்புக் கொடூரங்களைக் கண்டு அதிர்ந்து போன மானிட சமூகத்திற்கு நம்பிக்கையூட்டும் காலத்தின் குறியாகவே மனித உரிமைப் பிரகடனம் அமைந்தது என்றால் அது மிகையல்ல.

இப்பின்னணியில் ‘‘காலத்தின் குறிகளைத் துளாவி அறிந்து, நற்செய்தியின் ஒளியில் அவற்றின் பொருளை எல்லாக் காலக் கட்டங்களிலும் விளக்கி உரைக்கும் கடமையைக் கொண்ட திருஅவை’’[2] இந்த நீண்ட வரலாற்று நிகழ்வுகளை எப்படிப் பார்க்கிறது? மனித உரிமைச் சொல்லாடலை திருஅவை எவ்வாறு தன்வயப்படுத்தியிருக்கிறது? மனித உரிமைகளின் அடிப்படைகளாக எதைக் காண்கிறது? மனித உரிமைகளின் தன்மைகளாக எதைக் காட்டுகிறது? திருஅவையின் மனித உரிமை குறித்த போதனைகள் விடுக்கும் சவால்கள் என்ன? இவை குறித்து ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கம்.



## மனித உரிமை குறித்த திருஅவையின் நிலைப்பாடு

அண்மையில் நான் படித்த ஒரு புத்தகத்தின் தலைப்பு ‘‘மனித உரிமையைக் கடவுள் நம்புகிறாரா?’’ என்பது! மதங்கள் மற்றும் மனித உரிமைகள் குறித்த கட்டுரைகளின் தொகுப்பான இந்நூல் மதங்களும் மனித உரிமைகளும் எல்லாக் காலங்களிலும் நண்பர்களாகப் பயணித்ததில்லை என்பதைச் சுட்டிக்காட்டுகிறது.[3] சமூகத்தில் அடிமை முறை, ஆணாதிக்கம், அதோடு தொடர்புடைய பெண்ணடிமைத்தனம், மத சிறுபான்மையினர் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட வன்முறைகள் இவற்றையெல்லாம் நீண்டகாலமாக சகித்துக் கொண்டவைகள் தான் மதங்கள். கிறிஸ்தவமும் திருஅவை என்னும் அமைப்பும் இதற்கு விதிவிலக்கு அல்ல. கருத்துச் சுதந்திர மறுப்பு, மாற்று இறையியல் கோட்பாட்டினரை வன்முறைக்கு உட்படுத்துதல் போன்றவை திருஅவையின் வரலாற்றில் நிறையவே காணமுடியும். கடந்த நூற்றாண்டில் மனித இனத்துக்கு எதிராகக் கட்டவிழ்த்து விடப்பட்ட மிகப்பெரிய மனித உரிமை மீறல்களில் திருஅவையின் நிலைப்பாடு மெச்சும்படியாக இருக்கவில்லை. கருத்தியல் அடிப்படையிலும், கடந்த இரு நூற்றாண்டுகளைத் திரும்பிப் பார்கையில், மனித உரிமை குறித்த திருஅவையின் நிலைப்பாடு பல நேரங்களில் நேர்மறையாக இருந்ததில்லை என்பது புரிய வரும். தயக்கங்கள், கண்டனங்கள், சில நேரங்களில் நேரடியான மோதல்கள் – இவையே திருஅவையின் பதில் மொழிகளாக இருந்திருக்கின்றன என்பதை இன்று திருஅவையின் அதிகாரப் பூர்வமான ஏடுகளே ஒத்துக் கொள்கின்றன.[4]

மனித மீட்பு என்பதைத் தலையாய கடமையாகக் கொண்ட திருஅவையின் இந்த இருதலைக் கொள்ளி நிலைப்பாட்டிற்கு அது கடந்து வந்த பாதையில் காரணங்கள் இல்லாமல் இல்லை. பிரஞ்சுப் புரட்சி ஏற்படுத்திய பேரதிர்வுகள், அது முன்னிலைப்படுத்திய சுதந்திரம், திருஅவையில் குருக்கள் ஆதிக்கத்தை எதிர்த்து உரிமை கேட்ட பொதுநிலையினர், திருஆட்சி அதிகாரத்தை வேரறுக்க முற்றுரிமை எடுத்துக்கொண்ட அரசுகளின் செயல்பாடுகள் அனைத்துமே திருஅவையின் ஆசிரியத் தலைமையை சற்றேனும் நிலைகுலையச் செய்தன. உரிமை என்ற வார்த்தையே ஆபத்தான இடங்களிலிருந்து முன்வைக்கப்பட்டதால் அது குறித்த அச்சங்களும், தயக்கங்களும் நீடித்தன. தொடர்ந்து வந்த

திருத்தந்தையரும் உரிமைகள் குறித்த தங்கள் எதிர்ப்புக் குரலைப் பதிவு செய்யத் தவறவில்லை.[5]

## புதிய மாற்றங்கள் புதிய பார்வைகள்

பிரஞ்சுப் புரட்சிக்குப் பின் மனித வரலாற்றில் இடம்பெற்ற தொழிற்புரட்சி திருச்சபையின் மனசாட்சியை உலுக்க ஆரம்பித்தது. புதிய கண்டுபிடிப்புகள், தொழில்நுட்பம், இயந்திரங்கள், ஆலைகள் என அதி வேகத்தில் வந்த வளர்ச்சி இதுவரை மனிதன் வாழ்ந்த வாழ்க்கை முறையை, குறிப்பாக ஐரோப்பாவிலும் வட அமெரிக்காவிலும், முற்றிலுமாக மாற்றியது. நிலம் மற்றும் சிறு கைவினை சார்ந்த பொருளாதாரம் நலிவடைந்தது. பெரும் ஆலைகளால் கவரப்பட்டு நகரங்களை நோக்கி நகர்ந்த மக்களின் வாழ்க்கைத்தரமும் வசதிகளும் கவலைக்கிடமாகிய சூழலில், மனிதர் மனிதனாக வாழவில்லை; அவர் மாண்பிழந்து நிற்கின்றார் என்ற உண்மை திருஅவையின் பார்வையில் புலப்பட ஆரம்பித்தது. 1891-இல் திருத்தந்தை 13-ஆம் லியோவின் ''தொழிலாளர் நிலைமை'' என்னும் சுற்று மடல் இதைப் பதிவு செய்தது. திருத்தந்தை லியோ தன் மடலில், உழைப்பு, உரிய ஊதியம், ஓய்வு, பணியிடங்களில் பெண்களுக்கும் குழந்தைகளுக்கும் உரிய பாதுகாப்பு இவை அனைத்தும் உரிமைகள் எனக் கூறினார்.66

நவீன உலகில் திருச்சபையின் சமூகப் போதனைகளுக்கு அடிக்கல் நாட்டிய ''தொழிலாளர் நிலைமை'' வெளிவந்த 40ஆவது ஆண்டு நிறைவையொட்டி திருத்தந்தை 11ஆம் பியுஸ் வெளியிட்ட சுற்று மடல் மனித உரிமைகளை நேர்மறையாக, வலுவாக முன்வைத்தது. மனித உரிமைகள் பொதுநலனின் இன்றியமையாக் கூறு எனவும், அவை காக்கப்பட அரசு உறுதி செய்ய வேண்டிய சமூகப் பொருளாதாரச் சூழல்கள் குறித்தும் இம்மடல் விவரித்தது. குறிப்பாக வலுவிழந்தவர்கள், ஏழைகள் இவர்களின் உரிமைகளைக் காப்பது அரசின் தனிக்கடமை எனக் கூறியது.[7]

தொடர்ந்து வந்த திருத்தந்தை 12ஆம் பியுஸ், 1942 மற்றும் 1944 ஆகிய ஆண்டுகளில் வானொலியில் அளித்த கிறிஸ்துமஸ் செய்திகளில் மனித மாண்புக்கும், தன்னுரிமைக்கும், உயிருக்கும் எதிராக இழைக்கப்படும் கொடுமைகளைக் கண்டித்தார். இவர் இரண்டாம் உலகப் போர் நடந்து முடியும்



வேளையில் அமைதியையும் மனித உரிமைகளையும் பாதுகாக்கும் உலகம் தழுவிய சர்வதேச அமைப்பு ஒன்றை உருவாக்க வேண்டும் என்று அழைப்பு விடுத்தார் என்பது குறிப்பிடத்தக்கது.[8] ஆனால் மனித உரிமைகள் குறித்த அவரது முன்னெடுப்புகளின் நடுவே, 1948-இல் ஐக்கிய நாடுகள் அவை, அகில உலக மனித உரிமைப் பிரகடனத்தை நிறைவேற்றியபோது அவர் அமைதியாக இருந்தது பலரையும் வியப்பில் ஆழ்த்தியது.

## மனித உரிமைத் திருத்தந்தை 23-ஆம் ஜான்

''சன்னல்களைத் திறந்து விடுங்கள், புதுக்காற்று உள் நுழையட்டும்'' எனக்கூறி திருஅவைக்குள் பெரும் மாற்றங்கள் உருவாகக் காரணமாக இருந்த திருத்தந்தை 23ஆம் ஜான் தான் மனித உரிமை திருஅவையின் சமூகப் போதனைகளின் மையப்புள்ளியாக உருவெடுக்கக் காரணமாக இருந்தார். மனிதன், மனித மாண்பு, மனித உரிமைகள் மற்றம் கடமைகள் - இவையே திருத்தந்தை 23ஆம் ஜானின் சிறப்பு ஆசிரியமாக இருந்தன. திருஅவையின் வரலாற்றில் 1963, ஏப்ரல் 11ஆம் நாளில் இவர் வெளியிட்ட ''அவனியில் அமைதி'' என்னும் திருமடல்தான் மனித உரிமைகள் குறித்த திருஅவையின் சிந்தனைகளில் ஒரு திருப்புமுனையாக அமைந்தது என்று கூறமுடியும். இம்மடலின் மையச் சிந்தனை அமைதி என்றாலும் அமைதி நிலைநாட்டப்பட வேண்டுமென்றால் அடிப்படை உரிமைகள் காக்கப்படவேண்டும் என்ற சிந்தனையே இங்கு மேலோங்கி நிற்கிறது. கர்தினால் மோரிஸ் ராய் குறிப்பிடுவது போல ''அமைதியின் அடிப்படை மனித உரிமைகள் என இம்மடல் கற்பிக்கிறது. மனித உரிமைகள் அமைதியின் வரையறைக்குள் அங்கமாகின்றன. அவையின்றி அமைதி போலியானதாகவும் இயங்காததாகவும் ஆகிவிடும்.''[9]

இம்மடல் அறவியல் அமைப்பு குறித்த ஒரு விரிவான சிந்தனைத் தொகுப்பு எனலாம். இதன் முதல் பகுதி தனி மனிதனுக்கும், மானிட சமூகத்திற்கும் இடையிலான உறவுநிலை குறித்தும் அந்த உறவில் அடங்கிய மனித உரிமைகள் மற்றும் அறவியல் கடமைகள் குறித்தும் விவரிக்கிறது. இப்பகுதி என்றுமில்லாத அளவுக்குத் திருஅவையின் சமூகப் போதனைகளில் ஒரு முழுமையான, சவால்மிக்க, ''அகில உலக மனித உரிமை சாசனத்தை''

முன்வைக்கிறது எனலாம். இவ்வகையில், ஐக்கிய நாடுகள் அவையில் அகில உலக மனித உரிமைப் பிரகடனம் ஏற்றுக்கொள்ளப்பட்டபோது திருத்தந்தை 12ஆம் பியுஸ் காத்த மௌனத்தை இம்மடல் வழியாக 23ஆம் ஜான் கலைத்தார் எனக் கூறமுடியும்

திருத்தந்தை ஜான் சுட்டிக்காட்டிய மனித உரிமைகளைச் சுருக்கமாகக் கூறுவதென்றால், கீழ்க்கண்ட முறையில் தொகுக்கலாம்.

- **வாழ்வுரிமை:** மனிதன் உயிர் வாழ்வதற்கும், அத்தோடு அவர்கள் தங்களுடைய அறிவாற்றல், பண்பாடு, அறவியல் மற்றும் ஆன்மீகக் கூறுகளில் வளர்ச்சியடையத் தேவையான அனைத்தும் இவ்வுரிமையில் அடங்கும்.
- **குடும்ப உரிமைகள்:** சமூகத்தின் மூலக்கூறாகிய குடும்பம் தன் கடமைகளை நிறைவேற்றத் தேவையான உரிமைகள்.
- **பொருளாதார உரிமைகள்:** வேலைவாய்ப்புக்கான உரிமை, நியாயமான குடும்ப ஊதியத்துக்கான உரிமை.
- **சமூக உரிமைகள்:** தொடர்பு கொள்வதற்கும், பங்கேற்பதற்கும், சங்கம் அமைப்பதற்கும், குடியிருத்தலுக்கும், இடம் பெயர்தலுக்குமான உரிமைகள்.
- **குடிமை உரிமைகள்:** பொதுவாழ்வில் ஈடுபடுவதற்கும், நீதியியல் பாதுகாப்புக்கும், தனிமனித உரிமைகள் பாதுகாக்கப்படுவதற்குமான உரிமைகள்.

''அவனியில் அமைதி''யின் இரண்டாம் பகுதி, தனி மனிதனுக்கும் அரசுக்குமிடையே உள்ள உறவு பற்றியும் கூட்டு அதிகாரம் பற்றியும் எடுத்துரைக்கிறது. மூன்றாம் பகுதி நாடுகளிடையே நிலவ வேண்டிய சமத்துவம் குறித்துப் பேசுகிறது. நாடுகளிடையே அமைதி நிலவ திருத்தந்தை அதன் நான்கு உள்ளார்ந்த கூறுகளைக் குறிப்பிடுகிறார். அவை *உண்மை*, *நீதி*, *தோழமை*, மற்றும் தன்னுரிமை ஆகியவையாகும். அனைத்துச் சமூகங்களும் நாடுகளும் மாண்பில் சமத்துவம் உடையவர்கள் என்ற உண்மையின் அடிப்படையில்தான் அமைதி நிலவ முடியும்.[10] அதுபோலவே ஒருவர் ஒருவருக்கிடையே உள்ள புரிதல் வழியாக வேற்றுமையையும் கருத்து மோதல்களையும் தாண்டி அனைத்துச் சமூகங்களின் உரிமைகளும்



அவற்றோடு தொடர்புடைய கடமைகளும் ஏற்றுக்கொள்ளப்படும் நீதியில் மலர்வதே அமைதியாகும்.[11] தோழமை என்பது பொருளாதார, சமூக அரசியல், பண்பாடு, சுகாதாரம், விளையாட்டு உள்ளிட்ட பல்வேறு தளங்களில் நாடுகளிடையே ஏற்பட வேண்டிய ஒத்துழைப்பைச் சுட்டிக்காட்டுகிறது.[12] இறுதியாக, தன்னுரிமை என்பது நாடுகளிடையே தேவையற்ற தலையீடு, ஆக்கிரமிப்பு இவை தவிர்க்கப்பட்டு ஒவ்வொரு நாட்டின் தனித்துவமும் மதிக்கப்படும் நிலையைக் குறிப்பதாக மடல் விவரிக்கிறது.[13]

மடலின் நான்காம் பகுதி நாடுகளுக்கிடையே ஏற்படுத்தப்பட வேண்டிய உறவுநிலை குறித்தும் ஒவ்வொரு நாடும் இதர நாடுகளுக்கு உதவ வேண்டிய கடமைகள் பற்றியும் எடுத்துரைக்கிறது. தனிமனித மற்றும் குழுக்களின் உரிமைகளை அங்கீகரிக்கவும், பாதுகாக்கவும், பேணவும் செய்வதற்கு, நாடுகளைக் கடந்த, பொது அதிகார அமைப்பு உருவாவதன் அவசியத்தை இது எடுத்துரைக்கிறது. இந்தப் பொது அமைப்பு இக்கடமைகளை நேரடிச் செயல்பாடுகள் வழியாகவோ அல்லது மண்டலம் மற்றும் கண்டங்கள் அளவில் உருவாக்கப்படும் இடைநிலை அமைப்புகளின் கூட்டமைப்புகள் வழியாகவோ நிறைவேற்றலாம் என வழிகாட்டுகிறது.

## இரண்டாம் வத்திக்கான் சங்கமும் மனித உரிமைகளும்

திருத்தந்தை 23ஆம் ஜான் தொடங்கி வைத்த திருச்சங்கம் அவரது மனித உரிமைக் கரிசனைகளை இன்னும் ஒரு படி மேலே எடுத்துச் சென்றது. திருச்சங்கத்தின் ''இன்றைய உலகில் திருஅவை'' மற்றும் ''சமயச் சுதந்திரம்'' ஆகிய இருமடல்கள் குறிப்பாக மனித உரிமைகளை மையப்படுத்தியவை ஆகும். மனித உரிமைச் சிந்தனைகள் திருஅவைக்கு வெளியே சமூகப் பரப்பில் தோன்றினாலும், காலப்போக்கில் அதுவே திருஅவையின் சமூகப் போதனைகளின் மையமாக மாறியது என்பது அண்மைக்கால திருஅவை வரலாற்றின் ஒரு மகிழ்ச்சியான திருப்பம் எனலாம். திருத்தந்தையர்களின் வழியைப் பின்பற்றி வத்திக்கான் திருச்சங்கமும் மனித உரிமை என்னும் கருத்தியலையும் அதன் அடிப்படையில் அமைந்த செயல்பாடுகளையும் உளமார வரவேற்றது. ''திருஅவை தன்னிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள நற்செய்தியின் அடிப்படையில் மனித உரிமைகளைப் பறைசாற்றுகிறது. இவ்வுரிமைகளை எங்கும் இன்று வளர்த்து வரும் இயக்க ஆற்றல்மிகு

அணுகுமுறைகளைத் திருஅவை ஏற்று உயர்வாக மதிக்கிறது'' என்று ''இன்றைய உலகில் திருஅவை'' ஏடு கூறுகிறது (41).

திருத்தந்தை 23ஆம் ஜானின் போதனைகளைப் பின்பற்றி ''இன்றைய உலகில் திருஅவை'' பல்வேறு உரிமைகளைச் சுட்டிக்காட்டுகிறது. அவற்றை கீழ்க்கண்டவாறு தொகுக்கலாம்.

மனிதர் ஆள் என்ற முறையில் கொண்டுள்ள உரிமைகள் (51)
மனிதர் சமூக உயிரி என்ற முறையில் கொண்டுள்ள உரிமைகள் (23, 25, 26, 27)
மனிதரின் குடும்ப உரிமைகள் (47, 48, 50, 52)
மனிதர் உழைப்பாளி என்ற முறையில் கொண்டுள்ள உரிமைகள் (66, 67, 72)
மனிதரின் அரசியல் உயிரி என்ற முறையில் கொண்டுள்ள உரிமைகள் (74, 75, 79)
மனிதர்கள் உலகக் குடிமக்கள் என்ற முறையில் கொண்டுள்ள உரிமைகள் (77, 80, 81)
மனிதரின் ஆன்மீக உரிமைகள்

திருத்தந்தை 23ஆம் ஜானுக்குப் பின் வந்த திருத்தந்தையர் 6ஆம் பவுலும் 2ஆம் ஜான் பவுலும் எழுதிய மடல்கள் மனித உரிமைகளின் பல்வேறு கூறுகளை வலியுறுத்துவதாக அமைந்தன. ''தொழிலாளர் நிலைமை'' வெளியிடப்பட்ட 80 ஆம் ஆண்டு நிறைவில் திருத்தந்தை பவுல் எழுதிய மடலும், 1971இல் கூடிய ஆயர் பேரவையின் ''உலகில் நீதி'' என்ற மடலும் இங்கு குறிப்பிடத்தக்கவை. திருத்தந்தை ஜான் பவுல் எழுதிய ''மனித உழைப்பு'', ''திருஅவையின் ஈடுபாடு'' குறித்த மடல்கள் மற்றும் திருத்தந்தை 2ஆம் ஜான் பால் எழுதிய மடலின் ''நூறாமாண்டு'' நிறைவை ஒட்டி வெளிவந்த மடல் அனைத்தும் மனித உரிமை மடல்களாகவே அமைந்தன.

## ''உண்மையில் அன்பு'': திருத்தந்தை 16ஆம் பெனடிக்டின் மனித உரிமைப் பார்வை

29 ஜுன் 2009-இல் வெளிவந்த ''உண்மையில் அன்பு'' என்னும் திருத்தந்தை பெனடிக்டின் மடல் இன்றைய உலகில் மனித உரிமைகளின்



நிலை குறித்த விரிவான மடல் ஆகும். சமுதாயத்தில் நிலவும் ஏற்றத்தாழ்வு, வறுமை, ஊழல், மனித உரிமை மீறல் இவற்றில் பன்னாட்டு நிறுவனங்களின் பங்கை இம்மடல் சுட்டிகாட்டுகிறது. திருத்தந்தை கூறுவது போல,

> வெளிப்படையாகவே தெரியும் ஏற்றத்தாழ்வு என்னும் இடறல் தொடர்ந்து கொண்டேயிருக்கிறது. பழைய மற்றும் புதிதாக உருவாகியுள்ள பணக்கார நாடுகளிலும் ஏழை நாடுகளிலும் உள்ள பொருளாதாரம் மற்றும் அரசியல் அதிகாரத்தைக் கையில் வைத்திருக்கும் வகுப்பைச் சார்ந்தவர்களின் ஊழலும், சட்டத்துக்குப் புறம்பான செயல்பாடுகளும், தெளிவாகவே தெரிகின்றன. தொழிலாளர்களின் மனித உரிமைகளை மதிக்கத் தவறுபவர்களுள் பன்னாட்டு நிறுவனங்களும் அடங்கும். (22)

இன்றைய உலகமயமாக்கப்பட்ட சூழலில் தொழிலாளர்களின் உரிமைகள் எவ்வாறு நசுக்கப்படுகின்றன என்பதைத் திருத்தந்தை தெளிவாக விளக்குகிறார். பணக்கார நாடுகள் மனித உழைப்பு எங்கு மலிவாகக் கிடைக்கும் எனத் தேடி அலைவதும், அவர்களின் முதலீடுகளை உறுதி செய்ய பல்வேறு நாடுகள் போட்டி போட்டுக்கொண்டு தங்கள் நாடுகளில் கொண்டுவரும் தொழில்சார் சட்டத்திருத்தங்களும் தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்டிருந்த சமூகப் பாதுகாப்பு கூறுகளைக் குறைப்பதிலும் அவர்களுக்கு எதிரான மனித உரிமை மீறல்களிலும் வந்து முடிந்திருக்கிறது என்கிறார் திருத்தந்தை. (25)

தொடர்ந்து, அதிநவீன இயந்திர மயமாக்கப்பட்ட ஒரு சூழலில் அதிகரித்து வரும் வேலையில்லாத் திண்டாட்டம் மீது பார்வையைத் திருப்புகிறார் திருத்தந்தை. உழைப்பின் மாண்பு மதிக்கப்படாமையே வேலையின்மையும் வறுமையும் தலைவிரித்து ஆடுவதற்குக் காரணம் என்பதைச் சுட்டிக்காட்டுகிறார். உழைப்பின் மாண்பை ஏற்றுக் கொள்ளாத இடங்களில் தான் வேலைகுறைப்பும் உழைப்புக்கு ஏற்ற ஊதியமின்மையும் தொடர முடியும் (63). எனவே தொழிலாளர் இயக்கங்களின் தேவையையும் அவர்கள் வலுப்பெறச் செய்வதும் அவசியமாகிறது என்று கூறும் திருத்தந்தை தொழிலாளர் இயக்கங்கள் தங்கள் உறுப்பினர்களின் கோரிக்கைகளுக்காக மட்டும் போராடாமல் இயக்கங்களுக்கு வெளியிலும், வளரும் நாடுகளிலும், இயக்கம் அமைக்கும் வாய்ப்பு மறுக்கப்பட்டவர்களின் உரிமைக்காகவும் உழைக்க முன்வர வேண்டும் என்று அழைப்பு விடுக்கிறார் (64).

நாடுகளிடையே ஒருவருக்கொருவர் சார்ந்து நிற்கும் நிலை தொடர்ந்து வளர்ந்து வரும் இச்சூழலில் உலகம் உண்மையிலே நாடுகளின் குடும்பம் என்னும் நிலைகாணும் பொருட்டு ஐக்கிய நாடுகள் அவையிலும் பன்னாட்டுப் பொருளாதார மற்றும் நிதி அமைப்புகளில் சீர்திருத்தங்கள் கொண்டு வருவது அவசியமாகிறது என்று கூறும் திருத்தந்தை, தொடர்ந்து, ஐக்கிய நாடுகள் அவை இன்னும் நீதியான ஓர் அமைப்பாக மாற ஏழை நாடுகளின் குரலும் எடுபடும் வண்ணம் அவற்றுக்கு முன்னுரிமை வழங்க வேண்டுமென்ற திருஅவையின் நிலைப்பாட்டைத் திருத்தந்தை அறிவிக்கின்றார் (67). இவ்வாறு மனித உரிமை மீறல்களுக்கு காரணிகளாக இருக்கும் பன்னாட்டு அமைப்புக்கள் மற்றும் பரிவர்த்தனைகளைச் சுட்டிக்காட்டி அவற்றைக் களைவதற்குப் பன்னாட்டு அளவிலும் நடைமுறைப்படுத்த வேண்டிய மாற்றங்களை முன்மொழிவதாக இம்மடல் அமைந்துள்ளது.

## கடமைகள்: மனித உரிமைகளின் மறுபக்கம்

மனித உரிமைகள் குறித்து திருஅவை போதிக்கும் பொழுதெல்லாம் அதோடு தொடர்புடைய கடமைகள் குறித்தும் போதிக்கிறது. ''உண்மையில் அன்பு'' என்னும் மடல் மானிடத் தோழமை என்பது மனிதர்கள் மேல் ஒரு கடமையையும் சுமத்துகிறது என்று குறிப்பிடுகிறது.

> இன்று பலர் தங்களைத் தவிர வேறு யாருக்கும் கடமைப்பட்டவர்கள் அல்ல என்று எண்ணும் நிலை காணப்படுகிறது. அவர்கள் தங்கள் உரிமைகளைப் பற்றியே கவலைப்படுகின்றனர். தங்களுடைய மற்றும் பிறருடைய ஒருங்கிணைந்த வளர்ச்சி பொறுப்பேற்பதை சிரமமாகக் காண்கின்றனர். எனவே கடமைகளின்றி உரிமைகள் இல்லை என்ற சிந்தனைக்கு மீண்டும் திரும்ப வேண்டியது அவசியம் (43).

என்கிறார் திருத்தந்தை பெனடிக்ட்

அகில உலக மனித உரிமைப் பிரகடனத்தின் 25ஆவது ஆண்டு விழாவின் போது ஐக்கிய நாடுகள் அவையில் உரையாற்றிய திருத்தந்தை ஆறாம் பவுல் நினைவூட்டியது போல அடிப்படை உரிமைகள் முழு மனுக்குலத்தின் பொதுநலனைக் குறித்துக்காட்டுகிறது என்ற உண்மையை ஏற்றுக்கொள்ளும் அதே நேரத்தில் அப்பொதுநலனைப் பேணவேண்டிய



கடமையும் உரிமைகளோடு இணைத்துப் பேசவேண்டிய கருப்பொருளாக அமைகிறது.[14] அதாவது மனிதர்கள் அனுபவிக்க விரும்பும் ஒவ்வொரு உரிமைக்குப் பின்னும் அவன் நிறைவேற்ற வேண்டிய ஒரு கடமை இருக்கிறது என்பதை ஏற்றுக்கொள்ள வேண்டியது அவசியமாகிறது. உயிர் வாழ உரிமை இருக்கிறது என்றால் அதைப் பேணுகின்ற கடமையும் இருக்கிறது. ஒரு தரமான வாழ்வு வாழ உரிமை இருக்கிறது என்றால் அதைத் தகுதியான முறையில் வாழ வேண்டிய கடமை இருக்கிறது. உண்மைக்கான ஒரு சுதந்திரத் தேடல் உரிமை என்றால் அதை இன்னும் முழுமையாகவும் ஆழமாகவும் கைக்கொள்ளும் கடமையும் இருக்கிறது.[15] இவ்வாறு ஒவ்வோர் உரிமைக்குப் பின்னும் கடமை ஒன்று காத்திருக்கிறது என்பதும் கடமையைத் தவிர்த்து உரிமைகளைப் பெற நினைப்பது அவற்றை உரிமமாகப் பெற முயல்வதற்கு சமம் என்கிறார் திருத்தந்தை பெனடிக்ட்[16] இதையே திருத்தந்தை 23ஆம் ஜான் ''ஒருவன் தன் கடமைகளை புறக்கணித்துவிட்டு உரிமைகளை மட்டும் கோருவது ஒரு கையால் வீட்டைக் கட்டிவிட்டு மறுகையால் அதை இடித்துத் தள்ளுவதற்குச் சமம்'' என்றார்.[17]

ஒவ்வொரு மனிதரிலும் உரிமைகளும் அவ்வுரிமைகள் சார்ந்த கடமைகளும் இருப்பது முதல் நிலையெனில் அதற்கு அடுத்த நிலையில், உரிமைக்கும் கடமைக்கும் உள்ள தொடர்பு ஒரு மனிதரின் உரிமைக்கும் பிறர் அதை ஏற்று மதிக்க வேண்டிய கடமைக்கும் உள்ள உறவாக மலர்கிறது. ஒரு மனிதனின் உரிமைக்குப் பின்னால் இன்னொரு மனிதனின் கடமை இருக்கிறது.[18] ''நான் என் சகோதரனின் காவலாளியா?'' என்னும் கேள்விக்கு ''ஆம்'' என்பதே விவிலியம் காட்டும் அறவியல் தத்துவமாகும்.

## மனித மாண்பு: மனித உரிமைகளின் அடிப்படை

மனித உரிமைகள் என்பது உலக அளவில் பிரகடனப்படுத்தப்பட்டவையாக இருப்பினும் இன்றும் அது எல்லா நாடுகளிலும் முழுமையாக ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்றாக இல்லை. அடிமைத்தனம் இன்று பல்வேறு வடிவங்களில் பல்வேறு நாடுகளில் பரவலாகக் காணப்படுவதும், நிலபிரபுத்துவ மனநிலைகள் இன்னும் பல சமூகங்களில் தொடர்வதும், பல நேரங்களில் அரசின் பல்வேறு முகமைகளே மனித உரிமைகளை மீறும் அமைப்புகளாக இருப்பதும் தொடர்ந்து

சிக்கல்களை ஏற்படுத்துகின்றன. மேலும் இவை மறுமலர்ச்சிக் காலத்தில் ஜான் லாக், ரூசோ உள்ளிட்ட மெய்யியலாளரின் எழுத்துக்களால் புகழ்பெற்றதால் இவை மேலைநாடுகளின் கண்டுபிடிப்பு என்றும், ஐக்கிய நாடுகளில் உருவானதால் இவை பெரும்பான்மையினரின் வாக்கெடுப்பில் உருவானவை என்றும் கருத்துக்கள் முன்வைக்கப்படுகின்றன. அத்தோடு மனித உரிமைகள் மேல் திருஅவை காட்டும் புதிய ஆர்வம், நாகரீகங்களின் மோதலில், மேலை நாட்டு சமூகங்களின் கருத்தாக்கங்களைத் தூக்கிப்பிடிக்கும் திருஅவையின் முயற்சியாகவும் பார்க்கப்படும் வாய்ப்பு உள்ளது.[19]

இக்கருத்துக்களுக்கு எதிர்வினையாற்றிய திருத்தந்தை 23-ஆம் ஜான் மனித உரிமைகள் மனிதர்களின் விருப்பத்தினாலோ அல்லது அரசுகளின் சட்டங்களினாலோ அமைவதல்ல என்றார்.[20] ''உண்மையில் மனித உரிமைகளின் வேர்கள் எல்லா மனிதருக்கும் சொந்தமான மனித மாண்பில் ஊன்றியிருக்கின்றன'' என்று இரண்டாம் வத்திக்கான் திருச்சங்கம் கூறியது.[21] மனிதர் கடவுளின் சாயலாகப் படைக்கப்பட்டிருக்கும் ஆள் என்பதே மனித மாண்பின் அடிப்படையாகும். ''அவனியில் அமைதி'' கூறுவது போல, ''மனிதர் ஆள் என்றிருப்பதாலேயே அவரது இயல்பிலிருந்தே நேரடியாகவே அவருக்கு உரிமைகளும் கடமைகளும் பிறக்கின்றன. இந்த உரிமைகளும் கடமைகளும் உலகம் முழுவதும் பொதுவானதாகவும், மீறப்படக்கூடாததாகவும், வேண்டாமென்று திருப்பித்தர முடியாததாகவும் உள்ளன.'' (25) திருஅவையின் மனித உரிமைத் தாகத்திற்கு எந்தப் பிற நோக்கங்களும் கற்பிக்க முடியாது என்பதை வலியுறுத்திய இரண்டாம் வத்திக்கான் சங்கத்தின் ''சமயச் சுதந்திரம்'' என்னும் ஏடு, ''திருஅவை மனித உரிமைகளைக் கண்டுணர்ந்து அவற்றைப் பிரகடனம் செய்தது என்றால் அது மனித மாண்பின் தப்பிக்க முடியாக் கேள்விகளுக்குப் பதில் சொல்லும் மிகச் சிறந்த முயற்சியே ஆகும்''[22] என்கிறது.

## செய்ய வேண்டியது என்ன?

மனித உரிமைகள் குறித்த விவாதங்கள் தொடர்ந்து கொண்டேயிருக்கும். ஆனால் அது கலைக் கழகங்களின் அரங்குகளில் முடிந்து போகிற வெற்று விவாதங்களாக அமைந்துவிட முடியாது. மனித



உரிமை குறித்த புரிதல்கள் மாறுபடலாம். ஆனால் அவை வேண்டாம் என்று தள்ளி வைத்துவிட முடியாது. ஜோன்ஸ் கூறுவது போல, ''அறிவாளிகளின் பாதுகாப்பான, பட்டுப்பூச்சிக் கூடுபோன்ற உலகுக்கு வெளியே, மக்கள் இன்னும் சித்திரவதைக்குப் பலியாகிக் கொண்டிருக்கிறார்கள். இனஅழிப்புக்கு உள்ளாக்கப்படுகிறார்கள். அடிப்படை சுதந்திரங்கள் மறுக்கப்படுகின்றன. பட்டினியால் இன்னும் செத்துக் கொண்டிருக்கிறார்கள். உரிமைகளை மறந்துவிட நாம் முடிவு செய்வதற்கு முன் இம்மக்களை நாம் நினைத்துப் பார்க்க வேண்டும்.''[23]

இன்று மனித உரிமைகள் குறித்த உரையாடல்கள் நாம் கடவுளின் சாயல் என்னும் வெளிப்பாட்டு உணர்விலிருந்து புறப்படுகிறது என்று சொல்வதை விட இன்று மலிந்து கிடக்கும் சமூக அடக்கு முறைகள், பன்முகச் சித்திரவதைகள், விசாரணையற்ற சிறைத் தண்டனைகள், ஒதுக்கப்படுதல் உள்ளிட்ட பாகுபாடுகள், உலகளாவிய வறுமையை உற்பத்தி செய்யும் பொருளாதார நடவடிக்கைகள் என மறுக்கப்படும் உரிமைகளின் பின்னணியில்தான் மனித உரிமை குறித்த விவாதங்கள் எழுகின்றன.

இது செயல்படும் நேரம். மெய்யியலார்கள் உலகை அலசிப் பார்த்து விட்டார்கள். இனி அதை மாற்றுவதே இப்போதைய தேவை என்று பெயர்பாக்கின் வரிகளை ஒட்டி, மனித உரிமைகளை அலசிவிட்டோம். திருஅவை தன் ஒவ்வொரு நிலையிலும் மனித உரிமைகளை நிலைநாட்டி, ஒடுக்கப்பட்ட மற்றும் ஒதுக்கப்பட்ட மக்களின் உரிமைகளுக்கான போராட்டங்களில் களம் காண்பதே திருஅவையின் இன்றைய கடமையாக இருக்க முடியும்.

## அடிக்குறிப்பு

1. ''மனித உரிமைகள் என்று எதுவுமில்லை. அவைகளை நம்புவது காற்றில் பறக்கும் சூனியக்காரிகளையும் ஒற்றைக் கொம்பு குதிரைகளையும் நம்புவதற்குச் சமம்.'' காண்: Alasdair MacIntyre, *After Virtue* (London: Gerald Duckworth & Co., 1981), p. 67.
2. இன்றைய உலகில் திருச்சபை, எண். 4.
3. Nazila Ghanea, et al. (ed), *Does God Believe in Human Rights? Essays on Religion and Human Rights*,(Boston: Martinus Nijhoff Publishers, 2007).

4. Pontifical Commission "Justitia et Pax", *The Church and Human Rights,* Working Paper No. 1, 2nd Edition, (Vatican City, 2011), p. 17.

5. Cf. Pius VI, Letter *Quod Aliquantum* (10 March 1791); Encyclical *Adeo Nota* (23 April 1791); Pius VII, Apostolic Letter *Post Tam Diuturnas* (29 April 1814); Gregory XVI, Encyclical *Mirari Vos* (15 August 1832); Piux IX, Encyclicals *Nostis et Nobiscum* (8 December 1849) and *Quanta Cura* (8 December 1864). All quoted in Pontifical Commission, 2001.

6. எண். 5, 9, 48, 55, 62, 63, 69.

7. *Quadragesima Anno*, No. 25.

8. காண்: Pontifical Commission, 2001, p. 21-22.

9. காண்: International Federation of Catholic Universities Research Centre, *Human Rights: A Christian Approach* (Manila: UST Printing Office, 1988), p. 124.

10. காண்: அவனியில் அமைதி, எண்கள். 86-89.

11. காண்: அவனியில் அமைதி, எண்கள். 91-93.

12. காண்: அவனியில் அமைதி, எண்கள். 98-99.

13. காண்: அவனியில் அமைதி, எண். 120.

14. காண்: *L'Osservatore Romano,* English edition, 20 December 1973, no. 51, p. 10; *AAS*, LXV (1973), 677).

15. காண்: Pontifical Commission, 2011, p.11.

16. உண்மையில் அன்பு, எண். 43.

17. காண்: அவனியில் அமைதி, எண். 30.

18. Pontifical Commission, 2011, p.11.

19. Cf. Demaine Solomons, *Clash of Civilisation? Human Rights? The West and the Rest: An African Perspective,* http://thoughtleader.co.za/mandelarhodesscholars/2008/05/12/clash-of-civilizations-human-rights/

20. காண்: அவனியில் அமைதி, எண். 78.

21. இன்றைய உலகில் திருச்சபை, எண். 27.

22. Cf. Second Vatican Ecumenical Council, Declaration *Dignitatis Humanae*, 1

23. P. Jones, *Rights* (New York: St Martin's Press, 1994), p. 227.



# 7. திருஅவையின் சமூகப் போதனைகளில் போர், அமைதி ஆகியவை பற்றிய அறநெறிப் பார்வை

***முனைவர் அருள்பணி. கஸ்பார்***
***இயக்குநர், சகாயமாதா மருத்துவமனை***
***புள்ளம்பாடி, கும்பகோணம் மறைமாவட்டம்***

## முன்னுரை

"படைத்தான் படைப்பையெல்லாம் மனவுக்காக மனுவைப் படைத்தான் தன்னை வணங்க" என்ற முதுமொழிக்கு ஏற்ப, படைப்பின் சிகரமாகிய மனிதன் தன்னைப் படைத்தவனை நாடுவதும், வாழ்த்துவதும், வணங்குவதும் வாழ்க்கையின் நிபந்தனையற்ற தேவையாக அமைந்துவிடுகிறது. இறுதியில் அவனை அடைவதையும் அவன் வாழ்க்கையின் அடிப்படைக் குறிக்கோளாக அமைந்துவிட்டது. எல்லா மதமும் மனிதன் அன்போடு, பாசத்தோடு, பரிவோடு, பண்போடு, பகிர்வோடு, கருணை உள்ளத்தோடு, ஈகை குணத்தோடு, ஒற்றுமையோடு, அமைதியோடு, சக மனிதனை சகோதரனாகக் கொண்டு வாழவேண்டும் என்று பணிக்கின்றன. சுருங்கக்கூறின் "அறநெறியோடு வாழ்ந்து" ஆண்டவரை அடைய அழைப்பு விடுக்கின்றது. ஆனால் மனிதன் என்று சமூகமாக வாழத் தொடங்கினானோ அன்றிலிருந்து அவனிடத்தில் பகைமையும் போர்க்குணங்களும் பொறாமையும் தலைவிரித்து தாண்டவமாடுவதைக் காண்கின்றோம். நாம் வாழ்கின்ற காலக்கட்டத்தில், அறிவியல் கண்டுபிடிப்புகளில் சிகரத்தில் இருந்தாலும், உலகமயமாக்கல் சூழலில் உணவு, உடை, இருப்பிடம் என்று அடிப்படை வசதிகளையும் தாண்டி அனைத்து வாழ்க்கைச் சூழல்களில் தன்னிறைவு அடையும் பொழுதிலும் வாழ்க்கையில் "அறநெறி இழந்து வாழ்வதே" தலையாய கடமைபோல் கருத்தில் கொண்டு மனம்போன போக்கில் கால் செல்லும் வழியில் நடக்கிறோம்.

நம் தாய் நாடாகிய இந்தியா பல மதங்களை உருவாக்கிய புண்ணிய பூமியாகும். அமைதிவழி, அன்புவழி என்று உலகிற்கு வழிகாட்டிய அண்ணல்

காந்தியடிகள், மைந்தருள் மாணிக்கம் ஜவஹர்லால் நேரு, அமைதியோடு ஆன்மீகத்தைக் கலந்த இரபிந்தரநாத் தாகூர், உலகப் பொதுமறையாம் ஒப்பற்ற அறநெறி நூலினை உலகிற்கு அளித்து வான் புகழ் கொண்ட அய்யன் வள்ளுவன் போன்ற பல மாமனிதர்களை உலகிற்குத் தந்த நாடு இந்தியத் திருநாடாகும். வன்முறையின்றி அமைதியை அடைய வழிவகுத்த நம் நாட்டில் மட்டுமல்லாது பிறநாடுகளிலும் இன்று அமைதி மறைந்து போர்மேகம் சூழ்ந்து மனித குலத்தை அச்சுறுத்தும் வேளையில் போர், அமைதிக்கான அறம் எப்படி இருக்கவேண்டும் என்று கூறுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## அ. அமைதி என்றால் என்ன?

சாதாரண வழக்கில் “அமைதி” என்ற வார்த்தை எந்த விதமான எதிர்ப்புகள், சண்டை சச்சரவுகள் இல்லாத ஒரு சூழ்நிலையைக் குறிக்கிறது. மேலும், போர்ச் சூழ்நிலையை முடிவுக்குக் கொண்டு வரும்போது ஏற்படுகின்ற சூழ்நிலையையும் அமைதி என்றே பலர் குறிப்பிடுகின்றனர். தனிப்பட்ட மனிதன் தன்மனதில் எவ்விதச் சலனமும் இல்லாமல் எவ்வித உணர்ச்சிகளுக்கும் ஆட்கொள்ளப்படாமல் இருக்கின்ற நிலையை ‘மன அமைதி’ என்று குறிப்பிடுகின்றனர். ஆனால் கிறித்தவம் தனிப்பட்ட சமூகவாழ்க்கைச் சூழலில் இறைவனுடைய உடனிருப்பு உணரப்படும் நிலையை ‘அமைதி’ என்று குறிப்பிடுகின்றது.

யூத எழுத்தாளர் ஹெர்மன் ஹோகன் (Herman Cohen) என்பவர் அமைதி என்பது வாழ்வின் அனைத்துச் சக்திகளும் ஒருங்கமைவில் இருப்பது என்று குறிப்பிடுகின்றார். இந்நிலையில் எதிர்த்தலோ அல்லது மோதலோ கிடையாது. இவ்வாறு எவ்வித எதிர்ப்பும், மோதலும் இன்றி வாழ்வின் சக்திகள் அனைத்தும் ஒருங்கிணைந்து நிற்கும் நிலை அமைதியாகும். இந்த அமைதியை இரு விதங்களில் நோக்கலாம்.

1. எதிர்மறைக் கண்ணோக்கு: போரே இல்லாத சூழல் அமைதி என்று கூறலாம்.
2. நேர்மறைக் கண்ணோக்கு: சமூகத்தின் அனைத்து நிலைகளிலும் வளம் பெற்றுச் செழிப்பாக இருத்தல்.



## விவிலியப் பார்வையில் அமைதி

பழைய ஏற்பாட்டில் ஷலோம் (Shalom) என்ற எபிரேயச் சொல் அமைதியைக் குறித்துக்காட்டப் பயன்படுத்தப்பட்டுள்ளது. இச்சொல் ஷாலம் (SLM) என்ற எபிரேய மூலத்திலிருந்து வருகிறது. இதற்கு முழுமையாக இருத்தல், நிறைவாக இருத்தல் என்பது பொருளாகும். தனிமனித, சமூக நலவாழ்வினை அமைதி என்ற சொல் குறிக்கிறது. இங்கு நலவாழ்வு என்பது உடல் நலம், உள்ள நலம் பொருளாதார வளம் ஆகியவற்றைக் குறிப்பிடுகிறது. எனவேதான் ஷாலோம் என்பது கடவுளின் கொடையாகப் பார்க்கப்பட்டது பழைய ஏற்பாட்டுக் கருத்துப்படி அமைதியை இருவிதங்களில் பார்க்கலாம்:

- நிறைவியல் நோக்கு: உலகப் படைப்புக்கள் அனைத்தும் வரலாற்றின் இறுதியில் நிறைவு பெறுதல் முழு அமைதியாகப் பார்க்கப்பட்டது.
- படைப்பின் தொடக்கநிலை நோக்கு: கடவுள் உலகை அனைத்துக் குழப்பங்களிலிருந்து விடுவித்து அமைதியை நோக்கி இயக்குகிறார்.

யாவே இறைவன் ஆபிரகாம், நோவா, மோசே ஆகியோருடன் ஏற்படுத்திய உடன்படிக்கை அமைதியின் உடன்படிக்கையாகப் பார்க்கப்படுகிறது. இறைவனிடமிருந்து இக்கொடையைப் பெற்றவர்கள் இப்பணியைத் தொடர்ந்தாற்ற அழைக்கப்படுகின்றனர். இஸ்ரயேல் மக்கள் ஒருவரை ஒருவர் அழைக்கும்பொழுதும் வாழ்த்தும் பொழுதும் ஷாலோம் என்ற சொல்லைப் பயன்படுத்துகின்றனர். இவ்வாறு இஸ்ரயேல் மக்கள் வாழ்வோடு ஒன்றிப்போன சொல்லாக மாறிவிட்டது. குறிப்பாக கி.மு.597-587 ஆகிய இடைப்பட்ட காலத்தில் ‘அமைதி’ இறைவாக்கு இலக்கியத்தில் மைய இடம் பெற்றது. மீட்பு, விடுதலை, மகிமை, நேர்மை போன்றவை அமைதியின் விளைவுகளாகப் பார்க்கப்பட்டன (எசா 54:10 62:1-2). மெசியாவை அமைதியின் அரசர் (எசா 53:3) என்றும் அவர் அமைதியின் மகனாக இருப்பார் (மீக் 5:4) என்றும் நாம் காண்கின்றோம்.

சுருங்கக் கூறின் பழைய ஏற்பாட்டில் அமைதி என்பது

1. தீமைக்கு எதிராக இருப்பது
2. உடல் நலத்தோடு இருப்பது குணப்படுத்துதலைப் பரப்புவது

3. நீதியோடு இருப்பது

4. முழு இணக்கத்தோடு இருப்பது.

புதிய ஏற்பாடு அமைதியைச் சுட்டிக்காட்ட கிரேக்கச் சொல்லான 'eirne'-ஐ பயன்படுத்துகிறது. இச்சொல்லுக்குக் குணம் பெறுதல் மற்றும் மீட்பு என்பது பொருள் (லூக் 2:14; 7:50; 10:6). ஆனால் பவுல் 'cuaris' என்ற சொல்லை அமைதியைக் குறித்துக்காட்டப் பயன்படுத்துகிறார் (கலா 1:4). கிறித்து வழியாக இறைவனோடு கொள்ளும் ஒப்புரவு வழியாக அமைதி ஏற்படுகிறது (உரோ 5:1; எபே 1:2). இயேசுவும் இத்தகைய அமைதியை சிலுவையின்மீது வெற்றிகொண்டு உயிர்த்தெழுந்ததால் பெற்றார் என்றும் நாம் விவிலியம் வழியாக அறிகிறோம். இந்த அமைதியைச் சீடர்கள் பரப்ப வேண்டும் என்று கட்டளை பிறப்பிக்கிறார். புதிய ஏற்பாட்டில் அமைதி என்பதை ஐந்து நிலைகளில் விளக்கலாம்.

1. போரில்லா நிலை

2. தந்தை இறைவனோடு கொள்ளும் உறவு

3. நாம் வாழும் மக்களோடு கொள்ளும் உறவு

4. உள் அமைதி, நிறைவு

5. அன்போடு பிறரை அழைத்தல்

விவிலியத்திருந்து அமைதி பற்றிய விவிலியப் புரிதலை இரு வகையில் நாம் பார்க்கலாம். போரிலிருந்து விடுதலையும், தன்னுரிமையும் பெறுதல் மற்றும் தீமையிலிருந்து வெற்றி பெறும்பொழுது ஏற்படும் அமைதி.

### திருஅவையின் போதனைகள்

அகுஸ்தீனார் அமைதி என்பது சலனமற்ற ஓர் ஒழுங்குநிலையாகும் என்று கூறுகின்றார். கத்தோலிக்கச் சமூகச் சிந்தனையில் இச்செய்தி மிகமுக்கியம் பெறுகிறது. திருத்தந்தை 12-ஆம் பியூசு அமைதி என்பது போரில்லாச் சூழலையும், அநீதியின் மேல் வெற்றிகொள்வதால் கிடைக்கும் நிறைவையும் குறிப்பிடுகின்றார். திருத்தந்தை 23-ஆம் யோவான் மனித உரிமையால் கிடைக்கும் பலனாகவும் மனித உரிமை நிலைநாட்டப்படும் பொழுது அமைதி ஏற்படுகிறது என்று குறிப்பிடுகிறார். திருத்தந்தை ஆறாம்



பால் சமூக முன்னேற்றத்தினை அமைதியாகப் பார்க்கிறார். இதில் சமூகப் பொருளாதார உறவு பலப்படுத்தப்படுகிறது.

விவிலியக் கண்ணோக்கின்படி, அமைதி என்பதை மீட்பு முழுமை, இணக்கம், நலம் மற்றும் உறவுக்கான சமூகப் பொருளாதாரம், பரஸ்பர உறவு ஆகியவை அமைதியாகப் பார்க்கப்படுகிறது. அமைதியை அரசியல், பொருளாதாரத் தளத்திலும் விளக்குகின்றனர். இங்கு அமைதி என்பது அரசியலின் நிலைத்தன்மை. நாடுகளிடையே இருக்கும் பன்னாட்டுப் பாதுகாப்பு, பொருளாதார ஒத்துழைப்பு கூட அமைதியாகப் பார்க்கப்படுகிறது.

அமைதியைப் பற்றிய கிரேக்க சிந்தனை அரசியலோடு அமைதியை தொடர்புபடுத்தப்படுகிறது. பழைய ஏற்பாட்டில் இத்தகைய சிந்தனையே காணப்படுகிறது. குறிப்பாகத் தீமையின் மீது வெற்றி, நீதி, இணக்கம் ஆகிய பொருள்களில் விளக்கப்படுகிறது. 'அமைதி உண்டாகுக' என்று சொல்லும் சொல்லுக்கு 'கடவுளோடு செல்' என்ற பொருளும் உண்டு. திருத்தந்தை 11-ஆம் பியூசு 'சமூக ஒழுங்கமைவு' எனும் சுற்றுமடலில், உலகில் பல்வேறு நாடுகளில் காணக்கிடக்கும் பசி, வறுமை, அடிப்படை உரிமைகள் மறுக்கப்படும் நிலை ஆகியவற்றை வசதிபடைத்த மற்றும் வளர்ந்த நாடுகள் களைய முற்படாதவரை சமூக ஏற்றத்தாழ்வுகள் நீக்காதவரை அமைதியை தக்கவைக்க முடியாது என்கிறது. திருத்தந்தை ஆறாம் பால், அமைதியானது நீதியின் அடித்தளத்தின்மீது கட்டப்பட வேண்டும்; அதில்தான் தனிமனித மற்றும் சமூகத்தின் பாவத்தின் பரிணாமங்கள் வெளிப்படையானதாக அமைகிறது என்று தனது சுற்றுமடலான 'மக்களின் முன்னேற்றம்' (எண் 76) என்பதில் கூறுகிறார். அமைதி என்பது அநீதிகளையும் துன்பங்களையும் களைந்து அனைவரும் உடல் உள்ள ஆன்மிக வாழ்வை நிறைவாக வாழும் சூழ்நிலையை உருவாக்குவதேயன்றி, போரே இல்லாத சூழ்நிலையை உருவாக்குவது என்பது ஆகாது.

### ஆ. போர் என்றால் என்ன?

போர் என்ற வார்த்தையை குறுகிய கண்ணோட்டத்தில் நோக்கும்பொழுது படைக்கலன்களைக் கொண்டு இரண்டு நாடுகளுக்கிடையிலும் இரண்டு வகுப்புவாதசக்திகளுக்கு இடையிலும் நடக்கும் நிகழ்வாகும். பரந்துபட்ட கண்ணோக்கில் பார்க்கும்பொழுது ஒரு தனி

மனிதன் அல்லது ஒரு நாடு பலவீனம் அடைந்த நாடுகளின்மீது தனது ஆதிக்கத்தை நிலைநிறுத்த அல்லது தன் நாட்டின் எல்லையை அதிகரிக்க படைக்கலன்களோடும் படைவீரர்களோடும் சந்திக்கும் நிகழ்வு துன்புறுத்தும் போர் என்று அழைக்கப்படுகிறது. மேற்கொண்ட நோக்கில் போர்தொடுக்கும் எதிரியின் கைகளிலிருந்து ஒரு நாடு தன் நாட்டையும் மக்களையும் காப்பாற்றுவதற்குப் படைக்கலன்களோடு படைவீரர்களோடு (Defence) போரில் ஈடுபடுதல் என்பது தற்காப்புப் போராகும்.

### விவிலியத்தில் போர்

இறைவனும் போரும் இணைந்து செல்ல முடியாது என்பதை முதலில் நாம் உணர்ந்துகொள்ள வேண்டும். ஏனெனில் போர் அழிவுக்கும் சாவுக்கும் அழைத்துச் செல்கிறது. இறைவன் வாழ்வுக்கும் மீட்புக்கும் அழைத்துச் செல்கிறார். எனவேதான் இறைவனும் போரும் எதிரெதிர் துருவங்களாக உள்ளன. ஆனால் விவிலியம் காட்டும் கடவுளுடைய கட்டளைகள் பிறவற்றை அழிக்க உத்தரவிடுவதாகக் கூறப்பட்டுள்ளன. மில்காம (Mihamah) என்பது விவிலியத்தில் போரைச் சுட்டிக்காட்ட பயன்படுத்தப்பட்ட சொல்லாட்சி. இச்சொல் விவிலியத்தில் 300 முறை வருவதைக் கண்டு விவிலிய ஆராய்ச்சியாளர்கள் அதிர்ச்சியுறுகின்றனர். இதனால்தான் போர் பற்றிய நிகழ்வுகள், கருத்துக்கள் போன்றவை விவிலியத்தை வாசிப்போரின் இதயங்களை வாடச் செய்கின்றன. எண் 21:14; 1சாமு 18:17,25,28- இப்பகுதிகள் 'போரின் புத்தகம்' என்று அழைக்கப்படுகின்றன. இறைவன் தான் தேர்ந்துகொண்ட மக்கள் சார்பாக, பாரவோன் மன்னனிடம் போர் தொடுத்ததிலிருந்து இஸ்ரயேல் மக்கள் வரலாறு ஆரம்பிக்கிறது. இப்போரில் பாரவோன் தோற்கடிக்கப்பட்டு எகிப்தியப் படைகள் நீரில் மூழ்கடிக்கப்பட்டன. இதில் எபிரேயர்கள் விடுதலை பெற்றனர் (விப 15:1-12). வாக்களிக்கப்பட்ட நாட்டை அடையும் முன் இஸ்ரயேலர்கள் பல்வேறு நாட்டு மக்களோடு போர்தொடுத்தனர். குறிப்பாக எமோரியர்களின் அரசன் சீகோன், எஸ்பானின் அரசன், பாஸானின் அரசன் ஒகு (எண் 21:21-35) ஆகியோர்களிடமும் மிதியானியர்களிடமும் (எண் 31:1-12) போரிட்டனர். இந்தப் போர்களில் எல்லாம் இஸ்ரயேலர்கள் வெற்றிபெற்று பகைவர்களுக்குப் பலமான சேதத்தை உருவாக்கினர். எனவே, பழைய



ஏற்பாட்டில் கடவுளைப் போர் வீரர் என்றும் அவரே போரிடுகிறார் என்றும் சுட்டிக்காட்டப்படுகிறது. முதலாவது, இஸ்ரயேலரைப் பொருத்த அளவில் யாவே இறைவனை ஒரு போர் வீரனாகவே பார்த்தனர். மற்ற இனங்களைக் காட்டிலும் இவர்கள் மிகச்சிறிய (இச 7:7) இனமாக இருந்ததால் தங்கள் நம்பிக்கையைக் கடவுள்மீது வைத்தனர். தாங்கள் உயிர்வாழ்வதற்காகப் பலபோர்களை மேற்கொண்டனர். இப்போரில் எல்லாம் கடவுளே போரிட்டு வெற்றி கொணர்ந்ததாக இவர்கள் நம்பினர். எனவேதான் 'Lord of Hosts in His Name' எபிரேயத்தில் Yahweh Sebaot என்ற சொல் 284 முறை பழைய ஏற்பாட்டில் வந்துள்ளது. Sebaot என்பது வான் படைகள், விண் வீரர்கள் என்பது பொருள். இச்சொல் கடவுளைப் போர் வீரராகக் குறித்துக்காட்டப் பயன்படுத்தப்பட்டுள்ளது. இரண்டாவது, இஸ்ரயேல் மக்கள் இறைவன் ஒரு போர் வீரர் என்று மட்டும் சொல்லிவிடாமல் மாறாகக் கடவுளே போர்தொடுக்கிறவராகக் காட்டுகின்றனர். எனவேதான் கடவுள் என்ற சொல்லுக்கும், போர்வீரன் என்ற சொல்லுக்கும் அவர்கள் எவ்வித முரண்பாட்டையும் அவர்கள் காணவில்லை. ஆனால் புதிய ஏற்பாட்டில் போர் மற்றும் வன்முறை தவறு என்று சொல்லும் நிலைப்பாட்டினையும், பகைவனை மன்னித்து அன்பு செய்யும் மனப்பாங்கையும் நாம் காண்கிறோம்.

### போர், அமைதி பற்றிய திருஅவையின் போதனை

போர் என்பது தவறு, அதை அமைதியான முறையிலே சந்திக்க வேண்டும் என்பது தொடக்கத் திருஅவையின் கருத்தாக இருந்து வந்துள்ளது. இவ்வாறு தொடக்கத் திருஅவையில் போர் மறுப்புக் கொள்கையே காணப்பட்டது. கான்ஸ்டன்டைன் பேரரசனுக்கு முன்புவரை தொடக்கத் திருஅவையில் போர் என்பது அறநெறிப்படி தவறு என்ற சிந்தனையே இருந்தது. ஆனால், இந்தப் பேரரசனின் காலத்தில் இராணுவத்தில் பணிபுரிவது உரிமைக்குடிமக்களின் கடமை என்று ஏற்றுக்கொள்ளப்பட்டது. இக்காலத்தில் திருஅவைத் தந்தையர்கள் உருவாக்கிய 'நீதிப் போர்' கொள்கைகளை ஏற்றுக்கொண்டு ஒரு சில நிபந்தனைகளோடு போரை நியாயப்படுத்தினர். எனவேதான் தூய அம்புரோஸ், தூய அகுஸ்தினார் போன்றோர் தன்னைக் காக்க ஒருவன் பிறரைக் கொல்வதைத் தவறு என்று

சுட்டிக்காட்டவில்லை. இக்கருத்தையொட்டியே ''போரில் ஒருவரைக் கொல்வது, கொலையிலிருந்து வேறுபட்டது'' என்பது திருஅவை தந்தையர்களின் நிலைப்பாடாகும். ஆனால் புனித பசிலியார் கொடூரமான முறையில் இரத்தத்தைச் சிந்துவதற்குத் திருஅவை கடினமாக எதிர்ப்புத் தெரிவிக்கவேண்டும் என்று கூறுகிறார். மேலும் இப்படிப்பட்ட அசுத்தக் கையினை உடையவர் மூன்று மாதங்களாவது திருஉணவில் பங்கேற்கக்கூடாது என்று கூறுகிறார். போருக்கான தேவையை, அதற்கான அறத்தை தூய அகுஸ்தினார் மற்றும் தூய அக்குவின் தோமையார் ஆகியோர் நீதிப் போர் கொள்கைக்கான நிபந்தனைகளை வடிவமைத்தனர். அவை பின்வருமாறு:

- அமைதியை உருவாக்கும் நோக்கம் இருக்க வேண்டும்
- நீதியை நிலைநாட்டும் எண்ணம் வேண்டும்
- கிறித்தவ அன்பு இல்லாத போர் நீதியாகாது. இங்கு அன்பு என்பது இரக்கத்தைக் குறிக்கிறது.
- சட்ட அதிகாரப்பூர்வமான தலைவரின் கீழ் உருவாகும் போர் நீதியானது.
- போர் நீதியான முறையில் நடைபெறவேண்டும்.
- பழிவாங்குதல், வன்முறை, கொடூரம் முதலியவை முற்றிலும் தவிர்க்கப்படவேண்டும். அக்குவின் தோமையாரும் இக்கருத்தை ஏற்றுக்கொள்கிறார்.

அக்குவின் தோமையாருக்குப்பின் போர் பற்றிய கொள்கைகளில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் எதுவுமில்லை. இருபதாம் நூற்றாண்டில் தோன்றிய திருத்தந்தையர்கள் தங்கள் சுற்றுமடலில் போர் பற்றிய கொள்கையைக் குறிப்பிட்டுள்ளனர். குறிப்பாகத் திருத்தந்தை 12-ஆம் பியூசு, பன்னாட்டில் அரசியல், சமூகச் சூழல் அமைதியாக இருக்கவேண்டும் என்று சொல்லும் பொழுதில் போர் பற்றிக் குறிப்பிடுகிறார். ஆனால் திருத்தந்தை 12-ஆம் பியூசு, போர் விளைவிக்கும் கெடுதல்களையும், சமாளிக்க முடியாத சேதங்களையும் உணர்ந்து போருக்கான மூன்று காரணங்களை ஒன்றாகக் குறைத்துவிடுகிறார். அதாவது அநீத முறையில் ஒரு நாடு பிறநாட்டால் தாக்கப்படும் பொழுது அந்த நாடு தன்னைத் தாக்கிய நாட்டின் மீது



போர்தொடுக்க எல்லா உரிமையும் உண்டு. அதே வேளையில் போர் தவறு என்று எடுக்கும் அறநெறித் தேவையையும் இவர் ஏற்கவில்லை. திருத்தந்தை 23-ஆம் ஜான், திருத்தந்தை 6-ஆம் பால் வேறுபட்ட கோணங்களில் நீதிப் போர் பற்றி எழுதியுள்ளார். முதலாவது, 'அவனியில் அமைதி' என்ற சுற்றுமடல் போருக்கு எதிரான நிலைப்பாடு பற்றித் தெரிவிக்கிறது.

முதலாவது போர்க் கருவிகளையும், இராணுவத் தளவாடங்களையும் கட்டுப்படுத்தி பன்னாட்டு அரசியல் மற்றும் நீதி அமைப்புகளை மறுசீரமைப்புச் செய்ய வேண்டும். இராணுவத் தளவாடங்கள் பன்னாட்டு உறவுக்கு மிகப்பெரிய தடையாக உள்ளது என்று திருத்தந்தை குறிப்பிடுகிறார். இரண்டாவது, தனிப்பட்ட சமூகத் தற்காப்பினை அங்கீகரிக்கவில்லை. மூன்றாவது போரைப் பற்றிய திருத்தந்தையின் கேள்விகள் நீதிப் போருக்கான காரணங்களைக் கேள்விக்கு உள்ளாக்குகிறது. அதாவது அணுசக்தி தன் கைவசம் இருப்பதைக் குறித்துப் பெருமை பாராட்டும் நம் காலத்திலே பறிபோன உரிமைகளை மீண்டும் பெறுவதற்குப் போர் பொருத்தமான வழிமுறையே எனக் கொள்வது அறிவுக்கு ஒவ்வாதது. 'அவனியில் அமைதி' இராணுவப் போர் வேண்டாம் என்று அதிகாரப் பூர்வமாக அறிவித்தாலும், போரைப் பற்றிய ஒரு புதிய பார்வையை இச்சுற்றுமடல் தந்துள்ளது எனலாம். மேலும், இம்மடலில் புனித 23-ஆம் ஜான், ஒரு நாடு அடுத்த நாடுகளை அநீதியான முறையில் அடக்கவும் ஒடுக்கவும் நினைப்பதும் அறநெறிப்படி தவறானது. தேவையில்லாமல் அடுத்த நாடுகளின் செயல்பாடுகளில் மூக்கை நுழைப்பதும் தவறான செயலாகும். மாறாக ஒவ்வொருவரும் தங்களுடைய கடமை உணர்வைக் கட்டி எழுப்ப முன்வரவேண்டும். அளவுகடந்த ஆர்வப்பெருக்கோடு அனைத்து நிலைகளிலும் தங்கள் வாழ்வின் முன்னேற்றத்திற்காக உழைக்க முன்வரவேண்டும் (120).

### இரண்டாம் வத்திக்கான் சங்கம்

'இன்றைய உலகில் திருஅவை' என்னும் ஏடு போருக்குப் பதிலாக அகிம்சை என்னும் தத்துவத்தைக் கூறுவதில் தனிச்சிறப்பான பங்கு வகிக்கிறது. எல்லா அமைதி நடவடிக்கைகளும் பயனில்லாமல் செல்லுகின்ற பொழுது சட்டரீதியான தற்காப்பு நடவடிக்கை தேவை என்பதைச் சங்கம்

ஏற்றுக்கொண்டுள்ளது. இங்கும் மரபு ரீதியாகப் புரிந்துகொள்ளப்பட்ட நீதிக்கான காரணங்கள் தெளிவாக இருக்கின்றன. முதலாவது அதிகாரப் பூர்வமான அதிகாரி அறிவிக்க வேண்டும்; இரண்டாவது தகுந்த காரணம் இருக்க வேண்டும்; மூன்றாவது சரியான நோக்கம் இருக்க வேண்டும், மேலும் அமைதியை உருவாக்குவதும், தீமை செய்பவர்களைத் தண்டித்து நன்மை செய்பவர்களை வளரச் செய்வதும் வேண்டும்.

'இன்றைய உலகில் திருஅவை' என்னும் ஏட்டில் பின்வரும் எண்கள் போரைப் பற்றிய அறநெறிக் கருத்துக்களைக் கூறுகின்றது.

எண் 79: போர்களின் மனிதத்தன்மையற்ற பண்புக்குத் தடையமைத்தல்

எண் 80: முழுப்போர்

எண் 81: போர்க்கருவிகள் குவிப்பு

எண் 82: போரை முற்றிலும் தடைசெய்ய அனைத்து நாட்டு முயற்சிகள்

**போர்களின் மனிதத்தன்மையற்ற பண்புக்குத் தடையமைத்தல்**

போரை உருவாக்க மறைவாகச் சதிசெய்தல், கவிழ்த்து வீழ்த்துதல், எதிர்பாராவண்ணம் சிறுகுழுக்களாகத் தாக்கும் போர்கள் மற்றும் பயங்கரவாத முறைகளைக் கையாளுதல் போன்றவை மனிதத்தன்மையற்ற பண்புகளாகக் கருதப்படுகின்றன. இந்நிலையை மாற்ற இயற்கை அறநெறிச் சட்டம் மற்றும் அச்சட்டத்தின் பொதுத் தத்துவங்களைக் கவனத்தில் கொண்டு நாட்டின் பாதுகாப்புச் சட்டங்களை இயற்றவேண்டும். குருட்டுத்தனமாக அரசின் கட்டளைக்குக் கீழ்ப்படிந்து போரில் ஈடுபட்டு குற்றமற்றவர்களையும், சிறுபான்மையினரையும் கொன்று குவிப்பது கொடும் பாதகச்செயல் என்று பன்னாட்டு அளவில் அறிவிக்கச் சங்கம் நாடுகளைக் கேட்டுக்கொண்டுள்ளது.

**முழுப்போர்**

ஒரு நாடு மற்றொரு நாட்டின் மக்கள் மீது தேவையற்ற ஆதிக்கம் செலுத்தும் பொழுது போருக்கான நிலையை உருவாக்கிவிடுகிறது. அரசியல் காரணங்களுக்காக இராணுவத்தைத் தவறாகப் பயன்படுத்தக் கூடாது. ஏனெனில் இராணுவம் மக்களின் நலனுக்காக, பாதுகாவலனாக



நியமிக்கப்பட்டிருக்கிறது. எனவே மக்களின் தன்னுரிமை பறிபோகாத நிலையில் நடந்துகொள்ள வேண்டும்; அமைதியை உருவாக்கிட வேண்டும். ஆனால் இன்று நாம் பார்க்கும் போர் என்பது அழிவினைத் தரக்கூடியதாக அமைகிறது. குடிமக்களில் பலரை அழித்து பெருஞ்சேதத்தை விளைவிக்கிறது. இதைத் தவிர்க்க வேண்டும்; அல்லது கண்டிக்க வேண்டும்.

**போர்க்கருவிகள் குவிப்பு**

உலக நாடுகள் போர்க்களத்தில் பயன்படுத்தும் நோக்கில் இன்று படைக்கலன்களைக் குவிக்கவில்லை. எதிரியை மின்னல் வேகத்தில் அழிக்க வல்ல ஆயுதங்களைக் குவித்து எதிரிகளை அச்சுறுத்த இன்று போர்க்கருவிகள் குவிக்கப்பட்டு வருகின்றன. அதாவது அமைதியை ஏற்படுத்த போரைத்தவிர வேறு வழியில்லை என்ற நோக்கில் உலக நாடுகள் செயல்பட்டுவருவது வேதனையை அளிக்கிறது. போர்க்கருவிகளை வாங்கிக் குவிக்க ஒவ்வொரு நாடும் பலகோடி பணத்தைச் செலவழிப்பதால் அமைதியும் நாடுகளில் சமநிலையும் ஏற்படுவதில்லை. மாறாகப் பய உணர்வை உருவாக்கிப் பிணக்குகளை மற்ற நாடெங்கும் பரப்ப இது உதவிசெய்கிறது. எனவேதான் படைக்கருவிகள் குவிப்பு மனித குலத்தைப் பீடித்துள்ள புரையோடிப் புண்ணாக இருக்கிறது.

**போரை முற்றிலும் தடைசெய்ய அனைத்து நாட்டு முயற்சிகள்**

போரை முடிவுக்குக் கொண்டுவர வேண்டுமெனில் எல்லா நாடுகளும் இராணவத் தளவாடங்களைச் சமரீதியில் குறைத்துக்கொள்ள வேண்டும். அதோடு பெரும் பொருட்சேதம், உயிர்ச் சேதத்தை விளைவிக்கும் போர்கள் அனைத்தும் அறநெறிப்படி தவறென்று அறிக்கையிடவேண்டும். அரசு மேற்கொள்ளவிருக்கும் போர் நடவடிக்கைகள் நாட்டிலுள்ள தனிமனிதன் அல்லது சமூகம் விரும்பாவிடின் அதை எதிர்ப்பதே மனித உரிமையாகும். அமைதி மற்றும் படைக்கருவிகள் நீக்கம் பற்றிப் பேச விரிவான ஆய்வுகள் மேற்கொள்ளப்படவேண்டும். நாட்டுத் தலைவர்களுக்குத் தத்தம் நாட்டுப் பொதுவளங்களைக் காக்கக் கடமையுண்டு. அதேவேளையில் உலகளாவிய பொதுநன்மையைக் காக்க அவர்களுக்குத் தனிச்சிறப்பான கடமையுண்டு

**புனித இரண்டாம் ஜான் பால்**

திருத்தந்தை இரண்டாம் ஜான் பால் பிறரோடு தோழமை கொள்ள அழைக்கிறார். போருக்கு எதிரான தனது கருத்துகளை இவர் வெளியிட்டுள்ளார். குறிப்பாக வன்முறைக்கு எதிராகத் திருத்தந்தை குரல் கொடுத்துள்ளார். திருஅவையின் 'சமூக ஈடுபாடு' (Solicitudo Rei Socialis) என்ற சுற்றுமடலை 1981-இல் எழுதினார். இந்தச் சுற்றுமடலில், அதிகமான பணத்தை ஏழைகளின் வளர்ச்சிக்காகச் செயல்படுத்தாமல், இராணுவத் தளவாடங்களில் அதிகப் பணத்தைச் செலவழிக்க ஒரு நாட்டில் எப்படி முடிகிறது என்று கேள்வி கேட்கிறார் (எண் 10). இராணுவத் தளவாடங்கள், போர்க்கருவிகளின் உற்பத்தி, அணு ஆயுதங்களைப் பதுக்குதல், பாதுகாத்தல், இராணுவ மற்றும் போர்க்கருவிகளை வியாபாரம் செய்வது அறநெறியின் வீழ்ச்சியைக் குறிக்கிறது. இந்நிலை விரைவில் சாவுக்கு அழைத்துச் செல்லுமே தவிர வாழ்வுக்கும் முன்னேற்றத்திற்கும் வழி வகுக்காது (எண் 24). தன் நாட்டின் அடிப்படையில் இராணுவக் கருவிகளைப் பெருக்குவது நீதி எனப்பட்டாலும், இது மெதுவாகச் சாவுக்கு அழைத்துச் செல்கிறது என்பதை குறிப்பிட்டுக்காட்டி இதிலிருந்து விடுபட்டு, தோழமை கொள்ள அழைப்பு விடுக்கிறார். இந்தச் சுற்றுமடல் முழுவதிலும் பாதிக்கப்பட்டவர்கள் பற்றியும், அநீதியான சமூக ஒழுங்குகள் பற்றியும், இராணுவத் தளவாடங்கள் பற்றியும் அதிகமாகக் கூறப்பட்டுள்ளன. இராணுவ ஏகாதிபத்தியத்தை வன்மையாக இச்சுற்றுமடல் கண்டிக்கிறது. வன்முறையற்ற வழிகளில் அரசுகளின் பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்ள இந்தச் சுற்றுமடல் வழிவகுத்துத் தருகிறது. மேலும் 'நூறாமாண்டு' என்ற சுற்றுமடல் 1991-இல் எழுதப்பட்டது. முன்னால் சொல்லப்பட்ட சுற்றுமடலின் அழுத்தமான வடிவம் இந்தச் சுற்றுமடல். திருத்தந்தை போரை முழுமையாகக் கண்டித்துள்ளார். ஏனெனில் ''போர் மனித மாண்பினைக் காக்கத் தவறிவிடுகிறது; சரியான இணக்கத்திற்கு வழிவகுக்காது பொதுநன்மையை அழித்துவிடுகிறது'' (எண். 14). தற்காப்புக்காகப் போர்க்கருவிகளை வைத்திருக்கிறோம் என்று நியாயப்படுத்தினாலும் இந்த எண்ணம் போருக்கான மறைவு நிலையையே காட்டுகிறது. ''மூன்றாம் உலக நாடுகள் போரினால் பாதிக்கப்பட்டுள்ளனர். தீவிரவாதம் பரவியுள்ளது; அணு ஆயுதங்களின் வளர்ச்சியால் உலகமே ஒடுக்கப்பட்டுள்ளது. இந்த நிலை வெற்றியாளர் யாருமின்றி உலக நாடுகளை



போருக்கு அழைக்கிறது.'' இதனால் உலகக் குடும்பத்திற்கே மிகப்பெரிய அழிவாக இருக்கிறது. ''எதற்கு முக்கியத்துவம் கொடுப்பது என்பது பற்றிய மறு சிந்தனை வேண்டும். உலகின் அதிகப்படியான வளங்கள் அனைத்தும் போர் முனையில் பெருகலாம். அதே நேரம் போரில்லா முறை மூலம் இந்த வளங்களை மேலும் பெருக்கி அனைவருக்கும் கிடைக்கும்படிச் செய்யலாம்'' (எண் 28). எனவே மீண்டும் போர் வேண்டாம். நாடுகளுக்கு இடையே நிகழும் பிரச்சினைகளை அமைதி வழியில் பேசித் தீர்த்துக் கொள்ளலாம். இரண்டு சுற்றுமடல்களும் போர் வேண்டாம் என்று குறிப்பிட்டாலும், ''நூறாமாண்டு'' என்ற சுற்றுமடல் 'மீண்டும் போர் வேண்டாம்' என்று கூறுவதுடன் போர் மறுப்புக்கொள்கையை ஆணித்தரமாகக் கூறுகிறது. இராணுவத் தளவாடங்கள், போர்க்கருவிகளை முடிவுக்குக் கொண்டுவருவதன்மூலம் தோழமை உணர்வைக் கட்டியெழுப்பி உலகின் வளங்களைப் பகிர்ந்து சமாதான உலகை உருவாக்க முடியும்.

**முடிவுரை**

இன்று போர்மேகங்கள் சூழ்ந்துள்ள வேளையில் மக்களின் அமைதியான வாழ்வு பறிபோகும் நிலையில் பன்னாடுகள் மக்களின் வளர்ச்சித்திட்டங்களுக்கான பணத்தை இராணுவத் தளவாடங்கள் வாங்கிக் குவிக்கும் நிலையில் திருஅவையின் போர், அமைதி பற்றிப் போதனைகள் காலத்திற்குகந்தவையாகும். தற்போதுள்ள சூழலில் நாடுகள் போர்க்கருவிகளை விற்கப் போரை ஏற்படுத்துகின்றன என்ற சிந்தனை பரவலாகக் காணப்படுகின்றது. இச்சூழலில் திருஅவை உறுப்பினர்கள் மக்களின் வாழ்வை முன்னிருத்தி அமைதியை ஏற்படுத்த வன்முறையை, போரினைக் கண்டிக்கும் மனச்சான்றாகத் திகழவேண்டும்.

# 8. திருஅவையின் சமூகப் போதனைகளில் ஏதிலிகளும் புலம்பெயர்ந்தோரும்

*முனைவர் அருள்பணி. ஆ. குழந்தை க.ச.*
*சென்னை பல்கலைக்கழகம்*
*சென்னை*

ஏதிலிகளும் புலம்பெயர்ந்தோரும் வாழ்விழந்தும் உரிமையிழந்தும் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். இவர்களுக்குப் பல்வேறு அரசு அமைப்புகளும், தொண்டு நிறுவனங்களும் சமய அமைப்புகளும் மனிதநேயப் பணிகளை செய்து வருகின்றன. இதில் கிறித்தவ, குறிப்பாக கத்தோலிக்கத் திருஅவை உரிமை பறிக்கப்பட்ட ஏதிலிகளுக்கும் புலம்பெயர்ந்தோருக்கும் பல்வேறு ஆக்கப்பணிகளைச் செய்து வருகின்றன. திருஅவை வரலாற்றில் வழிபாட்டுத்தளம் சிறையாகவோ (கலிலியோ), அடைக்கலம் தருமிடமாகவோ, நயன்மன்றங்களாகவோ (நீதிமன்றங்கள்) இருந்திருக்கின்றது. குற்றம் சுமத்தப்பட்டவர்களுக்கும், குற்றவாளிகளுக்கும் கத்தோலிக்கக் கோவில்கள் அடைக்கலம் கொடுத்துப் பாதுகாத்தன. கத்தோலிக்கத் திருஅவை ஆவணங்கள் வழியாகவும் மானிடநேயச் செயல்பாடுகள் மூலமாகவும் ஏதிலிகளையும், புலம்பெயர்ந்தோரையும் வழிநடத்துகின்றன. கிறித்தவ, இசுலாமிய, இந்து நாடுகள் ஏதிலிகளையும், புலம்பெயர்ந்தோரையும் உருவாக்கின. திருஅவை அவர்களின் உரிமைக்காகவும் நல்வாழ்வுக்காகவும் மாண்புக்காகவும் உரிமைக்குரல் எழுப்பியது. அதனடிப்படையில் கத்தோலிக்கத் திருஅவை நாடோடி மற்றும் புலம்பெயர்ந்த மக்களுக்கான மேய்ப்புப்பணியின் திருஅவைப் பேரவையும் *கோர் ஊனும் (Cor Unum)* என்ற திருஅவைப் பேரவையும் உரிமைபறிக்கப்பட்டவர்களின் நல்வாழ்வுக்காக உருவாக்கப்பட்டன. இந்த இருஅவைகளும் சேர்ந்து 1992-ஆம் ஆண்டு ஏதிலி: தோழமைக்கு ஒரு சவால் (Refugees: A Challenge to Solidarity) என்ற ஆவணத்தை வெளியிட்டன. இந்த ஆவணத்தில் ஏதிலிகளையும் புலம்பெயர்ந்தவர்களையும் அவர்களின் உரிமைகளையும் பாதுகாப்பு நடவடிக்கைகளையும் மேய்ப்புப்பணி முறைகளையும் தெளிவாக



எடுத்தியம்பியது. அதுபோல திருத்தந்தையர்களின் ஆணைகளும், சுற்றுமடல்களும் திருத்தூது ஒழுங்கமைவுகளும் அறிக்கைகளும் புலம்பெயர்ந்தோர் நாள், ஏதிலி நாள் போன்ற நாட்களில் வழங்கிய சிறப்புச் செய்திகளும் ஒவ்வொரு நாட்டிலுள்ள ஆயர்பேரவை எழுதிய சிறப்பு மடல்களும் உரிமையிழந்தவர்களின் மாண்பையும் உரிமைகளையும் பாதுகாக்கும் முறைகளையும் கடமைகளையும் எடுத்துக் கூறுகின்றன. இந்தக் கட்டுரையில் திருஅவை ஆவணங்கள் முன்வைக்கும் கருத்துகளைப் பதிவுசெய்கிறேன். இதில் உரிமைபறிக்கப்பட்டவர்களின் சொல் விளக்கத்தையும் காரணங்களையும் கடமைகளையும் பொறுப்புகளையும் காணலாம்.

## சொல்விளக்கம்

ஆயுதப் போரினாலும் தவறான பொருளாதாரக் கொள்கையினாலும் இயற்கைச் சீரழிவினாலும் பாதிக்கப்பட்ட, அச்சுறுத்தப்பட்ட மக்கள் உயிருக்கு பயந்து தாய் நாட்டின் எல்லையைக் கடந்து வேறுநாட்டில் அடைக்கலம் தேடும் மக்களை ஏதிலிகள் (அகதிகள், Refugee) என்று அழைக்கின்றனர்.[1] சமயம், இனக்குழு, மொழி, நிறம் போன்றவற்றின் அடிப்படையில் அதிகாரம் காட்டுவதற்கும் பெரும்பான்மையை உருவாக்குவதற்கும் உரிமையை நிலைநிறுத்துவதற்கும் சண்டையிடுவதாலும் அதை எதிர்ப்பதாலும் தங்களுடைய உயிருக்குப் பயந்து வேறு நாட்டிற்கு ஓடுபவர்கள் ஏதிலிகளாவர். ஏதிலிகள் கட்டாயத்தினால் வெளியேற்றப்படுகின்றனர். ஆனால் பொருள் ஈட்டுவதற்காக விரும்பி தாய் நாட்டிற்குள்ளோ வெளிநாட்டிலோ குடியமர்பவர்கள் புலம்பெயர்ந்தவர்கள் (Migrants) என்று அழைக்கப்படுகின்றனர். இவர்கள் பெரும்பாலானோர் வறுமையின் காரணமாக வேறு இடத்திற்குச் செல்கின்றனர். தாய்நாட்டின் எல்லையைக் கடக்காமல் தங்களுடைய வீடுகளையும், பிறந்த இடங்களையும் விட்டு வெளியேறி தாய்நாட்டிற்குள்ளேயே கட்டாயத்தின் அடிப்படையில் இடம் மாற்றப்பட்டு வாழ்பவர்களை இடம் மாற்றப்பட்டோர் (Internally Displaced People - IDP) என்று அழைக்கப்படுவர்.[2] இந்த ஆவணம் தாய்நாட்டிற்குள்ளும் வேறு நாட்டிற்குள்ளும் விரும்பியோ விரும்பாமலோ இடம் பெயர்ந்தவர்களை புலம்பெயர்ந்தோர் என்று அழைக்கிறது,

தங்களுடைய வாழ்வைப் பயமுறுத்துகின்ற பொருளாதாரச் சூழலைவிட்டு ஓடுபவர்களும் தங்களுடைய பொருளாதார நிலையை உற்பத்தி செய்துகொள்வதற்காக இடம் பெயர்பவர்களும் வேறுபட்டவர்கள். இவர்களை ஒரே நிலையில் வைத்துப் பார்க்காமல் இருவேறுபட்ட நிலையில் அணுகுவது நயனும் சமத்துவமுமாகும் என்று ஆவணம் கூறுகிறது.[3] உயிருக்குப் பயந்து ஓடுபவர்களுக்கு அதிக கவனம் செலுத்த வேண்டும். ஏனென்றால் அவர்களுக்கு எந்த உரிமையும் வேறுநாட்டில் இல்லை. ஆனால் விரும்பிச் செல்பவர்களுக்கு பாதுகாப்பு உரிமை உள்ளது. தாய் நாட்டில் மிகவும் கொடூரமாக பயமுறுத்தப்படும்போது அடைக்கலம் தேடுவோரின் அடிப்படை உரிமை மதிக்காமல் மறுக்கப்படும் ஏதிலிகளுக்கு முன்னுரிமை கொடுக்கப்படவேண்டும்.[4] விருப்பத்தின் அடிப்படையில் புலம் பெயர்பவர்களுக்குப் பாதுகாப்பு ஆவணங்களும் உரிய சட்டப்பாதுகாப்பும் இருக்கின்றன. அதனால் ஏதிலிகளுக்கு முன்னுரிமை கொடுக்க வேண்டுமென்று இந்த ஆவணம் தெளிவுபடக் கூறுகிறது.

## கடப்பதற்குக் காரணங்கள்

வறுமையின்மீது தனிக்கவனம் செலுத்தி அதைப் போக்குவதற்கு நிலையான அரசியல் தீர்வு காணாமை, உற்பத்தி வளங்களைச் சரிசமமாகப் பகிராமை, வெளிநாட்டிலிருந்து பெறப்பட்ட கடன்சுமை, வேகமாக உயரும் பணவீக்கம், அமைப்பு சார்ந்த பொருளாதாரச் சார்புநிலை, இயற்கைச் சீரழிவு, அதிகாரவெறி போன்ற காரணங்கள் ஏதிலிகளையும், புலம்பெயர்ந்தோரையும் உருவாக்குகின்றன என்று திருஅவை ஆவணங்கள் கூறுகின்றன.[5] ஏதிலிகளும் புலம்பெயர்ந்தோரும் பிறக்கவில்லை உருவாக்கப்படுகின்றனர் என்று திருஅவை ஆவணங்கள் தெளிவுபட விளக்குகின்றன. ஒருவர் மற்றவரை வலுப்படுத்துவதிலும் வேற்றுமையில் ஏற்றுக்கொள்வதிலும் நாடுகளிடையேயும் மக்களிடையேயும் தவறாக அதிகாரத்தைப் பயன்படுத்துவதால் ஏதிலிகளும் புலம்பெயர்ந்தோரும் உருவாக்கப்படுகின்றனர். ஆதிக்க வர்க்கமும் அரசும் திட்டமிட்டு வறுமையை உருவாக்கி நிலைநிறுத்துவதால் உரிமை பறிக்கப்பட்டு மக்கள் நாட்டைவிட்டு வெளியேற்றப்படுகின்றனர். ஒவ்வொரு இனக்குழுவிற்கும், நிறத்திற்கும் மொழிக்கும் சமயத்திற்கும் உள்ள அதிகாரமோகத்தால் போரும் பயமுறுத்தும்



சூழலும் கொடுமைகளும் உருவாக்கப்படுகின்றன. இதனால் தாங்கமுடியாத துன்பங்களை ஏதிலிகளும் புலம்பெயர்ந்தோரும் தினமும் சந்திக்கின்றனர் என்று திருத்தந்தை 23-ஆம் யோவான் 1963-ஆம் ஆண்டு எழுதிய *தரணியில் அமைதி* (*Pacem in Terris*) என்ற ஆவணத்தில் பதிவுசெய்கிறார்.

கொடுமைகளைத் தாங்கமுடியாமல் உயிருக்குப் பயந்து வேறு நாட்டில் வாழ வெளியேறுகின்றனர். இவர்கள் தாய்மண்ணிலிருந்தும், பண்பாட்டிலிருந்தும் பிடுங்கி எறியப்பட்டவர்களாக இருக்கின்றனர். இவர்கள் புண்பட்டவர்கள், முரண்பாடுகளால் பாதிக்கப்பட்டவர்கள், ஒருவர் விரும்பி ஏதிலியாக மாறவில்லை. ஆனால் மாற்றப்படுகின்றனர். ஏதிலிநிலை மதிப்பிற்காக கொடுக்கப்படும் பட்டமில்லை. பிற மக்களிடமிருந்து அன்னியப்படுத்தும் அடையாளமாகும்.[6] அவர்கள் குடிமக்களாகக் கருதப்படுவதில்லை. தேசியம் என்ற நாடியம் எல்லைகளை உருவாக்கி, கட்டுப்பாடுகளை ஏற்படுத்தி, சட்டங்களால் தடைவிதித்ததனால் ஏதிலிகளும் புலம்பெயர்ந்தவர்களும் உருவாக்கப்படுகின்றனர்.

## மானிட மாண்பு

எண்ணிக்கையில் அதிகமாகவும் போரினால் பாதிக்கப்பட்டவர்களும் மிகவும் மோசமான முகாம் சூழலில் வாழ்பவர்களும் உடல்சார்ந்த தேவைமட்டுமல்ல உளம்சார்ந்த தேவைகளைச் சார்ந்தவர்களும் ஏதிலிகளும் புலம்பெயர்ந்தவர்களும் ஆவர்.[7] கத்தோலிக்கத் திருஅவையும் பிற திருஅவையும் சமயங்களும் அரசும் குமுக ஆர்வலர்களும் இவர்களை மனிதமாண்புடன் நடத்தவேண்டுமென்று திருஅவை ஆவணங்கள் வலியுறுத்துகின்றன. 1981-ஆம் ஆண்டு திசம்பர் 20-ஆம் நாள் அன்று கலாபிரியா ஆயர்களைச் சந்தித்த திருத்தந்தை தூய 2-ஆம் யோவான் பவுல் மனிதர்களைப் பாதுகாக்கும் திருஅவை புலம்பெயர்ந்தோரையும் ஏதிலிகளையும் பாதுகாக்க மறக்கக்கூடாது என்றார். ஏனென்றால் பாதிக்கப்பட்டவர்கள் மனிதமாண்பு பெற்றவர்களாக இருக்கின்றனர்.[8] பாதிக்கப்பட்டவர்களின் மனிதமாண்பைப் பாதுகாக்க வேண்டுமென்றால் அவர்களை வரவேற்க வேண்டும். வரவேற்பு என்பது புலம்பெயர்ந்தோரின் சிக்கலுக்குத் தரும் முதல் குறிப்பிட்ட பதிலிறுப்பாகும் என்று

*புலம்பெயர்ந்தோருக்கான கிறித்துவின் அன்பு* (*Erga Migrantes Caritas Christi*) என்ற ஆவண எண் 38,49-55 கூறுகின்றன.[9] பல்லாயிரக்கணக்கான உழைப்பாளிகளின் மாண்பையும் உரிமைகளையும் பாதுகாக்க வேண்டுமென்று 13-ஆம் லியோ *மூலதனமும் உழைப்பும்* (*Rerum Novarum*) என்ற சுற்றுமடலில் கூறுகிறார். இதைக் காலத்தின் அறிகுறியாக *இன்றைய உலகில் திருஅவை* (*Gaudium et Spes*) எண் 4-6 கூறுகின்றது.

பாதிக்கப்பட்டவர்களை வரவேற்பது ஒரு விவிலிய அறநெறியாகும். இயேசு நான் அன்னியராக இருந்தேன் என்னை வரவேற்றீர்கள் (மத் 25:35) என்று கூறினார். அதனால் வரவேற்பது மானிடரின் முக்கியக் கடமையாகும். இந்த வரவேற்பை மறந்தோமென்றால் மானிட வாழ்வின் அடித்தளத்தை இழந்துவிடுகிறோம் என்று செருமானிய ஆயர் பேரவையின் தலைவராக இருந்த ஆயர் கார்ல் இலேமென், மயின்சு ஆயர் 25.11.1992 அன்று கூறினார்.[10] ஏதிலிகளும் புலம்பெயர்ந்தவர்களும் பலவீனப்படுத்தப்பட்ட அந்நியர்களாக மாற்றப்பட்டதால் அவர்களை வரவேற்க வேண்டும்.[11] அந்நியர்களை வரவேற்பது ஒற்றுமையின் குறியீடாகவும் திருமுழுக்கின் மரபை வெளிப்படுத்துவதாகவும் திருஅவைக்குக் கிடைத்த கொடையாகவும் கருதப்படுகின்றதென அமெரிக்க ஆயர் பேரவை கருதுகின்றது. நிறம், மொழி, இனக்குழு, நாடு, சமயம், பண்பாடு ஆகியன கடந்து எல்லோரையும் சமமாக வரவேற்க வேண்டும் என்று *இன்றைய உலகில் திருஅவை* எண் 29 கூறுகின்றது.[12] இந்த வரவேற்பு கிறித்தவ அன்பில் அடித்தளமிட்டிருக்கிறது. அடுத்தவருக்கு குறிப்பாக மிகவும் பாதிக்கப்பட்ட தேவையுள்ளவருக்கு நன்மை செய்வது இறைவனுக்குச் செய்ததாகும் என்று புலம்பெயர்ந்தோருக்கான ஆவணம் எண் 40 கூறுகிறது. அதனால் மானிடத்தோழமை, கிறித்தவ அன்பு ஆகியவற்றின் கடமையாக அயலாரை வரவேற்க வேண்டும். சகோதர அன்புடன், நேர்மையான தாக்கமுள்ள கிறித்தவ அன்புடன், உயர்ந்த ஆன்மீக விழுமியங்கள் காணப்படுகின்ற நயன்மையுள்ள வாழ்வோடும் வரவேற்க வேண்டுமென்று திருத்தந்தை தூய ஆறாம் பவுல் தன்னுடைய மடலில் விளக்குகிறார்.[14] சகிப்புத்தன்மையுடன் எவரையும் விரட்டியடிக்காமல் ஏற்று வரவேற்பது மானிட மாண்பை ஏற்பதாகும். வரவேற்பது திருஅவையின் அடிப்படையான கடமையும் கொள்கையுமாகும். வரவேற்பு, தோழமை, உதவி செய்வது தலத்திருஅவையின் தலையான கடமையாகும். தனிமையில், தேவையில் இருக்கும் ஏதிலிகள், புலம்பெயர்ந்தோர் ஆகியோரில் வேறுபாடுகாட்டாது அணுகி நற்செய்திக்கு உருக்கொடுக்கவேண்டும். தனிப்பட்ட தொடர்பு, குழு மற்றும் தனிநபர்களைப் பாதுகாப்பது, நயனற்றவைகளுக்கு மூலக்காரணமாக இருப்பவைகளை அப்புறப்படுத்துவது, சிறந்த பாதுகாப்பைத் தரும் சட்டங்களை இயற்ற வழிதேடுவது, அச்சத்தைப் போக்க கல்வி தருவது, உடனடி நிதி, தன்னார்வத் தொண்டர் குழுவை உருவாக்குவது, ஆன்மீக உதவி தருவது போன்றவை வழியாக வரவேற்பை வழங்கவேண்டும் என்று புலம்பெயர்ந்தோர்க்கான மேய்ப்புப்பணியின் திருஅவைப் பேரவை வலியுறுத்துகிறது.[15] சட்டத்திற்குப் புறம்பாக வரும் ஏதிலிகளையும் புலம்பெயர்ந்தோரையும் சகோதர சகோதரிகளாக வரவேற்க வேண்டுமென்று திருத்தந்தை தூய 2-ஆம் யோவான் பவுல் 1995-ஆம் ஆண்டு சூலைத் திங்கள் அன்று பேசினார்.

வரவேற்று விருந்தோம்பல் தரவேண்டும். விருந்தோம்பல் கிறித்தவர்களுக்கு முழுநேரப் பணியாகவும் ஆன்மீகமாகவும் வாழ்க்கையின் வழியாகவும் இருக்கிறது.[16] வரவேற்பு, விருந்தோம்பல் ஆகிய பணிகள் கொடுப்பதல்ல அல்லது செய்வதல்ல மாறாக இருத்தலாகும், உடனிருத்தலாகும், ஏதிலிகளோடும் புலம்பெயர்ந்தோரோடும் மானிட உறவை கட்டியெழுப்புவதாகும். எனவே விருந்தோம்பல் என்பது பிறருக்கு ஏதோ செய்வது அல்லது கொடுப்பதல்ல, மாறாக பிறருடன் உடனிருத்தலாகும். இந்த உடனிருப்புக் குழுவிலும் தனிநபரிலும் மிகப்பெரிய மறுஉருவத்தையும், மனமாற்றத்தையும் ஏற்படுத்தும் ஆற்றல் பெற்றது.[17] விருந்தோம்பல் ஒரு விவிலிய கருத்தியலாகும். எகா. ஆபிரகாம் அந்நியருக்கு உணவு வழங்குவது, விருந்தினருக்கு உணவு பரிமாறுவது (மத் 25:1-13; லூக் 12:35). எந்த நேரத்தில் வந்தாலும் உணவு தருவது (லூக் 11:5; மத் 15:23) ஆகியன அந்நியருக்கு விருந்தோம்பல் தருவதின் எடுத்துக்காட்டுகளாகும்.[18] கடவுள் மனிதனைத் தன்சாயலாகவும் பாவனையாகவும் படைத்ததால் மானிடர் மாண்பைப் பெற்றார் (தொ.நூ 1:23). இந்த மாண்பை சிதைக்காமல் அவர்களை வரவேற்று விருந்து படைத்து காப்பது மானிடரின், குறிப்பாகக் கிறித்தவர்களின் கடமையாகும்.

## தோழமை

ஏதிலிகளோடும் புலம்பெயர்ந்தவர்களோடும் உடனிருந்து தோழமையை உருவாக்க வேண்டும். தோழமை நல்லதையும் தீயதையும் பகுத்துப் பார்த்து செயல்படத் தூண்டுகிறது. தோழமையில் நம்முடைய செயல்பாடுகளை முடிவுசெய்யும் முடிவுகள் விடுவிப்பதாகவும் சுயஆற்றல்படுத்துவதாகவும் இருக்கின்றன. சுற்றிநடப்பதைப் பார்ப்பதும் மானிடரைக் கண்ணோக்குவதும் பதவி பட்டத்திலிருந்து இறங்கி வருவதும் பாதிக்கப்பட்டவர்களை நோக்கி நடப்பதும் தம்மிடமுள்ளதைப் பகிர்ந்துகொள்வதும் காயங்களுக்குக் கட்டுப்போடுவதும் தன்னுடைய விருப்பத்தைவிட பிறருடைய தேவைகளை முன்நிறுத்துவதும், அவர்களோடு உடன்பயணிப்பதும், ஒத்துழைப்பதும் எதிர்கால வாழ்வு உள்ளதென உறுதிதருவதும் தோழமையின் வெளிப்பாடுகளாகும். இதனால் இறைவனோடு உறவை ஏற்படுத்தி வாழ்வதுபோல் பாதிக்கப்பட்டவர்களோடு உறவை ஏற்படுத்தி செயல்படுவதுதான் இறைஅன்பாகுமென்று திருத்தந்தை 16-ஆம் பெனடிக்ட் *கடவுள் அன்பாக இருக்கிறார் (Caritas Deus est)* என்ற சுற்றுமடலில் விளக்குகிறார்.[19] இந்த அன்பு தற்கையளிப்பு செய்கிறது. தற்கையளிக்கும் அன்புக்குப் பரிவிரக்கமும் துணிவும் தேவைப்படுகின்றன. தோழமை என்றால் தோழராக இருப்பதாகும். சொற்பிறப்பியலின்படி தோழர் என்றால் ஒருவரோடு உணவை பகிர்ந்து கொள்பவர்.[20] வாழ்வைத்தேடும் ஏதிலிகள், புலம்பெயர்ந்தோர் ஆகியவர்களோடு நடப்பது, அவர்கள் சொல்வதைக் கவனமுடன் செவிமடுப்பது, வாழ்விழக்கூடிய நிகழ்வுக்குப் புதிய விளக்கம் தருவது, சுதந்திரத்தை மதிப்பது, அவர்களுக்காகக் காத்திருப்பது, உணவுபகிர விடுக்கப்படும் அழைப்பை ஏற்பது, உணவு பகிரப்படுவது, கண்ட உண்மையைப் பகிரச் சொல்வது ஆகியன தோழமையின் வெளிப்பாடுகளாகும்.

இந்தத் தோழமையில் ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்தலும் பெற்றுகொள்ளுதலும் இருக்கின்றன. இது மிகவும் முக்கியமானது. ஒருவரொருவரை மதிப்பது, உரிமைக்குரல் கொடுப்பது ஆகியவற்றில் உறவு கட்டப்படுகிறது. கொடுத்தல்-வாங்குதல் நம்முடைய உள்ளத்தின், ஆன்மாவின் செயல்பாடாகும். இந்தச் செயல்பாடு சேர்ந்து வாழத் தூண்டுவதும், சமமான உரிமைகளும் கடமைகளும் தருவதற்குப்



பயன்படுகின்றது என்று புலம்பெயர்ந்தோருக்கான கிறித்துவின் அன்பு என்ற ஆவணம் எண் 64 விளக்குகிறது.[21] அவர்களுடைய பண்பாடுகளை மதித்து நல்ல பாடத்தை நாம் கற்றுக்கொள்ளவேண்டும். எந்தப் பண்பாடும் நிறைவானதாகவும் நிலையானதாகவும் இல்லை. ஆனால் குறைவானதாகவும் பன்மைத்தன்மையுடன் காணப்படுகிறது. அதனால் பண்பாட்டுப் பன்மைத்தன்மையை தோழமை வளர்க்கிறது. எனவே பல்வேறு பண்பாடுகளிடையே உரையாடல் நடத்தி ஒப்புரவாக்கப்பட்ட உலகை உருவாக்க பண்பாட்டைப் பயன்படுத்தவேண்டுமென்று திருத்தந்தை தூய 2-ஆம் யோவான் பவுல் உலகப் புலம்பெயர்ந்தோர் நாள் 2004 அன்று ஆணித்தரமாக அறிவிக்கிறார்.[22] பன்மைத்தன்மையை வளர்க்கக்கூடிய திருவிருந்தைக் கொண்டாட திருஅவை ஆவணங்கள் பரிந்துரைக்கின்றன. அதனால் பலவீனமான உரிமையிழந்த ஏதிலி, புலம்பெயர்ந்த மக்கள்மீது கவனம் செலுத்தி தோழமையை வளர்த்து உடனிருந்து உயிர்தருவதுதான் திருவிருந்தின் தூயவாழ்வாகும். இந்தத் தூய வாழ்வில் காணப்படும் செயல்பாட்டு அன்பு வழிபாட்டின் மெய்மைத்தன்மையை நிரூபிக்கும் அளவுகோலாகுமென திருத்தந்தை 16-ஆம் பெனடிக்ட் கூறுகிறார்.[23] ஏதிலி, புலம்பெயர்ந்தோர் ஆகியோருடன் உடனிருந்து பண்பாடுகளைப் பாதுகாத்து உயிர்தருவதுதான் உண்மையான திருவிருந்தாகும். திருவிருந்து தோழமையை வளர்த்து பாதுகாக்க சிறந்த இடமாக இருக்கிறது. திருவிருந்தில் வரவேற்பும், விருந்தோம்பலும், மானிட மாண்பும், தோழமையையும் பண்பாட்டு பன்மைத்தன்மையும் இருக்கின்றன. இந்தத் தோழமை உணர்வு எப்பொழுதும் பொதுநலனைப் பேணிப்பாதுகாத்து வருகின்றது.

## பொதுநலன்

மானிட மாண்பும் தோழமையும் பொதுநலனைப் பாதுகாக்கப் பயன்படுகின்றன. பொதுநலன் தனிநலனையும் குழுவையும் குடும்பத்தையும் நலமாக வாழச்செய்கின்றது. அதனால் உலகத்தை இல்லம் என்று அழைக்கிறோம். அந்த இல்லத்தில் பொதுநலன் அறமாக இருப்பதால் இல்லறம் என்று கருதுகிறோம். அதனால் திருஅவையின் திருத்தந்தையர்கள் பொதுநலனை மையமாக வைத்து இயங்கும் குடும்பத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கின்றனர். குடும்ப நலனே உலக நலனாக இருக்கிறது. குடும்பத்தைச்

சிதைத்தால் ஏதிலிக்குடும்பங்கள், புலம்பெயர்ந்தோர் குடும்பங்கள் உருவாக்கப்படுகின்றன. சிதைக்கப்பட்ட, சிதறடிக்கப்பட்ட குடும்பங்களை ஒன்றுசேர்த்து வாழவைப்பதுதான் பொதுநலத்தின் நோக்கமாகும். சிதறடிக்கப்பட்ட குழந்தைகளின் கல்வியையும் நிரந்தரமாக்குவதிலும் குடும்பத்தில் பிரிந்த கணவன் மனைவியை ஒன்றுசேர்ப்பதிலும் சிக்கல்கள் எழுகின்றன. குடும்பத்தில் தாயினுடைய முக்கியப்பங்கு இல்லாமல் குடும்பத்தையும் குழந்தைகளையும் வளர்த்தெடுப்பது மிகவும் கடினமாகும் என்று 07.06.2005 அன்று நடைபெற்ற ஐரோப்பிய ஆங்கிலிக்க மறைமாவட்டத்தினுடைய மாமன்றத்தில் முனைவர் நில்டா எம். காசுதிரோ புலம்பெயர்ந்தோர் மற்றும் ஏதிலிகள் நடுவில் திருஅவை என்ற தலைப்பில் உரையாற்றும்போது இவ்வாறு கூறினார்.

திருத்தந்தை 12-ஆம் பியூசு இயேசுவின் குடும்பம் அன்னிய நாட்டில் அடைக்கலம் தேடி வாழ்ந்தது (மத் 2:13-14) ஒரு பெரிய மாதிரிகை என்று நாடுகடத்தப்பட்ட திருக்குடும்பம் (Exsul Familia - 1952) என்ற புலம்பெயர்ந்தோருக்கான திருத்தூது ஒழுங்கமைவு என்ற ஆவணத்தில் வெளிப்படுத்துகிறார். இந்த நிகழ்வின் வழியாக எவருக்கும் இவ்வுலகில் நிரந்தர வீடு இல்லையென கூறுகிறார். இதனால் சுயநலம் மடிந்து தோழமை மலர்கிறது. யோசேப்பு, மரியா, குழந்தை இயேசு ஆகியோர் அடைந்த வேதனையைப் புலம்பெயர்ந்தோர் அனைவரும் பிடுங்கி எறியும்போது அனுபவிக்கின்றனர் என்று கூறுகிறார். நலமான வாழ்வைத் தேடி குடும்பத்தோடு புலம்பெயர உரிமையுண்டு என்று திருத்தந்தை தூய 2-ஆம் யோவான் பவுல் *நவீன உலகில் குடும்பம் (Familiaris Consortio)* எண் 46-இல் குறிப்பிடுகிறார். உடல் சார்ந்த, ஆன்மீக சார்ந்த, சமயம் சார்ந்த, குடும்ப நலன் சார்ந்த கடமைகளை நிறைவேற்ற புலம்பெயர்கின்றனர். தகுதியான வாழ்வாதரத்தைத் தேடிச் செல்வது ஒருவகையான கட்டாயப்படுத்தப்பட்ட புலம்பெயர்தலாகும். சிதறடிக்கப்பட்ட புலம்பெயர்ந்த குடும்ப உறுப்பினர்கள் ஒன்றுசேர்ந்து வாழ உரிமை உள்ளதென *இன்றைய உலகில் திருஅவை (Gaudiam et Spes)* எண் 66-ம், தூய 23-ஆம் யோவானும், திருத்தந்தை 12-ஆம் பியூசு தெளிவுபட விளக்கினர். அரசியல், உற்பத்தி, ஆதாயம் ஆகியவற்றைவிட குடும்பத்தில் உறவைத்தான் முன்னிலைப்படுத்துகின்றனர். தாய் தந்தை, குழந்தைகள், பெற்றோர்கள்



போன்றவர்களைப் பிரித்து வைக்கும் அமைப்புகளை வன்மையாக திருத்தந்தை தூய 2-ஆம் யோவான் பவுல் உலகப் புலம்பெயர்ந்தோர் நாள் 1986 அன்று கண்டிக்கிறார். பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்களைப் பாதுகாப்பது தவிர்க்க முடியாத, சமரசம் செய்யமுடியாத கடமையாகும்.

குடும்ப மதிப்பீடுகளையும் சுதந்திரத்தையும் புலம்பெயர்வதற்கான உரிமையையும் முடிவெடுக்கும் உரிமையையும் தங்களுடைய பண்பாடு, சமயம், மரபு ஆகியவற்றிற்கேற்ப குழந்தைகளுக்குக் கல்வி கொடுத்து வளர்த்தலையும் பாதுகாக்கும் உரிமையையும் திருஅவை பாதுகாக்கவேண்டும் என்று ஏதிலி: தோழமைக்கு ஒரு சவால் என்ற திருஅவை ஆவணம் வலியுறுத்துகிறது. திருஅவையில் எவரும் அந்நியரல்லர். திருஅவையில் எல்லோரும் உறவினர்கள். அதனால் சிதறிப்போன குடும்பங்களை விரைவாக ஒன்றுசேர்க்க உலக நிறுவனங்களின் அதிகாரிகளிடமிருந்து உதவி பெற உரிமையுண்டு. அடைக்கலம் பெற்ற நாட்டின் பண்பாட்டோடு கலந்துவிடாமல் தங்களுடைய தனிப்பட்ட அடையாளத்தோடு தொடர்புடைய பண்பாட்டை, பற்றுறுதியை, ஆன்மீகத்தை பாதுகாக்க உரிமையுள்ளது. அதே சமயத்தில் பிறபண்பாடுகளைச் சந்திக்கும்போது தங்களுடைய மரபைத் திரும்பிப் பார்க்க வாய்ப்புக் கிடைக்கிறது. கடவுச்சீட்டு, அனுமதித் தாள் போன்ற ஆவணங்களின்றி நுழைபவர்களையும் சட்டத்திற்கு ஏற்றவாறு நுழைபவர்களையும் சமமாக ஏற்று மனிதமாண்பு, குடும்பவாழ்வு உரிமை ஆகியவற்றை மதித்துப் பாதுகாக்க வேண்டும் என்று *அமெரிக்காவில் திருஅவை* (Ecclesia in America 27.01.1999) என்ற ஏடு கூறுகிறது. விவிலியத்தில் (விப 23:9; லேவி 19:33; மத் 25:35; 1யோவா 4:11) கூறப்பட்டுள்ள முறையில் அன்னியர்களைப் பாதுகாக்க வேண்டும். சாதி, சமயம், நிறம், இனக்குழு, மொழி, நாடு போன்ற எல்லையுள்ள தடைகளைக் கடந்து எல்லையற்ற புலம்பெயர்ந்த, ஏதிலிகளின் குடும்பங்களை வரவேற்றுப் பாதுகாக்கின்ற போது பொதுநலன் வெளிப்படுகிறது. மானிடச் சார்புநிலை அதிகரிப்பதாலும் மானிடக் குடும்ப ஒற்றுமை உலகம் முழுவதும் பரவுவதாலும் சமத்துவ, இயற்கையான மாண்பை அனுமதிக்கின்ற மக்களை ஒன்றுசேர்க்கும்போது பொதுநலன் வெளிப்படுகிறது என்று கத்தோலிக்கத் திருஅவையின் மறைக்கல்வி அறிவுறுத்துகின்றது. பொதுநலனை பாதுகாத்தால் உரிமை

பறிக்கப்பட்டவர்களின் பிரச்சினைகள் தீருமென்று திருஅவை ஆவணங்கள் கூறுகின்றன.

## பதிலிறுப்பு

பல்வேறு துன்பங்களை அனுபவிக்கும் அந்நியர்களைக் கடவுள் நம்பிக்கை உள்ளவர்கள் வரவேற்க வேண்டுமென்று 'தோரா' என்ற சட்ட நூல் கூறுவதை ஏற்று விருந்தோம்பல், தாராளமனம் ஆகியவற்றை கொடுத்து பாதுகாக்கக் கடவுள் அறிவுறுத்துகிறார். துன்பத்தில் வாழ்ந்த இசுராயல் மக்கள்மீது தனிக்கவனம் செலுத்தி பாதுகாத்ததுபோல திருஅவை பாதிக்கப்பட்டவர்களைப் பாதுகாக்க வேண்டுமென்று திருத்தந்தை தூய 2-ஆம் யோவான் பவுல் கூறுகிறார்.[24] அதனடிப்படையில் திருஅவையானது நாடோடி மற்றும் புலம்பெயர்ந்தோருக்கான மேய்ப்புப் பணியின் திருஅவைப் பேரவையும், கோர் ஊனும் திருஅவைப் பேரவையும், இத்தாலிய ஆயர் பேரவையும், இயேசுஅவை ஏதிலிப் பணியும், ஏதிலிக்கான இத்தாலியப் பேரவையும், ஐக்கிய நாடுகளின் ஏதிலி உயர் ஆணையமும் பல்வேறு தொண்டு நிறுவனங்களையும் உருவாக்கி ஏதிலிகளையும் புலம்பெயர்ந்தோர்களையும் உரிமையுடன் வாழ வழிகாட்டுகின்றன. தன்னார்வத் தொண்டர் குழுவையும் அவசர நிதியையும் உருவாக்கி இந்த மக்களை வாழவைக்கின்றன.

**ஒன்று,** புலம்பெயர்ந்தோரையும் ஏதிலிகளையும் தங்களுடைய நாட்டிற்கு ஆபத்து என்று கருதாமல் வரவேற்று மானிட மாண்பைக் கொடுத்து மதிக்கவேண்டுமென்று தூய பீட்டர்பெர்க்கின் ஆயர் இராபர்ட் என். கிலின்ச் என்பவர் அழைப்பு விடுக்கிறார். **இரண்டு,** உச்செந்தோ இலெயுக்காவின் தூய மரியா மறைமாவட்டத்தில் பல்வேறு பண்பாட்டோடு கலந்துரையாடல் நடத்துவது அரிய வாய்ப்பாகும். விருந்தோம்பலைத் தர, தோழமையை உருவாக்க அர்ப்பணிக்க வேண்டிய நேரமாகும். சகோதரத்தையும் அன்பையும் உருவாக்கி நாடுகளை இணைக்கும் கூறுகளை அடையாளப்படுத்திப் பாதிக்கப்பட்டவர்களின் பண்பாட்டைப் பாதுகாக்க வேண்டுமென்று திருத்தந்தை பிரான்சிசு அறிவுறுத்துகிறார். பண்பாடுகளிடையே உரையாடல் நடத்தும்போது தங்களுடைய பண்பாட்டு அடையாளத்தை உருவாக்கிக்கொள்ள முடியும். அதற்குத் திறந்த,



நேர்மையான உரையாடல் தேவையென்று கூறுகின்றனர்.[25] **மூன்று,** சொந்த நாட்டில் குடியுரிமை இழந்ததால் அவர்கள் மனிதர்கள் அல்லர் என்று கருதமுடியாது. அவர்களும் மனிதர்கள் என்று உரிமை வழங்கவேண்டுமென்று ஆசுதிரேலியா ஆயர் பேரவையின் கருத்தரங்கு 2004 விளக்குகிறது. ஒரு நாட்டின் குடிமகனாக இருப்பவர் வேறுநாட்டில் குடியமர்வதால் அவருடைய மானிடக் குடும்பத்தில் உறுப்பினராகும் உரிமையையும் உலக சமுதாயத்தில் குடிமகனாகும் உரிமையையும் பறிக்கக்கூடாதென 17.10.1985 அன்று நடைபெற்ற புலம்பெயர்ந்தோருக்கான மேய்ப்புப்பணி பற்றிய உலகக் கருத்தரங்கில் பேசிய திருத்தந்தை தூய 2-ஆம் யோவான் பவுல் பதிவுசெய்கிறார். அதனால் உள்ளூர் மக்களும், அதிகாரிகளும் புலம்பெயர்ந்த மக்களையும், ஏதிலிகளையும் உற்பத்தியைப் பெருக்கக் கிடைத்த இயந்திரங்களாக அல்லது குறைந்த கூலிக்கு வேலைசெய்பவர்களாகக் கருதாமல் மனிதர்களாக நடத்தவேண்டுமென்று வழிகாட்டுகிறார். அவர்கள் தரமான வாழ்வு வாழ வசதிகளையும் குடியிருப்புகளையும் உருவாக்கித் தரவேண்டுமென்று *இன்றைய உலகில் திருஅவை* எண் 66 விளக்குகிறது. உலகிலுள்ள அனைத்தும் அனைவருக்கும் சரியாகத் தேவையான அளவு கிடைக்கத் திருஅவை உழைக்கவேண்டுமென்று கத்தோலிக்கத் திருஅவையின் மறைக்கல்வி எண் 2402 கூறுகிறது.

**நான்கு,** வாழ்வதற்கும், வாழ்வை மேம்படுத்துவதற்கும் உதவிகேட்டு வரும் ஏழைகளுக்கு உதவாதபோது நயன்(நீதி) ஒருபோதும் முழுமைபெறாதென திருத்தந்தை தூய 2-ஆம் யோவான் பவுல் *நூறாவது ஆண்டு (Centesimus Annus)* எண் 58-இல் கூறுகிறார். இதனால் வாழ்வதற்கான உரிமையும், உணவு, உடை, உறைவிடம், கல்வி, நலவாழ்வு, பாதுகாப்பான சுற்றுச்சூழல், பொருளாதார பாதுகாப்பு போன்ற அடிப்படைத் தேவைகளைப் பெறுவதற்கு உரிமை உண்டென அமெரிக்க ஆயர் பேரவையும் உலக கத்தோலிக்க ஆயர் பேரவையின் மாமன்றமும் (1971) வலியுறுத்துகின்றன.

**ஐந்து,** நாட்டின் பாதுகாப்பைவிட, முன்னேற்றத்தைவிட மக்களுக்குப் பணிசெய்வது அரசுக்கு முதன்மையான பணியாக இருக்கவேண்டும். அதனால் புலம்பெயர்ந்தோர், ஏதிலிகள் ஆகியோரின் மனித மாண்பைப்

பாதுகாக்க அரசு முன்வைக்கிற சட்டங்களையும் கொள்கைகளையும் முயற்சியையும் திருஅவை ஆசிரியம் ஏற்று உதவிசெய்கிறது.[26] அதற்காக ஆபத்திலிருப்பவர்களை வரவேற்று விருந்து தருவது கிறித்தவத்தின் முதன்மையான கடமையாகும். அதனால் ஏதிலிகள்மீது திணிக்கப்பட்ட முகாம்வாழ்வு வேதனைக்குரியது. நெடுநாட்களாக முகாமில் வாழ்வதால் அவர்கள் பலவீனமாக்கப்படுகின்றனர். முகாம் தற்காலிகமானது, அவசரதேவைக்கானது. அதனால் முகாம் வாழ்வை மாற்றி சமத்துவமக்களாக வாழ வைக்கவேண்டும்.

**ஆறு,** புலம்பெயர்தலை தடுக்கவேண்டுமென்றால் உலக நாடுகள் ஒத்துழைக்கவேண்டும். வளர்ச்சியற்ற நிலையைப் போக்கவேண்டும். ஒரு நிலையான சுமைகளைச் சரிசமமாக உலகநாடுகள் பகிர்ந்து கொள்ளவேண்டும். இதனால் நாடுகளின் நன்மையைவிட உலகப் பொதுநலன், மானிடப் புலம்பெயர்தலுக்குத் தடைவிதிக்கும் அளவுகோலாக இருக்கவேண்டுமென்று கூறுகிறது.[27] ஆனால் உலக நாடுகளோடு இணைந்து திருஅவை பணிசெய்கிறது.

**ஏழு,** பல்சமய உரையாடல் நடத்தி சுயநலம், ஐயம், அச்சம் ஆகியவற்றை அகற்றி ஒற்றுமையை உருவாக்கி அமைதியை ஏற்படுத்தி புலம்பெயர்ந்தவர்களிடம் எதிர்நோக்கை உருவாக்கக்கூடிய தோழமைக்குச் சாட்சி பகரக்கூடியவர்களாக இருக்கவேண்டுமென்று கூறுகிறது.[28] இதனால் சமயங்களைக் கடந்து மனிதமாண்பைப் பாதுகாக்க திருஅவை பாடுபடுகிறது.

**எட்டு,** புலம்பெயரவும் அடைக்கலம் தேடவும் எல்லா மனிதர்களுக்கும் உரிமையுண்டு. அதே சமயத்தில் அடைக்கலம் தரும் நாட்டின் பாதுகாப்பையும் நலனையும் சிதைத்துவிடாமல் அந்த நாட்டை வளமாக்க உழைக்கவேண்டும். உழைப்பு வாழ்வதற்காக மட்டுமல்ல. அரசியல், குமுக வாழ்வு, பண்பாடு, குடும்பம், ஆளுமை ஆகியவற்றை வளர்க்க உழைப்புப் பயன்படுகிறது. புலம் பெயர்ந்தவர்கள் அடைக்கலம் தரும் நாட்டைப் பாதுகாக்க உரிமை உண்டு. அடைக்கலம் தந்த நாடு ஏதிலிகளையும் புலம் பெயர்ந்தவர்களையும் கட்டாயப்படுத்தி அவர்களுடைய தாய் நாட்டிற்கோ வேறு நாட்டிற்கோ திருப்பி அனுப்பக் கூடாது (Non-refoulement). உலக ஒத்துழைப்புடன் நயனுள்ள புலம்பெயர்ந்தோர் சட்டத்தை உருவாக்கி புலம்பெயர்ந்தவர்களைப்பற்றி சரியான தகவல்களைப் பரப்பிச் சரியான



புரிதலுடன் அடிப்படைத் தேவைகளை வழங்கி சகோதர சகோதரிகளாக ஏற்று வாழவைக்க வேண்டும்.

இறுதியாக, மானிடமாண்பு, தோழமை, பொதுநலன் ஆகிய மூன்றும் திருஅவையின் புலம்பெயர்ந்தோருக்கான போதனையின் தூண்களாக இருக்கின்றன. எனவே நயன் அமைதிக்காக உழைப்பவர்களும், போடப்பட்ட ஒப்பந்தங்களை நிறைவேற்றும் அரசுகளும் நல்மனம் படைத்த ஆண்களும் பெண்களும் மனிதாபிமானமற்ற சூழலில் வாழத்தள்ளப்பட்ட ஏதிலிகளுக்கும் புலம்பெயர்ந்தவர்களுக்கும் நயன்மையைப் பிறப்புரிமையாக்கி அதைப் பெற்றுத்தர உழைக்கவேண்டுமென்று திருஅவை ஆசிரியம் அறைகூவல் விடுக்கிறது. அவர்களின் துன்பங்களைப் போக்கி உரிமை வாழ்வுதர உலக நாடுகளை அழைக்கிறது. ஆவணங்களில் கூறப்பட்ட கருத்துகளைச் சிறிதளவு செயல்படுத்தினாலும் பெரிதளவில் செயல்படுத்த மானிட உரிமைப்போராளிகளும் அரசுகளும் இணைந்து செயல்பட வேண்டும். உரிமையிழந்தவர்களும் உணர்வுள்ள மனிதர்கள் என்ற எண்ணத்தில் பாதுகாக்க வேண்டும்.

## அடிக்குறிப்பு

1 Pontifical Council for the Pastoral care of migrants and Itinerant people and Pontifical Council “Cor Unum”, *Refugees: A Challenge to Solidarity*, (Vatican City: Liberia Editrice Vaticana, 1992), no., 5.
2 Ibid.
3 Ibid. no. 4.
4 Ibid.
5 Ibid.
6 Egbert Samraj, “Beyond Charity and Neutrality in Solidarity with Refugees and the displaced”, *National Council of Churches Review,* vol., CXVII, no., 2, (February 1997), 79.
7 Mark Raper, “The Pastoral Care for refugees in Asia and Africa”, *East Asian Pastoral Review*, vol., 28, no.,2, (1991), 167-168.
8 Ibid. 169.
9 Agostino Marchetto, “The Migrant family: Challenges Today and the way forward for the Church”, *Info on Human Development,* vol., 34, nos., 1-6, (January – June 2008), 05.
10 Karl Lehmann, “Refugees and the right to Asylum”, *Catholic International*, vol., 4, no., 2, (February 1993), 90.
11 Egbert Samraj.
12 Agostino Marchetto, 05.
13 Ibid.

[14] Paul VI, "Populorum Progressio", *On the Development of People* (26.03.1963), no., 67.
[15] Pontifical Council for the Pastoral care of migrants and Itinerant people, 91.
[16] Gioachino Campese, "The Irruption of Migrants: Theology of migration in the 21st Century", *Theological Studies*, vol., 73, no.,1, (March 2012), 28.
[17] Goachino Campese, "Acogida y hospitalidad en la frontera: Unas Perspectivas desde las casas del migrante," *Travessia*, vol., 57, (2007), 20 – 25.
[18] Mark Raper, "Pastoral Accompaniment among refugees," *Everybody's Challenge*, ed., Danielle Vella, (Rome: Jesuit Refugee Service, 2000), 92.
[19] Antony Rogers, "Towards Globalizing Solidarity through Faith Encounter in Asia", *Info on Human Development*, vol., 34, nos., 1-6, (January – June 2008), 21.
[20] Mark Raper, "Refugees: Travel under duress," *The Way*, (January 1999), 36.
[21] Agostino, 06.
[22] Ibid.
[23] Ibid. 4.
[24] John Paul II, "Developing Special Concern for the homeless," *Origins,* vol., 26, no., 30(January 1997), 495.
[25] John Paul II, Message on the occasion of the world Day of Migrants and Refugees in 2005 and Erga Migrantes Caritas Christi, nos., 34 – 36.
[26] Pontifical Council for the Pastoral care of migrants and Itinerant people, 9.
[27] Ibid. 2.
[28] Ibid. 37.



# 9. திருஅவையின் சமூகப் போதனைகளில் வணிக அறநெறி

***முனைவர் அருள்பணி. சகாயராஜ் ஸ்டான்லி சே.ச.,***
***அருள்கடல், சென்னை.***

**தொடக்கமாக...**

''நான் சிந்திக்கிறேன் எனவே நான் வாழ்கிறேன்'' என்றார் மேற்கத்திய தத்துவஞானி ரனே டெக்கார்ட். ''நான் வாங்குகிறேன். எனவே நான் வாழ்கிறேன்'' என்று சொல்ல வைக்கிறது இன்றைய வணிக உலகம். அறநெறியின் அடிப்படைக் கூறுகளைக் கேள்விக்குள்ளாக்கி எதையும் வாங்கலாம் எதையும் விற்கலாம் என்ற வணிக மனப்பான்மை வலைதளங்களின் மூலம் இன்று வார்த்தெடுக்கப்படுகிறது. இன்றைய வணிக உலகின் எதார்த்தங்கள் எப்படி இருக்கின்றன என்பதைக் கீழ்க்கண்ட நிகழ்வுகள் எடுத்தியம்புகின்றன.

**நிகழ்வு 1**

தமிழகத்தின் தலைநகராம் சென்னையில் நடந்த கோர நிகழ்வு ஒன்று. 2010-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 31-ஆம் தேதி சென்னையிலிருந்த நோக்கியா ஆலையில் இயந்திரம் ஒன்று பழுதுபட அதில் சிக்கி, அம்பிகா என்ற 22 வயது இளம்பெண் பரிதாபமாக உயிரிழந்தார்.[1] நோக்கியா நிர்வாகம் நினைத்திருந்தால் விபத்து நடந்தவுடன் அம்பிகா சிக்கிய இயந்திரத்தை நிறுத்தி அவளின் உயிரைக் காப்பாற்றியிருக்கலாம். இயந்திரத்தை நிறுத்தியிருந்தால் அந்த நிறுவனம் உற்பத்தி செய்யத் திட்டமிட்டிருந்த இலக்கை அடைய முடியாமல் போயிருக்கலாம். நிறுவனத்தின் இலாபப் போக்கிற்கு இளம்பெண் பலியான சோக நிகழ்வு இது.

**நிகழ்வு 2**

2009 மார்ச் 5 அன்று நியூயார்க் நகரிலே மகாத்மா காந்தியின் சில உடமைகள் ஏலம் விடப்பட்டன. மகாத்மாவின் கண்ணாடி, செருப்பு, தட்டு, கைக்கடிகாரம் போன்றவை இந்த ஏலப் பொருட்களில் அடங்கும். இந்திய

அரசு நேரடியாக இந்த ஏலத்தில் தலையிடா நிலையில் 1.8 மில்லியன் டாலர் கொடுத்து இந்தப் பொருட்களை இந்தியத் தொழிலதிபர் விஜய் மல்லையா வாங்கினார். வாழ்நாள் முழுவதும் குடிப்பழக்கமே இல்லாத ஒரு மகாத்மாவின் பொருட்களை ஒரு சாராயச் சக்கரவர்த்தி ஏலத்தில் வாங்கிய அவலநிலை! சிறிது காலம் முன்பு வரை மல்லையா கொடிகட்டிப் பறந்த ஒரு தொழிலதிபர். இவருடைய கிங்பிஷர் மதுபானம் சந்தையின் முன்னணிப் பானங்களில் ஒன்று. இவரால் தொடங்கப்பட்ட கிங்பிஷர் விமான நிறுவனமும் இழுத்து மூடப்பட்ட ஒன்று. 2011-ஆம் ஆண்டிலேயே ராஜ்ய சபாவிலே அன்றைய நிதியமைச்சர் இந்த விமான நிறுவனம் 5,282 கோடி இழப்பை சம்பாதித்தது என்று அறிவித்தார். 2013-ஆம் ஆண்டு மே மாதத்திலே இந்திய வங்கிகளின் கூட்டமைப்பு, மல்லையா வங்கிகளுக்குத் திருப்பிச் செலுத்த வேண்டிய தொகை 7,037 கோடி என்று அறிவித்தது. தனது பணியாளர்களுக்கும், நிறுவனங்களுக்கும் பணத்தைத் திருப்பித் தராத மல்லையா வெளிநாட்டுக்குப் பறந்து விட்டார். விஜய் மல்லையா இன்று அரசால் தேடப்படும், வெளிநாட்டில் ஒழிந்திருக்கும் ஒரு தொழிலதிபர்.

### நிகழ்வு 3

சுப்ராத்தா ராய் - இவர் இன்று திகார் சிறையிலிருந்து பரோலில் வெளிவந்திருக்கும் ஒரு பெரிய தொழிலதிபர். இவருக்குக் கீழிருக்கும் நிறுவனங்கள்ஏறக்குறைய 24,000 கோடி ரூபாயை மக்களிடமிருந்து முறையற்ற, சந்தேகத்திற்கு இடமான முறையில் வசூலித்திருக்கின்றன. இந்தியச் சந்தைகளின் நெறியாளராக இருக்கும் SEBI (Securities and Exchange Board of India) அமைப்பு இவரை நீதிமன்றத்திற்கு இழுக்க, இவருடைய குழுமமானது தகவல் பதிவேடுகள் அடங்கிய 31,000 பெட்டிகளை 127 லாரிகளில் நீதிமன்றத்திற்குக் கொண்டு வந்து சேர்த்தது.[2] சோதனையின் போது 'கலாவதி' என்ற ஒரே பெயர் 5,984 தடவைகள் பல்வேறு இடங்களிலே சஹாரா குழுமத்தின் முதலீட்டாளராக இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. இந்தக் கோடிகள் அனைத்தும் அரசியல்வாதிகளின் கருப்புப் பணம் என்றும் சந்தேகிக்கப்படுகிறது. 2012-ஆம் ஆண்டு 'இந்தியா டுடே' இதழானது சுப்ராத்ரா ராயை இந்தியாவின் 10 சக்தி வாய்ந்த நபர்களில் ஒருவராக தேர்ந்தெடுத்தது வியப்புக்குரியது!



## வணிக அறநெறியின் சவால்கள்

### சவால் 1 - இலஞ்சம் என்ற சீர்கேடு

பவன் கே. வர்மா தன்னுடைய நூலில், இந்தியர்களின் அநீத உலகியல் நோக்கைக் குறிப்பிட்டு இலாப நோக்கமும் வசதியாக வாழ வேண்டும் என்பதுமே, பெரும்பாலான இந்தியர்களுடைய உலக நோக்கு என்று கூறுகிறார்.[3] இந்தியர்களுடைய இந்த இலஞ்சப் போக்கிற்கு இந்த ஆசிரியர் இந்து சமயத்தையும் ஓர் எடுத்துக்காட்டாகக் குறிப்பிடுகிறார்.[4] ஒருவேளை, பெரும்பாலான மத்தியத் தர வர்க்க இந்தியர்களுடைய இந்த சொகுசு மனப்பான்மைக்கும், அறநெறிச் சீரழிவுக்கும் இந்த உலகியல் நோக்கு ஒரு குறிப்பிடத்தக்க காரணியாக இருக்கலாம். இலஞ்சம் கொடுத்தால் எதையும் வாங்கலாம், எந்தக் காரியமும் நடக்கும் என்ற நிலை இந்த இந்தியத் திருநாட்டிலே! இலஞ்சத்தைப் பற்றிக் குறிப்பிடும்பொழுது, பவன் கே. வர்மா கீழ்க்கண்ட தரவுகளைப் பட்டியலிடுகிறார்.

- தோராயமாக இந்தியாவிலுள்ள சிறிய ரக தொழிற்சாலைகள் 2.5 மில்லியன். இந்தத் தொழிற்சாலைகள் தரும் இலஞ்சத்தின் அளவு ஒரு பில்லியன் டாலர்.
- இலாபம் தரக்கூடிய மற்றும் இலஞ்சம் வரக்கூடிய எந்தவொரு வாய்ப்பையும் இந்தியத் தொழிற் சமூகம் விடுவதில்லை.
- பெருந்தொழிலதிபர்கள் தங்களது கணக்குப் பதிவேடுகளில் ஏமாற்றுவதும், செலவீனங்களை செயற்கையாக அதிகப்படுத்தி, வங்கிகளிடமிருந்து கடன்வாங்கி அதைத் திருப்பிக் கொடுக்காததும் இயல்பாக நடக்கும் ஒன்று.
- இந்தியாவின் பெரிய 1,500 தொழில் நிறுவனங்களில் பாதிக்கும் மேற்பட்டவை எந்தவொரு வரியையும் செலுத்துவதில்லை.
- இறக்குமதியாகும் பொருட்களின் மதிப்பைக் கூட்டிக்காட்டுவதும், ஏற்றுமதியாகும் பொருட்களின் மதிப்பை குறைத்துக் காட்டுவதும் இந்திய வணிக நிறுவனங்களின் பெருவழக்கம்!

**சவால் 2 – கூட்டணி முதலாளித்துவம் (Crony Capitalism)**

கூட்டணி முதலாளித்துவம் என்பது இன்று வணிக அறநெறிக்கு இருக்கும் மிகப்பெரிய சவால். இந்தக் கூட்டணி முதலாளித்துவம் பெருந்தொழிலதிபர்கள், அரசு அதிகாரிகள், அரசியல்வாதிகள் ஆகிய மூவருக்கும் இடையே நடக்கும் ஒரு சந்தர்ப்பவாத கூட்டணி. பெருந்தொழிலதிபர்கள் செய்யும் ஒழுக்கங்கெட்ட வணிகப் பேரங்களுக்குப் பல நேரங்களிலே அரசு அதிகாரிகள் துணை நிற்பதையும், இந்தப் பேரங்கள் அரசின் முத்திரையைப் பெற அரசியல்வாதிகள் தொழிலதிபர்களுக்கு எடுபிடிகளாகச் செயல்படும் நிலையையும் இது குறித்துக்காட்டுகிறது. ஸ்டீபன் காபரின் கூற்றுப்படி, எளிதான மூலதனம் அரசு வங்கிகளின் வழியாக பெருந்தொழிலதிபர்களுக்குக் கொண்டுசெல்லப்படுகிறது.[5]

பல நேரங்களில் அரசியல்வாதிகள் தங்களின் அரசியல் நோக்கங்களுக்காகப் பெருந்தொழிலதிபர்களிடமிருந்து நன்கொடையாக பணம் பெறும்பொழுது தாங்கள் பெற்ற நன்கொடைகளுக்காக, கொடைகொடுத்த புண்ணியவான்களுக்கு நன்றிக்கடன் செலுத்த வேண்டிய நிலை இருக்கிறது. வெளிநாட்டில் பதுங்கியிருக்கும் விஜய் மல்லையா இதற்குச் சரியான முன்னுதாரணம். இந்தக் கூட்டணி முதலாளித்துவம் *காட்டுமிராண்டித்தனமானது* எனவும் குறிப்பிடப்படுகிறது.[6] இந்தக் கருத்தை முன்னிறுத்தும் ஆசிரியர் மைக்கில் ஹில், இந்தக் காட்டுமிராண்டித்தனத்தை தன்னையே அழித்துக்கொள்ளும் ‘சுய அழிவிற்கு’ ஒப்பிடுகிறார். இந்தக் காட்டுமிராண்டித்தனமான முதலாளித்துவம் தான் ஈட்டும் செல்வத்தைச் சொந்த நாட்டில் முதலீடு செய்யாமல், வரிகொடாமல் ஏய்க்கும் அல்லது வரியே இல்லாத வரிச்சொர்க்கங்களான வெளிநாடுகளில் முதலீடு செய்கிறது. இது யாருக்கும் பயனில்லாத ஓர் அநீதிச் செல்வம்.

இந்தக் காட்டுமிராண்டித்தனமான முதலாளித்துவத்தைப்பற்றி எழுதும் மைக்கில் ஹில், இதனை *கவாஷியோர்கோர்* (kwashiorkor) என்னும் நோய்க்கு ஒப்பிடுகிறார். இது மனித உடல் தன்னையே உட்கொள்ளும் ஒரு விசித்திரமான நோயாகும். சுயநலம், தற்கொலை மனோபாவம், பணத்தை மட்டுமே முன்னிலைப்படுத்தும் மனப்பாங்கு, தனக்குச் சாதகமானதை மட்டும் தேர்ந்தெடுத்துக்கொள்ளும் அறநெறிப்பாங்கு, குறுகிய வழியில் செல்வம் சேர்ப்பது, ஏகபோக தனியுரிமை, அறநெறிகளைக் கற்றுக்கொள்ள மறுக்கும்



மனப்போக்கு ஆகிய இவையெல்லாம் இந்தக் காட்டுமிராண்டித்தனமான முதலாளித்துவத்தின் உட்கூறுகள்.

**சவால் 3 – போட்டி மனப்பான்மை**

தாராளமயமாக்கலும் உலகமயமாக்கலும் மக்களின் வாழ்வைப் புரட்டிப் போடும் இன்றைய சூழலில் வணிக உலகம் முன்வைக்கும் குறிப்பிடத்தக்க ஓர் அறநெறிக் கேடு ‘போட்டி மனப்பான்மை’. இந்த நவீனமயமாக்கலில் ஒழிந்திருக்கும் ‘நவீனம்’ எழுபதுகளின் இறுதியில் ரீகன் மற்றும் தாட்சர் போன்ற உலகத் தலைவர்களால் முன்னிறுத்தப்பட்ட ஒன்று. இந்தப் பொருளாதாரம் முழுக்க முழுக்க சந்தையை மையப்படுத்தியது. இந்தச் சந்தையின் இதயமாக செயல்படுவது போட்டி மனப்பாங்கு. இந்தச் சந்தைப் பொருளாதாரம் உலகம் முழுவதையும் ஒரு பெரிய சந்தையாகவும் மனிதரை தொழில்முனைவோராகவும் (Entrepreneur) மட்டுமே ஒரு குறுகிய பார்வையில் பார்க்கிறது.[7]

இந்தப் போட்டி மனப்பான்மையானது தனி நபர்களுக்கிடையே, அவர்களின் பணியின் அடிப்படையிலே மட்டுமல்லாமல் நிறுவனங்களுக்கிடையே, நகரங்களுக்கிடையே, பிராந்தியங்களுக்கிடையே இன்று திட்டமிட்டு ஊக்குவிக்கப்படுகின்றது. மைக்கில் சௌடர் மற்றும் வென்டி எஸ்பெலான்ட் தங்களின் கட்டுரையில், எப்படி இந்தப் போட்டி மனப்பான்மையும், தரவரிசையில் கல்லூரிகளைப் பிரிப்பதும் சமூகத்தைப் பாதிக்கிறது என்பதை விரிவாக எடுத்துரைக்கின்றனர்.[8] நகரங்களும் நாடுகளும் போட்டியின் அடிப்படையில் எவ்வாறு தரம்பிரிக்கப்படுகின்றன என்பதை மற்றொரு கட்டுரை விரிவாக விளக்குகின்றது.[9]

நகரங்கள் இவ்வாறு செயற்கையாக தரம்பிரிக்கப்பட்டு, ஒரு குறிப்பிட்ட ‘நகரம்’ அழகானது, வசதிகளுடையது, பாதுகாப்பானது என்று முத்திரையிடப்படும்போது, தன்னிச்சையாக ‘அந்த நகரத்தின்’ மனைகளும், நிலத்தின் மதிப்பும் செயற்கையாக உயர்த்தப்படுகிறது. ஆகவே, போட்டியின் அடிநாதமாக சந்தைகள் இருக்கின்றன என்பதும், இந்தப் போட்டிகள் செயற்கையாகத் திட்டமிட்டு உருவாக்கப்படுகின்றன என்பதும் தெளிவாகிறது. தமிழகத்தைப் பொருத்தவரையில் கல்வி வணிகமாக்கப்படும் இன்றையச்

சூழலில் கல்லூரிகளையும், பள்ளிகளையும் தர அட்டவணைப்படுத்துவது சந்தையை மையமாக்கிய ஒரு நவீன நாற்றமெடுத்த வணிக உத்தியே!

## சவால் 4 – 'இலாபம் ஒன்றே' என்ற வணிகக் கொள்கை

இன்று அறநெறியும் பொருளாதாரமும் ஒன்றையொன்று எதிர்க்கும் போக்கு நிலவுகிறது. அறநெறியோடு கூடிய பொருளாதாரம் ஒரு முரண்தொடையாகப் பார்க்கப்படுகிறது. வணிகம் என்பது அடிப்படையில் மக்களின் அன்றாடத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் ஓர் உறவு முறை பண்டமாற்று முறையை ஆதியிலே கொண்டிருந்த வணிகச் சமூகம் இன்று படிப்படியாக வளர்ந்து ஊக வணிகத்திலும் (Speculative Trade) நுழைந்திருக்கிறது. ஆனால் அடிப்படைக் கூறுகளான நம்பிக்கை, நாணயம், பிரமாணிக்கம், தேவைகளைப் பூர்த்தி செய்வது போன்ற மூலாதாரமான காரணிகள் மறைந்து இலாப நோக்கு ஒன்றே இன்று பிரதானமாகப் பார்க்கப்படுகின்றது. இன்றைய சந்தைப் பொருளாதாரத்தை நேரடியாகவும், மறைமுகமாகவும் இயக்கும் காரணி இலாப நோக்கு. பேராசிரியர் அந்துவானின் கூற்றுப்படி, மூலதனம் எல்லையறியாது.[10] இன்றைய தாராளமயமாக்கலின் ஒரு பகுதியாக அது தனது சந்தைகளை விரித்து இலாபத்தை அதிகப்படுத்துகிறது. நாடு விட்டு நாடு செல்வதற்கு மனிதருக்குக் கடவுச் சீட்டு தேவை. ஆனால் உலக வணிகத்திலே பணம் நாட்டை விட்டு வெளியேறத் தடையில்லை. வணிகத்திற்காகவும், வணிகம் கொண்டு வரும் இலாப நோக்கத்திற்காகவும் இன்றும் ஆக்கிரமிப்புகளும் படையெடுப்புகளும் தொடர்ந்து நடைபெறுகின்றன.

ஹார்வர்டு வணிக மேலாண்மைப் பள்ளியின் பேராசிரியர் தியோடர் லெவிட் தனது எழுத்துக்களில், மக்கள் பல்வேறு பண்பாட்டுப் பின்புலங்களைச் சேர்ந்தவராயினும், நுகர்வோர் எனும்போது அவர்களின் உணர்வுகள் உலகளவில் ஒருசேர இருக்கின்றன என்கிறார்.[11] அவ்வாறு இல்லாவிட்டாலும் நுகர்வோரின் உணர்வுகள் ஒரு ஒற்றைத்தன்மைக்குள் வருவதற்கு உலகச் சந்தைகள் தேவையானதையெல்லாம் செய்கின்றன. ஏனென்றால் இவற்றின் ஒரே இலக்கு இலாபம் மட்டுமே. உலகம் ஒன்றாகி, பண்பாடுகள் ஒன்றாகி, உலகமே ஒற்றைச் சந்தையானால் எவ்வளவு இலாபம்?



இலாபமும் அறநெறியும் பல நேரங்களில் ஒன்றுக்கொன்று முரண்பட்ட கருத்துருவங்களாக இருக்கின்றன. வணிக நிறுவனம் ஒன்று இலாபம் ஈட்டியதென்றால் பல நேரங்களில் சாமானிய மக்கள் அது அநீதியான இலாபம் என்று நினைக்கிறார்கள். இது இவ்வாறு இருக்கத் தேவையில்லை. நேர்மையான முறையிலே, அறநெறி வழியிலே இலாபம் ஈட்டும் நிறுவனங்களும் இருக்கின்றன. ஆனால், தொடர்ந்து அறவழியில் இலாபம் ஈட்டுவதென்பது பெரிய சவால். உதாரணமாக, 2015-ஆம் ஆண்டிலே சிறந்த அறநெறி நிறுவனமாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட விப்ரோ நிறுவனத்தை 2009-ஆம் ஆண்டு உலக வங்கி தன்னோடு வர்த்தக உறவு கொள்ளக் கூடாது என்று தடைசெய்திருந்தது.[12] ஆக, இலாபம் ஈட்டுவதென்பது முக்கியமல்ல. எவ்வளவு இலாபம், இலாபத்திற்கு முறையான வரி செலுத்துவது, அந்த நிறுவனத்தின் சமூக அக்கறை இவற்றைக் கொண்டே ஒரு நிறுவனம் மதிப்பிடப்படுகிறது.

## சமூகப் போதனைகள் காட்டும் வணிகம்

சமூகப் போதனைகள் வழியாக விவிலியம் எவ்வாறு இன்றைய சூழலுக்கு ஏற்ற முறையில் மறுவாசிப்பு செய்யப்பட வேண்டும் என்பதை திருஅவையின் ஆசிரியம் வலியுறுத்துகிறது. சமூகத்தை மையப்படுத்திய இந்த மறுவாசிப்பில் தொழிலாளர் நலன், நிதி, அரசியல், சட்டம், பண்பாடு, தொடர்பு ஊடகங்கள், இவற்றோடு வணிகமும் ஓர் இன்றியமையாத தளமாகிறது.[13]

கோலின் கிளார்க் எழுதிய 'பொருளாதார முன்னேற்றத்தின் நிலைமை' என்ற புத்தகத்தை மேற்கோள்காட்டும் திருத்தந்தை ஆறாம் பவுல், மனிதத்தின் புனிதத்தைக் கெடுக்கும் பொருளாதாரச் சக்திகளை மிகக் கடுமையாகச் சாடுவதோடு, பொருளாதாரம் எப்போதும் மனிதரின் பயன்பாட்டுக்கு உரியது என்கிறார்.[14] உலக நிலையைப்பற்றி அலசி ஆராயும் 'இன்றைய உலகில் திருஅவை' என்ற இரண்டாம் வத்திக்கான் சங்க ஏடு, மனிதகுலம் முன் எப்போதுமில்லாத அளவிற்கு செல்வத்தையும், பொருளதார வசதியையும் கொண்டுள்ளது என்று கூறுவதோடு, உலகின் மக்கள், பசி, ஏழ்மை, கல்வியறிவின்மை ஆகியவற்றால் பாதிக்கப்பட்டுள்ளார்கள் என்கிறது.[15] திருத்தந்தை ஆறாம் பவுலும், இரண்டாம்

வத்திக்கான் சங்கத்தின் இந்த ஏடும் குறித்துக்காட்டுகின்ற பல பொருளாதாரப் பிரச்சனைகள் இன்றளவும் தொடர்ந்து கொண்டிருக்கின்றன.

வணிகமென்பது சமூகத்தின் பொதுநன்மையை உள்ளடக்கி சமூகத்திற்கு அது செய்யும் உதவிகளாலும் பணிகளாலுமே வரையறுக்கப்படுகிறது.[16] இவ்வாறு சமூகத்திற்குத் தேவையான பொருட்களை உற்பத்தி செய்து கொடுப்பதன் மூலமும், தேவைகளைப் பூர்த்தி செய்வதன் மூலமும் வணிகமானது சமூகத்தில் செல்வத்தை உருவாக்குகிறது. இப்படிப்பட்ட வணிகச் செயலானது எல்லோருடைய பங்களிப்பையும் உள்ளடக்கியது. எனவே வணிகமென்பது ஒரு பொருளாதாரச் செயல் மட்டுமல்ல. மாறாக, ஒரு சமூகச் செயல் என்கிறது திருஅவையின் சமூகப் போதனைகள். இந்தச் சமூகச் செயல், பொருளாதாரக் காரணிகளோடு அறநெறிப் பண்புகளையும் உள்ளடக்கியது. அறநெறியும் பொருளாதாரமும் ஒன்றையொன்று எதிர்க்கும் கருத்தியல்கள் அல்ல. மாறாக, ஒன்றோடொன்று நெருங்கிய தொடர்பிலிருந்து சமமாகக் கற்றுக்கொள்ளும் கருத்தியல்கள்.[17]

பெரும் வணிகம், பல நேரங்களில் தான் சார்ந்த சமூகத்தையும் சமூகத்தின் தேவைகளையும் மையப்படுத்தாமல், தனிமனிதர் ஒருவரின் விருப்பு வெறுப்பிற்கேற்பச் செயல்படுவது சமூக நன்மைக்கு ஏற்புடையதன்று. திருஅவையின் இந்தச் சமூகச் சிந்தனை தனி ஒரு மனிதரால் அல்லது ஒரு குடும்பத்தால் இயக்கப்படும் வணிகத்தைவிட கூட்டுறவு இயக்கங்கள், கூட்டுறவு சங்கங்கள், சிறு அளவிலான கைத்தொழில்கள், சிறிய குடும்பத்தை மையப்படுத்திய வேளாண்மை ஆகியவற்றின் சிறப்பினை வலியுறுத்திப் பேசுகிறது.[18] இப்படிப்பட்ட முயற்சிகள் உழைப்பின் மேன்மை, சமூகப் பொறுப்புணர்வு, சனநாயக அமைப்பு ஆகியவற்றை மேன்மைப்படுத்துகின்றன.

திருஅவையின் சமூகப் போதனையின்படி வணிக முதலாளிகளும், நிர்வாகமும் தங்களின் தொழில் முயற்சிகளையும் வேலைகளையும் முன்னெடுத்துச் செல்லும்போது குடும்பங்களின் மேன்மையையும் கருத்தில் எடுக்க வேண்டும். குடும்பங்கள் என்னும் போது, குறிப்பாக குடும்பங்களை வழிநடத்திச் செல்லும் தாய்மார்கள், தங்களின் கடமைகளைச் செவ்வனே நிறைவேற்ற வணிக முதலாளிகளும், நிர்வாகமும் உதவி செய்ய வேண்டுமென்கிறது,[19]



வணிகத்தைப்பற்றி தொடர்ந்து பேசும் திருஅவை நேர்மையான இலாபம் பற்றியும் பேசுகிறது. அறவழியில் கிடைத்த இந்த இலாபம் மனித மாண்போடு தொடர்புடையது என்பதையும் விளக்குகிறது.

திருஅவையைப் பொறுத்தவரை ஒரு வணிக நிறுவனமானது, சமூக ஒற்றுமையைக் குறித்துக்காட்டும் ஒரு குழுமமாக விளங்கி, பொது நன்மைக்கும் சமூகத்திற்கும் பயனளிக்க வேண்டும். உலகின் பொருளாதார நிலைகுறித்து அலசும் திருத்தந்தை பதினாறாம் பெனடிக்ட், தனது ஆழ்ந்த கவலையை வெளிப்படுத்தி, பொது நன்மைகளிலிருந்து விலகித் தவறிழைக்கும் உலக வணிகத்தை புதிய முறையிலே புரிந்து கொள்ள வேண்டுமென்கிறார்.[20] உலகப் பொருளாதாரத்தின் பழைய மாதிரிகள் மறைந்து நம்பிக்கை கொடுக்கும் புதிய மாதிரிகள் தோன்றுகிறது என்பதையும் குறித்துக் காட்டுகிறார்.

வணிகத்தின் உலகளாவிய தன்மை, சொந்த நாட்டின் தொழிலாளர்களைப் பாதிக்குமென்பதையும் இந்த உலக வணிகத்தில், தொழிலாளர்கள், பொருட்களை விற்போர், வாங்குவோர், சுற்றுச் சூழல் மற்றும் உலகச் சமூகம் ஆகிய எல்லோரும் இணைக்கப்பட்டிருப்பதைச் சுட்டிக்காட்டி இந்த பன்னாட்டுத் தொடர்புகளும் இயங்குதலும் மிக அதிகமான சமூகப் பொறுப்புணர்வுக்கு வணிகச் சமூகத்தை இட்டுச் செல்கிறது என்பதையும் தெளிவாக்குகிறார்.

திருத்தந்தை பிரான்சிசின் எண்ணப்படி, வர்த்தகமென்பது ஓர் உன்னதமான அழைத்தல்.[21] இந்த உன்னதமான அழைத்தல், வாழ்க்கைக்கு ஒரு சீரிய அர்த்தத்தைத் தரும்போது மட்டுமே, உன்னத நிலையை அடைகிறது என்பதை அவர் குறித்துக் காட்டுகிறார். இந்த வணிகமானது சமூகத்தின் பொது நன்மைக்குத் தொண்டு செய்வதோடு உலகத்தில் உற்பத்தி செய்யப்படும் பொருட்கள், எல்லோரையும் சென்றடைய வேண்டும் என்பதையும் கோடிட்டுக் காட்டுகின்றார்.

தற்போதைய தாராளமயப் பொருளாதாரக் கொள்கையை மிகக் கடுமையாகச் சாடும் திருத்தந்தை பிரான்சிசு, மற்றவரை, குறிப்பாக ஏழை எளிய மக்களை சமூகத்தின் புறம்பே ஒதுக்கித் தள்ளும் ஒரு பொருளாதாரக் கொள்கை நமக்குத் தேவையில்லை என்பதோடு, இத்தகைய பொருளாதாரம் மக்களைக் கொல்கிறது என்றும் கடுமையாகக் கண்டிக்கிறார்.[22] வீடற்ற ஓர்

அனாதை, பசியிலும் குளிரிலும் இறக்க, அது செய்தியாகாமல், பங்குச்சந்தை இரண்டு புள்ளிகள் இழந்து வணிகத்தில் சரிவு ஏற்பட்டால் அது மிகப்பெரிய செய்தியாகிறது என்பதைத் திருத்தந்தை சுட்டிக்காட்டுகிறார். தேவையற்றப் பொருட்களை வீட்டிலிருந்து வெளியே எறிவது போல, ஏழை எளிய மக்கள் இந்த சமூகத்திலிருந்து தூக்கி எறியப்படுகிறார்கள் என்பதும் திருத்தந்தையின் கருத்தாகிறது.

சுதந்திரமான சந்தை எல்லோருக்கும் பயன்படும்; அதன் சிறுதுளியாவது சமூகத்தின் அடிநிலையில் உள்ள சாமானிய ஏழை மக்களைச் சென்றடையும் என்ற பொருளாதாரக் கொள்கையை திருஅவையின் சமூகப் போதனைகள் கேள்விக்குள்ளாக்குகின்றன. இந்தப் பொருளாதாரக்கொள்கை உண்மைத் தரவுகளால் உறுதிசெய்யப்படவில்லை என்பதும் சுட்டிக்காட்டப்படுகிறது. அன்றைய இசுரயேல் மக்கள் எவ்வாறு பொன்கன்றுக்குட்டியை வழிபட்டார்களோ அதைப்போல இன்றைக்கும் பணமும், மனிதத்தைத் தொடாத பொருளாதாரக் கொள்கைகளும் நவீன பொன்கன்றுக்குட்டிகளாக மாறிவிட்டன.

திருஅவையின் சமூகப் போதனையானது சுதந்திரமான சந்தைக் கருத்தியல்களை வன்மையாகக் கண்டிக்கிறது. முற்றிலும் சுதந்திரமான சந்தை, பொருளாதாரத்தை முன்னேற்றும் என்ற கருத்தியலும் உண்மையில்லை என்கிறது. நவீன பொருளாதாரத்தின் தந்தையெனப்படும் ஆடம் சிமித்தின் கூற்றான, கண்ணுக்குப் புலனாகாத சந்தையின் சக்திகளையும், சந்தையை மறைமுகமாக இயக்கும் மற்ற காரணிகளையும் சமூகப் போதனையானது சாடுகிறது.[23]

ஏற்கனவே குறிப்பிட்டபடி, திருஅவையின் சமூகப் போதனை, வெவ்வேறு கால அளவுகளில் மிக அழுத்தமான முறையில் பொருளாதாரத்திற்கும் அறநெறிக்கும் இடையே உள்ள நெருக்கமான தொடர்பை வலியுறுத்திக் கூறுகிறது. பொருளாதாரம் சரியான பாதையில் செல்ல அதை வழிநடத்தும் அறநெறி தேவை. இந்த அறநெறி ஒரு பொது அறநெறியாக அல்லாமல், மக்கள் மைய அறநெறியாக இருத்தல் வேண்டும்.[24]

இன்றைய நவீன உலகில், கல்லூரிகள், ஆராய்ச்சி மையங்கள் போன்றவை 'வணிக அறநெறி' பற்றிப் பெரிதும் விவாதிக்கின்றன.



பொருளாதார மையங்கள், நிதிநிறுவனங்கள், வணிகக்கூடங்கள் ஆகியவை வணிக அறநெறிபற்றி அதிகம் பேசுகின்றன மற்றும் எழுதுகின்றன. 'அறநெறியுடன் கூடிய முதலீடு' என்பது இன்று எங்கும் பேசப்படும் ஒரு சூடான தலைப்பு. மக்களுடைய சேமிப்பு அறநெறியோடு தொடர்புடையதா? என்று விவாதிக்கப்படுகிறது. நேர்மறையான, அறநெறியை அடிக்கோடாகக் கொண்ட இப்படிப்பட்ட ஆரோக்கியமான விவாதங்களை, அறநெறி முன்னெடுப்புகளை, திருஅவையின் சமூகப் போதனை வரவேற்கிறது.

தாராள சந்தையை, சந்தையின் ஏகபோக சக்தியை, அதன் வலிமையை பெரிதுபடுத்தி, மனித மாண்பைப் புறந்தள்ளுவது ஆபத்தானது. அறநெறிகளை ஒதுக்குவது, இறைவனை ஒதுக்குவதாகும். இறைவனை, இறைமாண்பை, மனிதத்தை முன்னிறுத்தாமல், பணத்தையும் சந்தையையும் முன்னிறுத்துவது வெட்கக்கேடானது.

## செயல்பாட்டுக்கு...

1. திருஅவயின் சமூகப் போதனைகள், பெரும்பாலான சாமானிய மக்களுக்குத் தெரிவதில்லை. திருஅவையின் இந்த மறைக்கப்பட்ட இரகசியம்[25] சாமானிய மக்களுக்குப் போய் சேர வேண்டும்.

2. வணிகம் பற்றித் தெரிந்த, வணிகத்தின் நிறை குறை பற்றிப் பேசும் பெரும்பாலான மக்களுக்கு வணிக அறநெறி பற்றித் தெரிவதில்லை. இதைப் பற்றிய விழிப்புணர்வுக்கு நாம் முயல வேண்டும்.

3. திருஅவை, வணிகத்தைப் பற்றி என்ன சொல்லியிருக்கிறது என்பதையும் எளிய மக்களிடம் கொண்டு போய்ச் சேர்த்தல் வேண்டும்.

4. வணிகம், பணம், செல்வம் இவற்றைப் பற்றிய நம்முடைய புரிதல்கள், அறநெறியின் அடிப்படையில் விசாலமாக வேண்டும். கிறித்தவர்கள் எல்லோரும் ஏழ்மை வார்த்தைப்பாடுகள் எடுத்தவர்கள் அல்ல.

5. தொழில், வர்த்தகம் மற்றும் வணிகக் காரியங்களில் ஈடுபடும் கிறித்தவர்களை, கிறித்தவச் சமூகம் அங்கீகரித்து அவர்கள் வளர ஆவண செய்ய வேண்டும்.

6. இலஞ்சம், நேர்மையின்மை, அநியாயம், ஏமாற்று வணிகம் – இவற்றிற்கு எதிராக, ஒரு மக்கள் இயக்கத்தை தலத் திருஅவை, அன்பியங்கள் வழியாகத் தொடங்கிடவேண்டும்.

7. வணிகமானது, எங்கிருந்தோ வெளியிலிருந்து வந்து நம்மை ஆக்கிரமிக்கும் நிலை மாறி, நமது இடத்தில், உள் நாட்டில் கிடைக்கும் பொருட்களை வைத்து, சுயமான, சொந்தக் காலில் நிற்கும் சுதேச வணிகம் வளர, நம் மக்களை நாம் ஆதரித்து, நம் சொந்தங்கள் வளர முயற்சிகளை முன்னெடுக்க வேண்டும்.

## முடிவாக...

நல்லதோர் வீணை செய்தே – அதை
நலங்கெடப் புழுதியில் எறிவதுண்டோ?
சொல்லடி சிவசக்தி – எனைச்
சுடர்மிகும் அறிவுடன் படைத்துவிட்டாய்.
வல்லமை தாராயோ, வல்லமை தாராயோ – இந்த
மாநிலம் பயனுற வாழ்வதற்கே...

பாரதியின் இப்பாடலை முணுமுணுத்தவண்ணம் இன்றைய இந்தியாவை, நான் வாழும் தமிழ்நாட்டை ஒரு கணம் திரும்பிப் பார்க்கிறேன். இலாப நோக்கு, ஏமாற்றும் முதலாளித்துவக் கொள்கைகள், போட்டி மனப்பான்மை, தனிமனிதத் துதி, இலஞ்சம் என்ற சீர்கேடு இவையனைத்தும் உள்ளடக்கிய சந்தைப் பொருளாதாரம், இம்மண்ணை சீர்கேட்டிற்கு இட்டுச் செல்லும் சோக நிலையைப் பார்க்கிறேன்.

இறைவன் மனிதருக்கு அளித்த மாபெரும் கொடை இந்த உலகம். ஆனால் இன்று மனிதன் தன்னுடைய சுயநலத்துக்காக எல்லாவற்றையும் காசாக்குகிறான். மானிட இனம் உடனே விழித்தெழ நாம் ஆவண செய்ய வேண்டும். இல்லாவிட்டால் ஒருவேளை... கடைசிக் காற்றும் அமிலமாகி, கடைசி மரமும் வெட்டுண்டு, கடைசி நதியும் விஷமேறி, கடைசி மீனும் பிடிபட, அப்போதுதான் உறைக்கும் மனிதனுக்கு – தான் பணத்தை மட்டுமே சாப்பிட முடியாது என்று!!!



## அடிக்குறிப்புகள்

1 See: Head trapped in machine, Nokia worker dies, *India Today*, November 3, 2010 in http://indiatoday.intoday.in/story/head-trapped-in-machine-nokia-worker-dies/1/118817.html. Accessed on 20th September 2016. Nokia closed this factory in 2014.

2 Tamal Bandyopadhyay, *Sahara – The Untold Story* (Mumbai: Jaico Publishing House, 2014), 11.

3 Pavan K Varma, *The Great Indian Middle Class* (New Delhi: Penguin Books, 2007), 7.

4 Ibid.

5 Stephen Haber, *Crony Capitalism and Economic Growth in Latin America: Theory and Evidence* (California: Hoover Institution Press, 2002), Introduction.

6 Michael Hill, *Cannibal Capitalism: how big business and the feds are ruining America* (New Jersey: John Wiley & Sons, 2012).

7 Seeing the human person only as an entrepreneur has its own dangers. The Catholic theology believes that the human person has innate qualities and has to be respected for her/ his own very being. What she/he becomes is an accident. Seeing the human person only as an entrepreneur leads one to see the human person as a machine. Another interpretation is the dehumanization of the human person. In the Second World War, Nazis called the Jews as "Rats." In the ethnic fighting between the Hutus and Tutsis in Rwanda, the Hutus called the Tutsis as "Cockroaches." David Livingstone Smith says this dehumanizing process opens the door for cruelty and genocide. See: David Livingstone Smith, *Less than human: why we demean, enslave, and exterminate others* (New York: St. Martin's Press, 2011).

8 Michael Sauder and Wendy Espeland, "The Discipline of Rankings: Tight Coupling and Organizational Change," *American Sociological Review,* February 2009, 74, 63-82.

9 Martin Kornberger and Chris Carter, "Manufacturing Competition: How Accounting Practices Shape Strategy Making in Cities," *Accounting, Auditing & Accountability Journal,* Volume 23, Number 3, 2010, 325-349.

10 Anthuvan, *The Dynamics and Impact of Globalization – A Subaltern Perspective* (Madurai: Amirtham Publications, 2006), 9.

11 John A. Quelch, Rohit Deshpande. *The Global Market.* (Wiley Publishers, New Jersey 2004), 1.

12 See: World Bank ban on Wipro, Megasoft, *The Hindu,* Janauary 13, 2009 in http://www.thehindu.com/todays-paper/world-bank-ban-on-wipro-megasoft/article373928.ece. Accessed on 7th June 2016.

13 *Compendium of the Social Doctrine of the Church,* No 70.

14 *Populorum Progressio,* No 27.

15 *Gaudium Et Spes,* No 4.

16 *Compendium of the Social Doctrine of the Church,* No 338.

17 நிதி, பொருளாதாரம் மற்றும் சமூகக் காரணிகளில் அறநெறிப் பார்வை வேண்டும் என்பது திருத்தந்தை இரண்டாம் யோவான் பவுலின் கருத்தாகவும் இருந்தது. (*Sollicitudo Rei Socialis,* No 16). 1991-இல் வந்த 100-வது ஆண்டு ஏடும் *(Centesimus Annus)* பலமுறை பொருளாதாரத்தைக் குறிப்பிட்டு சமூகத்திற்கும் அதற்கும் உள்ள தொடர்பை வெளிக்காட்டுகிறது.

[18] *Compendium of the Social Doctrine of the Church,* No 339.
[19] Ibid., No 345.
[20] *Caritas in Veritate,* No 40.
[21] *Evangelii Gaudium,* No 203.
[22] Ibid., No 53.
[23] *Evangelii Gaudium,* No 204.
[24] *Caritas in Veritate,* No 45.
[25] This is with reference to Edward P. Deberri and James E Hug's highly influential book "*Catholic Social Teaching – Our Best Kept Secret*." In part one, the authors describe how the social teachings remain a secret, not explored by at least the United States' mainstream catholic faithful and media. The same holds true for India and Tamilnadu too.



# 10. திருஅவையின் சமூகப் போதனைகளில் திருமணமும் குடும்பமும்

*திருமதி. தனசீலி திவ்வியநாதன்*
*திருச்சி*

கிறிஸ்துவின் பணியைச் செயல்படுத்துவதற்குக் காலத்தின் குறிகளைத் துளாவி அறிந்து, நற்செய்தியின் ஒளியில் அவற்றின் பொருளை எல்லாக் காலக் கட்டங்களிலும் விளக்கி உரைப்பது திருச்சபையின் கடமையாகும்.[1] இதனை நன்கு உணர்ந்த திருச்சபை வெவ்வேறு காலக்கட்டங்களில் நற்செய்தியின் ஒளியில், அதன் அளவு கோல்களின் வழியில் மனிதனைப் பற்றிய மறுக்க முடியாத உண்மைகளின் அடிப்படையில் சமூகப் பிரச்சனைகளை, சமூகப் பொருளாதாரச் சிக்கல்களை அலசி ஆய்ந்து அணுகியதின் விளைவே திருச்சபையின் சமூகப் போதனை மரபு. வரலாற்றில் ஏற்படும் மாற்றங்களுக்கும் புதுப்பிரச்சனைகளுக்கும் சவால்களுக்கும் மாறிவரும் சூழமைவுகளுக்கும் ஏற்ப இந்த மரபில் வளர்ச்சியைக் காணலாம்; புது அழுத்தங்களைப் பார்க்கலாம்.[2]

மனித ஆள், மனித சமுதாயம், கிறிஸ்தவ சமுதாயம் ஆகியவற்றின் நலம் திருமண மற்றும் குடும்பச் சமூகத்தின் நன்னிலையோடு மிக நெருங்கிய தொடர்புடையது[3] என்ற உண்மையினை இறைஒளியில் கண்ட திருச்சபை தனது சமூகப்போதனைகளில் குடும்பம் குறித்த தனது அறிவுரைகளைத் தொடர்ந்து வழங்கிவருகிறது.

வரலாற்றில் என்றுமே இல்லாத அளவில் அதிவிரைவாக மாற்றம் நிகழும் இக்காலக்கட்டத்தில், அதன் தாக்கம் மனித வாழ்வின் எல்லாத் துறைகளையும் ஊடுருவி நிற்கிறது. உயர்வெனப் போற்றிய நம் பண்பாட்டுக் கருவூலங்கள் தங்கள் தன்மையினை மாற்றிக் கொண்டிருக்கின்றன. நம் சமூக உறவுகளில் பெருத்த மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன.[4] இந்த மாற்றங்கள் குடும்ப அமைப்பின் மீதும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன. ஆள்நிலை சார்ந்ததும் பிரிக்க முடியாததுமான இயல்பு கொண்ட, சமுதாயத்தின் உயிரணுவான குடும்ப அமைப்பு, முன்னென்றும் இல்லாத அளவிற்கு சவால்களையும் சிக்கல்களையும் சந்தித்து வருகின்றது. திருச்சபை,

எல்லோருக்கும் இன்று கவலை உண்டாக்கும் பல்வேறு பிரச்சனைகளுள் திருமணமும் குடும்பமும் முக்கியமானவை[5] எனக் குறிப்பிடுகிறது. கிறிஸ்துவிடமிருந்து பிறக்கும் அடிப்படை தத்துவங்களின் ஒளியால் இப்பிரச்சனைகள் ஒவ்வொன்றுக்கும் தெளிவு பெறவேண்டும்[6] என்ற அழைப்பினையும் விடுக்கிறது. இந்த அழைப்பிற்குப் பதிலிருக்கும் வகையில் திருச்சபையின் சமூகப் போதனைகளில் காணக்கிடக்கும் குடும்பம்சார் அறிவுரைகளின் மையப் பொருள்களை ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கம்.

## இன்றைய இந்தியச் சூழலில் திருமணமும் குடும்பமும்

''இந்தியர்கள் எங்கே சென்றாலும் தங்கள் குடும்பப் பின்னணியையும் கூடவே எடுத்துப் போகிறார்கள். அதன் காரணமாய் எப்போதும் தங்கள் குடும்பத்துக்குள் இருப்பது போலவே உணர்கிறார்கள்'' என்பது உளவியல் அறிஞர் ஆலன் ரோலண்ட் கருத்து.[7] இந்தியர்கள் ஒவ்வொருவரும் தங்கள் அனுபவத்தில் அறிந்த உண்மையும் இதுவே. இந்தியாவில் ஒவ்வொரு மனிதனின் சிந்தனையிலும் செயலிலும் அவன் குடும்பத்தின் ஆதிக்கம் உறைந்து கிடக்கிறது. அது அவனின் வாழ்வின் அனைத்துப் பகுதிகளையும் ஊடுருவி அவன் வாழ்வைத் தீர்மானிக்கிறது. அதேவேளையில் குடும்ப அமைப்பு என்பது ஒரு மாறா இலக்கண வரையறைக்குள் அடங்கும் ஒன்று அன்று என்பதையும் நாம் கணக்கில் கொள்ளவேண்டும். அது ஒரு நிரந்தரமான அமைப்பாக இருப்பினும் காலந்தோரும் பல்வேறு மாற்றங்களுடன் பயணித்து வருகிறது. பண்பாடு, மானுடவியல் சார்ந்த மாற்றங்கள் குடும்பம், திருமணம் ஆகியவற்றில் இன்று அதிகமான தாக்கத்தை ஏற்படுத்துகின்றன.[8]

18-19ஆம் நூற்றாண்டுகளில் உருவான தொழிற்புரட்சி வீடுசார் உற்பத்தியில் இருந்து மனிதனைப் பிரித்தது. கூட்டுக்குடும்பங்கள் உடைந்து தனிக் குடும்பங்கள் உருவாயின. இன்று, பன்னாட்டு நிறுவனங்களின் வருகை மனிதனை நகர்ந்து கொண்டேயிருப்பவனாக மாற்றியிருக்கிறது.[9] மில்லியன் கணக்கில் வேலைக்காக ஏழைகள் பணக்காரர்கள் என்ற பாகுபாடு இன்றி மனிதர்கள் இடம்பெயர்ந்து கொண்டேயிருக்கின்றனர். குடும்ப



விழுமியங்களும் பொருளாதார, அரசியல், பண்பாட்டு மேம்பாடுகளுக்கேற்ப மாறிவருகின்றன.

உலக மயமாக்கல், சந்தைப் பொருளாதாரம், தகவல் தொழில் நுட்பவளர்ச்சி, கல்விக்கும் பொருளாதாரத் தற்சார்பிற்கும் பெண்களுக்கு கிடைத்துள்ள வாய்ப்புக்கள், சுதந்திர வேட்கைக்கான காலமாக இந்த புத்தாயிரம் ஆண்டை மாற்றிவிட்டது. ஒருபுறம் உற்பத்தி, மனித இன உற்பத்திக்குமட்டுமான கணவன்-மனைவி உறவு இன்று நட்புக்கும் தோழமைக்கும் அங்கீகாரத்திற்கும் ஆண்-பெண் நிகர்நிலைக்குமான இடமாக மாறிவருகிறது. மறுபுறம் நுகர்வுக்கும் தனிமனித வாதத்திற்கும், கட்டுப்பாடு அற்ற சுதந்திரத்திற்கும், வன்முறைக்கும் வித்திட்டுவிட்டது.

கடந்த பத்து ஆண்டுகளில் இந்தியாவில் கணவன் – மனைவி பிரிந்து வாழ்தலும் சட்டப்படி விவாகரத்துப் பெற்றுப் பிரிவதும் அதிகரித்துள்ளது. கடந்த பத்து ஆண்டுகளுக்கு முன்னர் ஆயிரத்துக்கு ஒன்றாக இருந்த விவாகரத்து இன்று 1000க்கு 13ஆக மாறியிருக்கிறது.[10] புதிய புள்ளி விவரங்களின்படி இந்தியாவில் 13,62,316 பேர் விவாகரத்து ஆனவர்கள். ஆனால் 35,35,202 பேர் விவாகரத்து இன்றி பிரிந்து வாழ்கின்றனர்.[11] குடும்ப வன்முறையும் அதிகரித்து வருகிறது. இந்தியாவில் 37 சதவீகிதம் பெண்களும் ஒரு சதவீகிதம் ஆண்களும் தங்களின் இணையரால் வன்முறைக்கு உட்படுத்தப்படுகின்றனர்.[12] தற்கொலை, ஆணவக் கொலைகள், பெண் சிசுக் கொலை என குடும்ப வன்முறையின் பட்டியல் நீள்கிறது. வன்முறை, வறுமை, வேலையின்மை, வேலைசார் இடம்பெயர்வு, அதீத தனிமனிதவாதம், நுகர்வு வெறி என்ற காரணிகளால் திருமணமும் குடும்பமும் பன்முனைத் தாக்குதலுக்கு உள்ளாகியிருக்கிறது. குடும்பத்தினைப் பீடித்திருக்கும் நோய்களுக்கான சிகிச்சையை, நலமான குடும்பவாழ்வுக்கான தீர்வுகளை வழிகாட்டுதல்களை மக்கள் திருச்சபையிடம் தேடத் தொடங்கியுள்ளனர்.

## திருஅவையின் சமூகப் போதனைகளில் திருமணமும் குடும்பமும்

குடும்பம், இன்று சந்திக்கும் சவால்களை மிக ஆழமாக அலசி ஆய்ந்த திருஅவை, இறைவார்த்தை ஒளியில் திருமணத்தின் மேன்மை, நோக்கம்,

பண்புகளையும் குடும்பத்தின் இன்றியமையாத இடத்தையும் பணியையும் விளக்குவதோடு, அவற்றிற்கான மேய்ப்புப்பணியையும் தனது சமூக போதனைகளில் வலியுறுத்தியுள்ளது.

### திருமணம் – ஓர் உயரிய அழைத்தல்

இரண்டாம் வத்திக்கான் சங்கம், மனிதரின் மீட்பராகிய திருச்சபையின் மணமகன் திருமணம் என்கிற அருள் அடையாளத்தின் வழியாக கிறிஸ்தவ மண மக்களைச் சந்திக்க வருகிறார்... அவர்களோடு தொடர்ந்து தங்கியிருக்கிறார் என்றும், திருமண அருள் அடையாளத்தின் வழியாக கிறிஸ்தவ மணமக்கள் ஒருவகையில் திருநிலைப்படுத்தப்படுகின்றார்கள் என்றும் கூறுகிறது.[13]

திருத்தந்தை பிரான்சிசு அவர்களும், 'திருமணம் எனும் அருள் அடையாளம் ஒரு வெறும் சமூக வழக்கமோ வெற்றுச்சடங்கோ அர்ப்பணத்தின் வெறும் புறக் குறியீடோ அல்ல. இந்த அருள் அடையாளம் மணத்துணைவர்கள் புனிதமடைவதற்காகவும் மீட்புப் பெறுவதற்காகவும் தரப்பட்ட அருட்கொடை... ஓர் இறை அழைத்தல்[14] என்கிறார்.

இப்புதிய இறையியல் சிந்தனை, திருமணம் மணத் துறவைவிடக் குறைவான அழைத்தல் என்ற பார்வையை முற்றிலுமாக மாற்றியதோடு, திருமணத்தின் மூலம் கடவுள் தன்னை வெளிப்படுத்துகிறார் என்ற புதிய பார்வையை உருவாக்கியது.[15]

### திருமணத்தின் நோக்கம் அன்பே

'அன்பு' கிறிஸ்தவ இறையியலின் மையமாக இருந்தபோதிலும் திருமணத்தின் நோக்கமாக 'அன்பை' ஏற்றுக் கொள்வதற்கும், திருமணப் பாலுறவு அன்பின் வெளிப்பாடு என்பதை நம்புவதற்கும் திருச்சபை தயக்கம் காட்டியே வந்தது. கிறிஸ்தவத் திருமணம் (Casti Connubii, 1930) என்ற மடலில் திருத்தந்தை 16-ஆம் பியூசு திருமண அன்பைக் குறித்து குறிப்பிடுகிறார் என்ற போதிலும், திருமணத்தின் முதல் நோக்கம், இரண்டாம் நோக்கத்தில் அவர் அன்பைக் குறிப்பிடவில்லை.[16] இரண்டாம் வத்திக்கான் சங்கமே திருமண அன்பு குறித்த புதிய பார்வையை ஏற்படுத்தியது எனலாம்.



திருமணத்தின் ஒரே நோக்கம் 'கனிதரும் அன்பு' என்று மிகத் தெளிவாகக் கூறியது.[17]

கணவனுக்கும் மனைவிக்கும் இடையே உள்ள உண்மையான அன்பு... பல்வேறு வழிகளில் வெளிப்படுத்தப்படும் ஒன்றாகும்.[18] உள்ளத்து உணர்வுகளுக்கும் உடல் சார்ந்த செயல்களுக்கும் ஒரு தனிப்பட்ட மாண்பை அளிக்கும் திறன் இவ்வன்பிற்கு உண்டு. தனிப்பட்ட அருள் மற்றும் அன்புக் கொடைகளால் கருணை கூர்ந்து ஆண்டவர் இந்த அன்பை நிலைப்படுத்தினார்; நிறைவு செய்தார்; உயர்த்தினார். மேலும் திருமண அன்பு தன்னலமின்றிச் செயலாக்கம் பெறும் போது முழுமை அடைகிறது.

குடும்ப வாழ்வு மறைத்தூது அறிவுரையும் இதனை உறுதிசெய்கிறது. திருமண அன்பு ஆணும் பெண்ணும் ஒருவருக்கொருவர் முழுமையாகத் தம்மை கையளித்தலை வெளிப்படுத்தும் அடையாளமும் அதன் கனியுமாக உள்ளது.[19]

திருத்தந்தை பிரான்சிசு, 'அன்பின் மகிழ்ச்சி' என்ற தமது திருத்தூது ஊக்கவுரையில் அன்பைக் குறித்தும் திருமண அன்பின் சிறப்புக் குறித்தும் விரிவாகப்பேசுகிறார்.

அன்பு என்பது வெறுமனே ஓர் உணர்வு அல்ல அதைவிடப் பெரியது; அன்பானது வார்த்தைகளில் வெளிப்படுத்தப்படுவதை விடச் செயல்களில் வெகுவாக வெளிப்படுத்தப்படுகிறது.[20] அன்பு ஒவ்வொரு மனிதர் மீதும் உண்மையான நன்மதிப்பைத் தூண்டியெழுப்புவதாகவும் அடுத்தவரது மகிழ்ச்சியைத் தூண்டியெழுப்புவதாகவும் அடுத்தவரது மகிழ்ச்சிக்கான உரிமையை ஏற்றுக்கொள்வதாகவும் இருக்கிறது.[21]

கணவன் மனைவி இடையிலான அன்பு, புனிதப்படுத்தப்பட்ட அன்பு, திருமணம் என்ற அருளடையாளத்தின் அருளினால் அணிசெய்யப்பட்ட ஒளியூட்டப்பட்ட அன்பு. அது 'அன்பின் ஒன்றிப்பு.' அது நட்பின் நெருக்க ஆர்வத்தையும் உள்ளத்துக் காமத்தின் கிளர்ச்சியையும் ஒன்றிணைக்கிறது. உணர்ச்சிகளும் கிளர்ச்சிகளும் தணிந்த பின்பும் அது நீடிக்கிறது.[22]

மரபுசார் பாலுறவு அறநெறிப் பார்வை திருமணப் பாலுறவையும் காமக்கிளர்ச்சியையும் எதிர்மறையாகவே அணுகின. பாலுறவு வேட்கையும் மகிழ்ச்சியும் சந்தேகக் கண்ணோடும் கீழ்த்தரமானதாகவும் பார்க்கப்பட்டன.

பாலுறவு மக்கட்பேறுக்கான தவிர்க்க இயலாத, வருந்தத்தக்க தேவையாகவும், பாலுறவுப் பாவமே மிகக் கொடிய பாவமாகவும் கருதப்பட்டது. திருச்சபையின் பாலுறவு குறித்த புதிய பார்வையைப் புரட்சி எனக் கருதலாம்.[23]

## திருமணத்தில் ஆண்-பெண் சமத்துவம்

கத்தோலிக்கத் திருமணமும் – குடும்பமும் தொடர்ந்து தந்தை ஆதிக்க அமைப்பு முறைகொண்டதாக, பெண்களைத் தொடர்ந்து ஒடுக்குவதாக இருப்பதாகப் பெண்ணியச் சிந்தனையாளர்கள் நம்புகின்றனர்.[24] மணத்துணைவர்கள் சமத்துவமான – சமூகமாக வாழ்தல் பெண்ணியச் சிந்தனையாளர்களுக்கும் கிறிஸ்தவ அறநெறிக்கும் ஏற்புடையதாக இருக்கும் எனக் கருதுகின்றனர்.[25] திருஅவையின் மரபுசார் திருமணவிளக்கங்கள் பெண்ணின் தாழ்நிலையையும், கீழ்ப்படிதலையும் வலியுறுத்தி மனைவி மீதும் பிள்ளைகள் மீதும் கணவனின் மேலாண்மையை உரிமையாகக்காட்டுவது கண்டு அதிருப்தி கொண்டுள்ளனர். இக்குறையைப் போக்கும் வகையில் திருமணத்தில் ஆண்-பெண் சமத்துவத்தை வலியுறுத்தும் சிந்தனைகள் சமூகப் போதனை ஏடுகளில் காணப்படுகின்றன.

இரண்டாம் வத்திக்கான் சங்கம், எல்லா மனிதரும் அடிப்படையில் சமநிலையினரே;[26] ஆணும் பெண்ணும் சரிசமமான ஆள்நிலை சார்ந்த மாண்புடையவர்கள் என்பது அவர்கள் ஒருவரொருவர் மட்டில் காண்கின்ற முழுமையான அன்பின் வழியாக எண்பிக்கப்படும் போது, ஆண்டவரால் உறுதிப்படுத்தப்பெற்ற திருமணத்தின் ஒற்றுமைப் பண்பு தெளிவாகத் துவங்கும்[27] எனக் கூறுகிறது.

திருத்தந்தை 2-ஆம் ஜான் பவுல், பெண் ஆணோடு சரிநிகர் சமமான மாண்பும் கடமையும் உடையவள், மீட்பு வரலாறு பெண்ணின் மாண்புக்குத் தொடர்ச்சியான, தெளிவான அத்தாட்சியாக அமைந்துள்ளது என்றும், 'ஆணும் பெண்ணுமாக மனித இனத்தைப் படைத்த இறைவன் ஆணுக்கும் பெண்ணுக்கும் சரிநிகர் சமமான ஆள்நிலை சார்ந்த மாண்பினை வழங்கினார்; மனித ஆளுக்கே உரித்தான, மீறவியலா உரிமைகளையும் பொறுப்புகளையும் அவர்களுக்கு அளித்தார்' எனக் கூறுகிறார்.[28]



திருத்தந்தை பிரான்சிசு, பெண்களைத் தாழ்வானவர்கள் எனக் கருதிய ஆணாதிக்கப் பண்பாடுகளுடைய அடாச் செயல்களின் சுமைகள் வரலாற்றில் உண்டு. (இன்று) பழைய வகைப்பாடுகள் அழிந்தொழிவதையும் குடும்பங்களில் சமப் பரிமாற்றம் வளருவதையும் கண்டு ஆண், பெண் சம மாண்பு நம்மை மகிழ்வடையச் செய்கிறது எனக் கூறுகிறார்.[29]

## குடும்பத்தின் மேன்மை

கிறிஸ்துவுக்கும் திருச்சபைக்கும் இடையே உள்ள அன்பு நிறை உடன்படிக்கையின் உருவும் பங்கேற்புமாய் உள்ள திருமணத்திலிருந்து கிறிஸ்தவக் குடும்பம் பிறக்கிறது.[30]

குடும்பம் மானிடரின் ஆழ்ந்த இயல்போடு இணைந்தது.[31] குடும்ப அன்பின் அடிப்படையில் எழுகிறது; அன்பால் உயிரோட்டம் பெறுகிறது.[32] குடும்பம் ஒரு குட்டித் திருச்சபை.[33] துறவற அழைத்தலின் நாற்றங்கால்.[34] நற்செய்தியின் விளைநிலம்.[35] பண்பாட்டுக் கல்வியை ஊட்டி வளர்க்கின்ற தாய். மனிதப் பண்பை வளமுறச் செய்கின்ற தாய்.[36] மனிதப் பண்பை வளமுறச் செய்கின்ற ஒரு பள்ளி.[37] குடும்பம் மனித விழுமியங்களின் முதல் கல்விக் கூடம்.[38] குடும்பமே சமுதாயம் சார்ந்த செயல்பாடுகளுக்கான முதன்மைக் களம்.[39]

குடும்பம் சமுதாயத்தின் அடித்தளம். ஞானத்தை அதிகமாகப் பெறவும் மனிதரின் உரிமைகளைச் சமூக வாழ்வின் மற்றத் தேவைகளோடு ஒருங்கிணைக்கவும் பல தலைமுறைகள் ஒன்றுகூடி ஒருவருக்கொருவர் உதவி புரிந்துகொள்கிற இடமாகக் குடும்பம் உள்ளது.[40]

## குடும்பத்தின் கடமைகள்

குடும்பவாழ்வு மறைத்தூது அறிக்கை குடும்பத்தின் நால்வகை பணிப் பொறுப்புகளை விளக்கியுள்ளது.[41]

1. குடும்பம் ஆள்நிலைசார் உறவுகளால் அமைந்த சமூகமாகத் திகழவேண்டும்.
2. குடும்பம் உயிரைப் பேணவேண்டும்.
3. குடும்பம் சமூகவளர்ச்சியில் பங்கேற்க வேண்டும்.

4. குடும்பம் திருச்சபையின் வாழ்விலும் பணிப்பொறுப்பிலும் பங்கேற்க வேண்டும்.

ஏறக்குறைய இதே பார்வையை நாம் பிற சமூகப் போதனை ஏடுகளில் காணமுடிகிறது.

## குடும்பம் உறவுச் சமூகம்

“இல்லத்திருச்சபை” என அழைக்கப்படும் குடும்பம், திருச்சபையினுடைய உறவு ஒன்றிப்பின் ஒரு வெளிப்பாடாக, செயலாக்கமாக உள்ளது.[42] ஆள்களின் ஒன்றிணைப்பாக விளங்கும் கடவுளின் சாயலே குடும்பம்.[43] மூவொரு கடவுள் ஓர் உறவு ஒன்றிப்பு ஆவார். அதன் வாழும் பிரதிபலிப்பே குடும்பம்.[44] நம் கடவுள் தமது ஆழமிக்க மறைபொருளில் தனிமையில் அல்ல; தனித்த ஒரு குடும்பமாகவே உள்ளார்.[45] ஏனெனில், அவர் தமக்குள்ளேயே தந்தைத்தன்மை, மகன்தன்மை, குடும்பத்தின் உள்ளியல்பாகிய அன்பு ஆகியவற்றைக் கொண்டுள்ளார். இறைக் குடும்பத்தில் அந்த அன்பாகத் தூய ஆவி உள்ளார்.[46] இந்த உறவு ஒன்றிப்புக் குடும்பத்தின் இலக்கணமாகத் திகழ வேண்டும். கணவன் – மனைவிக்கு இடையே நிலவும் அன்பு, பரந்து விரிந்து குடும்பத்தின் பிற உறுப்பினர்களான, பிள்ளைகள், சகோதர சகோதரிகள், உற்றார் உறவினரை இணைக்கும் சக்தி வாய்ந்தது. ஆனால், இன்று துன்பமும் தீமையும் குடும்பங்களையும் அவற்றின் வாழ்வு, அன்பு என்பவற்றாலான உறவு ஒன்றிப்பையும் பிரிக்கும் வன்முறையும் குடும்பங்களில் இருப்பதுதான் அக்கசப்பான உண்மை.[47]

இச்சூழலில் ஒவ்வொரு குடும்பமும் நாசரேத்தூர் புனிதக் குடும்பத்தின் உருவ ஓவியத்தைப்பார்க்க வேண்டும். அதன் அன்றாட வாழ்வில் அதற்குரிய சுமைகள், கவலைகள், ஏரோதின் தணிக்க இயலாத வன்முறையைச் சந்தித்தபோது ஏற்பட்டது போன்ற திகிற்கவலைகள் என்பனவும் இருந்தன.[48] மரியாளைப் போன்று தங்கள் குடும்பத்தின் சவால்களை வீரத்துடனும், நிலை அமைதியுடனும் எதிர்கொள்ள வேண்டும்[49] என அழைப்பு விடுக்கும் திருத்தந்தை பிரான்சிசு, குடும்ப உறவு சமூகமாய்த் திகழ சில வழிகாட்டுதல்களையும் தருகிறார். குடும்பவாழ்வு மறைத்தூது அறிக்கையிலும் இவை காணக்கிடக்கின்றன.



1. மணத்துணைவர்களிடையே ஆள்சார்ந்த முறையில் நிகழும் உறவுப் பரிமாற்றத்திற்கு அதிக அழுத்தம் தரப்படவேண்டும்.[50]

2. வெறுமனே ஒத்துப்போவதற்கு எதிராக உண்மைத் தன்மையைத் தேடும் ஆள்முதன்மைக் கொள்கைக்கு நாம் சரியான மதிப்பு அளிக்க வேண்டும்.[51]

3. பிள்ளைகளின் உள்ளம் எங்கே இருக்கிறது என்பதைப் புரிந்து அவர்களை வளர்க்க வேண்டும். கட்டுப்பாடுகளை விதிப்பதன் மூலம் அல்ல; மாறாக பொறுப்புள்ள வகையில் தன்னுரிமை கொண்டவர்களாய்ச் சுதந்திரத்துடன் அவர்களைப் பெற்றோர்கள் வளர்க்க வேண்டும்.[52]

4. குடும்பம் எனும் உறவுச் சமூகம் தழைத்தோங்க ஆண்–பெண் சமத்துவம் நிலவவேண்டும். பெண்களின் மாண்பிற்கு எதிரான அனைத்தும் எதிர்க்கப்படவேண்டும். குழந்தைகளின் நலன் பாதுகாக்கப்படவேண்டும். முதியோரின் நலன் பேணப்பட வேண்டும்.[53]

5. தன்னொறுத்தலும் தியாக உணர்வும் சிறந்தோங்காமல் போயின், குடும்ப உறவு ஒன்றிப்பு நிலைபெறவோ நிறைவுறவோ இயலாது. இந்த உறவு ஒன்றிப்பு வளர வேண்டுமாயின் குடும்பத்திலுள்ள அனைவரும் – தனித் தனியாக ஒவ்வொருவரும் – புரிந்து கொள்ளுதல், சகிப்புத்தன்மை, மன்னித்தல், கருத்திசைவு, ஒப்புரவு ஆகியவற்றில் சிறந்து விளங்க தாராள மனத்தோடு முன்வருவது இன்றியமையாதது.[54]

## குடும்பம் உயிரைப்பேண வேண்டும்

இன்றைய உலகில் உயிர் எதிர்ப்பு மனப்பான்மை உருவாகிவிட்டது, மக்கள் தொகை பெருகிவிட்டால் வாழ்க்கைத் தரம் ஆபத்துக்குள்ளாகிவிடும் என்ற பீதியும் ஏற்பட்டுள்ளது.[55] ஆனால் திருமண உடன்படிக்கை தன் இயற்கைப் பண்பிலேயே மணமக்களின் நலனுக்காகவும் மக்கட்பேறு, குழந்தை வளர்ப்பிற்காகவும் உள்ளது.[56] மக்கட்பேறு வளம் அல்லது இனப்பெருக்கவளம் திருமண அன்பின் கனியும் அடையாளமும் ஆகும்.[57]

உயிரியல் தொழில் நுட்பவளர்ச்சி, தொழில்துறைமயமாக்கல், பாலியல் புரட்சி, அதிக மக்கள் தொகை பற்றியபயம், பொருளாதாரப் பிரச்சனைகள் போன்றவை... நுகர்வுமயமாக்கல், சுதந்திரவாழ்க்கைப் பாணி

போன்றவை பிள்ளைகளைப் பெற்றெடுப்பதைத் தடுக்கலாம்.[58] ஆனால் மணத்துணைவர்கள் நேர்மையான மனச்சான்றின்பேரில் முடிவுகளை எடுக்க வேண்டும்.[59] திருஅவை மனச்சான்றின் இந்த மாண்பின் காரணமாக கருத்தடை, மலடாக்கல், ஏன் கருச்சிதைவு ஆகியன சார்ந்த அரசின் கட்டாயப்படுத்தப்பட்ட குறுக்கீட்டை வன்மையாக எதிர்க்கிறது.[60]

திருமணப் பாலுறவுச் செயல் இரண்டு அர்த்தங்களைக் கொண்டுள்ளது. கணவனையும்-மனைவியையும் அன்புப் பிணைப்பால் இணைக்கும் அர்த்தம் ஒன்று; மற்றொன்று மக்கட்பேறு. இவை இரண்டையும் ஒன்றில் இருந்து மற்றதை மனிதனே குறிக்கிட்டுப் பிரித்துவிடல் தகாது. எனவே, செயற்கைக் கருத்தடை முறைகள் தவறானவை. மாறாக, இயற்கையாலே அளிக்கப்பட்டுள்ள இனப்பெருக்க வளமற்ற கால இடைவெளிகளைப் பயன்படுத்தி மக்கட்பேற்றைக் கனமான காரணங்களுக்காகத் தவிர்ப்பதில் தவறில்லை.

ஆண்டவராகிய கடவுள் உயிரைக்காக்கும் உயரிய பணியை மனிதரிடத்தில் ஒப்படைத்துள்ளார்; இப்பணியை மனிதத் தன்மைக்கு ஏற்ற முறையில் நிறைவேற்ற மனிதர்கள் கடமைப்பட்டுள்ளனர். ஆகவே, கருவானதில் இருந்து உயிரை மிக கவனத்துடன் பாதுகாக்க வேண்டும்; கருச்சிதைவு மற்றும் குழந்தைக் கொலை ஆகியவை கொடிய குற்றங்களாகும்.[61]

மேலும் பிள்ளைகளைப் பேணிவளர்த்து அவர்களுக்குக் கல்வியறிவு ஊட்டும் பொறுப்பு, பெற்றோரைச் சார்ந்துள்ளது. பிள்ளைகளை இறைநம்பிக்கையில் வளர்ப்பது, மறைக்கல்வி அளிப்பது, பாலியல் கல்வி அளிப்பதும் பெற்றோரின் கடமை.[62] அதே வேளையில் பெற்றோர்கள், பிள்ளைகள் ஒரு குடும்பத்தின் உடமை அல்ல என்பதையும், அவர்கள் தங்கள் சொந்த வாழ்வை நடத்த உரிமையுள்ளவர்கள் என்பதையும் உணர்ந்து நடக்கவேண்டும்.[63]

மக்கட்பேறு கிடைக்கப்பெறாத நிலையிலும் திருமண உறவு ஒன்றிப்பாக நிலைத்து நிற்கிறது. திருமணம் பிள்ளைப் பேறுக்காக மட்டும் ஏற்படுத்தப்பட்டதல்ல என்ற செய்தி மக்கட்பேறு இன்றி தவிக்கும் இணையர்களுக்கு ஆறுதல் அளிக்கும் செய்தியாகும்.[64]



## குடும்பம் சமூக வளர்ச்சியில் பங்கேற்க வேண்டும்

குடும்பம்தான் ''சமூகத்தின் உயிரூட்டமான, முதல் உயிரணு''வாகத் திகழ்கிறது. குடும்பம் சமூகத்தின் அடிப்படையாக இருப்பதாலும் உயிருக்குப் பணி புரிவதாலும் அது சமூகத்தோடு உயிரூட்டமான, ஒழுங்கமைப்பான உறவுகளைக் கொண்டுள்ளது.[65]

குடும்பம் தன்னிலே அடைபட்டுக்கிடக்கும் ஒன்றாக இல்லாமல், பிற குடும்பங்களையும் சமூகத்தையும் அரவணைக்கிறது, சமூகத்தில் தன் பொறுப்பை ஏற்கிறது. குடும்பத்தில் அன்றாடம் நிகழும் உறவு ஒன்றிப்பு, பகிர்தல், கைமாறு கருதாது வழங்குதல், மனித மாண்பை மதித்துப் பேணுதல் மூலமாக சமூகத்தை மனிதப் பண்புடையதாகவும், ஆள்நிலைசார் பண்புடையதாகவும் மாற்றுகிற கருவியாய் உள்ளது.[66]

குடும்பம் தனியாகவும் குழுவாகவும் இணைந்து பல்வேறு சமூகப்பணிகளில் ஈடுபட முடியும், ஈடுபட வேண்டும். அரசியலில் ஈடுபட்டு நாட்டுச் சட்டங்களும், நிறுவனங்களும் குடும்பத்தின் உரிமைகளை, கடமைகளை மீறாது இருக்கவும் பேணிப் பாதுகாக்கவும் உதவவேண்டும்.[67]

ஒவ்வொரு மனிதரும் தம் ஆற்றலுக்கு ஏற்றவாறும் மற்றவரின் தேவைகளுக்குப் பொருத்தமாகவும் பொதுநன்மைக்கு ஒத்துழைப்பு நல்கவேண்டும்.[68] ஏனெனில் உலகுசார் செயல்பாடுகளில் ஈடுபட்டு உழைக்குங்கால், அவற்றைக் கடவுளின் திட்டப்படி நெறிப்படுத்துவதன் மூலம் கடவுளின் ஆட்சியை அமைக்கத் தேடுவது, தங்களின் தனிப்பட்ட அழைப்பால் பொதுநிலையினரைச் சார்ந்தது.[69]

சமூகம் குடும்பத்தை மதித்து குடும்பம் முன்னேறுவதற்காகத் தன் சீரிய ஒத்துழைப்பை நல்க ஒருபோதும் தயங்கலாகாது.[70] குடும்பமும் சமூகமும் ஒன்றுக்கொன்று துணையாக நின்று, ஒன்றையொன்று வளர்ச்சியுறச் செய்யவேண்டும்.[71]

## குடும்பம் திருச்சபையின் வாழ்வில் பங்கேற்க வேண்டும்

திருச்சபையின் வாழ்விலும் பணிப்பொறுப்பிலும் பங்கேற்பதன் வழியாகக் குடும்பம் இறையரசை வரலாற்றுப் போக்கில் கட்டியெழுப்பும் பணியாளாக நியமிக்கப்பட்டுள்ளது.[72] வார்த்தை, அருள்அடையாளம், அன்பு

ஆகியவற்றால் திருச்சபை குடும்பத்தை கட்டியெழுப்புகிறது. குடும்பமும் தனக்கே உரிய விதத்தில் திருச்சபையின் தனிப்பட்ட மீட்பு அலுவலைப் புரிவதில் பங்கேற்கிறது.[73]

திருமணம் என்னும் அருளடையாளத்தின் மூலம் பெறும் அருளால், கிறிஸ்தவக் குடும்பங்களே, குடும்பத் திருத்தூதுப் பணியின் செயல் முதல்வர்களாகத் திகழ்கின்றனர். இவர்கள் குடும்பத்திற்குள்ளேயே நற்செய்தி அறிவிப்பு மற்றும் நம்பிக்கை உருவாக்கம் போன்ற முயற்சிகளில் ஈடுபடவேண்டும். குடும்ப வாழ்விற்கு எதிரான பாகுபாடு, வறுமை, புறந்தள்ளுதல், வன்முறை ஆகியவற்றிற்கு இட்டுச்செல்லும் பண்பாட்டு, சமூக, அரசியல், பொருளாதாரம், சந்தை முறைமைகளைக் கண்டிக்க வேண்டும்.[74]

## குடும்பப் பொருளாதாரமும் மனித உழைப்பும்

நமது குடும்ப அமைப்பை நலமுள்ளதாகவும் வளமுள்ளதாகவும் மாற்றும் மிக முக்கியமான காரணிகளை நாம் வரிசைப்படுத்தினால் முதல் மூன்று இடங்களில் நாம் பொருளாதாரத்தை வரிசைப்படுத்த முடியும். இதை நன்கு உணர்ந்த திருஅவை மனித உழைப்பு குடும்பப் பொருளாதாரத்தை நிறைவு செய்வதாக இருக்கவேண்டும் என்பதை வலியுறுத்துகின்றது.

உழைப்பு சமூகத்தின் வளர்ச்சியை உறுதிசெய்து ஒருவரின் குடும்பத்திற்குரிய வாழ்வாதாரம், உறுதி, பயனுடைமை போன்றவற்றை வழங்குகின்றது.[75]

குடும்பமும் உழைப்பும் ஒன்றோடொன்று தொடர்புடையது. குடும்பம் உழைப்பால் உருவாகும் குழுமம்; அதே சமயத்தில் வீட்டிலிருக்கும் ஒவ்வொருவருக்கும் உழைப்பைக் கற்றுக் கொடுக்கும் முதல் பள்ளி.[76]

குடும்பத்தைப் பேணிப் பராமரிக்கத் தேவையானவற்றை மனிதன் சாதாரணமாக தன் உழைப்பாலே ஈட்டுகிறான்.[77] அவ்வாறு குடும்பத்தை அமைக்கவும் பேணிப் பராமரிக்கவும் எதிர்காலத்திற்குப் பாதுகாப்பு அளிக்கவும் குடும்பத் தலைவருக்குத் தரப்படும் ஊதியம்தான் 'நியாயமான ஊதியம்.' இந்த ஊதியம் 'குடும்ப ஊதியம்' என்று அழைக்கப்படுகிறது.[78] தொழிலாளர்கள் பெறும் ஊதியம் அவர்கள் மனித மாண்போடு வாழ்க்கை



நடத்தவும் தங்கள் குடும்பக் கடமைகளை தகுந்தமுறையில் நிறைவேற்றவும் போதுமானதாக அமையவேண்டும்.[79] குடும்பத் தந்தையர் பெறும் ஊதியம் குறைவாக இருக்கும் காரணத்தால், தாய்மார்கள் பிள்ளை வளர்ப்பு போன்ற தங்கள் பொறுப்புகளை விட்டுவிட்டு தொழிற்சாலைகளில் வேலை செய்யும் கட்டாயத்திற்கு உட்படுகிறார்கள். இந்நிலை கண்டனத்திற்குரியது; உடனடியாக முற்றிலும் அகற்றப்படவேண்டிய ஒன்று.[80]

## குடும்பத்திற்கு ஆற்றவேண்டிய அருட்பணிகள்

மனுக்குலத்தின் எதிர்காலம் குடும்பத்தையே சார்ந்துள்ளது[81] என்பதால் குடும்பங்களுக்கான மேய்ப்புப்பணி வளர்ச்சியடைவதற்காக எல்லா முயற்சிகளும் எடுக்கப்படவேண்டும்.[82] குடும்பத்தை மேம்படுத்தவும் அதை நிறைவுக்குக் கொணரவும் அனைவருக்கும் பொறுப்பு உண்டு என்றாலும், திருஅவையின் கடமைகளில் இதுதான் முதன்மையானது. குடும்பம் உருவாகி, வளர்ச்சியுறும் எல்லாப்படிகளிலும் அதனோடு இணைந்து அடியெடுத்து வைத்து அதைப் பின் செல்வது திருச்சபையின் கடமை.[83]

திருமணம், குடும்பத்திற்கான அருட்பணி, திருமணத் தயாரிப்பில் தொடங்குகிறது. திருமணத்தின் மாண்பையும் அழகையும் ஆழமாக உணரும் வண்ணம் திருமணத் தயாரிப்புப் பயிற்சிகளை வழங்கவேண்டும். திருமண வழிபாட்டுக் கொண்டாட்டத்தை ஓர் ஆழமான ஆள்சார்ந்த அனுபவமாகக் கொண்டாட வேண்டும். திருமணத்தின் தொடக்க ஆண்டுகளில் மணத்துணைவர்கள் அதிகமானச் சவால்களைச் சந்திக்கும் பொழுது அவர்களுக்கு அருட்பணிசார் உடன்பயணித்தல் தேவையான ஒன்று. அவர்கள் குடும்ப அருள்வாழ்விலும் நம்பிக்கையிலும் வளர்ச்சி பெற அருட்பணியாளர்கள் உதவவேண்டும். வாழ்வை வரவேற்கும் மனப்பான்மையை அவர்கள் பெற உற்சாகப்படுத்த வேண்டும்.[84]

திருச்சபையின் மேய்ப்புப்பணிசார்ந்த அக்கறையானது எல்லாக் குடும்பங்களையும் குறிப்பாக பிரச்சனைகளால் அவதிப்படுகிற, ஒழுங்கீனமாக அமைந்துவிட்ட குடும்பங்களை இன்னும் அதிக ஆர்வத்துடன் அரவணைப்பதாக இருத்தல் வேண்டும்.[85]

குடும்பம் என்பது ஒரு நலன். அது இல்லாமல் சமூகம் இருக்க முடியாது; எனவே அது பாதுகாக்கப்பட வேண்டும். எனவே மணமக்கள்

உறவில் நெருக்கடி ஏற்பட்டு பிரிதல், மணவிலக்கு போன்ற சிக்கல்கள் எழும் சூழலில் அருட்பணியாளர்கள் ஆற்றுப்படுத்துதல் மூலம் காயங்களை குணமாக்க வேண்டும்.

சிக்கலில் உழல்கின்ற குடும்பங்களுக்கு அதிகத் தாரளமான, அறிவார்ந்த, முன்மாதிரியான மேய்ப்புப்பணிபுரிவது தேவையாகும். வேலைக்காக இடம் பெயர்ந்து செல்வோர், நீண்டகாலம் பிரிந்துவாழ வேண்டிய சூழ்நிலையில் உள்ளோர், ஏதிலியர்கள், வீடு அற்றோர், ஒற்றைப் பெற்றோர் கொண்ட குடும்பங்கள், குடி, போதைக்கு அடிமையானோரைக் கொண்ட குடும்பங்கள், குறிப்பிட்ட வயதிற்கு முன்னரே திருமணம் செய்து கொண்டோர், பங்குத்தளத்தோடு சுமூகமான உறவில்லாத குடும்பங்கள் இவற்றிற்குத் தனிக்கவனம் செலுத்த வேண்டும்.[86]

விவாகரத்தை இறைத்திட்டத்திற்கு எதிரானது எனத் திருச்சபை எதிர்த்த போதிலும், மணமுறிவு, மணவிலக்குப் பெற்றோரின் துன்பங்களுக்கு மதிப்பு அளிக்கவேண்டும்.[96] அவர்களுக்கு அருள்சார் ஆதரவு அளிக்கவேண்டும்.[97]

சபைகள்சார் கலப்புத் திருமணங்கள் சார்ந்த பிரச்சனைகள் பற்றித் தனிப்பட்ட கவனம் தேவை. சமய வேறுபாட்டை உள்ளடக்கிய திருமணங்கள் அதிகரித்து வருகின்றன. இது பல்வேறு சமூக, பண்பாட்டுச் சூழமைவுகளுக்கேற்ற, வேறுபடுத்தப்பட்ட அருட்பணிச் செயல்பாடுகளை ஆற்றுவதை அவசரத் தேவை ஆக்குகின்றது.[87]

தன் பாலினச் சேர்க்கை ஆள்களுக்கிடையே ஒன்றிப்பு என்பது திருமணம் மற்றும் குடும்பம் பற்றிய இறைவனின் திட்டத்திற்கு ஒத்தவையல்ல. இருப்பினும் அவர்களுக்கு அருட்பணி வழிகாட்டுதல் வழங்கப்பட வேண்டும்.[88]

பங்குகள், இயக்கங்கள், கல்விக்கூடங்கள் மற்றும் திருஅவையின் பிற நிறுவனங்களும் பல்வேறு வழிகளில் குடும்பங்களின் வளர்ச்சிக்கு உதவ முடியும். இல்லத்திற்குச் சென்று மணத்துணைவர்களோடு உரையாடுவது, குடும்பப் பிரச்சனைசார் சமூகப் பணிகள், அருள்வாழ்வு வளர்ச்சிக்கான திட்டச் செயல்பாடுகள், பயிற்சிப் பட்டறைகள், குடும்பங்களின் கூட்டங்கள்[100] எனப் பல்வேறு பணிகளைக் கொண்டதான மேய்ப்புபணித்திட்டத்தால் திருமணமும் குடும்பமும் வலுப்பெற்று வளரமுடியும்.



## இறுதியாக...

திருமணம் எனும் நிறுவனத்தில் நெருக்கடியின் அறிகுறிகள் பல இருப்பினும் திருமணம் செய்து குடும்பத்தை உருவாக்குவதற்கான விருப்பம் சிறப்பாக இளையோரிடம் உயிர்துடிப்புள்ளதாக உள்ளது; இது திருஅவைக்கு ஒரு தூண்டுதலாக உள்ளது. இந்திய மண்ணைப் பொறுத்தவரையில் திருமணமும் குடும்பமும் புனிதமான பேணிக்காக்கப்பட வேண்டிய ஒன்றாகக் கருதும்போக்கே காணப்படுகிறது. குடும்பம் குறித்த திருச்சபையின் போதனைகள், இந்தியக் குடும்பங்கள் உயர்வாகக் கருதும் விழுமியங்களை மேலும் வளரச் செய்து வலுவூட்டுவனவாக உள்ளன. பல்சமயத்தாரோடு ஒன்றிணைந்து வாழும் கிறிஸ்துவ இணையர்களும் குடும்பங்களும் சமூகப் போதனைகளால் ஒளிபெற்று தாங்கள் வாழும் சமுதாயத்தில் புளிப்பு மாவுபோல் செயலாற்ற முடியும். ஆனால், நூற்றாண்டுகால வரலாறு கண்ட சமூகப் போதனைகள் இன்னும் மக்களைச் சென்றடையவில்லை என்பதே உண்மை. மேலும், திருச்சபையின் போதனைகளின் நோக்கமே அருட்பணி என்பதை நாம் உணரத் தவறிவிட்டோம். எனவேதான் ''திருஅவை, திருமண வாழ்விற்கு அர்த்தம் வழங்கி, போதுமான உதவியைக் குடும்பங்களுக்கு வழங்குகிறோம் என நீண்ட காலமாக நினைத்துக் கொண்டிருக்கிறது'' எனத் திருத்தந்தை பிரான்சிசு தன்வருத்தத்தைப் பதிவு செய்துள்ளார். குடும்பங்களுக்கான அருட்பணியை திருஅவையின் போதனைகளின் வழிகாட்டுதலில் நாம் விரிவுபடுத்த வேண்டும். திருமணத் தயாரிப்பு, இயற்கைமுறை குடும்பநலத்திட்டம் என்ற குறிப்பிட்ட சிலபணிகளோடு நின்று விடாமல் எங்கெல்லாம் குடும்ப வாழ்வு நிறைவற்றதாக, மகிழ்ச்சியிலும், அமைதியிலும் குறைபட்டதாக உள்ளதோ, அங்கெல்லாம் பரிவிரக்கம், உறவு நெருக்கம் ஆகியவற்றை வழங்க முயற்சி செய்ய வேண்டும். திருச்சபையின் வளங்களில் மிகப்பெரிதான மனித வளத்தைப் பயன்படுத்த முன்வரவேண்டும். பொதுநிலையினர், துறவறத்தார் அருட்பணியாளர்களுடன் இணைந்து பணியாற்ற வேண்டும். ஏனெனில்,

> ''குடும்பங்கள் அனுபவிக்கும் அன்பின் மகிழ்வு
> திருஅவையின் மகிழ்வாகவும் உள்ளது''

(அன்பின் மகிழ்ச்சி, எண்.1).

## அடிக்குறிப்பு

1. இன்றைய உலகில் திருச்சபை, எண். 4.
2. பெலிக்ஸ் வில்பிரப், அணிந்துரை, *புத்துலகம் படைக்கவே* தொகுப்பு: ச. தே. செல்வராஜ், திருச்சி பவுல் இறையியல் மன்றம். 1991. பக் ix.
3. இன்றைய உலகில் திருச்சபை, எண். 47.
4. ஞானாபேட்ரி, உலகமயமும் இறையியலாக்க சவால்களும், உலகமயமாகிவிட்ட சூழலில் இறையியல் ஆக்கம் – தமிழ் இறையியல் பயிலரங்க உரைகள் தொகுப்பு 13.08.2005, அழகியமண்டபம்: அனல் வெளியீடு, 2005, பக்.1.
5. இன்றைய உலகில் திருச்சபை, எண். 46.
6. மேலது.
7. ச. மாடசாமி, தமிழர் திருமணம் அன்று முதல் இன்று வரை. சென்னை: பாரதி புத்தகாலயம், 2005, பக்.3.
8. திருத்தந்தை பிரான்சிஸ், அன்பின் மகிழ்ச்சி, தமிழாக்கம் சூ. சந்தியாகுராசா, தே. அல்போன்சு மற்றும் பலர். திருச்சிராப்பள்ளி: தேடல் வெளியீடு, 2016. பக். xi.
9. William Johnson Everett, Blessed Be the Bond. (Third Edition) p.13.
10. Ankita Sukla, *Bizarre reasons Indian Cite for divorce,* Jan 4, 2016. Times of India. Indiatimes.com.
11. ஆர். வைதேகி, பிரிவதுதான் தீர்வா, ஆனந்தவிகடன் 5.10.2016. பக்.27.
12. Jeevaraj Lourdhu, Breaking the Silence: A timely Mission of Catholic church to Eradicate Spousal Abuse (Domestic Violence) among the Indian Families (Part I) Vaiharai Vol, 19, No.1, Jan-June 2014, p.59.
13. இன்றைய உலகில் திருச்சபை, எண். 48.
14. *அன்பின் மகிழ்ச்சி*, எண்.72.
15. Bernnan, p.6.
16. Bernnan, p.11.
17. பி. ராயன்னா, குடும்பமும் சமுதாயமும், புத்துலகம் படைக்கவே, பக்.119.
18. இன்றைய உலகில் திருச்சபை, எண். 49.
19. மேலது.
20. அன்பின் மகிழ்ச்சி, எண்.94.
21. அன்பின் மகிழ்ச்சி, எண்.95.
22. அன்பின் மகிழ்ச்சி, எண்.120.
23. Karl H. Peschke, Christian Ethics - Moral Theology in the Light of Vatican II, Vol.II, Banglore: Theological Publications in India, 1994. p.389
24. Gaile M. Pohlhaus, Feminism and Christian Marriage: A Progress Report, in *Christian* Marriage and Family (Contemporary Theological and Pastoral Perspective), p.93.



25. Ibid. p.94.
26. இன்றைய உலகில் திருச்சபை, எண். 29.
27. இன்றைய உலகில் திருச்சபை, எண். 49.
28. குடும்பவாழ்வு, எண்.22.
29. அன்பின் மகிழ்ச்சி, எண்.54.
30. இன்றைய உலகில் திருச்சபை, எண். 48.
31. இன்றைய உலகில் திருச்சபை, எண். 25.
32. குடும்பவாழ்வு, எண்.18.
33. திருச்சபை, எண்.11.
34. குருத்துவப் பயிற்சி, எண்.2
35. திருச்சபையின் நற்செய்திப் பணி, எண்.19.
36. இன்றைய உலகில் திருச்சபை, எண். 61.
37. மேலது. எண்.52.
38. அன்பின் மகிழ்ச்சி எண்.274.
39. மேலது. எண். 276.
40. இன்றைய உலகில் திருச்சபை, எண். 52.
41. குடும்பவாழ்வு, எண்.17.
42. மேலது. எண்.20.
43. அன்பின் மகிழ்ச்சி, எண்.71.
44. அன்பின் மகிழ்ச்சி, எண்.11.
45. அன்பின் மகிழ்ச்சி, எண்.11.
46. அன்பின் மகிழ்ச்சி, எண்.11.
47. அன்பின் மகிழ்ச்சி, எண்.19.
48. அன்பின் மகிழ்ச்சி, எண்.30.
49. அன்பின் மகிழ்ச்சி, எண்.30.
50. அன்பின் மகிழ்ச்சி, எண்.32.
61. மேலது. எண் 33.
62. மேலது. எண் 261-262
63. குடும்பவாழ்வு, எண்.22-27.
64. குடும்பவாழ்வு, எண்.21இ.
65. குடும்பவாழ்வு, எண்.30ஆ
66. திருச்சபைச்சட்டம். எண், 1055, பிரிவு 1.
67. குடும்பவாழ்வு, எண்.28.
68. அன்பின் மகிழ்ச்சி, எண்.42.
69. அன்பின் மகிழ்ச்சி, எண்.42.
60. மேலது.

61. இன்றைய உலகில் திருச்சபை, எண்.51.
62. குடும்பவாழ்வு, எண்.37-41.
63. அன்பின் மகிழ்ச்சி. எண்.18.
64. இன்றைய உலகில் திருச்சபை, எண்.50.
65. குடும்பவாழ்வு, எண்.42.
66. குடும்பவாழ்வு, எண்.43.
67. குடும்பவாழ்வு, எண்.44.
68. இன்றைய உலகில் திருச்சபை எண்.30.
69. திருச்சபை, எண்.31.
70. குடும்பவாழ்வு, எண்.45.
71. மேலது. எண். 46.
72. மேலது. எண். 49.
73. மேலது. எண். 48-49.
74. பிரான்சிஸ் விஜயகுமார், குடும்பமும் பொருளாதாரமும், நூல்: குடும்பமே நற்செய்தி, தொகுப்பு எஸ்.பி.ஜான்சன், திருச்சிராப்பள்ளி: தேடல் வெளியீடு, 2014. பக்.35.
75. அன்பின் மகிழ்ச்சி, எண்.24.
76. மனித உரிமை, எண்.10.
77. மேலது. எண்.10.
78. மேலது. எண்.19.
79. அன்னையும் ஆசிரியையும், எண்.71.
80. புத்துலகம் படைக்கவே, பக்.115.
81. குடும்பவாழ்வு, எண்.86.
82. மேலது. எண்.65.
83. மேலது. எண்.65.
84. அன்பின் மகிழ்ச்சி, எண்.205-222.
85. குடும்பவாழ்வு, எண்.65.
86. மேலது. எண்.77.
87. குடும்பவாழ்வு, எண்.241.
88. மேலது. எண்.246.
89. மேலது. எண்.247-248.
90. மேலது. எண்.250-51.
91. மேலது. எண்.229.



# 11. திருஅவையின் சமூகப் போதனைகளில் பெண்களின் நிலை

*அருள்சகோதரி முனைவர் ஸ்டெல்லா*
*பிரான்சிஸ்குவின் மரியாவின் மறைபரப்பு சபை*
*உதகை*

''மகள்'' என்ற மாண்பும் ''பெண்மை'' என்ற பண்பும் பெண்களுக்கே உரித்தான பாச மழை. ''சீயோனின் மகளே, நீ களிகூர்ந்து ஆர்ப்பரி.'' உன் பிறப்பே எமது குலத்திற்கு அருள் வரம் என்று ஆனந்தம் அடையும் பெற்றோர்கள் பலர். பெண் குழந்தைக்காத் தவமிருப்பவர் எத்தனையோபேர். நடைமுறை மரபு வழக்கு இதை மறைத்தாலும் உண்மையை மறைக்க இயலவில்லை.

முதலாளித்துவம் என்னும் முரட்டுச் சூழலிலும், ஆணாதிக்கம் என்னும் அரண்ட குகையிலும் தன் தனித்தன்மையை இழந்துவிடாமல் இன்னும் போராடிக் கொண்டிருக்கும் இறைவனின் அரிய படைப்பாகத் திகழ்கின்றாள் பெண். மனிதத்துவத்தின் புதிய இலக்கணமாய்ப் பழைய புராணக் கதைகளில் மறைந்துபோன தன் மகத்துவத்தை தேடிக் கொண்டிருக்கின்றாள். பங்கேற்பு, சமத்துவம், முழு சுதந்திரம் எனும் புதையல்களைப் புதைக்கப்பட்ட மணற்குவியல்களிலிருந்து அகழ்ந்து எடுத்துக்கொண்டிருக்கின்றாள்.

பெண்ணாகப் பிறந்ததன் பேற்றைத் திருவிவிலியம் சிறப்புற எடுத்தியம்புகின்றது. இறைவன் தன் கலைகளின் மகுடமாக அழகுக்கலையாகப் பெண்ணைப் படைத்தார். இறைவனின் அரிய, நேரிய குணங்களை அவளில் கண்டார், சேயாக, தங்கையாக, மனைவியாக, தாயாக, மட்டற்ற மகிழ்ச்சியாக, அழகின் வடிவாக ஆன்ற குணங்கள் அனைத்தையும் அவளில் விதைத்து மகிழ்ந்தார். அன்பில் நிறைந்து, பாசத்தில் பிறந்து, தியாகத்தில் மலர்ந்து இறையோடு இணைந்து இந்த உலகின் உயிர்களை அணைத்து வாழும் பண்பினை அவளில் கண்டார். இதைப் பார்த்துக்கொண்டிருந்த மனிதன் ''ஏன் உனக்கு மட்டும் இத்தனை கொடைகள். உன்னை அடக்கி ஆள்வதன் மூலம் நீ எனக்கு அடங்கி இருப்பாய் என்று மனிதக் கட்டளைகளைச் சுமத்தினான்.

இறைவனின் சாயலாகவும் தன்மையாகவும் படைக்கப்பட்ட பெண் தன் உரிமைகள் அனைத்தையும் இழந்து அடிமைப்பெண் ஆனாள். ஏனெனில் அவள் தன் தன்மையிலிருந்து மாறவில்லை. தொடர்ந்து இறைவனின் பரிசாகப் பெற்றத் தன்மான உணர்வையும், சுயமரியாதையையும், தியாகத்தின் சிகரத்தையும் பெண் இழக்கவில்லை. *உரிமைக் குடிமகள், அடிமைப்பெண்* என்ற இரண்டு தூண்களுக்கும் இடையே இன்னும் போராடிக்கொண்டிருக்கிறாள் பெண்.

திருஅவையின் போதனைகளும் இவ்விரண்டு தூண்களின் நடுவே பெண்களை வழிநடத்திச்செல்லும் பாலமாக அமைகின்றது. இறைவன் தாயின் குணங்களைச் சுமந்து தாய்மையின் மாண்பினை எடுத்துக் கூறுகின்றார். கருணையும், அன்பும், அருளும், ஆக்கப்பூர்வ சிந்தனையும் நிறைந்தவரான பெண்ணின் கனிவு நிறைந்த மனிதாபிமான மாண்பை வெளிப்படுத்தும் அன்பின் தெய்வமாகிறார். அவர் சாயலில் தோன்றி மனித குலத்தாய் ஆகிறாள். ஆக்கப்பூர்வ வலிமைகொண்ட பெண்ணினம் உயிரைத் தாங்கவும், உறவைத் தாங்கவும், அன்பைத் தாங்கவும், குழந்தையைத் தாங்கவும், பெற்றோரைத் தாங்கவும், உழைப்பைத் தாங்கவும் கொடுமையைத் தாங்கவும், பொறுமையைத் தாங்கவும் வற்புறுத்தப்பட்டாலும் இறைவனையே தாங்கும் தாயாக அழைக்கப்பட்டார் மரியா. ஒதுக்கப்பட்ட, ஓரம் கட்டப்பட்ட நிலையிலும் அவர் தளரவில்லை, பின்னடையவில்லை, தன்மான உணர்வை உதறவில்லை, மாறாக உயிரைப் பேணிக்காக்கும் பேழையாகியிருக்கின்றார். மிரியம், பூலா, சிப்ரா, எஸ்தர், யூதித், ரூத், டெபோரா, மக்கபேயரின் தாயார் இவர்கள் அனைவருக்கும் சிகரமாக நமது அன்னை மரியாள் திகழ்கிறார்.

இவர்களின் வழித்தோன்றல்கள் பெண்கள் என்றாலும் சமூகத்தின் விளிம்பிற்குத் தள்ளப்பட்டதேன் என்பது நம் அடிப்படைக் கேள்வி. ஒதுக்கப்பட்டாள், ஓரம் கட்டப்பட்டாள், உதைக்கப்பட்டாள், உயிர் மாய்க்கும்வரை வதைக்கப்பட்டாள், அவள் பட்ட துயரம் வார்த்தையில் அடங்குமோ!!! குடிகாரக் கணவன், வேலைக்குச் செல்லாத பட்டதாரி, பதுங்கிப் பாயும் பலாத்காரன், விலைக்கு விற்கும் மோகப் பொருள், இவைகள் அனைத்தையும் தாண்டி எமனாக வரும் அந்தரங்கங்களைச் சூறையாடும் ஊடகன். இத்தகைய போராட்டங்களிலிருந்து விடுதலை பெறக்



காலங்காலமாகப் பெண்கள் எதிர்த்து நின்றனர். அவர்களின் குரல் வெளி வரா வண்ணம் அடக்கி ஆளும் பக்குவத்தை ஒழுக்கம் என்ற போர்வையில் பெண்கள் இருட்டறைக்குத் தள்ளப்பட்டனர். சுதந்திரம் இழந்து சுய சிந்தனை மறந்து தியாகம் மட்டும் தங்கள் சொத்தாய் வாழ்ந்தனர். மனிதன் தன்னை கட்டுப்படுத்திக் கொண்டால் சமுதாயம் மகிழ்வுறும்; பெண்களும் சுதந்திரம் பெறுவர்.

திருத்தந்தை பிரான்சிசு கத்தோலிக்கத் திருஅவை மட்டுமல்ல, உலக மக்களின் சிந்தனையையே உசுப்பிவிடும் புதிய சிந்தனையாளராகத் திகழ்கின்றார். திருத்தந்தை பிரான்சிசு பெண்களைப் பற்றிய மிக உன்னதமான சிந்தனையைப் பகிர்ந்துள்ளார். இதில் புரட்சிகரமான விதைகள் புதைந்திருப்பதை நாம் காண்கிறோம். பாதம் கழுவும் திருச்சடங்கை வத்திக்கானில் அல்லாமல் சிறைச்சாலையில் ஆண்கள், பெண்கள் ஆகியோரின் பாதங்களைக் கழுவுகின்றார். திருஅவையில் பொதுநிலையினரும் பெண்களும் முன்னிறுத்தப்பட வேண்டிய நேரம் நெருங்கியுள்ளதென்பதை மிகத் துல்லியமாக தன் வாழ்வில் எடுத்துக்காட்டியுள்ளார். வத்திக்கான் அலுவலகங்களில் பெண்களைப் பணியமர்த்தி, புரட்சிகரமான துணிச்சலுடன் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றார். திருத்தந்தை பிரான்சின் தலைமைத்துவத்தில் நாம் புதிய பாதையில் அடியெடுத்து வைத்துக் கொண்டிருக்கின்றோம். திருத்தந்தை பிரான்சிசு அவர்களுடன் இணைந்து திருஅவையும் வீதிக்குவர முயற்சிக்குமா? இதுவே நம் தேடலின் கருப்பொருள்.

## விவிலியத்தில் ஆண்-பெண் சமத்துவம்

பெண்ணுக்காக ஆண் படைக்கப்படவில்லை. ஆணுக்காகவே பெண் படைக்கப்பட்டாள் (1கொரி 11:10). இது ‘‘மனிதன் தனியாக இருப்பது நல்லதல்ல. அவனுக்கு உற்ற துணையை உருவாக்குவோம்’’ (தொநூ 2:18-19) என்பதற்குக் கொடுக்கப்படும் விளக்கம். ஆனால் ஆதாமின் விலா எலும்பிலிருந்து உருவாக்கப்பட்ட பெண்ணினம் என்ற தொடக்கநூலின் கருத்தில் பெண்கள் குறைபட்டவர்கள் அல்லது கீழ்த்தரமானவர்கள் அல்லது ஆண்களுக்கு அடிமையானவர்கள் என்ற சிந்தனைக்கு இடம் இல்லை. ஆண்களும் பெண்களும் பிறவியில் சமமானவர்கள். ஒருவரை ஒருவர் நிறைவு செய்பவர்கள் என்பதுதான் பொருள்.

## மத்திய காலம்வரை திருஅவை வரலாற்றில் பெண்கள் பற்றிய பார்வை

திருஅவை வரலாற்றில் பலரும் பெண்களைத் தாழ்வாகவும் தரம் குறைந்தவர்களாகவும் அருவருக்கதக்கவர்களாகவும் கருதினர். "பெண்கள் சாத்தானின் நுழைவாயில்" என்றார் தெர்த்தூலியன். ஆணுடைய தலைமைத்துவத்தில்தான் பெண்கள் இறைச்சாயலை கொண்டவர்கள். தானாக தன்னில் இறைசாயலைக் கொண்டவர்கள் அல்ல என்றார் அவர். "குழந்தைகளைப் பெற்றெடுப்பதைத் தவிர பெண்களுக்கு வேறென்ன உள்ளது. அவள் தாயானாலும் மனைவியானாலும் அவள் மயக்கும் பண்புடைய ஒருவள்தான். பெண்ணை ஆணோடு ஒப்பிட்டுப் பார்த்தால் நெறி தவறிப் பிறந்தவள்; குறைபாடுள்ளவள், தன்னிலே உறுதியற்றவள். தனக்குக் கிடைக்காததை ஏமாற்றுதலாலும் கொடூரமான பொய்களாலும் பெற முயற்சிக்கிறாள். பெண்களைப் பாதுகாப்புடன் அணுகுங்கள். ஆண்களுக்குப் பகுத்தறிவு நல்லனவற்றைச் செய்யத் தூண்டுவதுபோல், பெண்களின் உணர்வுகள் எல்லாவிதத் தீமைகளுக்கும் இட்டுச் செல்கின்றன" என்றார் புனித அகஸ்டின்.

"பெண்கள் குறைபாடுள்ள, நெறிதவறிப் பிறந்தவர்கள். பெண்கள் உருவாக்கத்திலேயே குறைபட்ட பொருளால் ஆனவர்கள். ஆண்களோ சரியான விதையிலிருந்து முழுமை பெற உருவானவர்கள்" என்றார் 13ஆம் நூற்றாண்டினைச் சேர்ந்த புனித பெரிய ஆல்பெர்ட். "பெண்களின் குறைபாடுகள்தான் இவ்வுலகினை அழகுறச் செய்கின்றன. சொர்க்கத்தில் பெண்கள் ஆண்களைவிட உயர்ந்த நிலையில் இருப்பார்கள் என்றார் புனித தாமஸ் அக்குயினாசு. இந்த முரண்பாட்டை நாம் என்னென்பது.

## இரண்டாம் வத்திக்கான் சங்கத்திற்கு முன் பெண்கள் பற்றிய திருஅவையின் நலமான பார்வை

திருஅவை பெண்களைத் தங்கள் இக்கட்டான நிலையிலிருந்து விடுவிக்க எத்தகைய முயற்சிகளை மேற்கொண்டுள்ளது எனக் காண்போம்.

திருத்தந்தை 23-ஆம் ஜான் தனது சுற்றுமடலாகிய *அன்னையும் ஆசிரியமும்* எனும் ஏட்டில் மனிதாபிமானத்தின் அடிப்படையில் பெண்களும் குழந்தைகளும் மதிக்கப்பட வேண்டும்; பெண்கள், நலிந்தோர் என்றும் பாதுகாக்கப்பட வேண்டியவர் என்று குறிப்பிட்டுள்ளார் (எண் 13,20).

திருத்தந்தை 23-ஆம் ஜான் தனது சுற்றுமடலாகிய *அவனியில் அமைதியில்* பெண்கள் பொதுப்பணிகளில் இணைய அனுமதிக்கப்பட வேண்டும். வெளியே வேலை செய்தாலும் குடும்பத்தினைத் தங்கள் தலையாய கடைமையாகக் கருதவேண்டும். மேலும், ஆண்களுக்குத் தக்க ஊதியம் கொடுப்பதினால் பெண்கள் குடும்பப் பொறுப்பேற்று வாழவிரும்பும்போது அவர்கள் அனுமதிக்கப்படவேண்டும் (எண் 15) என்கிறார்.

இவ்வேட்டில் பெண்ணிய இயக்கங்கள் ஆமோதிக்கப்பட்டுள்ளன (எண் 41,43). "பெண்கள் தங்கள் மனிதாபிமான உணர்வை ஆழமாக அறிந்துள்ளனர். அவர்கள் தங்கள் நேர்மறையான பணியை ஆமோதித்தது மட்டுமல்லாமல் தங்களை ஒரு கருவியாகப் பயன்படுத்துவதை இனி ஏற்கமாட்டார்கள் என்கிறது. குடும்பத்திலும் பொதுவாழ்விலும் தங்கள் உரிமைகளையும் கடைமைகளையும் தன்மான உணர்வோடு மனிதத்தன்மைக்கு உகந்த முறையில் நடத்தப்படவேண்டுமென வற்புறுத்துகின்றார்" (எண் 41). சமத்துவத்திற்கு எதிரான சிந்தனைகள், கோட்பாடுகள், நடைமுறைகளை முன்வைத்து சமத்துவ உணர்வை, நற்பண்பை வலியுறுத்துகின்றது *அவனியில் அமைதி.*

## இரண்டாம் வத்திக்கான் சங்கமும் பெண்களும்

1960-களில் கத்தோலிக்கத் திருஅவை பெண்களைப்பற்றிய முழுமையான புரிந்துணர்வில் ஈடுபட்டது: குடும்பத்தில் பெண்களின் நிலை, பணி, பங்கேற்பு, சமூக, பொருளாதார, அரசியல், துறைகளில் பெண்களின் ஏற்றம். இதற்கு முன்னதாக பெண்களின் சமத்துவச் சிந்தனையிலும் போராட்டத்திலும் ஈடுபட்டவர்களை இரண்டாம் தரப் பெண்களாகவே கருதினர். அமைதி மன்றங்களிலும் இடதுசாரி இயக்கங்களிலும் பெண்களின் பிரச்சனை ஒரு பொருட்டாக கருதப்படவில்லை. எனவே பெண்கள் தங்கள் இயக்கங்களைத் துணிவுடன் துவங்கினர். இதன் வழியாக பெண்ணடிமைத்தனம் இரண்டாம் தரக் குடிமைத்துவம், சமூக, பொருளாதார,

குடும்ப, அமைப்புகளில் பின்னிப்பிணைந்து கிடப்பதை உணர்ந்தனர். எனவே விழிப்புணர்வு சிந்தனையில் சிறப்புப் பெற்றவர்களுக்குத் தங்கள் நிலையைப் பற்றிய விழிப்புணர்வு கொடுத்தனர்.

*பொதுநிலையினரின் திருத்தூதுப் பணியில்* பெண்களுக்கான பணி குறிக்கப்பட்டுள்ளது (எண் 9). பொது நிலையினர் என்பது பெண்களை 50 சதவீகிதம் உள்ளடக்குவதால் அனைத்து மக்களும் கிறிஸ்துவ விசுவாசத்தை தங்கள் வாழ்விலும், அதைப் பிறருக்கு எடுத்தியம்புவதிலும் கடமைப்பட்டுள்ளனர். சமுதாயக் கட்டமைப்புகள், பொருளதார, அரசியல், கலாச்சாரத் துறைகளில் கிறிஸ்தவ மதிப்பீடுகள் இணையோடு நிற்க உகந்த கருவியாக வேண்டும். மனிதவள மேம்பாட்டிலும் நலிவுற்றவரைத் தேற்றுவதில் நம்பிக்கையும், விசுவாசமும், பிறரன்பும் கொண்டு விளங்க வேண்டும் எனப் பணிக்கின்றது. மாறிவரும் பெண்களின் நிலையைச் சித்தரித்துப் பெண்கள் திருச்சபையின் பணிவாழ்வில் ஆர்வமுடன் பங்கேற்க முன்வர வேண்டும் என வலியுறுத்தியது (எண் 9).

*இன்றைய உலகில் திருஅவை* (எண்கள் 8, 9, 12, 27, 29, 52, 60, 60, 67) எனும் ஏடு நவீன உலகில் ஏற்றம் பெறும் பெண்களின் பணியை ஒப்புக்கொண்டு சமூக, பொருளதார, அரசியல் சூழலில் ஆண்களும், பெண்களும் பரிமாறும் சிந்தனைகளையும் பகிர்வுகளையும் கோடிட்டுக் காட்டுகின்றது. பல குழுக்களும், பெண்களும் தாங்கள் சமத்துவத்திற்காகப் போராடும் தருணத்திலும், பெண்கள் உலக நட்பில் சமத்துவமாகவும் தாங்கள் மனிதாபிமான உணர்வுடனும் நடத்தப்படுவதில்லை. எனவே பெண்கள் தங்கள் உரிமைக்காகப் போராடுகின்றனர் எனச் சுட்டிக் காட்டுகிறது. படைப்பில் இறைவன் ஆண், பெண் இருபாலருக்கும் பகிர்ந்து பங்கேற்கும் பண்பினைக் கொடுத்து, அதே தோழமையையும் பங்கேற்கும் திருச்சபையில் நிலைக்கவைத்து புது உலகை உருவாக்கும் பணியில் ஈடுபட வேண்டும். பெண்கள் அடிமைகளாக வாங்கப்படவும், விற்கப்படவும் ஒரு பொருளாக்கப்படும் இக்கட்டான சூழலில் வியாபாரப் பொருளாக, சந்தைப் பொருளாக மாற்றப்படுகின்றாள். முன்னேறும் சமுதாயச் சூழலுக்கு ஏற்றவாறு பெண்களின் நிலை சமத்துவமாக்கப்படவில்லை. மாறாக கொடுமைகளுக்கு உள்ளாகின்றனர். இறைவனால் படைக்கப்பட்ட மக்கள்



அனைவரும் பங்கேற்பு நியதியில் சமுதாயம் அமைக்கப்படவில்லை என்கிறது இவ்வேடு (எண் 27).

இவ்வேட்டில் பெண்கள் பற்றிய புதியதோர் கருத்தினைக் காண்கின்றோம். இறைப்படைப்பில் ஆணும், பெண்ணும் ஒரே சிந்திக்கும் திறன், ஆற்றல் அனைத்தும் தன்னகத்தே கொண்டு இறைப்பணியை பகிர்வு முறையில் செயல்படுத்துவதால் ஆணும் பெண்ணும் சமமே. எந்த ஒரு கலாச்சாரப் பாகுப்பாடு மற்றும் பாலின, நிற, சமூக, மொழி, மதம், இனம் என்ற பாகுபாடுகள் முற்றிலுமாகக் கட்டுப்படுத்தப்பட்டு ஒடுக்கப்பட வேண்டும். இந்தச் சிந்தனை எத்துணை ஆழமானது, பொருள் கொண்டது என்றால் ஆண், பெண் இருவரின் அடிப்படைச் சமத்துவத்தை இது துணையாக நிலைநிறுத்துகின்றது. தங்கள் சமத்துவத்தில் இருவரும் வெவ்வேறு பணிகளை நிறைவு செய்கின்றனர். இவ்வேடு மனித குலத்தை நோக்கி பெண்கள் மீதான சமூக, கலாச்சார அடக்கு முறைகளுக்கும், பாகுபாடுகளுக்கும் முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என அறைகூவல் விடுத்தபோதிலும் சமுதாயம் மிக மெத்தனமாகவும் மெதுவாகவும் இக்கருத்தை உள்வாங்கியுள்ளது (எண் 29).

பெண்ணினம் மற்றும் மனித உரிமைக்காகப் போராடும் இயக்கங்களும் ஆமோதிக்கப்படுகின்றன (எண்கள் 41, 60). மனித உரிமைகளும் பொது நல உரிமைகளும் பாதுகாக்கப்படவேண்டுமென்று வலியுறுத்துகின்றது (எண் 41). எல்லோரும் தங்களில் தலையான கடமையாக கருதப்படவேண்டியது என்னவெனில் பெண்களின் தனிப்பெரும் பங்கேற்பாகக் கலாச்சார வாழ்வில் தங்களை ஆமோதித்து வளர்த்தெடுப்பது மிகவும் இன்றியமையாதது. பெண்களை ஒரு தனிப்பெரும் குழுவாகப் பாவித்து அவர்களைத் தகுந்த வளர்ச்சியில் ஊக்கப்படுத்துதல் தேவை (எண் 60). திருமணம் மற்றும் குடும்பம் எனும் அமைப்புகளிலும் பெண்கள் தம் செயல்பாடுகளை ஆழப்படுத்தவும் தாய்மைப் பணியினை திறம்பட ஆற்றவும் கற்றுக்கொள்வதோடு சமூக ஈடுபாட்டிலும் திடமாகப் பங்கேற்க வேண்டும் எனப் பணிக்கப்படுகின்றனர் (எண் 52). தாய்மார் தங்கள் ஊதியப் பணி இடங்களில் தங்கள் குடும்பக் கண்காணிப்பிற்காக அவர்கள் தனிப்பெரும் கவனமுடன் பாவிக்கப்பட வேண்டும். குடும்பத்தில் பணி அவர்களின் முதன்மைக் கவனமாகக் காக்கப்படவேண்டும் (எண் 67).

### திருத்தந்தை 6-ஆம் பவுல்

திருத்தந்தை ஆறாம் பவுல் பெண்கள் பொதுநிலையினராக சிறப்புடன் பணியாற்ற வேண்டும்; "*கிறிஸ்துவத்தின் சுடரொளியாக* பெண்கள் திகழ வேண்டுமெனப் பணிக்கின்றார். பெண்கள் *அன்பின் ஊற்றுக்கள்.* எனவே நம்பிக்கை, விசுவாசம் என்ற கேடயத்தால் இந்த உலகைச் சிறப்புமிக்க சமூகமாக மாற்றுவதில் அயராது கவனம் செலுத்த வேண்டும். நற்செய்தியின் நெறியாளர்களாகப் பெண்கள் நேர்மையாக ஈடுபடவேண்டும் என்கிறார்.

உலகில் வாழும் அனைத்துப் பெண்களுக்கும் திருத்தந்தை 6-ஆம் பால் 1965-ஆம் ஆண்டில் உலகப் பெண்கள் நாளில் ஆற்றிய உரையின் சாரம்: "அகில உலகப் பெண்மணிகளே நீங்கள் கிறித்தவரோ அல்லது மதச்சார்பற்றவரோ, தற்போதையக் காலத்தில் உயிர்ப் பாதுகாப்பு உங்கள் கரங்களில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இவ்வுலகில் அமைதியை நிலைநாட்டுவது உங்கள் தலையாய பணியாகும்." போரில் மாயும் உயிர்களைக் காப்பாற்றும் இப்பணியைப் பெண்களுக்கு அவர் அர்ப்பணிக்கின்றார். இரண்டாம் வத்திக்கான் சங்கப் போதனைகளைத் திருஅவை கடைப்பிடித்து வாழ பெண்களின் அரிய ஒத்துழைப்பை நாடுகின்றார். ஆண்கள் அவதியில் விழுவதைக் கட்டுப்படுத்தவும் ஆண்கள் உயிரை மதிக்கக் கற்றுக்கொடுக்கவும் சமூகத்தை கடைநிலைக்குத் தள்ளும் அபாயத்திலிருந்து ஆண்களைத் தடுத்து நிறுத்தவும் திருத்தந்தை பெண்களைப் பணிக்கின்றார். இது பெண்கள்மீது சுமத்தப்படும் பெரும் பாரம் என்றே கருதலாம். கொலைகார, அழிவு நோக்கிய பாதையிலிருந்து ஆண்களைப் பெண்கள் காப்பாற்ற வேண்டும். பெண்களின் இயல்பான குணங்கள் – அன்பு, கனிவு, தியாகம், தாழ்ச்சி, பொறுமை போன்றவை இந்த மாபெரும் பணியைச் செய்திட உறுதுணையாக நிற்கும். இதில் பெண்கள் தவறினால் பெரும் பொறுப்பினை தவறவிட்டதாகும்.

திருத்தந்தை 6-ஆம் பால் தமது *மனித உயிர் எனும் ஏட்டில்* பெண்களின் நலன் கருதிக் கூறுவது என்னவெனில் கருத்தடைக் கருவிகளைப் பயன்படுத்துவதனால் பெண்கள் ஒரு பாலியல் கருவியாக, போகப் பொருளாக மட்டுமே கருதப்படுகின்றார்கள். மதிப்பு குறைந்தவளாகப் பெண் கணிக்கப்படுகிறாள். மேலும் பாலியல் தொழில், கூடா ஒழுக்கத்திற்கும் தள்ளிவிடும் எனக் கருதுகின்றார்.



### திருததந்தை பிரான்சிசு

ஆண் ஆதிக்கம் எனும் புரட்டியடித்த புயல் இன்று பெண்மையின் முன் வலுவிழக்கும் நிலையை எட்டியுள்ளது. இரண்டாம் வத்திக்கான் சங்கத்தின் புதிய அணுகுமுறை பெண்களின் பங்கேற்பிற்குப் புதிய அடித்தளமிட்டுள்ளது. இத்தகைய மாற்றத்தை ஆமோதிக்கும் அருட்சின்னமாய்த் திகழ்பவர் திருத்தந்தை பிரான்சிசு.

*இறைவா உமக்கே புகழ்* (Laudato Si) என்னும் சுற்றுமடலில் இயற்கை அன்னையின் அவல நிலையைத் துல்லியமாகப் படம்படித்துக் காட்டி அதன் விளைவாகத் துன்புறும் ஏழைகள், பெண்கள், குழந்தைகள், ஒதுக்கப்பட்டவர்கள் என்று பாதிக்கப்பட்ட அனைவரையும் படம்பிடித்துக் காட்டியுள்ளார். 'அன்பின் மகிழ்ச்சி' என்ற திருத்தந்தை பிரான்சிசின் சுற்றுமடல் பல கோணங்களிலிருந்து பெண்களின் கண்ணிய நிலையை உறுதிப்படுத்துவதாக அமைந்துள்ளது. மதச்சார்பற்ற பெண்களும் இந்த சிந்தனைக் கருவூலத்தை ஏற்றுக்கொள்ளும் பண்பு கொண்ட நூலாக இந்நூல் திகழ்கிறது. பெண்களின் உரிமைகள், குடும்பத்தில் பெண்ணடிமை, வன்கொடுமை, பாலின அடிமைத்தனம், வன்கொடுமைகள், வணிகப், பொருளாகக் கருதப்படுவது, தொடர்புக் கருவிகள், பெண்களை இழிவுப்படுத்துவது போன்ற பிரச்சனைகளை மையமாகக் கொண்டு எழுதப்பட்டுள்ளது.

திருத்தந்தை பிரான்சிசு மக்களும் (ஆண்கள், பெண்கள், குழந்தைகள்) இயற்கையும் சகோதரத்துவப் பண்பில் பலன் பெற்று வாழ, வளர ஆசிக்கின்றார். இயற்கையே இதற்குத் தக்க சான்று பகர்கின்றது. ஒன்றோடொன்று இணைந்து பின்னிப்பிணைந்து ஒன்றுக்கு ஒன்று பக்கபலமாக இருந்து அன்புறவில் வாழும் பண்பை இயற்கையில் பரவலாய்க் காணமுடிகின்றது. எந்த விலங்கும் தன் தேவைக்கு மிஞ்சிய சேமிப்பில் ஈடுபடுவதில்லை. இயற்கையைச் சேதமாக்கித் தன் எதிர்காலச் சந்ததிக்குப் பொருள் சேர்க்கும் பண்பில் அவை வாழ்வதில்லை. ஆனால் மனிதன் தன்னலத்தையே தன் குறிக்கோளாகக் கொண்டும் தன் எதிர்காலச் சந்ததியையே முன்னிறுத்தியும் பிறமக்களைச் சுரண்டும் அவலம் இயற்கையில் வேறெந்த உயிரினிடத்திடமும் நம்மால் காண முடிவதில்லை. இத்தகைய தன்மைய்யமாகிய மாயையால் மனிதன் குற்றப்படுத்தும்

மக்களினத்தில் பெண்குலம் முதன்மை நிலையில் வைக்கப்படுகின்றது. அடக்கி ஆள்வதற்குத் தக்க பொருளாகப் பெண்கள் கருதப்படுவதனால் எல்லா வகையான அடிமைத்தனத்திற்கும் உள்ளாக்கப்படுகின்றனர்.

திருத்தந்தை பிரான்சிசு திருஅவையில் ஆண்களுடன் இணைந்து பெண்கள் முழுமையாகப் பங்கேற்கவும், முடிவெடுக்கும் திறன் ஏற்படவும், ஊக்குவிக்கப்படவும் வேண்டும் எனப் பணிக்கின்றார். ஊடகத்தில் பணியாற்றும் இயேசு சபை பணியாளர்களிடம் மார்ச் 9, 2015-இல் பேசுகையில் ''ஒருங்கிணைந்த, பங்கேற்கும் அருட்பணிகள் திருஅவையில் ஊக்கப்படுத்தப்பட வேண்டும் என்றார். காரணம், இயேசுவின் உயிர்ப்பை முதலில் கண்டவர்கள் பெண்கள் – மரிய மதலேனாள், ஜோவான்னா, மரியாள் – இவர்கள் இயேசுவின் உயிர்ப்பைத் திருத்தூதர்களுக்கு முதலில் அறிவித்தவர்கள்'' (லூக் 24:1-10). புனித பவுலின் பணி வாழ்வில் பல பெண்கள் பங்கேற்றனர்.

திருத்தந்தை பிரான்சிசு மீண்டும் வலியுறுத்திக் கூறியது: சமூக மற்றும் திருஅவைப் பொறுப்புகளில் பெண்கள் தங்கள் குடும்பத்தில் பங்கேற்பது போன்று திருஅவையிலும் பங்கேற்க வேண்டும். பெண்கள் திருஅவையின் அருட்பணிகளில் எவ்வாறு அதிகமாகப் பங்கேற்கின்றனர் என்று திருத்தந்தையின் ஆழ்ந்த விருப்பம் ஒரு மிகப்பெரும் சவாலாகவே உள்ளது. கிறித்துவில் நம்பிக்கை கொண்டுள்ள ஒவ்வொரு கிறித்தவனும் பெரும்பாலும் தங்களின் தாயார் மற்றும் பாட்டியின் நம்பிக்கையான விசுவாசத்தால் ஈர்க்கப்பட்டவர்களே. திருத்தந்தை பிரான்சிசு தனது தாயின் விசுவாசத்தால் ஈர்க்கப்பட்டதாகவும் அறிவித்தார். அரசுகள் ஒரு பெண்ணை உருவாக்குவதால் ஒரு நாட்டையே உருவாக்குகின்றனர். அதில் நாட்டு மக்களின் ஏழ்மையை ஒழிக்கவும், கல்லாமை எனும் இருட்டறையைத் தகர்க்கவும் பெண் கல்வியே அடித்தளமாகும். சிசுக்களின் இறப்பைத் தவிர்க்கவும் நோயில்லாக் குடும்பங்கள் உருவாக்கவும் அடித்தளமாக இருப்பது பெண்களின் கல்வியும், சமூகப் பங்கேற்புமே. எனவே நாடுகள் அனைத்தும் பெண் கல்வியை ஊக்குவிக்கவும், பங்கேற்பைப் பொருளாதார வளர்ச்சியிலும் சமூக நிலைகளிலும் அதிகரிக்க வேண்டும் என்றார். பெண்களின் சொத்து உரிமை, திருமண வாழ்வில் சமத்துவநிலை போன்ற பண்புகள் பாதுகாக்கப்பட வேண்டும். உலகில் சரிபாதி பெண்ணினம் என்பதைக் கருத்தில் கொண்டு



பெண்களின் முன்னேற்றத்திலும் பங்கேற்பிலும் புதிய வழிகள் உருவாக்கப்பட வேண்டும் என்றார்.

ஏப்ரல் 30, 2015-இல் வத்திக்கானில் இலட்சக்கணக்கான மக்களிடம் பேசுகையில் திருத்தந்தை பிரான்சிசு கூறியது: யுரோஸ் டாட் என்ற எண்ணிக்கை நிறுவனத்தின் கணக்கெடுப்புபடி ஐக்கிய ஐரோப்பா ஆண் பெண் சமத்துவமற்ற சம்பள விகிதத்தில் உலகில் 6-ஆம் நிலை வகிக்கின்றது. இதன் விளைவாகப் பெண்கள் தங்கள் 80 வயதுவரை வேலை செய்தால்தான் ஆண்களோடு சமமான சம்பளத்தைத் தங்கள் வாழ்வில் ஈட்ட இயலும் என்றது. இதைச் சுட்டிக்காட்டிச் சமமான ஊதியம் பற்றி வலியுறுத்தினார்.

## பெண் திருத்தொண்டர்கள்

1994-ஆம் ஆண்டு திருத்தந்தை புனித 2-ஆம் ஜான் பால் தன் திருத்தூது மடலில் ''ஆர்டினேசியோ சாக்ரடோட்டாலிசு'' கூறியது: திருஅவைக்குப் பெண்களைக் குருத்துவத் திருநிலைப்படுத்தும் அதிகாரம் தனக்கு இல்லை என்றார். ஆனால் தொடக்கத் திருஅவையில் ஆண்களுக்குப்போல பெண்களுக்கும் திருத்தொண்டர் பட்டம் அளிக்கப்பட்டது. ரோஜர் கிரேசன் என்ற பிரெஞ்சு இறையியலார் ''தொடக்கத் திருஅவையில் பெண்களின் திருப்பணி'' (1972) என்ற நூலில் – பெண் திருத்தொண்டர்களுக்குத் திருப்பணியாளர்களைப்போன்று தலையில் கரங்கள் பதித்து மன்றாடியதும் ஆயரின் தனிப்பெரும் மன்றாட்டு இருந்ததும் குறிப்பிடப்பட்டுள்ளது. இறையியல் வல்லுநர் ஈவ்ஸ் கொங்கார் அவர்கள் பெண்களின் திருத்தொண்டர் முறை அருளடையாளத் தாக்கத்தைப் பெற்றிருந்தது எனக் குறிப்பிடுகின்றார். மேலும், இலத்தீன் கத்தோலிக்கத் திருஅவை 1962-ஆம் ஆண்டு வரை பெண்களின் திருத்தொண்டர் வழிமுறையினைப் பாதுகாத்து வந்தது எனவும் கூறுகின்றார். எனவே, பெண்களின் குருத்துவத் திருநிலைப்பாடு இன்னும் தெளிவாக முதிர்ந்த சிந்தனையை அடையவில்லை என்றும் மேலும் ''முடிந்து போன பிரச்சினை'' என்ற கருத்தில் அது சேர்க்கப்படக்கூடியது அல்ல என்ற கருத்தைப் பலரும் முன்வைத்தனர்.

02.08.2016-ஆம் அன்று பெண் திருத்தொண்டர் பட்டம் பற்றிய கருத்தை ஆராய்வதற்காக 12 பேர் கொண்ட இறையியலார் குழுவை நியமித்துள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ். இதில் 6 பேர் பெண் இறையியலார் என்பது குறிப்பிடத்தக்கது. புரட்சிகரமான இந்தச் செயல் திருஅவையின் நெற்றிக்கண்ணைத் திறந்திருக்கின்றது எனலாம். இங்கு மூன்று மிக முக்கிய கேள்விகள் எழுப்பப்படுகின்றன.

1. பெண்களுக்குத் திருத்தொண்டர் பட்டம் கொடுக்கப்பட்டதா? – ''ஆம்''
2. பெண்கள் திருத்தொண்டர் பட்டம் பெறும் தகுதி உடையவரா? – ''ஆம்''
3. பெண்களுக்குத் திருத்தொண்டர் பட்டம் கொடுக்கப்படலாமா? – இந்தக் கேள்விக்கு திருத்தந்தை பிரான்சிசு மட்டுமே விடை தர இயலும்.

இக்குழுவில் இடம் பெற்றுள்ள பில்லிஸ் சாகோ என்ற அமெரிக்கப் பெண் இறையியலார் கூறுகிறார். ''வரலாற்றிலும் திருஅவை வரலாற்றிலும் பெண்கள் வாழ்வுமுறைகளை என்னால் நேர்த்தியாகக் கூற இயலும். ஆனால் திருத்தொண்டர் பட்டம் பற்றித்தான் கூற இயலாது. இந்த ஆய்வுக்குழு ஒரு வரலாற்றுச் சிறப்பு மிக்கது. பெண்களின் புகழ்பெற்ற தலைமைத்துவப் பணிகள் திருஅவையின் தொடக்கக் காலத்திலிருந்தே காணக்கிடக்கின்றன. ஆண்களுடன் பெண்கள் தோள்கொடுத்துத் தலைமைப் பணிகளில் பங்கேற்றதை விவிலியத்திலும் திருஅவை வரலாற்றிலும் காணலாம் என்றார். கத்தோலிக்க இறையியல் வல்லுநர்கள் திருத்தந்தையின் இம்முயற்சியை விவரிக்கையில் *பெண்கள் மறுபடியும் திருத்தொண்டர் பணியில் இடம்பெற* என்று வருணிக்கின்றனர்; ஆனால், பழமைவாதிகள் *பெண்கள் புதிதாக இடம் பெற உள்ளனர்* என்று கூறுகின்றனர். ஏற்கனவே பெண்கள் செய்து வந்த பணி ஏன் அவர்களிடமிருந்து பறிக்கப்பட்டது? இது மிகப்பெரும் கேள்வி.

திருத்தந்தை பிரான்சிசு தனது நேர்முக அனுபவத்தைக் கூறுகையில் சிரியன் இறையியலார் ஒருவரின் பதில்களைத் தெளிவாக எடுத்தியம்புகிறார். பெண் திருத்தொண்டர்கள் பெண்களின் திருமுழுக்கின்போது மூன்று குறிப்பிடத்தக்க நிலைகளில் பணியாற்றியிருக்கின்றனர்:



1. திருமுழுக்கின்போது முழுமையாகத் தண்ணீரில் மூழ்கி வெளிவருவதால் பெண் திருத்தொண்டர் பெண்களுக்குப் பணியாற்றினர். திருமுழுக்கிற்கு முன்னும் பின்னும் அவர்களைத் தயாரிக்கும் பணியில் ஈடுபட்டிருந்தனர்.

2. திருமுழுக்கிற்காகப் பெண்களைத் தயார்படுத்தும் பணியில் ஈடுபட்டனர். திருமுழுக்கிற்கு முன்னும் பின்னும் திருத்தைலம் பூசுதலில் ஈடுபட்டிருந்தனர்.

3. பெண்கள் குடும்ப வன்முறை குறித்துக் குற்றம் சுமத்தும்போது கணவன் தன்னை உதைத்துக் கொடுமைப்படுத்தினார் என்றால் அதனால் ஏற்பட்ட காயங்களின் ஆதாரங்களைக் கண்டுபிடிப்பதற்காகப் பெண் திருத்தொண்டர்கள் மட்டுமே ஈடுபடுத்தப்பட்டனர் என்றார்.

பெண் திருத்தொண்டர் நியமனம் பற்றிய ஆய்வை மேற்கொள்ள நியமிக்கப்பட்ட உறுப்பினராகிய தந்தை கார்ல் ஹென்ஸ் மன்கே என்ற இறையியலார் கூறுகின்றார்: மூன்றாம் நூற்றாண்டிலிருந்து பெண் திருத்தொண்டர் இருந்திருந்தாலும் அவர்கள் முழுமையான திருப்பணியாளர்களாகக் கருதப்படவில்லை எனக் கூறுகின்றார். இருப்பினும் திருத்தந்தை இன்றைய நடைமுறையில் உள்ள சில சட்டதிட்டங்களைச் சீர்தூக்கிப் பார்த்து அதில் திருத்தங்கள் ஏற்படுத்திப் பெண்களைத் திருஅவையில் முடிவெடுக்கும் பொறுப்புகளில் பங்கேற்க வைப்பது இன்றியமையாததாகும். ஏனெனில் பெண்களின் சமத்துவம் காலத்தின் கட்டாயமாக உள்ளதையும் வலியுறுத்தியுள்ளார். திருஅவையின் அமைப்புகளில் பெண்கள் சம உரிமையுடன் பங்கேற்பு இல்லாவிடினும் திருஅவைச் சட்டதிட்டங்களில் தக்க மாற்றங்களை ஏற்படுத்தி ஆண் பெண் சமத்துவ உரிமையை நிலைநாட்டும் பொறுப்பும் தகுதியும் திருத்தந்தைக்கு உண்டெனக் கூறி அவருடைய தகுதி வாய்ந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி பெண்கள் திருத்தந்தை நியமன வாக்களிப்பில் பங்கேற்கவும், மறைமாவட்ட உயர் பதவிகளில் தகுந்த பொறுப்புகளில் பணியாற்றிடவும் முடிவெடுக்கும் நிலைகளில் பங்கேற்கவும் பரிந்துரைக்கின்றார். 04.08.2013 அன்று மென்கே தன் நேர்முகப் பேட்டியில் 'த வெல்ட்' எனும் பத்திரிக்கையில் ''திருநிலைப்படுத்தப்படாவிட்டாலும் பெண்களை, திருத்தந்தை பிரான்சிசு தலைமைத்துவப் பணிகளில் நியமிக்கலாம் எனவும் கர்தினால்களாக

நியமிக்கலாம்'' எனவும் பரிந்துரைக்கின்றார். மேலும் அவர் பெண்கள் திருத்தொண்டர்கள் பட்டம் பெறுவதால் திருஅவையின் பணிக்கு ஏற்படும் பயன்களைத் தெளிவுபடுத்த திருத்தந்தை பிரான்சிசு அவர்களை கேட்டுக்கொண்டதாகவும் கூறினார்.

உரோமை அந்தோனியானும் பல்கலைக்கழகத்தின் முதல் அதிபர் அருட்சகோதரி மேரி மலோன் அவர்கள் இத்தாலியன் நாளிதழலில் திருத்தந்தை பிரான்சிசு பெண்கள் திருத்தொண்டர் பற்றிய குழு ஒன்றை உருவாக்க வேண்டுமெனக் கூறியதை அறிவித்தார். மட்டுமல்லாமல் பெண்களுக்குச் சிறந்ததோர் மற்றும் முடிவெடுக்கும்திறன் கொண்ட நிலையை திருத்தந்தை அறிவித்ததாகக் கூறினார். இது வெறும் பட்டத்திற்காக அல்லது பதவிக்காக அல்ல; மாறாக, பிறருக்குப் பணிசெய்வதற்காகவே என்றும் கூறினார். பெண்களின் தலைமைத்துவம் திருஅவையின் வளர்ச்சிக்கு ஒப்பற்ற நலன்களையும் வளர்ச்சியையும் கொண்டுவரும் என்றார். முடிவெடுக்கும் பங்கேற்பிலிருந்து பெண்களை விலக்கிவைப்பது ஒவ்வாததாகும் என்றார்.

### திருஅவையின் போதனைகளில் காணப்படவேண்டிய மாற்றங்கள்

• அருள்பணி மாணவர்களுக்குப் பெண்களின் மாண்பை மதிக்கும் சிந்தனைகள், பெண்ணிய இறையியலாக்கம் போன்ற கருத்து நிறைந்த இறையியல் கல்வி வழங்கப்பட வேண்டும்.

• தாயின் பாசத்தை மதிக்கும் ஆண்கள் அனைத்துப் பெண்களுக்கும் அதே மதிப்பைக் கொடுக்கும் பண்பில் வளர வேண்டும்.

• ஆண், பெண் இறையியலார்கள் தகுதியும் தரமும் நிறைந்த நூல்கள் வழியாக தங்கள் பெண்ணியக் கருத்துக்களை வெளிப்படுத்த வேண்டும். இதற்காகத் தங்களின் அச்சம், பயம், தனிமனித ஆதாயம் போன்றவற்றை விட்டுக்கொடுத்து உண்மையை எடுத்துக்கூறும் இறைவாக்கினராக எழுத்து வடிவங்களை, நூல்களை உருவாக்க வேண்டும்.

• ஞாயிறு சிந்தனைகள், திருப்பலிப் போதனைகள், கிறித்தவ மறைச்சுவடி போன்றவை பெண் சமத்துவ எண்ணங்களைப் போதிப்பவையாக இருக்கவேண்டும். முந்தையக் காலத்துக் கற்பனை, சிந்தனைகள், பிரச்சினைகள் தெளிவுடன் விளக்கப்பட வேண்டும்.



• பங்குப் பேரவை, அன்பியக் கூட்டங்கள், பக்தி அமைப்புகள் போன்ற அமைப்புகளில் பெண் சமத்துவம், பெண்ணின் தன்னார்வம், பெண்களின் மதிப்பீடு போன்ற கருத்துக்கள் பகிரப்பட்டுச் சிந்தனை மாற்றங்களை உருவாக்க வேண்டும்.

• பெண்களுக்குப் பங்கு நிர்வாகத்திலும் முடிவெடுக்கும் துறைகளிலும் பங்கேற்பு அளித்துப் பெண்களின் சமத்துவம் வலியுறுத்தப்பட வேண்டும்.

• திருஅவையில் பெண்கள் முழுமையான அங்கத்தினர்களாக அங்கீகாரம் பெறவேண்டும். இன்றையச் சூழலில் பெண்கள் சமத்துவ உணர்வோடு நடத்தப்பட வேண்டும். பொறுப்புள்ள பணிகளில் சம விகிதத்தில் பணியாற்றும் வாய்ப்புக் கொடுக்கப்பட வேண்டும்.

• திருத்தந்தை பிரான்சிசு ஏற்படுத்திய பெண்களின் திருத்தொண்டர் பட்டத்திற்கான செயற்குழுவின் பரிந்துரைகள் விரைவில் அமலாக்கம் பெற வேண்டும்.

• பாலின உணர்வோடு மட்டும் பெண்களைக் கணிக்கும் பார்வை, நோக்கு பற்றிய விழிப்புணர்வு அனைவருக்கும், குறிப்பாக இளைஞர்களுக்குக் கொடுக்கப்பட வேண்டும்.

• இந்திய ஆயர் பேரவையின் ''பெண்கள் பணிக்குழு'' மிகுந்த சுறுசுறுப்புடனும், சிந்தனைச் செறிவு நிறைந்த வழிநடத்துதலால் மறைமாவட்டப் பெண்கள் பணிக்குழுவினை ஊக்குவித்து, பெண்கள் பற்றிய விழிப்புணர்வினைத் தொடர்ச்சியாகக் கொடுக்க வேண்டும். அத்தகையச் சிந்தனைகள் ஒவ்வொரு பங்குத்தளத்திலும் பகிரப்பட்டுச் செயலாக்கம் பெற வேண்டும்.

• குருத்துவ அருளடையாளத்தில் பெண்கள் பங்கேற்கும் காலம் வரும்வரை திருத்தந்தை பிரான்சிசு பெண் திருத்தொண்டர்களை உருவாக்குவதில் தனிக் கவனம் செலுத்தி, தகுதிபெற்ற பெண் இறையியலார்களை ஊக்கப்படுத்தவேண்டும். அருள்பணியாளர்கள், ஆயர்கள், கர்தினால்கள் அனைவரும் இதற்கு ஒத்துழைப்புக் கொடுத்து, காலத்தின் கட்டாயத்தையும், இறைவனின் திருவுளத்தை நிறைவேற்றுவதில் ஆர்வமுடனும் பங்கேற்க வேண்டும்.

• வத்திக்கான், பேராலய அலுவலகங்கள், கர்தினால் அலுவலகங்கள், மறைமாவட்ட அலுவலகங்கள் போன்றவற்றில் பெண்கள் பொறுப்புள்ள பணிகளில் அமர்த்தப்பட வேண்டும்.

• விவிலியத்தில் பெண்கள், தொடக்கத் திருஅவையில் பெண்கள், திருஅவை வரலாற்றில் பெண்கள், ஆன்மீக வாழ்விற்கான போராட்டங்களில் பெண்கள், திருஅவையில் புதுயுகம் படைக்கும் வீரப்பெண்கள் போன்ற தலைப்புகளில் ஆராய்ச்சியில் ஈடுபட்டு, புதிய சிந்தனைகளைத் திருஅவையில் உருவாக்கும் வாய்ப்புகள் உருவாக்கப்பட வேண்டும்.

• பெண் புனிதர்களின் வாழ்வைச் சித்தரிக்கும் திரைப்படங்கள் உருவாக்கப்பட வேண்டும். சிறப்பாக இந்தியப் புனிதர்கள் முன்னுரிமை பெற வேண்டும்.

## முடிவுரை

இன்று பெண்களின் கேள்விக்குப் பதில் கூற...
நாங்கள் கேட்பது உங்கள் பரிதாபத்தை அல்ல
உங்கள் கோபத்தை அல்ல
நாங்கள் கேட்பது உங்கள் பலவீனத்தை அல்ல
உங்கள் பலாத்காரத்தை அல்ல
நாங்கள் கேட்பது உங்கள் இயலாமையை அல்ல
உங்கள் அகங்காரத்தை அல்ல
நாங்கள் கேட்பது உங்கள் பாரம்பரியத்தை அல்ல
உங்கள் மன்மத எண்ணத்தை அல்ல
நாங்கள் கேட்பது உங்கள் பேராசையை அல்ல
உங்கள் பொறாமை எண்ணத்தை அல்ல
மாறாக.....

நீங்கள் நீங்களாக இருங்கள், ஆண்களாகத் திகழுங்கள்; பெண்வதையை அடக்கி ஆன்மீக உணர்வை நிலைநிறுத்துங்கள். மனிதப் பண்புகளில் சிறந்தோங்கிய மக்களாகுங்கள். இறைவன் உங்களில் தன் சாயலைப் பதித்திருக்கிறார். அதற்குச் சாட்சிகளாக வாழுங்கள்.



பொய்யை பலமுறை கூறியதனால் அது உண்மையாகாது. பல ஆண்டுகள் கூறிய பொய்கள் களைந்து அகற்றுவது எளிதல்ல. எனவே உண்மையின் விளிம்பில் இருந்து அதன் அடிதளத்திற்கு வந்து பாருங்கள். நமது கூற்றின் தாக்கங்கள் எங்கெங்கெல்லாம் வேரூன்றி நிற்கின்றதென்பதைக் கண்டறியுங்கள். அதுவே நம் சிந்தனையைத் திசை திருப்பும் கருவியாக மாற்றும். மாற்றம் நிச்சயம், அதைப் பெண்களே செய்து கொண்டிருக்கின்றனர். நீங்கள் மாறவில்லையென்றால் இறைவனின் சாயல் களங்கமாகிவிடும்.

# 12. திருஅவையின் சமூகப் போதனைகளில் மருத்துவ அறநெறி

*முனைவர் அருள்பணி. சாமுவேல் சாவியோ*
*சென்னை - மயிலை மறைமாவட்டம்*

தனிமனித வாழ்வில், கிறித்தவர், இறை இயேசுவின் போதனைகளை நடைமுறைப்படுத்தவும், இறைவார்த்தையே அவர்தம் பதிலை எதிர் நோக்குவதாய் அமையவும், இயேசுவில் வெளிப்படுத்தப்பட்ட அருளையும், இரக்கத்தையும் முதலீடாகக் கொண்டு மானிட நிறைவுக்கென வாழவும் அழைப்புப் பெற்றுள்ளார்.

இந்தப் பின்புலத்தில் விவிலியம் என்ன சொல்கிறது? பாரம்பரிய திருத்தந்தையர் விவிலிய விளக்கமாக என்ன சொல்லியிருக்கின்றனர்? என்ற அளவில் மருத்துவ அறநெறி சார்ந்த உண்மைகளை, திருஅவையின் கையேடுகளை அலசும் அவசியம் நமதாகிறது.

மருத்துவம், நலம் பற்றிய உண்மைகளை திருநூல், மரபுவழிப் போதனை முறைகள், இறையியலாக்கம் என்ற அடிப்படையில் கத்தோலிக்கத் திருஅவையின் படிப்பினைகளையும், அதன் வழிவரும் விழுமியங்களையும் அலசுவது இன்றையத் தேவையாகிறது.

மானிடர் அவர்தன் இயல்பு, அவரை நிறைவுகளுக்கு ஆளாக்கும் காரணிகள் யாவையென தெரிவு செய்ய உடல்நலம், நோய், சாவு, மானிடப் பாலியல்பு போன்ற எதார்த்தங்களை மருத்துவ நெறிப் பார்வையில் சுருக்கமாக, கத்தோலிக்கப் படிப்பினைகளில், சமூகக் கரிசனையின் வழியில் முளைத்துவரும் சிந்தனைச் செறிவுகளை ஆய்வு செய்வது நமது கடனாகிறது. நமது நோக்கமாகக் கத்தோலிக்க ஏடுகளில் புதையலான மருத்துவ அறநெறி சார்ந்த கிறித்துவப் பார்வையைத் தந்து மேலும், தனிமனிதரது நலங்களாகும் பணிகளில் ஈடுபடும் மருத்துவர் தம் கடமைகளை கிறித்தவ நெறிமுறைகளுக்கேற்ற வண்ணம் ஆற்றவேண்டும் எனப்பகர்ந்து, மனச்சான்றோடு எடுக்கும் முடிவுகளில் மருத்துவப் பணிகள் அமைய வேண்டும் என்பதைப் பரிசீலிப்பதாகும்.



## கிறித்தவப் பார்வையில் மனித ஆள்

மருத்துவ அறநெறி என்பது, கிறித்தவ அறிதலில் தனிமனித ஆள் யார்? அவர்தம் செயல் யாது? என்ற கேள்விகளுக்கு விடை ஆள் தேடுவதில் அமைந்துள்ளது. ஒவ்வொரு மனிதனும் இறைவனின் படைப்பு, இறைவனின் சாயல், விலங்குகளிலிருந்து வேறுபட்டவராய் ஆன்மீக அறிவாலும் சுயசுதந்திர விருப்பத்தாலும் தன்னை ஆள்பவராய், அவர் ஆண்மை நிலவுகிறது என்பதை தொடக்க நூல் சான்று பகர்வதைப் பார்க்கிறோம் (தொ.நூ 26-31). உடலோடு மானிடப் பிறவி தோன்றினாலும், மானிட ஆன்மாவின் படைப்பு இறைவனின் நேரிடையான செயல்திறனாகிறது என்பதை மறத்தலாகாது. படைக்கப்பட்ட மனிதன், தான்தோன்றியாய் இருப்பதற்கல்ல. மாறாக, இறைவனோடும், பிறரோடும், படைப்புகளோடும் உள்ள உறவில் வளர்ச்சி காணவும், அதன் வழியாய் தன்வாழ்வின் அர்த்தத்தைப் புரிந்து கொள்ளவும் அழைக்கப்படுகிறான்.

தனித்துவமான, ஈடுசெய்ய முடியாத ஒவ்வொரு மனிதரும் பக்குவமாய் முதிர்ந்து, நிறைவாழ்வை என்றென்றும் சுவைக்க அழைக்கப்பட்டுள்ளார். தனது சுதந்திரத்தால், தேர்ந்து, தெளிந்து தெரிவு செய்யும் நற்பண்பால், தன் பண்பையும், இலக்கையும் நிர்ணயிப்பதே மனிதருக்கு இறைவன் தந்த பெருங்கொடை. மானிட சுதந்திர தீர்மானங்களின்றி, அறம் அல்லது அறவாழ்வு என்று ஒன்றுமில்லை. இந்த பின்னணியில், சுதந்திரமும், அதன் வழி வெளியாகும் பொறுப்பும் இறையருளால் கிடைக்கப்பெற்ற வரமாகும். பாலியல்பு வேறுபாடு, இனம், தனிப்பட்ட திறமைகள், மானிட இயல்பு, மானிடர்கள் வளர்ச்சி காண வேண்டிய சமத்துவம் அனைத்துமே (உரோமை 2:11; கலா 4:38; எபே 6:9) சிறப்புப் பண்புகளாக எதிர்பார்க்கப்படுகின்றன. மானிட வாழ்வு புனிதமானது. இறைவனோடு நமக்குள்ள உறவு சிறப்பானது. எனவே நாம் யாருடைய உயிரிழப்புக்கும் காரணமாகக் கூடாது என்பது எதிர்பார்ப்பாகிறது.

இயேசுவின் மானிட உருவேற்பால் ஒவ்வொரு மனிதனும் விலையேறப்பெற்றவனாய் மாறுகிறான். பயனற்றவை பயனுள்ளவையாய் மாறுகின்றன என்பது பாரம்பரிய விசுவாசக் கோட்பாடு தானே? இயேசுவின் குணமாக்கும் பணியினால், வலிமையிழந்த மக்களின் நல்வாழ்வு பேணப்படுவதும், மக்கள் தம் இன்னல்களைத் தனதாக்கிக் கொண்டு நம்மை

நலமாக்கும் தண்டனையைத் தன்மேல் சுமந்தவராய் நலவாழ்வு, வளவாழ்வு, வாழ்வாதாரங்களைப் பேணுவது திருஅவையின் பெரும் பணியாகிறது.

## அறநெறி அளவீடுகள்

திருவிவிலிய உண்மைகளைச் சார்ந்து மனிதனைக் காண்பதும், மனிதன் கடைப்பிடித்து ஒழுக வேண்டிய கடப்பாடுகளில் பிறர்மேல் பாதிப்புகளை ஏற்படுத்தும் பொறுப்புகளில் உறவு, அறம், நெறிமுறைகள் என வெளிப்படுவதிலும் வரையறுக்கப்பட்ட அளவீடுகள் தோன்றுகின்றன. இதன் பின்புலத்தில்தான் சமூகவியல், உளவியல், உயிரியல் போன்ற கல்வி கேள்விகளில் இருந்து பெற்ற எதார்த்தங்களால் தனிமனிதனைப் பற்றிய புரிதலில் திருஅவை ஈடுபட்டிருப்பது நம் அனைவர்க்கும் பயனளிப்பதாய் விளங்குகிறது. இதன் விளைவாகத்தான் தனிமனிதத் தேவைகள், அவனது ஆண்மை, கடமைகள், அவன் தேவைகளை நிறைவு செய்யும் காரணிகள் எனக் கருத்தில் கொண்டு, விவிலியம் சொல்லும் செய்திகளை மொழியாக்கம் செய்வது ஆன்மீக அறமாகத் திருஅவை சுமத்துகிறது.

இந்த நிலையில், தனிமனிதனையும், அவன் ஆண்மையையும், தேவைகளையும் சுருக்கமாக நான்கு அம்சங்களுக்குள் அடக்கி, உடல் உயிர் சார்ந்தவைகளை உயிரியல் பார்வையிலும், உணர்வு சார்ந்தவைகளை உளவியல் பார்வையிலும், சமூகவியல் பார்வையில் கூடிவாழும் இணையுறவு தொடர்புகளையும் (interelated) புத்துணர்வு படைப்பாற்றல் சார்ந்தவைகளை ஆன்மீகப் பார்வையாகவும் திருஅவை தருகிறது.

இந்த விதமாக, அறநெறி அளவீடுகளைக் கூறுகளாகப் பிரிக்காமல், துண்டுப்பார்வைகளாக வைக்காமல், முழப்பார்வையாக வைத்து மனித ஒழுக்கம், கடன்கள், சுதந்திரம், பொறுப்பு, பிறர் மட்டில் உள்ள கரிசனை போன்வற்றைப் பரிசீலிக்க முனைவது பணியாகிறது.

மரபு, பண்பு போற்றும் ஒழுக்க நெறி, வழிமுறைகள், இறையியல் பார்வையில் சமூகக்கரிசனை, கலந்தாய்வு என்பனவாகத் திருஅவையின் போதனைகள் அமைகின்றன.



## தேவைகளும் உண்மைப் பொருட்களும்

அறநெறி அளவீடுகள் நம்மை நிறைவு செய்யக் கூடிய மானிடத் தேவைகளின் மட்டில் பொருள் உணர்த்துவதாய் வழிகாட்ட வேண்டும். புனித தோமா அக்வினாசு தனது இறையியலாக்கக் கருவூலத்தில் இதனை நமக்குத் தெளிவுபடுத்தியிருக்கிறார்.

‘‘மனிதனது அடிப்படைத் தேவைகள் பின்வரும் பொறுப்புகளைச் சுமப்பதாய் அமைகின்றன.’’

‘‘உயிர்காக்க, பிள்ளைகளைப் பெற்றுப் பேண, உண்மையை அறிய, சமூகத்தில் வாழ மனிதனுக்குப் பொறுப்புகள் உண்டு.’’

ஆக, மனிதனது தேவைகளையோ, அவன் தேடும் நிறைவையோ பேசுவோமானால், அதனை ஆன்மீக, சமூக, உயிரியல், உளவியல் உடலியல், தேவைகளையும் அதன் நிறைவுகளையும் தவிர்த்துப் பேசலாகாது என்பது மரபுவழி, நவீன திருஅவையின் போதனைகளாகிறது.

## இயல்பான பண்பாட்டுத் தேவைகள்

மானிடத் தேவைகளையும், தனிமனித ஆளுமையைப்பற்றி ஆய்வு செய்யும் போது பண்பாட்டுப் பாதிப்புகளையும் திருஅவை கருத்தில் கொள்ளத் தவறுவதில்லை. பண்பாட்டுத் தேவைகளில் பண்பட்ட மக்களின் பண்புகளையும் கருத்தில் கொள்ள முனைந்து பின்வரும் முயற்சிகளில் ஈடுபடுகிறது.

உடலியல், உளவியல், சமூகவியல், ஆன்மீகவியல் பார்வைகளை பண்பாட்டுப் பாதிப்புகளோடு தொடர்புபடுத்தி அறிவியல் படைப்பாற்றல், கலைத்திறன் போன்ற திறன் வெளிப்பட்டு உணர்வுகளோடு இணைந்து, பற்றுறுதி, நம்பிக்கை, பிறரன்பு என்ற புண்ணியங்களைப் பரிசீலிப்பது பணியென உணர்கிறது.

மேலும் திருஅவை தனிமனித ஆளுமை, அதைத் தேடுவதால் பெறும் நிறைவு என அனைத்தும் ஒரு படிநிலை அமைப்புக்குள்ளாகி செயல்படுவதாய் காட்டவும் தவறவில்லை. ஆழமான ஆன்மீக செயல்பாடுகளை அதிமிக சிறப்புப் பெற்ற நிலையில், மையமாகவும் அகவாழ்வில்

ஒருங்கிணைக்கப்பட்டதாகவும், உடல்சார்ந்தவைகளைப் புறம்பான நிலையாகவும், உணவியல் கூறுகளை இடைநிலையானதாகவும் கண்ணுற திருஅவை தவறவில்லை. இருப்பினும், ஒவ்வொரு நிலையும் தன்னாட்சியுடன் செயலாற்றினாலும் இணைந்து செயலாற்றுவதில் மனப் பலனுள்ளது. எனவேதான், "நல்லுடலில் நல்லான்மா" என்ற நீதிமொழி அனைத்து மொழிகளிலும் ஒரு பொருள் உணர்த்துவதாய் அனைத்து நாடுகளிலும் ஒரு சேர ஏற்கப்பட்ட உண்மையாய் அறிவுறுத்தப்படுகிறது.

திருஅவையின் இந்த முயற்சி யூதக்கிறித்தவ மரபு வழித் தோன்றி மருத்துவ அறநெறிக்கு வித்திட முளைத்த புதிய கொள்கையானது. இதற்குப் பெயர் முழுநிறைவுக் கொள்கை அல்லது பகுபடா நிலைக் கொள்கையாகும் (Principle of Totality). மருத்துவ சிகிச்சையில் பயன்படுத்தப்படும் இக்கொள்கை கிறித்தவத்தின் பரிசாகும். இதன் அடிப்படையில், மனிதர் நோய் கண்ட சூழலில், மருத்துவ சிகிச்சை ஏற்கவும், உடலில் ஒரு பகுதி பாதிப்புக்குள்ளானாலும், முழுமனித உடல் நலம் பேண சில முடிவுகள் எடுப்பதும் உயிர் காக்கும் அலுவலில் கலந்ததாய்க் காணும் அணுகுமுறை உருவானது. அறுவை சிகிச்சை மதிப்புக்குள்ளானது. கருத்தடை மறுக்கப்படும் ஒன்றானது. முழுநிறைவு அல்லது பகுபடா கொள்கைக்குக் கருத்தடையும், கருச்சிதைவும் எதிரானது என விளக்கப்பட்டது.

திருஅவையின் திட்டவட்டமான அறிவிப்பாக இக்கொள்கை அறிவுறுத்தும் செய்தி பின்வருமாறு தரப்படுகிறது.

"உயிர்காக்கும் பணியைக் கருத்தில் கொண்டு, தனிமனிதரின் அடிப்படை செயல்திறன்களையெல்லாம் இணைத்து, மனிதரின் நலம் அழிக்கப்படாமல் பாதுகாக்கப் பெற்றும் வளர்த்தெடுக்கப்பட்டும் மானிடரின் நலத்திற்கும், நலனைப் போற்றும் வளம் பெருக்கவும் நமக்குப் பணியுண்டு.

இத்தகைய விரிவான, தெளிவான அணுகுமுறையைக் கிறித்தவக் குறிப்பாகக் கத்தோலிக்கத் திருஅவையில் மட்டுமே காண முடியும்.

## சமூகத்தில் தனிமனிதன்

இறைவார்த்தைக்குச் செவிமடுக்கும் தனிமனிதர் தாம் வாழும் உலகினில் தனக்குத்தானே ஒரு தீவு அல்ல. அவருக்கென்று ஒரு சில சமூகத்



தேவைகள் உள்ளன. தன்னிறைவு, தேவை போன்றவை பிறரைச் சாராமல் வருவதில்லை.

கிறித்தவம், "பிறர் உனக்கு என்ன செய்ய வேண்டும் என விரும்புகிறாயோ, அதையே அவர்களுக்குச் செய்" (மத் 7:12) எனப் பகர்வதால் தனி மனிதருக்குப் பிறர் துயர்துடைக்கும் கடனுண்டு என உணர்த்துகிறது.

"உன்னைப்போல் உன் பிறனை நேசி" (மத் 22:9) என்பதும் அதே உண்மையைப் புலப்படுத்துவதாய் அமைகிறது. பிறருடைய வாழ்வில் நம் ஈடுபாடு அவர் நலங்காக்கவும் பிறர் உரிமையைப் பேணவுமான நலம் போற்றும் பணிகளாகின்றன.

இருபதாம் நூற்றாண்டில் இருவேறுபட்ட கொள்கைகளால் ஏற்பட்டதாக்கங்கள் எனசில உள்ளன.

(1) தனிமனித உரிமைகளைத் தேசத்தின் நலனுக்காகத் தியாகம் செய்யும் முறை, இது கூட்டாண்மை (collectivism) எனப் பெயர்பெறும்.

(2) தனிமனித சுதந்திரத்தைச் சிரமேற்கொண்டு சமூகத்தின் நலன்களைப் பற்றிய கவலையற்ற நிலை, இது தற்பற்று அல்லது தனியுரிமைக் கோட்பாடு எனப் பெயர்பெறும் (Individualism).

(3) இவையிரண்டுமே கிறித்தவ மருத்துவ அறநெறிக்கு ஒத்துவராதவை. முதல்நிலை சமத்துவமற்ற அடக்குமுறை செயல்களுக்கு வழிவகுக்கும்.

இரண்டாம் நிலை மக்களை விளிம்பு நிலைக்குத் தள்ளும் எதேச்சதிகாரமாய் மாறி எளியவர் மட்டில் கரிசனையைக் காட்டத் தடைவிதிக்கும். இதனால், திருஅவை பொதுவுடைமைக் கொள்கையை எதிர்த்தது. சுதந்திரச் சந்தை வணிகம் முதலாளித்துவத்தையும் சாடியது. இதன் விளைவாக திருஅவை உலகலாவிய வறுமையையும் இணைத்துச் சமூகக் கரிசனையோடு போதனைகளைக் கொணர்ந்தது. மக்களின் வறுமையைப் போக்காமல் தொழில்நுட்ப உயிரியல் கண்டுபிடிப்புகளின் தரவுகளைப் பெருக்குவது அறம்பிறழ்ந்த செயலெனக் கோடிட்டுக் காட்டத் தவறவில்லை.

கிறித்தவ மருத்துவ அறநெறிக்கு முத்தாய்ப்பான இருகொள்கைகள் திருஅவையின் பாரம்பரிய கொடைகளாக உலகிற்குத் தரப்பட்டன.

(1) பொதுநலன் (Principle of Common Good)

(2) துணையாதரவுக் கொள்கை (Principle of Subsidiarity)

இரண்டுமே பின்வருமாறு விளக்கப் பெறலாம்.

"மானிடச் சமூகம் அவரவர் தேவைக்கேற்றார்போல, அவரவர் திறனுக்குட்பட்ட நிலையில் பொது நலனைப் பேணுவதே அறம்."

ஒருபுறம் தாழ்த்தப்பட்ட சமூக நிலையில் இருப்பவரைக் கருத்தில் கொள்வதும், மறுபுறம் சமூக ஒன்றியங்களின் செயல்பாடுகளைக் கருத்தில் கொண்டு இருப்பவர் இல்லாதவர்க்கு உதவத் துணையாதரவு என்ற நிலையில் முன்வருவதும், இல்லாதவர் தாங்களாகவே முன்னேறும் வழிகளைக் கண்டறிய உதவுவதும் இங்கு அறஞ்சார்ந்த கொள்கைகள் காட்டும் வழிகளாகின்றன.

இக்கொள்கைகள் கிறித்தவப் பிறரன்பு செயல்பாட்டு விளைவுகளின் தரவுகளாகின்றன.

உடல்நலஞ்சார்ந்த பணிகளில் இவை வள ஆதாரங்களைப் பங்கீடு செய்யும் மானியங்களாகவோ, இடஒதுக்கீடுகளாகவோ பகிர்ந்து அளிப்பது அறமாகும். இதைச் சமுதாயத்திற்கு உணர்த்தும் கடனில் திருஅவை பெரும் பங்கை வகிக்கிறது. இதனடிப்படையில் வயது முதிர்ந்தவருக்கு நாம் தரும் சிகிச்சை, காட்டும் கரிசனை போன்றவற்றை நலவாழ்வு உரிமையாகப் பரிணமித்த கொள்கையாக கிறித்தவம் காட்டுகிறது.

## நலம் பற்றிய கிறித்தவக் கருத்தியல்

நலம் பற்றிய கருத்தியலில் கிறித்தவம் முழுப்பார்வையை முதலீடாக வைத்து உடல், உள்ளம், ஆன்மா, சமூகம் இணையுறவு தொடர்புகள் (interrelations) போன்ற அனைத்து அம்சங்களையும் இணைத்துக் காண வைத்திருக்கிறது. இயேசு என்னும் தெய்வீக குணமாக்கும் மருத்துவர் மானிடர் தம் முழுமையையும் நிறைவையும் கருத்தில் கொண்டு, தனிமனித மேன்மைக்காக, அவன் இழந்த சாயலை மீட்டுருவாக்கம் செய்யும் பணியைச் சிறப்பெனக் கருதி (லூக் 11:33) புதுமை நிகழ்வுகளைக் காட்யிடிருக்கிறார்.



மேலும், நோய் கண்ட வேளையில் மக்கள் நோயை இறைவன் தந்த தண்டனையாகக் கொள்ளாமல், இறைவனால் வெளிக்கொணரும் அம்சமாகக் கொள்ளவும், இடர்வழி கண்டறிய வேண்டிய அறவழிப்பாதைகளைப் புரிந்து கொள்ளவும் கிறித்தவம் அழைக்கிறது. இடர்வழி நம் நம்பிக்கை வளர்வதும், துன்பத்திற்கு அர்த்தமாக, இடர்தரும் பாடங்களைக் கண்டறியவும், கிறித்தவ மருத்துவ அறநெறி புகட்டாமல் இல்லை.

ஏன் இறப்பும் கூட கிறித்தவ மருத்துவ அறநெறி இயலில் தனித்துவம் பெறுவதையும் காணலாம்.

உயிர் வாழ்வினை இறைவன் தந்த கொடைகளான மானிட மாண்புடனும் பொறுப்புடனும் மேற்கொண்டு இறப்பை எதிர்கொள்ளக் கிறித்தவம் புகட்டுகிறது. இறப்பு அழியா வாழ்வின் நம்பிக்கைக் கதவு. எனவே மானிட மதிப்பீடுகள் நம்பிக்கை ஒளியில் வளர்த்தெடுக்கப்பட்டதாய் அமைவது வாழ்வு நடத்தும் மக்களின் பொறுப்பு ஆகும்.

இடர்ப்பட்டு இறப்பவர்மேல் காட்ட வேண்டிய கரிசனையும் அவருடன் பரிவுள்ளத்தோடு பயணிக்க வேண்டிய மருத்துவ சிகிச்சை அளிப்பவரின், பணி சிறப்பானது. இது மக்களுக்குச் செய்தது மகேசனுக்குச் செய்ததாய் கொள்ளப்பட வேண்டிய உண்மை "சின்னஞ்சிறியவருக்குச் செய்ததெல்லாம் எனக்கே செய்தாய்" என்ற நற்செய்தியின் முழக்கத்திற்கு இணையானது (மத் 25:40).

## பாலியல்பு பற்றிய கிறித்தவக் கருத்தியல்

பாலுணர்வு தன்னிலே நல்லது. திருமணத்தின் பயனை வளர்ப்பது. திருமணத்தின் நன்மையை விளைவிப்பது.

முதலில், பாலுணர்வு இறைவன் தந்த கொடையென கிறித்தவம் காட்டுகிறது. ஆணும் பெண்ணுமாய் படைத்த இறைவன் அவர்களின் உறவு வாழ்க்கையை பாலியல்புணர்வால் வளப்படுத்தப்படவே திருவுளங்கொண்டார். எனவே, திருமண உறவின் மேன்மையை அருளடையாளப் பந்தமாக்கினார். முறிவுபடாத்தன்மையால் ஆசீர்வதித்து, மாறாத அன்பினால் அவர்களை ஒருங்கிணைத்து, திருமணஉறவு வழியில்

குடும்பம் உருவெடுக்கவும் செய்திருக்கிறார். திருஅவைக்கும் கிறித்துவுக்குமுள்ள உறவை திருமண உறவாய் பவுல் அடியாரும் அதைச் சித்தரிக்காமலில்லை (எபேசியர் 5:22-23).

இரண்டாவது, மனித உறவுகளின் இணக்கமான நிகழ்வுகள் பாலுணர்வுக்குள் அடங்கியுள்ளன. ''ஆணுக்கும் பெண்ணுக்குமுள்ள ஈர்ப்பு அவர்தம் திறன், பொறுப்பு, உறவுக்குள்ள அழைத்தலாகிறது. அன்பே இவ்வழைத்தலின் மேல்வரிச்சட்டம்'' எனத் திருத்தந்தை புனித ஜான்பவுல் தனது போதனையில் 1981-ஆம் ஆண்டு பகிர்ந்துள்ளார்.

எனினும் இந்தத் திருமண வாழ்வின் உரிமைகள் உயிர்காக்கும் கடன்களையாற்றுவதற்காகவே அளிக்கப்பட்டிருக்கின்றன. எனவே, கருத்தடை, கருச்சிதைவு, செயற்கை முறையில் குழந்தை உருவாக்கம், செயற்கைமுறை கருவுரு முறைகள் எல்லாம், கிறித்தவ மருத்துவ நெறிமுறைகளுக்கு முரணானவை எனவும் படிப்பினைகள் அமைந்துள்ளன.

முடிவாக, மருத்துவ அறநெறி சார்ந்த திருஅவையின் கருத்தியல்களைச் சுருக்கமான தரவுகளாகக் கண்டுள்ளோம். இவையனைத்தும் தெளிவான படிப்பினைகளின், பல நூற்றாண்டுகால சுருக்கம்தான். உண்மையாதெனில், மருத்துவ அறநெறி என்பது யூதக்கிறித்தவ மரபில் மட்டுமே மாபெரும் வளர்ச்சி கண்ட கல்வி நிலையானது. எந்த சமயப் போதனை முறைகளிலும் இத்தகைய தெளிந்த பார்வையைக் காண்பதற்கில்லை.

படைத்தவன் படைப்பின் வெளிப்படுத்திய கரிசனைகள், பார்வைகள் இன்று முழுமையான பார்வையாக வளர்ந்திருப்பது திருஅவை உறுப்பினர்க்கு மகிழ்ச்சியின் கருவூலமாகிறது.

## Used References:-


1 "Dogmatic constitution on Divine Revelation," nos.9 and 10, in *Vatican Council II:The Conciliar and Post Conciliar Documents,* Vol.1, Austin Flannery, OP,ed., (Northport, NY Costello Publishing Co., 1975).

2 "Dogmatic Constitution on Divine Revelation," no.9.





3 "Pastoral Constitution on the Church in the Modern World," no.12,

4 Pastorlal Constitution on the Church the Modern World.

5 Benedict M. Ashley, OP, and Kevin D.O 'Rourke, OP, *Health care Ethics* 2nd ed., (St. Louis, MO: Catholic Health Association,1982)

6 Cf. St. Thomas Aquinas, *Summa Theologicae* I-II q.94, a2.

7 Pope John Paul II, "A Patient is a Person" (Oct27,1980), *The Pope Speaks* 26: no.1 (1981), pp 1-5

8 Germain Grisez, *The Way of the Lord Jesus,* Vol.1, (Chicago, II. Franciscan Herald Press, 1983), p.115.

9 F. Benedict M. Ashley, OP, *Theologies of the Body,* (St. Louis, MO: Pope John XXII Medical-Moral Research and Education Center,1986).

10 Ashley and O'Rourke, *Health Care Ethics,*

11 "Pastoral Constitution on the Church in the Modern World," no.24,

12 Robert Bellah et.al., *Habits of the Heart,* (New York: Harper & Row, 1985).

13 National Conference of Catholic Bishops, "Catholic Social Teaching and the U.S. Economy" (Oct.7,1985), *Origins,* 16: no.24, Nov.27, 1986.

14 Cf.Pope John Paul II, "Health Care: Ministry in Transition" (Sept.14,1987), *Origins* 17:no17, Oct.8, 1987, National Conference of Catholic Bishops, "Pastoral Letter on Health and Health Care" (Nov.16-19, 1981), *Origins* 11:no.25, Dec.3, 1981.

15 Cf. National Conference of Catholic Bishops, "Catholic Social Teaching and the U.S. Economy".

16 Cf. Pope John Paul II, "The Ethics of Genetic Manipulation" (Oct 29, 1983), *Origins* 13:no.23, Nov.17, 1983.

17 Cf. Edmund D Pellegrino and David C. Thomasma, *APhilosphical Basis of Medical Practice,* (New York: Oxford Press, 1981).

18 Cf. Pellegrino and Thomasma, *A Philosophical Basis of Medical Practice.*

19 Pope Plux XII, "Christian Principle and the Medical Profession." in *The Human Body: papal Teachings, The Monks of Solesmes,* eds., (Boston, MA: St. Paul Editions, Daughters of St. Paul, 1960).

20 Cf. Karl Rahner, SJ, *On the Theology of Death,* (New York: Herder & Herder, 1965).

21 Cf. Rahner, *On the Theology of Death.*

22 Sacred Congregation for the Doctrine of the Faith, "Declaration on Euthanasia" (May 5, 1980), in *Vatican Council II: More Post conciliar Documents,* Vol. 2, Austin Flannery, OP, ed (Northport, NY: Costello Publishing Company,1982).

23 Cf. Rahner, *On the Theology of Death.*

[24] Cf. Joseph Jensen, OSB, "Human Sexuality and the Scriptures," in *Human Sexuality and Personhood,* (St.Louis, MO: Pope John XXII Medical Moral Research and Education Center, 1981).

[25] Sacred Congregation for the Doctorine of the Faith, "Declaration on Certain Questions of Sexual Ethics," no. 1( Dec. 29, 1975), in *Vatican Council II: More Post Conciliar Documents,* Vol. 2, Austin Flannery, OP,ed., (Northport, NY:Costello Publishing Company, 1982).

[26] John Paul II, "The Christian Family, in the Modern World," no. 11(Nov. 22,1981), in *Vatican Council II: More Post Counciliar Documents,* Vol. 2, Austin Flannery, OP, ed., (Northport, NY Costello Publishing Company, 1982).

[27] Ibid.



# 13. சமூகத் தொடர்பு ஊடகங்களில் விளம்பரம்: ஓர் அறநெறிப் பார்வை

*அருள்பணி முனைவர். அல்போன்ஸ் பிலிப் ச.ச.*
*தொன்போஸ்கோ இறையியல் மையம்*
*கவரைப் பேட்டை*

## முன்னுரை

சமூகத் தொடர்பு ஊடகங்களின் பயன்பாட்டை பல நிலைகளில் நாம் காண்கிறோம். இவை சமூகச் சிந்தனைகளை வளர்த்தெடுப்பதற்கும், பொழுதுபோக்கினை கொடுப்பதற்கும், அரசின் பல்வேறு பயன்பாடுகளை விளக்குவதற்கும், பொருளதார ரீதியாக ஒரு நிறுவனத்தின் உற்பத்திப் பொருட்களை மக்களிடம் கொண்டுசெல்வதற்கும், அப்பொருட்களை விளம்பரம் செய்வதற்கும் ஊடகங்கள் பயன்படுத்தப்படுகின்றன. இவ்வாறு ஒளிபரப்பப்படும் விளம்பரங்கள் சந்தையின் பொருளாதாரத்திற்கும் அறநெறி மதிப்பீடுகளுக்கும் இடையே நெருக்கடியைச் சந்திக்கின்றன. ஒரு பொருளினை விளம்பரப்படுத்தும் பொழுது அதை வாங்குவதற்குப் பல நுகர்வோரை ஈர்க்கும் விதத்தில் வெளியிடப்படும் விளம்பரங்கள், அறநெறி மதிப்பீடுகளான நேர்மை, உண்மை, மதிப்பு ஆகியவற்றை கடைப்பிடிக்கத் தவறுகின்றன. ஊடக விளம்பரங்கள் இளையவர்களையும், முதியவர்களையும் பாதிக்கின்றன. எனவேதான் இந்த விளம்பரங்கள் அறநெறி மதிப்பீடுகளுக்கு எதிராக பொருள்களை விற்பனை செய்கின்றனவா? விளம்பரங்களுக்கான அறநெறி எப்படி இருக்கவேண்டும்? என்று காண்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## விளம்பரம் என்றால் என்ன?

ஒரு நிறுவனத்தின் உற்பத்திப் பொருட்களைப் பரவலாக்கம் செய்து அதை அதிக அளவில் விற்பனை செய்ய நுகர்வோர்களை ஈர்க்கும் பொருட்டு அப்பொருளைப் பற்றிய பயன்பாடுகளை எடுத்துரைக்கும் நிகழ்ச்சியே விளம்பரம் எனப்படும். ஒரு நிறுவனத்தின் விளம்பரத்தில் வரும் பொருட்கள் மற்ற உற்பத்திப் பொருட்களைவிட சிறந்தவை என்றும், அவை எளிதில்

பெற்றுக் கொள்ளும் நிலையில் இருக்கின்றன என்றும், தரத்தில் உயர்ந்தவை என்றும், அவற்றின் விலை மிகவும் மலிவு என்றும் விளம்பரப்படுத்தப்படுகின்றன.

## விளம்பரத்தின் பண்புகள்

தொலைத்தொடர்பு ஊடகங்களில் வரும் விளம்பரங்கள் சந்தைக்கு வரும் உற்பத்திப் பொருட்களின் நன்மைகளையே பெரும்பாலும் எடுத்துரைக்கின்றன. இரு பெரிய உத்திகளில் விளம்பரங்களை ஊடகங்கள் முன்வைக்கின்றன. முதலாவது தனி நபரில் எழும் தேவையை முன்வைத்து அதை நிறைவு செய்வதற்கு இந்தப் பொருட்களே உதவும் என்பதை விளம்பரங்கள் முன்வைக்கின்றன. எடுத்துக்காட்டாக, கழிப்பறையை சுத்தம் செய்ய இதுவரை பயன்படுத்திய பொருட்கள் சுத்தத்தை முழுமையாகத் தராமல் பல்வேறு கிருமிகளை உற்பத்தி செய்வதால் பல்வேறு நோய்கள் ஏற்படுகின்றன என்று கூறி, அவற்றைத் தடுக்க இந்த விளம்பரத்தில் வரும் பொருட்களைப் பயன்படுத்தினால் நோய்க்கிருமிகள் வராது என்று எடுத்துரைத்துத் தனிநபரின் தேவையை உருவாக்கிவிடுகிறது.

இரண்டாவது, தேவைகளைப் பெருகச்செய்து அதை நிறைவுசெய்ய இப்பொருட்களால்தான் முடியும் என்று கூறுவது. எடுத்துக்காட்டாக, முகத்தில் ஏற்படும் கரும்புள்ளிகளால், முகப்பருக்களால் முகம் அழகிழந்து போகிறது என்று எடுத்துக்கூறி விரைவில் முக அழகை மெருகூட்ட இந்த விளம்பரத்தில் வரும் பொருட்களைப் பயன்படுத்த அழைப்பு விடுப்பதாகும். ஊடகங்களில் வரும் விளம்பரங்கள் மக்களின் தேவைக்கு ஏற்ப பொருட்களை விளம்பரப்படுத்துவதால் அத்தேவைகளை நியாயப்படுத்தவும் செய்கின்றன. விளம்பரங்கள் இன்றி உற்பத்தி நிறுவனங்கள் தங்கள் பொருட்களை குறைந்த விலைக்கு விற்கவும் இயலாது. இருப்பினும், பல்வேறு விளம்பரங்கள் உற்பத்திப் பொருட்களின் உண்மையான தன்மையை, அவற்றின் குறுகிய கால, நீண்டகால விளைவுகளை எடுத்துரைப்பதில்லை. ஊடக விளம்பரங்களின் நோக்கம் என்பது பொருட்களை விளம்பரம் செய்து நுகர்வோர்களைத் தூண்டிவிட்டு பொருட்களை பெருமளவில் வாங்கச் செய்வதாகவே உள்ளது. இங்கு அறநெறி என்பது நிறுவனங்கள் விரும்புவதைச் செய்வது என்றே பார்க்கப்படுகிறது.



## விளம்பரங்களின் வகைகள்

விளம்பரம்
- தகவல் தருபவை
  - அரசின் திட்டங்கள்
  - சமூகநலம் தொடர்பானவை
- மனதைத் தூண்டுபவை
  - வணிக விளம்பரங்கள்

**தகவல் தருபவை:** இந்த விளம்பரங்கள் தாங்கள் விளம்பரப்படுத்தும் பொருட்கள், திட்டங்கள் ஆகியவற்றின் முக்கியப் பயன்பாடுகள், விலை ஆகியவற்றையும் அவைகளை எளிதில் அடைவதற்கான வழிகள், அவற்றின் உண்மையான பயன்பாடு ஆகியவற்றை வெளிப்படுத்துகின்றன. இவை பெரும்பாலும் அரசு கொண்டு வரும் வளர்ச்சித் திட்டங்கள் மற்றும் சமூக நலம் தொடர்பான திட்டங்களை முன்வைக்கின்றன. இந்த விளம்பரங்களில் பெரும்பாலும் உண்மைத்தன்மை இருக்கும் என்று பலர் கருதுகின்றனர்.

**மனதைத் தூண்டுபவை:** இவை பெரும்பாலும் வணிக விளம்பரங்களாகவே ஊடகங்களில் வலம்வருகின்றன. இவை உற்பத்திப் பொருட்களின் தகவலை நேரடியாகத் தருவதில்லை. ஆனால் மனதின் ஆழத்தில் விளம்பரப்படுத்தும் பொருட்களை வாங்குவதற்கும், அவை நுகர்வதற்கும் ஆழமான ஆசையைத் தூண்டிவிடுகின்றன. எடுத்துக்காட்டாக, அழகுசாதனப் பொருட்கள் மற்றும் உணவுப் பொருட்கள் ஆகியவற்றை பயன்படுத்துமுன் அவற்றிற்கான வேட்கையைத் தூண்டிவிடுவதாகும். இத்தகைய விளம்பரங்கள் நுகர்வோரை தவறாக வழிநடத்தி நுகர்வோரின் மனப்பாங்கில் பெரும் மாற்றத்தினை ஏற்படுத்திவிடுகின்றன. நுகர்வோரின் எண்ணிக்கை ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையைத் தொட்டுவிடும் பொழுது உற்பத்தி நிறுவனங்கள் பொருட்களின் விலையில் பெரும் மாற்றம் செய்து அதைக் கட்டாயமாக வாங்கவேண்டும் என்ற மனநிலையை உருவாக்கி அப்பொருட்களை அன்றாட வாழ்வின் அடிப்படைத் தேவையாக மாற்றிவிடுகின்றன. நுகர்வோர்கள் இந்த விளம்பரங்களில் வருபவற்றை

எதற்காக வாங்குகிறோம் என்ற மாயநிலைக்கு இந்த விளம்பரங்களால் தள்ளப்படுகின்றனர்.

## விளம்பரங்களின் தொழில்நுட்பங்கள்

இராபர்ட் அரிங்டன் என்பவர் ஊடகங்களில் வரும் விளம்பரங்களுக்கான தொழில்நுட்பங்களை மூன்று விதங்களில் காண்கிறார்.

முதலாவது, மிகைப்படப் புகழ்ச்சி (prffery) வண்ணச் சிமிழ்களால் விளம்பரத்தைக் கவர்ச்சிகரமாக மாற்றுவதே இத்தொழில்நுட்பமாகும். இந்தத் தொழில்நுட்பம் பொருட்களை விளம்பரப்படுத்துவதற்கு மிகவும் முக்கியமானதாக, பொருட்களை நீண்டகாலம் மக்கள் மனதில் நிலைநிறுத்தத் தேவைப்படுகிறது. இந்தத் தொழில்நுட்பம் உற்பத்திப் பொருளை மிகைப்படுத்திக் கூறுகிறது. மிகைப்படப் புகழ்ச்சி தொழில்நுட்பத்தில் மக்களின் உள்ளார்ந்த எண்ணங்கள் சேகரிக்கப்பட்டு அதனடிப்படையில் விளம்பர நிகழ்ச்சிகள் தயாரிக்கப்படுகின்றன. மேலும் இந்தத் தொழில்நுட்பம் நுகர்வோரைச் சுரண்டலுக்கும், தவறான திசைதிருப்பலுக்கும், ஏமாற்றத்திற்கும், பொருளை வாங்கியே தீர வேண்டும் என்ற கட்டாயத்திற்கும் ஆளாக்குகிறது.

இரண்டாவது, மறைமுகமான தகவல் பரிமாற்றம். இந்தத் தொழில்நுட்பம் விளம்பரம் செய்யப்படும் பொருள்களின் நேரடியாக போதுமான தகவல்களைத் தராது மறைமுகமாகத் தருகின்றது. அதாவது விளம்பரப்படுத்தப்படும் பொருட்களின் தகவல் என்பது உற்பத்திப் பொருள் பற்றி என்ன சொல்லப்படவில்லை என்பதிலிருந்து பெற்றுக்கொள்ளும் முறையாகும். மேலும் ஒரே விளம்பரத்தை தொடர்ந்து அடிக்கடி கொடுக்கும் முறையை இந்தத் தொழில்நுட்பம் கொண்டுள்ளது. அடிக்கடி உற்பத்திப் பொருட்களை விளம்பரப்படுத்துவதால் அது மக்கள் மனதில் நின்றுவிடுகிறது.

மூன்றாவது, தூண்டுதல் புலப்பாட்டு எல்லைக்குட்பட்ட விளம்பரம் (Subliminal). இந்தத் தொழில்நுட்பத்தில் உற்பத்திப் பொருட்களின் தகவல்கள் முற்றிலும் மறைக்கப்பட்டு உற்பத்திப் பொருளைப் பற்றி மட்டும் வலிமையாக அறிவிக்கப்படுகின்றன. இந்தத் தொழில்நுட்பம் நுகர்வோர் பொருட்களை



வாங்குவதற்கு மனதின் அடி ஆழத்தில் ஆசையைத் தூண்டுகின்றன. எடுத்துக்காட்டாக, ஒரு பனிக்குழைவை (Ice Cream) திரைப்படத்தில் காணும் பொழுது இந்தப் பனிக்குழைவை தாமும் உண்ணவேண்டும் என்ற ஆசையை மனதின் அடி ஆழத்தில் ஏற்படுத்திவிட்டு, திரைப்படம் முடிந்ததும் அதை வாங்கி உண்ணும் நிலையை ஏற்படுத்துவதே இந்த விளம்பரத் தொழில்நுட்பத்தின் உத்தியாகும்.

இந்த மூன்றுவகையான தொழில்நுட்ப உத்திகளில் நுகர்வோர்களுக்கு, உற்பத்திப் பொருட்களைப் பற்றிய ஒரு குறிப்பிட்ட குறைந்த அளவான செய்திகளே தரப்படுகின்றன. இவ்வாறே நுகர்வோரை சூழ்ச்சித்தனமாக விளம்பரங்கள் கையாளுகின்றன. நுகர்வோரின் தன்னுரிமை பறிக்கப்பட்டு வேறு எந்த உற்பத்திப் பொருட்களையும் தேர்ந்தெடுக்கா வண்ணம் இந்த விளம்பரங்கள் பார்த்துக்கொள்கின்றன. இவ்வாறு மக்கள் உற்பத்தி செய்யப்படும் விளம்பரங்களுக்கு அடிமைகளாக மாற்றப்படுகின்றனர். விளம்பரதாரர்கள் இத்தகைய விளம்பரத் தொழில் நுட்பங்களை விரும்புவதால் விளம்பரங்களை உருவாக்கும் ஊடகங்கள் விளம்பரதாரர்கள் என்ன நினைக்கின்றனரோ, அவர்களின் உற்பத்திப் பொருட்கள் எப்படி மக்களை அடையவேண்டும் என்று நினைக்கின்றனரோ அதையே விளம்பரங்கள் மூலம் தர முயற்சிக்கின்றனர்.

## ஊடக விளம்பரங்கள் – அறநெறிப் பார்வை

**தனி ஒருவர் வளர்ச்சியே முதன்மையானது –** ஊடகங்களில் வரும் விளம்பரங்கள் பெரும்பாலும் தனிநபர் நலனை முன்வைத்தே வெளியிடப்படுகின்றன. இதன்மூலம் ஒருவர் ஒருவருக்கு உதவிசெய்யும் எண்ணங்கள் மறைந்து ஒருவர் மட்டும் வாழ்ந்தால் போதும் என்ற எண்ணம் விளம்பரங்கள் காட்டும் அறநெறியாக முன்வைக்கப்படுகிறது. தனிமனித வளர்ச்சி சமூகத்தில் தேவை என்று கருதப்பட்டாலும் அதுவே முதன்மையானது என்று சுட்டிக்காட்டும் அறநெறி ஒருவரை ஒருவர் சார்ந்து வாழும் பண்புக்கு (interdependence) எதிரானது. ஏனெனில் மனிதர்கள் அனைவரும் சமூகப் பண்பைக் கொண்டவர்கள். சமூகத்தில் உள்ள ஒவ்வொருவரும் சீராக வளர்ந்தால்தான் ஒட்டுமொத்த சமூகமும் வளர்ச்சி

பெறும். இதையே திருத்தந்தை பிரான்சிசு *இறைவா உமக்குப் புகழ்* என்ற சுற்றுமடலில் நுகர்வுவெறிப் பண்பாடு தனிமனித வளர்ச்சியை மட்டும் முன்னிருத்துவதால்தான் வறுமையும், வேறுபாடுகளும் அதிகரித்து வருகின்றன என்றும் இவையேதான் உலகமயமாக்கல் என்ற தத்துவமும் செய்துவருகின்றது என்று குறிப்பிட்டுள்ளார் (எண் 111). மேலும் தனிஒருவர் வளர்ச்சி என்பது கத்தோலிக்க சமூகப் போதனைகளான கூட்டுத்தோழமை மற்றும் பொதுநலன்களுக்கு எதிரானதாகும். எனவே தனியொருவரின் வளர்ச்சியை விட இப்பொருட்கள் அனைவரின் வளர்ச்சிக்கு உதவுகின்றனவா என்பதையே ஊடக விளம்பரங்கள் சுட்டிக்காட்டவேண்டும். இதுதான் உண்மையான ஊடக அறநெறியாகும்.

## நுகர்வுப் பண்பாடு அறநெறி வீழ்ச்சியின் ஆரம்பம்

விளம்பரங்கள் நுகர்வு வெறியை ஓர் அறநெறியாக முன்வைக்கின்றன. அதாவது, வாழ்வது சில காலம் அதற்குள் அனைத்தையும் அனுபவித்துவிடவேண்டும். அதுதான் இவ்வுலக வாழ்வின் சிறப்பு என்று ஊடக விளம்பரங்கள் வாழ்விற்கான புதிய பொருள்புரிதலைத் தருகின்றன. ஆனால் இந்த நுகர்வுப் பண்பாட்டை முன்னிருத்தும் விளம்பரங்கள் ''நாம் யார்'' என்பதற்குப் பதிலாக ''நாம் எதைக் கொண்டிருக்கின்றோம்'' என்பதையே முன்வைக்கின்றன. நவீனப் பொருளை வைத்திருப்பவர்கள் காலத்திற்கு ஏற்றவர்கள் என்றும், வசதியிருந்தும் இப்பொருட்கள் தேவையில்லை என்று எளிமையில் வாழ்பவர்களைப் காலத்திற்குத் தகாதவர்கள் என்று விளம்பரங்கள் கூறுகின்றன. ஆனால், ''ஒருவர் எப்படி இருக்க வேண்டும்'' என்பதே முக்கியமே தவிர ''ஒருவர் எதை வைத்திருக்கிறார்'' என்பது முக்கியமல்ல என்று திருஅவைப் போதனைகள் தெரிவிக்கின்றன. இதனால்தான் நுகர்வோர்கள் தங்களைத் தாங்கள் வைத்திருக்கும் பொருட்களோடு அடையாளப்படுத்திக் கொள்கின்றனர். ஆனால் தங்களிடம் காணப்படும் முக்கியமான குணநலன்களோடு, திறமைகளோடு தங்களை அடையாளப்படுத்திக் கொள்பவர்கள் வெகு சிலரே. இதனால்தான் இன்று வாங்கும் திறன் மக்களிடம் அதிகரித்திருக்கிறதே அன்றி நண்பர்களோடு, உறவினர்களோடு தங்களது உறவினைப் பலப்படுத்துவது குறைந்துள்ளது. இதனால் உறவுச் சிக்கல்கள் ஏற்பட்டு குடும்ப உறவே பாதிப்படைந்துள்ளது.



இந்த நுகர்வுப்பண்பாடு விளம்பரமில்லாப் பொருட்கள் மீது நாட்டத்தைக் குறைத்து அப்பொருட்கள் சுட்டிக்காட்டும் மதிப்பீடுகளான மனித விழுமியங்கள், இரக்கம், தோழமையுணர்வு, பரிவு இவைகளை மழுங்கடிக்கச் செய்கின்றன. இதனால்தான் நுகர்வுப் பண்பாடு அறநெறி வீழ்ச்சியின் ஆரம்பமாக உள்ளது.

## பாதிக்கப்படும் தன்னுரிமை

தனிமனிதரின் தன்னுரிமை என்பது, ஒருவர் தனக்குரிய ஆசைகளை நிறைவேற்ற, முன்னுரிமை கொடுக்க, அதை மேன்மேலும் வளர்த்துக் கொள்ள உதவி செய்கிறது. தன்னுரிமையே ஒருவரின் திறமையை வளர்த்துக்கொள்ள, அதில் மேன்மைகாண வழிவகுக்கிறது. ஒருவர் தன் வாழ்வை எப்படிப் பொறுப்புள்ள விதத்தில் அமைத்துக்கொள்ளவேண்டும் என்பதை ஒருவருக்கே உருவாக்கித் தருவதே தன்னுரிமையாகும். இருப்பினும் தன்னுரிமை என்பது சமூகத்தை முற்றிலும் புறந்தள்ளிவிட்டு தனக்கு மட்டும் விருப்பமானதைச் செய்வதல்ல. ஆனால் ஊடகங்களில் வரும் விளம்பரங்களால் இந்தத் தன்னுரிமை பறிக்கப்பட்டு நுகர்வோர் மூளைச் சலவை செய்யப்படுகின்றனர், ஏமாற்றப்படுகின்றனர். இதனால்தான் விளம்பரம் செய்யப்படும் பொருட்கள் எப்படி இருந்தாலும், அதில் தங்களிடம் எத்தகைய விளைவை ஏற்படுத்தினாலும் பரவாயில்லை என்று பொருளை நுகர்வதிலே மக்கள் அதிக ஆர்வம் காட்டுகின்றனர். இவ்வாறு தன்னுரிமை இழந்த மக்களாய் ஒரு நிறுவனம் உற்பத்தி செய்யும் பொருள்களுக்கு அடிமையாகி வாழ்வைத் தொலைத்தவர்களாய் இன்று பலர் இருக்கின்றனர்.

## தவறான பாலியல் சிந்தனை

ஊடக விளம்பரங்களில், நேர்மறையான இயல்புகொண்ட பாலியல்பை, பாலுணர்வு என்று குறுகிய பொருளில் பொருள் விளக்கம் கொடுத்து பாலியல்பு என்றால் மகிழ்ச்சிக்காக மட்டும் இருக்கும் பாலுணர்ச்சியே என்று காட்டப்படுகின்றது. பெண்களை வெறும் பாலுணர்ச்சி தரும் வடிவங்களாக ஊடக விளம்பரங்கள் மாற்றிவருவது வருந்தத்தக்கதாகும். கவர்ச்சிகரமான ஆடை பற்றிய ஊடக விளம்பரங்கள்

மேன்மேலும் இச்சிந்தனைக்கு உரமூட்டுகின்றன. இந்த விளம்பரங்கள் ஆண் நுகர்வோரை எளிதில் ஈர்க்கின்றன. விளம்பர நிகழ்வுகளில் தோன்றும் பெண்கள் தவறான பாலியல் உணர்ச்சியை ஆண்களிடம் உருவாக்கும் நோக்கத்தில் பயன்படுத்தப்படுகின்றனர். இவ்வாறு செய்வதின் வழியாக விளம்பரத்தைக் காணும் மக்களிடம் உற்பத்தி செய்யப்படும் பொருட்களில் ஒருவிதப் பாலியல் பற்றிய தவறான உளவியல் சார்ந்த ஏக்கத்தை ஏற்படுத்திவிடுகின்றன. இவ்வாறு பெண்களைப் பயன்படுத்திப் பெண்கள் மகிழ்ச்சிக்கான, போதைக்கான பொருள்கள் என்று விளம்பரங்கள் வழியாக தவறான புரிதலை ஏற்படுத்தி நேர்மறையான பாலியல்பை கொச்சைப்படுத்தவும் ஊடக விளம்பரங்கள் செய்கின்றன. இது திருஅவையின் சமூகப் போதனைக்கு எதிராக அமைந்துள்ளது. ‘‘சமூகத்தொடர்பு கருவிகளில் பயன்படுத்தப்படும் கலைகள் அனைத்தும் இறைவன் வகுத்துள்ள இயற்கைச் சட்டத்தின் அடிப்படையில் அமைந்திருக்க வேண்டும்’’ என்று இரண்டாம் வத்திக்கான் சங்கம் குறிப்பிடுகிறது (சமூகத் தொடர்பு கருவிகள், எண் 6). மேலும் அவைகள் தீமைகளின்றி நன்மையை விதைக்க வேண்டும் என்று சங்கம் கேட்டுக்கொள்கிறது (சமூகத் தொடர்பு கருவிகள், எண் 7).

### சிறியோர் மேல் திணிப்பு

ஊடக விளம்பரத்தின் இலக்காகத் திகழ்பவர்கள் குழந்தைகள். இவர்கள் இயல்பிலே அறநெறிப்படி முடிவெடுக்கும் மனப்பான்மையில் நலிந்தவர்கள். இவர்களிடம் கொண்டு செல்லப்படும் செய்தியானது பெரியவர்களையும் பாதிக்கிறது. குழந்தைகளுக்கான விளம்பர உத்திகள் அவர்களைக் கட்டாயம் வாங்கி நுகரச் செய்துவிடுகிறது. அவர்கள் விளம்பரத்தில் வரும் பொருட்கள் என்ன நன்மை செய்கின்றன? அதனால் வரும் தீங்குகள் என்ன? என்பதைப் பற்றிக் கவலைகொள்வதில்லை. இதைப்பற்றி பெரியவர்கள் எடுத்துச் சொன்னாலும் அதைப் பெரிதாக இவர்கள் எடுத்துக்கொள்வதில்லை. இவ்வாறு சிறுவயதில் ஏற்பட்ட பழக்கம் இவர்கள் வயதுக்கு வந்தபோதும் தொடர்கிறது.



### முடிவுரை

விளம்பரங்கள் சமூகத்தில் உற்பத்திப் பொருட்களை அறிமுகம் செய்வதற்கும் அவற்றை மக்களிடம் கொண்டு செல்வதற்கும் தேவை என்பதில் ஐயமில்லை. அதே வேளையில் விளம்பரங்கள் உற்பத்தி செய்யப்படும் பொருட்களின் முழுமையான தகவல்களையோ அல்லது அதன் நன்மை தீமைகளையோ முழுமையாக தந்துவிடமுடியாது என்பதை அனைவரும் கருத்தில் கொள்ளவேண்டும். அடிக்கடி மக்கள் மனதில் நிலையாகத் தங்கும்படி விளம்பரங்களை ஊடகங்கள் வெளியிடுகின்றன. இச்சூழலில் விளம்பரங்கள் எவ்வாறு வணிக உத்திகள் சமூகத்தில் உள்ளவர்களை அடிமையாக்குகின்றன என்பதை முதன்மைப்படுத்தவேண்டும். இதற்குத்தான் உண்மையும் நேர்மையும் வெளிக்கொணரும் ஊடகங்களாக விளம்பரங்கள் திகழவேண்டும். ஒவ்வொரு தனிமனிதத் தன்னுரிமையைப் போற்றி, மனித மற்றும் சமூக மாண்பை வளர்த்தெடுக்க வேண்டும். எனவே மக்கள் மனதில் ஏற்படுத்தும் மயக்கநிலையை முற்றிலும் விளம்பரங்கள் நீக்க வேண்டும். இவ்வாறு மக்கள் தன்னுரிமையில் முடிவெடுக்க உதவிசெய்து, உற்பத்திப் பொருள்களைவிட மனிதர்களே முக்கியம் என்று விளம்பரங்கள் செய்யப்படும் பொழுது அறம் காக்கப்படுகிறது.

# 14. சுற்றுச்சூழல் பாதுகாப்புப் பற்றிய திருஅவையின் சமூகப் போதனைகள்

*முனைவர் அருள்பணி. சந்தியாகு ராசா*
*புனித பவுல் குருத்துவக் கல்லூரி*
*திருச்சிராப்பள்ளி*

**"படைப்பு அனைத்தும் ஒருங்கே பேறுகால வேதனையுற்றுத் தவிக்கிறது." உரோ 8:22**

காலத்தின் தேவைக்கு ஏற்ப சமூகப் பிரச்சினைகளில் மானுடம்சார்பாக இருப்பதால்தான் திருஅவை மக்களுக்கு ஏற்புடையதாய் இன்றும் உள்ளது. திருஅவையின் போதனைகள் பல்வேறு காலக்கட்டங்களில் பல்வேறு அழுத்தங்களைக் கொண்டதாக இருந்துள்ளது. முதல் 19 நூற்றாண்டுகளில் திருஅவையின் போதனைகள் திருஅவையின் கோட்பாடுகளை நிலைநாட்டவும் திரிபுக் கொள்கைகளைக் கண்டிக்கவுமேதான் கூட்டப்பட்டது. ஆனால் 19ஆம் நூற்றாண்டின் இறுதியில் இருந்து, கடந்த 125 ஆண்டுகளாக, சமூகத்துடன் தொடர்புடைய பல்வேறு பிரச்சினைகள் பற்றிப் பேச ஆரம்பித்துள்ளது. திருஅவையின் சமூகப் போதனைகள் பெரும்பாலும் மானுட உழைப்பு, பொருளாதார வளர்ச்சி, அமைதி, மானுட உரிமைகள், சமூக வளர்ச்சி ஆகியவற்றையே மையம் கொண்டதாய் இருந்துள்ளது. அதில் சுற்றுக்கூழல் தொடர்பான திருஅவையின் அக்கறையும் போதனையும் கடந்த சில பத்தாண்டுகளாகத்தான் அதிகமாய்க் காணப்படுகின்றது.

## சுற்றுச்சூழல் சீர்கேடும் சுற்றுச்சூழல் பாதுகாப்புப் பற்றிய அக்கறையும்

லின் ஒய்ட் ஜூனியர் என்பவர் 1967ஆம் ஆண்டில் "சுற்றுச்சூழல் சீர்கேட்டுக்கான வரலாற்றுப் பின்னணிகள்" என்ற கட்டுரையில் சுற்றுச்சூழல் சீர்கேட்டுக்குக் காரணம் யூத, கிறிஸ்தவ, இஸ்லாமிய சமயங்கள்தான் எனக் குற்றம் சாட்டினார். எடுத்துக்காட்டாக, தொநூ 1:26-28ஐ மேற்கோள்காட்டி, இறைப்படைப்பிலேயே மானுடம்தான் சிறந்த படைப்பு எனக் கிறிஸ்தவ சமயம் கூறி மற்ற அனைத்துப் படைப்புகளுமே "மானுடப் பயன்பாட்டிற்கே" என்ற சிந்தனையைப் பல நூற்றாண்டுகளாக அது கூறி வந்துள்ளது.



தொநூ 1:26இல் உள்ள "ஆளட்டும்" என்ற வார்த்தையை தவறாகப் புரிந்து சுற்றுச்சூழல் சீர்கேட்டுக்கு அது வழிவகுத்துள்ளது என்கிறார் லின் ஒய்ட் ஜூனியர்.

இவை போன்ற சமயக் காரணிகள் தவிர,அறிவியல் வளர்ச்சியின் காரணமாக ஏற்பட்ட தொழில் வளர்ச்சி, தொழிற்சாலைகளின் பெருக்கம், தொழிற்சாலைக் கழிவு, உலகமயமாக்கம், நகர்ப்புறம் நோக்கி அதிகமாகக் குடிபெயர்தல், வளர்ச்சியடைந்த நாடுகளின் வசதியான வாழ்வுமுறை, மூன்றாம் உலக நாடுகளின் இயற்கை வளமானது முதல் உலக நாடுகளால் சுரண்டப்படுதல், இயற்கை வளங்களின் முறையற்ற பயன்பாடு, ஓசோன் படலச் சிதைவு, புவி வெப்பம், அமில மழை, மரபணு மாற்றம் பெற்ற உயிரிகள், வரம்பற்ற வகையில் காடுகளை அழித்தல், நுகர்வு வெறி, கூடுதலான மின்தேவைகள், குளிர்சாதனப் பயன்பாடு போன்ற சீரழிவுகளே சுற்றுச்சூழல் பாதுகாப்புப் பற்றிய சிந்தனை உருவாகக் காரணிகளாய் இருந்தன.

*இந்திய அரசியல் அமைப்புச் சட்டம்* மனிதர் நலமான சுற்றுச்சூழலில் வாழ்வது அவனது அடிப்படை உரிமை என்கிறது (எண் 21). எனவே சுற்றுச்சூழலை ஒவ்வொரு மாநிலத்திற்கும் (எண் 48அ) ஒவ்வொரு குடிமகனுக்கும் (எண் 51அ) பாதுகாக்கக் கடமை உண்டு. 1972இல் சுவீடன் நாட்டுத் தலைநகர் ஸ்டாக்கோமில் நடைபெற்ற மாநாட்டில்தான் உலக அளவில் சுற்றுச்சூழல் தொடர்பான கரிசனை வெளிப்பட்டது. இதன் பின்னணியில் உருவான சுற்றுச்சூழல் இயக்கங்கள் இயற்கை வளங்களைப் பாதுகாத்தல், உயிரினங்கள், தாவரங்கள் ஆகியவற்றைப் பேணுதல், நீரையும் நிலத்தையும் பாதுகாத்தல் போன்றவற்றை முன்னிலைப்படுத்தின. காலப்போக்கில் இவற்றுடன் தொடர்புடைய மானுடம், விலங்குகள் ஆகியவற்றின் உரிமை, அணு ஆற்றல் எதிர்ப்பு, ஏழ்மை ஒழிப்பு போன்றவற்றையும் அது உள்ளடக்கியது.

நாம் வாழும் பூமியை உற்றுப்பார்த்தால் மானுடம் இறைவனின் எதிர்பார்ப்புக்கு நம்பிக்கைத் துரோகம் செய்துவிட்டது என்ற உண்மை புலப்படும் (*இறைவா உமக்கே புகழ்*, எண் 61). எனவேதான் கடந்த 125 ஆண்டுகளாகத் திருஅவை சுற்றுச்சூழலைப் பாதுகாக்க வேண்டியதன் தேவையை உணர்த்தியுள்ளது. 1891இல் திருஅவையின் சமூக அக்கறையை

வெளிப்படுத்தும் விதமாக முதன் முதலில் வெளிவந்த சுற்றுமடலாகிய *தொழிலாளரின் நலன்* என்ற ஏடு சுற்றுச்சூழலைப் பாதுகாக்க அழைப்பு விடுக்கின்றது (எண் 11). 1965இல் இரண்டாம் வத்திக்கான் சங்கம் வெளியிட்ட *இன்றைய உலகில் திருச்சபை* எனும் கொள்கை விளக்கம் படைப்பின் மதிப்பைச் சுட்டிக்காட்டியுள்ளது. மேலும் இது, மானுடம் தனது அன்றாடப் பணிகளை நிறைவேற்றுவதில் படைத்தவரின் பணியில் ஒத்துழைக்கின்றது, நிறைவாக்குகின்றது எனக் கூறுகிறது. இது படைப்பில் மானுடத்தின் மையத்தைச் சுட்டிக்காட்டினாலும் படைப்புடன் அதற்குள்ள உறவையும் படைப்புக்கு அது ஆற்றவேண்டிய பணிகளையும் சுட்டிக்காட்டுகின்றது.

1970களில் சுற்றுச்சூழல் பாதுகாப்பு இயக்கம் குறிப்பிடத்தக்க வளர்ச்சி அடைந்தது. இப்பின்னணியில் 1971இல் திருத்தந்தை 6-ஆம் பால் தான் எழுதிய *அரசியல் அதிகாரம், கருத்தமைவு, சமூக ஈடுபாடு* என்னும் சுற்றுமடலில் சுற்றுச்சூழல் பாதுகாப்பில் திருஅவையின் அக்கறையை சுட்டிக்காட்டுகின்றார்: மானுடம் இயற்கையைச் சுரண்டுவதன் மூலம் அதனை அழிக்கின்றது; இயற்கையை அழிப்பதனால் மானுடமும் பாதிப்புக்குள்ளாகிறது என்ற விழிப்புணர்வு இப்பொழுது ஏற்பட்டுள்ளது. இன்று மானுடம் ஏற்படுத்தும் சுற்றுச்சூழல் பாதிப்புகள் நாளைய மானுடத்திற்கு அதை உகந்த ஒன்றாக இல்லாததாக்கிவிடும். எனவே மானுடக் குடும்பம் முழுமைக்கும் முன் உள்ள சமூகப் பிரச்சினை இது. எனவே மானுடம் அனைத்துடனும் சேர்ந்து கிறிஸ்தவர்கள் பொறுப்புணர்வுடன் செயல்பட வேண்டும் (*அரசியல் அதிகாரம், கருத்தமைவு, சமூக ஈடுபாடு*, எண் 21) என்கிறார். 1971இல் ஆயர் மாமன்றம் வெளியிட்ட *உலகில் நீதி* என்ற ஏடு சூழலியலுக்கும் நீதிக்குமானத் தொடர்பை விளக்குகிறது. இது ''ஏழைகள்மீது சிறப்புக் கவனம்'' தேவை என்று பேசியது; அதேவேளையில் பணக்காரர்கள் பொருள்களைக் குறைவாகப் பயன்படுத்துவதன் வழியாக இயற்கை வளங்கள் அழிவதிலிருந்து அவற்றைப் பாதுகாக்க முடியும் என்று சொல்கிறது. இவ்வாறாக, இது நீதிக்காக உழைப்பதற்கும் சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதற்கும் நெருங்கிய தொடர்பு உள்ளது என்கிறது (எண் 3).

புனித 2-ஆம் ஜான் பால் எழுதிய முதல் சுற்றுமடலாகிய *மனிதரின் மீட்பர்* என்னும் மடலில் இயற்கைச் சூழலை மாசுபடுத்தும் அச்சுறுத்தல்களைக் கடுமையாக எச்சரிக்கின்றார் (எண் 4). அவர் எழுதிய சமூகப் போதனைகளை



உள்ளடக்கிய சுற்றுமடல்களாகிய *மனித உழைப்பு* (1981), *திருஅவையின் சமூக ஈடுபாடு* (1987), *நூறாவது ஆண்டு* (1991) ஆகிய மூன்றிலும் சமூக, பொருளாதார வளர்ச்சியைப் பற்றிப் பேசும்போது இயற்கையையும் சுற்றுச்சூழலையும் பேணிப்பாதுகாக்க வேண்டிய அவசியத்தையும் வலியுறுத்துகின்றார்; மனித மாண்புடன் பாதுகாப்பான சுற்றுச்சூழலில் வாழ்வது ஒவ்வொரு மனிதனின் அடிப்படை உரிமை. எனவே சுற்றுச்சூழலைப் பாதுகாப்பது நம் கடமை என *மனித உழைப்பு* என்ற ஏடு சுட்டுகிறது. *சமூக ஈடுபாடு* எனும் சுற்றுமடல் வளர்ச்சி என்பது உண்மையான ஒன்றாக இருக்க வேண்டுமெனில் அது பூமியையும் அதன் வளங்களையும் பாதுகாத்துப் பராமரிப்பதில் அடங்கியுள்ளது (*சமூக ஈடுபாடு*, 5) என்கிறது. சுற்றுச்சூழல் பாதுகாப்பு இயக்கம் ஆகியவை பற்றிக் கூறும் *நூறாவது ஆண்டு* என்ற ஏடு இன்று ''இறைவன் ஆற்றிவரும் படைப்புத் தொழிலில் கவனமும் ஒத்துழைப்பும் கொடுக்காமல், மனித இனம் படைப்புக்கும் கடவுளுக்கும் எதிராக ஒரு மாபெரும் கலகத்தை உருவாக்கி வருகின்றது'' (*நூறாவது ஆண்டு*, 37) என்கிறது. ஐரோப்பியப் பசுமைத் திருப்பணிகளுக்கான செய்தியில் திருத்தந்தை 16ஆம் பெனடிக்ட் ''படைப்பைப் பாதுகாப்பது அனைவரின் கடமை; நாம் படைப்பின் பாதுகாவலர்கள்'' என்றார்.

திருத்தந்தை பிரான்சிசு சுற்றுச்சூழல் பாதுகாப்பில் சிறப்புக் கவனம் கொண்டவர். அவர் திருத்தந்தையாகப் பொறுப்பேற்று மூன்று நாள்கள் கழித்துப் பத்திரிக்கையாளர்களைச் சந்தித்தபோது பிரான்சிசு அசிசியாரின் பெயரை அவர் தெரிவுசெய்ததற்கானக் காரணம் ''அவர் ஏழையாகவும் படைப்பை அன்பு செய்து பாதுகாப்பவராகவும் இருந்த காரணத்தால்தான்'' என்றார். மூன்று நாள்கள் கழித்து உரோமை ஆயராகப் பொறுப்பேற்றதைக் குறிக்கும் முகமாக நடைபெற்ற நற்கருணைக் கொண்டாட்டத்தில் மானுடத்தைப் பாதுகாப்பதைச் சுற்றுச்சூழலையும் படைப்பனைத்தையும் பாதுகாப்பதுடன் தொடர்புபடுத்தினார். திருத்தந்தை பிரான்சிசு அவர்கள் மானுடம் பயனாளிகள் மட்டுமல்ல, அது படைப்புகளுக்குப் பணியாளும் கூட. எனவே, பிரான்சிசு அசிசியைப் போன்று நலிவுறும் இவ்வுலகைக் காப்பது நம் கடமையாகும். பல நேரங்களில் நாம் பணியாளர்கள் என்பதை மறந்துவிட்டு பேராசையாலும் ஆதிக்க மனப்பான்மையாலும் அபகரிக்கும் எண்ணத்தாலும் சுரண்டும் மனப்பான்மையாலும் தூண்டப்பட்டு

சுற்றுச்சூழலுக்கு எதிராகச் செயல்படுகின்றோம் என்கிறார். 2013இல் உயிர்ப்பு ஞாயிறு தினத்தன்று மானுடமாகிய நாம் படைப்பைப் பாதுகாப்பதில் கடவுளின் ''கால்வாய்''களாக இருக்க வேண்டும் என்கிறார். எனவே, பூமிக்கும் மானுடக் குடும்பத்தில் வாழும் சகோதர, சகோதரிகளுக்கும் நமது பொதுப்பொறுப்பில் வேரூன்றிய தோழமை உணர்வை வெளிப்படுத்த வேண்டும் என்றார்.

திருத்தந்தை பிரான்சிசு எழுதிய *நற்செய்தியின் மகிழ்ச்சி* எனும் முதல் திருத்தூது ஊக்க உரையில் சுற்றுச்சூழல், தங்களையே பாதுகாக்க இயலாத நிலையில் காணப்படுகின்றது. பொருளாதார வளர்ச்சி என்ற போர்வையில் அவை சுரண்டப்படுகின்றது என்றார். *இறைவா உமக்கே புகழ்* எனும் சுற்றுமடலில் மானுடப் பேராசையாலும் அக்கறையின்மையாலும் பல தாவரங்களும் உயிரினங்களும் அழிவின் விளிம்பிற்குத் தள்ளப்பட்டுள்ளன என்கிறார் (*இறைவா உமக்கே புகழ்*, எண் 34-35). இவ்வாறு சுற்றுச்சூழல் பாதுகாப்புப் பற்றிய திருஅவையின் சமூகப் போதனைகளை அலசி ஆராயும்போது பூமியின் அழுகையும் ஏழைகளின் அழுகையும் ஒன்று எனக் காணலாம். எனவே படைப்பைப் பாதுகாப்பது நம் அனைவரின் கடமையாகும் என்றார்.

## கடவுளின் ஆவி படைப்பில் உள்ளது

கடவுளின் ஆவி படைப்பில் உள்ளதைத் தொடக்கநூல் ஆசிரியர் நமக்கு எப்போதும் நினைவுபடுத்துகின்றார் (தொநூ 1:2) இதுவே படைப்பை நாம் பாதுகாக்க வேண்டிய தேவையை நமக்கு உணர்த்துகின்றது. கடவுள் உலகைப் படைத்து அதை நல்லதெனக் கண்டார்; மானுடத்தைப் படைப்பின் நிறைவாகப் படைத்து அதனிடம் படைப்பு அனைத்தையும் ஒப்படைத்துப் பராமரிக்க அழைப்பு விடுத்துப் பின்பு ஏழாம் நாள் ஓய்வெடுத்தார். தொநூ 1:26-28இல் காணப்படும் ''ஆளுதல்'' என்ற சொல்லுக்கு அடக்கு என்பதல்ல பொருள்; ஆளுதல் என்றால் படைப்புப் பொருள்களை வரம்பற்ற முறையில் பயன்படுத்த உரிமை உண்டு என்ற அர்த்தமும் இல்லை. படைப்பு மானுடத்திற்குத்தான் என்ற குறுகிய எண்ணமும் இல்லை. மாறாக, அவன் ஆற்ற வேண்டிய பணியை, அவன் பொறுப்புணர்வை அது சுட்டிக்காட்டுகிறது. பண்படுத்திப் பாதுகாக்க விடுத்த அழைப்பை மானுடம் தவறாகப் புரிந்துகொண்டு விட்டது (*இறைவா உமக்கே புகழ்*, எண் 66-69).



எனவே தவறான புரிதலை நிராகரித்து உழுது பராமரி (தொநூ 2:15) என்ற வார்த்தையை மையப்படுத்தி சுற்றுச்சூழல் இறையியலை உருவாக்க வேண்டும் எனத் திருத்தந்தை பிரான்சிசு கூறியுள்ளார் (*இறைவா உமக்கே புகழ்*, எண் 67). இவ்வாறு திருத்தந்தை பிரான்சிசு விவிலியம் சுட்டிக்காட்டுவதாக சொல்லப்படும் ''அடக்கி ஆளும்'' யூத-கிறிஸ்தவ மரபிலிருந்து மாறுபட்டு புனித பிரான்சிசு அசிசியின் இயற்கையில் அன்பு கொள்ளும் அணுகுமுறை சுற்றுச்சூழல் பாதுகாப்புக்கு அவசியம் என்றார். 1990ஆம் ஆண்டு உலக அமைதி நாள் செய்தியில் புனித இரண்டாம் ஜான் பால் ''படைத்த கடவுளுடன் அமைதி, படைப்பு அனைத்துடனும் அமைதி'' என்று கூறியது குறிப்பிடத்தக்கது. இவ்வாறு படைப்பில் இறைவனின் ஆவி தங்கியிருப்பதால் அதைப் பாதுகாப்பது மிக முக்கியமாகும்.

## இவ்வுலகே ஓர் உயிரி

சுற்றுச்சூழல் அழிந்து கொண்டிருக்கின்றது என்பதால் நாம் அது பற்றிய அக்கறை கொண்டுள்ளோம் என்பதல்ல. மாறாக, மானுடம் அதனுடன் கொண்டுள்ள தோழமையே அது பற்றிய அக்கறைக்கு அடித்தளமாய் இருக்க வேண்டும். பூமியும் அதில் வாழும் அனைத்து உயிரினங்களும் அதன் வாழ்விடங்களும் புவியியல் அமைப்புகளும் ஒன்றையொன்று சார்ந்து உள்ளன. இவ்வுலகே ஓர் உயிரி போல உள்ளது. மானுட இனம் பூமியின் ஒரு பாகமே. இவ்வுலகில் வாழும் ஒவ்வொரு நபரும் நாம் பிறரைச் சார்ந்து வாழ்கின்றோம் என்ற விழிப்புணர்வு பெறும்போது சுற்றுச்சூழல் அழிவுக்குக் காரணமான பல காரியங்களை நாம் தவிர்ப்போம். புனித 2-ஆம் ஜான் பால் என்பவர் இயற்கைக்கும் மானுடத்துக்கும் உள்ள உறவு பற்றிப் பேசும்போது, குறைவான வளங்களே நம்மிடம் உள்ளன. இயற்கையின் சுழற்சி பேணப்பட வேண்டும் என்கிறார். மேலும் அவர் ''தோழமை'' பற்றி பேசும்போது மானுடம் ஒவ்வொருவருக்கும் இடையே காணப்பட வேண்டிய சார்ந்து வாழும் நிலை உலகு அனைத்துடனும் காணப்படவேண்டும் என வலியுறுத்துகிறார் (*சமூக ஈடுபாடு*, 5).

மானுடத்தை மையப்படுத்தி புனித 2ஆம் ஜான் பால், 16ஆம் பெனடிக்ட் ஆகியோர் ''மானுடச் சுற்றுச்சூழலை,'' ''இயற்கை சுற்றுச்சூழலிருந்து'' வேறுபடுத்தி மானுடச் சுற்றுச்சூழலுக்கு முக்கியத்துவம்

கொடுத்தனர். 16-ஆம் பெனடிக்ட் தான் எழுதிய *உண்மையில் அன்பு* என்ற சுற்றுமடலில் மானுடத்தை விடச் சுற்றுச்சூழல் பாதுகாப்புக்கு முக்கியத்துவம் வழங்குவது தவறு. அது ‘‘அனைத்தும் கடவுள்’’ என்ற சிந்தனைக்கு வழிவகுப்பதாய் அமைந்துவிடும் என்கிறார். எனவேதான் அவர் 41-ஆம் உலக அமைதி நாள் செய்தியில் சுற்றுச் சூழலுக்கு மதிப்பு வழங்குவது என்பது மானுடத்தைவிட உயிரற்ற பொருள்களுக்கோ விலங்குகளுக்கோ மதிப்பளிப்பது என்பதல்ல; மாறாக சுயநலத்துடன் நமது சொந்த நலனுக்காக இயற்கையைப் பயன்படுத்தாததே என்பதேயாகும். காரணம், எதிர்காலத் தலைமுறை இயற்கையின் பலன்களைப் பெறுவதற்கு எல்லாவித உரிமையும் கொண்டவர்கள் (*உண்மையில் அன்பு*, 16, 48, 52) என்றார். படைப்பு அனைத்தும் மானுட நலனுக்காகவே உள்ளன என நினைத்து அதைச் சுயநலத்துடன் பயன்படுத்தும்போது மானுடத்துக்கும் படைப்புக்கும் இடையே உள்ள உறவு மறுக்கப்படுகின்றது. இதன் மூலம் கடவுளுடன் மானுடம் கொண்டுள்ள உறவும் சீர்குலைகின்றது. ஆகவே, ‘‘ஆதிக்கம் செலுத்துதல் அல்ல’’ மாறாக ‘‘ஆண்டு நடத்துதல்’’ என்பதுதான் மானுடம் உலகோடு கொண்டிருக்கவேண்டிய உறவின் அளவுகோலாக இருக்க வேண்டும்.

திருத்தந்தை பிரான்சிசு அவர்கள் மானுடம் படைப்பின் சிகரம் எனும் ‘‘மனித மையப் பார்வை’’ உண்மையெனினும் மானுடத்தை மட்டுமே மையப்படுத்தி இயற்கையின் மாண்பை உதாசீனப்படுத்துவது தவறு என்கிறார் (*இறைவா உமக்கே புகழ்*, எண் 122-123). மானுட நலம் முக்கியம் என்றாலும், அது சுற்றுச்சூழலின் அழிவில் அல்ல. மனிதரையும் இயற்கையையும் உள்ளடக்கிய ‘‘ஒருங்கிணைந்த சுற்றுச்சூழல் ஆன்மீகம்’’ மட்டும்தான் இவ்வுலகு எல்லாருக்கும் பயன்படக்கூடிய ஒன்றாக மாற வித்திடும் (*இறைவா உமக்கே புகழ்*, எண் 137-162). படைப்பின் ஓர் அங்கம் அழிவுறுவது மானுடம் தன் உடலில் ஏற்படும் வலியாகக் கருத வேண்டும் (*இறைவா உமக்கே புகழ்*, எண் 89) என்றார்.

## இயற்கையை அழிப்பது மானுடத்துக்கு முரணான செயல்

அல்டோ லெயோபொல்டு என்பவர் மனித இனம் இயற்கைக்கு எப்பொழுதும் மரியாதை செலுத்த வேண்டும். அவ்வாறு செய்யத் தவறுவது



அறத்திற்கு எதிரான செயல் என்றார். காரணம் மானுட இனத்தைப் போன்றே உயிர்நிலை கொண்ட சூழல்வாழ்வும் செழிக்க அடிப்படை உரிமை கொண்டுள்ளது. இயற்கையை நாம் தவறுதலாகப் பயன்படுத்தும்போது அது நம் சொந்த மாண்பையும் புனிதத்தையும் குறைக்கின்றது. எதிர்காலத் தலைமுறைக்கு உரிய வளங்களை நாம் அழிப்பதால் அல்ல; மாறாக, மானுடத்துக்கு முரணான செயல்களில் நாம் இங்கு ஈடுபடுகின்றோம். திருஅவை மானுட வாழ்வு, மாண்பு ஆகியவற்றைப் பாதுகாக்க எப்பொழுதும் அழைப்பு விடுக்கின்றது. இவ்வழைப்பு படைப்பு முழுவதையும் பாதுகாக்கவும் பராமரிக்கவும் விடுக்கப்பட்ட அழைப்பாகக் காணவேண்டும்.

16ஆம் பெனடிக்ட் தான் எழுதிய *உண்மையில் அன்பு* என்ற சுற்றுமடலில் சுற்றுச்சூழல் என்பது ஒவ்வொருவருக்கும் வழங்கப்பட்ட கடவுளின் கொடை; எனவே அதன் கட்டமைப்பு மதிக்கப்பட வேண்டும். அது உயிரற்ற ஒன்று என்று கருதி நாம் விரும்பும்படி அதைப் பயன்படுத்துவது தவறு. சுற்றுச்சூழலை இம்மானுடம் எவ்வாறு நடத்துகின்றதோ அது மானுட வாழ்க்கையிலும் விளைவுகளை ஏற்படுத்துகின்றது. இயற்கையை நாம் தவறாகப் பயன்படுத்துவது நம்மையே நாம் தவறாகப் பயன்படுத்துவது ஆகும். எனவே, இம்மடல் மானுட வாழ்வு முறை, நுகர்வுத்தன்மை, இவ்வுலக மகிழ்ச்சியை மையப்படுத்திய வாழ்வுமுறை போன்றவற்றை மறு ஆய்வு செய்ய வேண்டும் எனக் கூறுகிறது. இவ்வாறு தன்னையே அழிக்கும் அபாயத்திலிருந்து மானுடம் தன்னைப் பாதுகாக்க சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதில் அதற்குப் பொறுப்பு உள்ளது.

‘‘எப்பேர்ப்பட்ட உலகத்தை வருங்காலத் தலைமுறையினருக்கு நாம் விட்டுச் செல்லப் போகிறோம்?... இப்புவியை அவல நிலையில் வருங்காலத் தலைமுறையினருக்கு விட்டுச் செல்லவும் நம்மால் முடியும். அவ்வாறு செய்யும்பொழுது இத்தலைமுறையினர் வாழ்வின் எதார்த்தங்களைப் புரிந்து கொள்ளாமல், இப்புவியில் அவர்களுடைய வாழ்வையே நாசப்படுத்திக் கொண்டார்கள் எனும் அவமானத்தையும் இத்தலைமுறையினர் சுமக்க வேண்டியிருக்கும் (*இறைவா உமக்கே புகழ்*, எண் 160) எனத் திருத்தந்தை பிரான்சிசு கூறுகிறார்.

## படைக்கப்பட்ட பொருள்கள் மானுடக் குடும்பம் முழுவதற்கும் உரியது

''எல்லாருடைய தேவைகளையும் பூமியால் பூர்த்தி செய்ய முடியும்; ஆனால் எல்லாருடைய பேராசையையும் அல்ல'' என்பார் காந்தி. இயற்கையின் சமநிலையற்ற தன்மைக்கும் சமூகத்தில் நிலவும் ஏற்றத்தாழ்வுக்கும் நெருங்கிய தொடர்பு உள்ளது. அதாவது, பொருளாதாரத்திற்கும் சுற்றுச்சூழலுக்கும் நெருங்கிய தொடர்பு உள்ளது.

1967இல் திருத்தந்தை 6ஆம் பால் தான் எழுதிய *மக்களின் முன்னேற்றம்* என்னும் சுற்றுமடலில் பூமியில் உள்ள எல்லாப் பொருட்களையும் உலகில் வாழும் எல்லா மக்களும் பயன்படுத்த உரிமையுடையவர்கள் என்று கூறுகின்றார். பொருளதார வளர்ச்சி என்பது சுற்றுச்சூழல் பாதுகாப்பை உள்ளடக்கியதாக இருக்க வேண்டும் என்றார். படைக்கப்பட்ட பொருள்கள் ஒரு சிலருக்கு மட்டும் உரியவை அல்ல; ஆனால் மானுடக் குடும்பம் முழுவதற்கும் உரியது. திருத்தந்தை பிரான்சிசு பல நேரங்களில் வஞ்சிக்கப்பட்ட சுற்றுச் சூழலுக்கும் வஞ்சிக்கப்பட்ட ஏழைக்குக்கும் இடையே உள்ள நெருங்கிய உறவை சுட்டிக்காட்டி இரண்டுமே தங்களைத் தற்பாதுகாத்துக் கொள்ள இயலாதவை என்றார். 5 ஜூன் 2013இல் ஐக்கிய நாடுகள் உலகச் சுற்றுச்சூழல் தினம் அன்று மக்களுக்கு ஆற்றிய உரையில் திருத்தந்தை பிரான்சிசு ''நுகர்வுக் கலாச்சாரம்,'' ''வீணாக்கும் கலாச்சாரம்'' ஆகியவற்றைக் கண்டிக்கின்றார். ''பயன்படுத்தி வீசும்'' பண்பாடனது இயற்கை, மானுடம் ஆகியவற்றின் மாண்பைக் கேள்விக்குள்ளாக்குகிறது (*இறைவா உமக்கே புகழ்*, எண் 16). இயற்கையைப் ''பயன்படுத்தி அனுபவிக்கும்'' பண்பு அதை ஒரு பொருளாகக் காணும் மனப்பாங்குக்கு இட்டுச் செல்கிறது. ஆனால் கடவுள் வழங்கிய மாண்பு இயற்கையில் உள்ளது என்பதை உணர வேண்டும் (*இறைவா உமக்கே புகழ்*, எண் 5) என்கிறார். பணக்காரர்கள் செழிப்புடன் வாழ்வதற்காக நவீன வசதிகளைப் பெருக்குகின்றார்கள். பேராசை காரணமாக நிலத்தைச் சுரண்டி பூமித்தாயை அபகரிக்கின்றார்கள் (*இறைவா உமக்கே புகழ்*, எண் 2). இவ்வாறு இயற்கைச் சீரழிவால் பெரிதும் பாதிப்புக்குள்ளாகும் நபர்கள் ஏழைகளும் (இறைவா உமக்கே புகழ், எண் 25, 48, 152, 193) மாற்றுத்திறனாளிகளும் தாயின் வயிற்றில் வளரும் கருக்களும் (*இறைவா உமக்கே புகழ்*, எண் 117, 120, 136) என்கிறார். ஆனால் ஏழைகளின்



வளர்ச்சியை உள்ளடக்காத எந்த ஒரு சுற்றச்சூழலுக்கான திட்டமும் மானிடத்துக்குப் பயன் விளைவிக்காது (*இறைவா உமக்கே புகழ்*, எண் 49). இன்று மூன்றில் ஒரு பங்கு உணவு வீணடிக்கப்படுகிறது. திருடப்பட்ட உணவு என்பதை உணவை வீணடிக்கும் ஒவ்வொருவரும் உணர வேண்டும் (*இறைவா உமக்கே புகழ்*, எண் 50) என்கிறார்.

## புனித வாழ்க்கை முறையும் புதிய உளப்பாங்கும் தேவை

மனித இனம் சுற்றுச்சூழக்கு எதிராகப் பலத் தீமைகளை உருவாக்கினாலும் அவற்றைச் சீரமைக்கும் பண்பாடுகள் மனிதரிடம் காணப்படுகின்றன. தவறிவிழுந்த நிலையிலிருந்து மானுடம் மீண்டும் எழக்கூடும். எழுந்தபின் நல்ல செயல்களையே செய்யக்கூடும். ஒரு புதிய பாதையை மானுடம் அமைத்துக் கொள்ள முடியும். பேராசை, தன்னலம் போன்ற போக்குகளிலிருந்து தன்னையே விடுவித்துக் கொள்ள முடியும் (இறைவா உமக்கே புகழ், எண் 205) என்ற நம்பிக்கையை விதைக்கின்றார் திருத்தந்தை பிரான்சிசு. எனவே, தனி நபர், சிறு குழுக்கள், அரசுப் பணியாளர், தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் போன்ற அனைவரும் நமது உலகைக் காக்க முன்வர வேண்டும்.

இன்றையக் காலத்தின் தேவை என்னவெனில்

- சுற்றுச்சூழல் தொடர்பான எந்தக் கேள்விகளிலும் மானுட வாழ்வு, உரிமை ஆகியவை முன்னிலை பெறவேண்டும்.
- சுற்றுச்சூழலுக்கான மனிதரின் கடமையைப் பற்றி சொல்லும்போது அவரைப் பணியாளர் என்று கூறுவதே பொருத்தம்.
- சுற்றுச்சூழல் பற்றி நாம் எந்த முடிவெடுத்தாலும் அது எதிர்காலத் தலைமுறைக்குப் பாதிப்பு இல்லாத ஒன்றாக இருக்க வேண்டும்.
- சார்நிலை உரிமை விதியின்படி சுற்றுச்சூழல் தொடர்பான முடிவுகள் எடுக்கப்பட வேண்டும்.
- தனிஉடைமைக்கான உரிமை, பொதுநலனுக்கு உடைமைகளைப் பயன்படுத்துவதற்கான பொறுப்பாணை ஆகியவை சுற்றுச்சூழல் தொடர்பான வரைவுகளை எடுப்பதில் மதிக்கப்பட வேண்டும்.

1990இல் புனித இரண்டாம் ஜான் பால் அவரின் உலக அமைதி நாள் செய்தியில் பல நாடுகளும் ஒருங்கிணைந்து கூட்டு முயற்சி எடுப்பதன் மூலம்தான் இயற்கை வளங்களைப் பாதுகாக்க முடியும். தவிர, நவீன சமூகம் தனது வாழ்வுநிலையை மறுபரிசீலனை செய்யவில்லையெனில் சுற்றுச்சூழல் தொடர்பான இன்றைய சிக்கல்களை நாம் தீர்க்க முடியாது. எனவே எளிய கட்டுப்பாடான வாழ்வு, தியாக வாழ்வு போன்றவை அன்றாட வாழ்வு முறையாக மாறவேண்டும் என்கிறார். அவர் 2001-இல் பொது மக்களுக்கு ஆற்றிய உரையில் ''சுற்றுச்சூழல் காப்பது பற்றிய மனமாற்றம்'' தேவை என்றார். புதிய வாழ்க்கை முறையை வாழ்வற்கு நாம் புதிய உளப்பாங்கை, மனப்பான்மையை உருவாக்க வேண்டும் என்றார். இத்தகைய மனப்பான்மைதான் பூமி எல்லாருக்கும் உரிய பொது இல்லிடம் என்ற சிந்தனை மேலோங்க வழிவகுக்கும்.



# 15. தமிழகத் திருஅவையின் சமூகப் போதனைகளும் முன்னெடுப்புகளும்

*முனைவர் அருள்பணி. ச.தே. செல்வராசு*
*தூத்துக்குடி மறைமாவட்டம்*

**தொடக்கமாக...**

தனக்குள் அடைபட்டு முடங்கிக் கிடந்த கத்தோலிக்கத் திருஅவையைத் திறந்துவிட்ட பெருமை 1962-65-களில் நடந்த இரண்டாம் வத்திக்கான் பொதுச்சங்கத்தை சாரும். உலகோடு, பிற பண்பாடுகளோடு, பிற சமயங்களோடு என மும்முனை உரையாடல்களை இச்சங்கம் தொடங்கிவைத்தது. இத்தகைய சிறந்த உரையாடலுக்கு அடிப்படையாய் இருந்தவர்களுள் மிகவும் குறிப்பிடத்தக்கவர் பெல்ஜியம் நாட்டைச் சார்ந்த கர்தினால் ஜோசப் கவனென்சு அவர்கள்.[1] இது சங்கத்தின் 16 ஏடுகளுள் இறுதியானதும் திருஅவையின் சமூகச் சிந்தனையை முன்வைத்ததுமான ஏடு '**இன்றைய உலகில் திருஅவை (இஉதி) பற்றிய கொள்கை விளக்கம்**' என்ற ஏடாகும். இது சங்கத்தின் முன்வரைவுகளில் இடம்பெறாது, சங்கத் தளத்திலே பிறந்த ஏடாகும் என்பது இங்கு நினைவுகூறத்தக்கது.

ஏடு முழுவதும் சமூகச் சிந்தனையைத் தாங்கிநிற்கிறது என்றாலும் நம் கவனத்திற்கு ஒரு கருத்தைமட்டும் இவண் பதிவுசெய்வோம். **''இவ்வுலகக் கடமைகளைப் புறக்கணிக்கும் ஒரு கிறித்தவர், தமக்கு அடுத்திருப்பவருக்கு ஆற்ற வேண்டிய கடமைகளை, ஏன் கடவுளுக்கு ஆற்ற வேண்டிய கடமைகளைக் கூட புறக்கணித்தவர் ஆகிறார். அதனால் அவர் தனது முடிவில்லாத மீட்பையும் கூட ஆபத்துக்கு உள்ளாக்குகிறார்''** (இஉதி, 43). அதாவது, அயலாருக்குக் காட்ட வேண்டிய அன்பு (மாற் 12:31) சூனியத்தில் அல்ல; மாறாக சமூக, பொருளாதார, அரசியல் சூழலுக்கு உட்பட்டதேயாகும். எனவே இந்த சமூக வரலாற்று ஈடுபாட்டிலிருந்து விலகிநிற்கும் கிறித்தவர்கள், தங்களது மீட்பை வினாவுக்கு உள்ளாக்குகிறார்கள். இது மிகவும் துணிச்சலான, புரட்சிகரமான போதனை, கிறித்தவர்களின் இவ்வுலக சமூக ஈடுபாட்டைத் திட்டவட்டமாக இங்கு சங்கம் எடுத்துச் சொல்கிறது.

## திருஅவையின் சமூகச் சிந்தனை - அணுகுமுறை

ஒருகாலத்தில் திருஅவையின் சிந்தனை இயற்கைச் சட்டத்தை அடிப்படையாகக் கொண்டு இயங்கியது. ஆனால் வத்திக்கான் சங்கம் இதில் பெரும் மாற்றத்தைக் கொண்டுவந்தது, எவ்வாறெனில் இயற்கைச் சட்ட அணுகுமுறை இன்றைய எதார்த்த சூழலைக் கணிப்பில் எடுத்துக் கொள்வதில்லை; மாறாக இயற்கைச் சட்டத்தை, அருவமான மனிதத்தைத் தொடக்கப் புள்ளியாக வைத்து திருஅவை சிந்தித்தது. இதன் விளைவாக வரும் முடிவுகளை எதார்த்த உலகில் சென்று செயல்படப் பணித்தது. இது விதிதரும் அணுகுமுறை (Deductive Method). ஆனால் சங்கம், எதார்த்ததிலிருந்து விதி வரும் அணுகு முறைக்கு (Inductive Method) வந்தது. இஃது ஓர் அணுகுமுறை மாற்றம். சங்கம் மறுமலர்ச்சியோடு கூட, ஒரு புதிய அணுகுமுறையையும் புகுத்தியது (இஉதி, 4).

சங்கத்தைக் கூட்டிய திருத்தந்தை 23-ஆம் யோவான் இறப்பிற்குப்பிறகு பொறுப்பேற்ற திருத்தந்தை 6-ஆம் பவுல், 1971-இல் அரசியல் அதிகாரம், கருத்தமைவு, சமுதாய ஈடுபாடு என்ற மறைத்தூது திருமுகத்தை எழுதுகிறார். இதில் "கிறித்தவ சமூகங்கள் தத்தம் நாட்டிற்கே உரித்தான சூழலை உள்ளவாறே பகுப்பாய்வு செய்ய வேண்டும். அதன்மீது உயிருள்ள வார்த்தைகளைக் கொண்ட நற்செய்தியை ஒளிரச் செய்ய வேண்டும். திருஅவையின் சமுதாயப் போதனையிலிருந்து சிந்தனைக்கான தத்துவங்களை, முடிவெடுப்பதற்கான விதிகளை, செயல்பாட்டிற்கான வழிமுறைகளை வடித்தெடுக்க வேண்டும்"[2] (அரசியலதிகாரம், கருத்தமைவு, சமுதாய ஈடுபாடு, 4, 1971) என 6-ஆம் பவுல் சொல்கிறார். இந்த மாற்றத்திற்கான காரணியத்தையும் அவர் குறிப்பிடுகிறார். மிகவும் வேறுபட்ட சூழல்கள் உலகில் நிலவுகிறபோது எல்லாருக்கும் பொதுவான ஒரு செய்தியைச் சொல்லவோ, அல்லது எல்லாருக்கும் ஒரு தீர்வை முன்மொழிவதோ எமக்குக் கடினமானது. இது எமது விருப்பமோ அல்லது பணியோ அல்ல என்கிறார் திருத்தந்தை.[3] எனவே ஒவ்வொரு கிறித்தவ சமூகமும் கடமை உணர்வோடு இப்பணியைச் செய்ய வேண்டும் என அழைக்கிறார்.



## தமிழகத் திருஅவையின் சமூக அக்கறை

பொதுவாகப் பார்க்கும்போது தமிழகத் திருஅவையானது கல்வி, சமூகசேவை, நலவாழ்வுப்பணி என்பவற்றை ஓரளவு சிறப்பாகச் செய்து கொண்டிருக்கிறது. இவற்றால் பல ஏழைமக்கள் பயனடைந்து வருகின்றனர். இது பாராட்டுக்குரியது. '**பசிப்பிணி ஒழிப்பு அறப்போர்**' என்பதை முன்னிறுத்தி, வாழ்வின் அடிப்படைத்தேவைகள் இல்லாதோரை இனம்கண்டு, அவர்களுக்கு உதவுகிறது. இவ்வாறு தமிழகத் திருஅவை தொடக்கத்திலிருந்தே அறப்பணிகளைச் செய்து வருகிறது. வறட்சி நிவாரணப்பணி, இயற்கைப் பேரிடரின் போது பணி, கந்துவட்டியிலிருந்து சாமானியரை மீட்பது, சிறு கைத்தொழில் தொடங்க உதவுவது போன்ற பணிகளையும் செய்துவருகிறது. இரண்டாம் வத்திக்கான் சங்கத்திற்குப் பிறகு, அறப்பணிகளோடு வளர்ச்சிப் பணிகளையும் முனைப்போடு கையில் எடுத்திருக்கிறது. இக்கட்டத்தில் தமிழ்நாடு பாண்டிச்சேரியிலுள்ள அனைத்து மறைமாவட்ட சமூகப் பணி நிறுவனங்களின் மாநில அமைப்பாக '**தமிழகச் சமூகப்பணி மையம்**' 1979-இல் தொடங்கப்பட்டது. 1980-களில் விடுதலை இறையியலின் தாக்கத்தால் வளர்ச்சிப்பணி என்பது விழிப்புணர்வுப் பணியானது (சமுதாயப் பகுப்பாய்வு). தொடர்ந்து விடுதலைப்பணி, நீதிக்கான போராட்டங்களில் பங்குபெறுவது (உலக, பார்ப்பனிய மயப் போக்குகளுக்கு எதிராக) என்ற செயல்நெறிகள் முன்னுக்கு வந்தன.

## தமிழகத் திருஅவையின் சமூகப் போதனை

தமிழகத் திருஅவையின் சமுதாயப் போதனை என்பது ஒட்டுமொத்த தமிழக ஆயர்களின் சமுதாயப் போதனையையும், ஒரு சில ஆயர்கள் தனியாகத் தங்களது மறைமாவட்ட மக்களுக்கு விடுத்த சிறப்புப் போதனையையும் உள்ளடக்கும். ஆயர்களின் அனைத்துப் போதனைகளையும் ஒன்று திரட்டித் தருவது நமது நோக்கமல்ல. மாறாக தமிழக மக்களின் வாழ்வுப் பிரச்சினைகளை, ஆயர்கள் கடந்த 35 ஆண்டுகளாக (1982-2016) பார்த்து, அலசி ஆராய்ந்து போதனைகளைத் தந்திருக்கிறார்கள் என்ற போக்கைச் சுட்டிக்காட்டுவதே நமது நோக்கம். இதில், மிக முக்கியம் எனப்பட்ட 5 தலைப்புகளில் ஆயர்களின் சமுதாயப் போதனைகளைக் காண்போம்.

**1. தலித் மக்கள்**

நீண்ட நெடுங்காலமாக இந்தியத் தமிழக தலித் மக்களைப் பாடாப்படுத்தி வந்து கொண்டிருப்பது சாதியப் பேய் அல்லது சாதிப் பிரச்சனையாகும். தலித் கிறித்தவர்கள் தாங்கள் கிறித்தவர்கள் ஆன ஒரே காரணத்தினாலேயே அரசு சலுகையை இழந்து நிற்பவர்கள். சாதிக் கிறித்தவர்களாலும் (திருஅவையின் அதிகாரத்தில் இருப்பவர்கள் பலர் உள்பட), சாதி இந்துக்களாலும் மும்முனை ஒதுக்குதலுக்கும் ஒடுக்குதலுக்கும் ஆளாகியிருப்பவர்கள்.

தமிழக ஆயர்களுடைய முதல் கவனமும் காலத்தின் அறிகுறியும் தலித் மக்கள் எனலாம். தலித் மக்கள் குறித்து ஆயர்கள் வெளியிட்ட பல அறிக்கைகளில் குறிப்பிடத்தக்க மூன்றையும், மூன்று குறிப்பிட்ட திட்டங்களையும் கீழே காண்போம். "சாதி அடிப்படையில் பாகுபாடுகளை வகுத்து நடைமுறையில் கடைப்பிடிப்பது அருள்நெறி வாழ்வுக்கு இழுக்குமட்டுமல்ல, நடைமுறையில் நற்செய்திப் போதனையைப் புறக்கணிப்பதும் மறுதலிப்பதுமாகும்" என்கின்றனர்.[4]

அடுத்து மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு நடந்த தமிழக ஆயர்கள் பேரவைக் கூட்டத்தில் மீண்டும் ஆயர்கள் தங்களது பார்வையை தலித் கிறித்தவ மக்கள்மீது திருப்புகின்றனர். "சாதி, சமய, இனம், மொழி என்ற பெயரால் சமுதாயத்தில் இழைக்கப்படும் அநீதி, அட்டூழியம், கொடுமை, வேறுபாடுகளைப் பற்றி மக்கள் உணர்ந்து, அவற்றைக் களைந்து நீதி, சமத்துவம், சமாதானம் நிறைந்த சமுதாயத்தை உருவாக்க ஆவண செய்ய வேண்டும்"[5] என்கின்றனர்.

1987-இல் மீண்டும் தொடர்ந்து தலித் பிரச்சினை குறித்து மிகுந்த ஆதங்கத்தோடு பேசினர். கிறித்தவ சமூகத்தின் வாழ்விலும் நடைமுறையிலும் சாதி வேறுபாடுகளும் அவைகளின் விளைவுகளாக அநீதிகளும் கொடுமைகளும் இன்னும் நிறையத் தொடர்கின்றன என்பதை நாங்கள் ஆழ்ந்த வேதனையுடன் ஏற்றுக் கொள்கிறோம்.[6] கத்தோலிக்க மக்கள் அனைவரும் தீண்டாமையின் சிறு சிறு வடிவங்களைக் கூட முற்றிலும் களைந்து ஒருவர் ஒருவரை உண்மையான சகோதரத்துவத்தோடு ஏற்று, நல்லிணக்கத்துடன் வாழவேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறோம்"[7] என்று மக்களை வேண்டினர்.



இதற்கிடையில் தலித் கிறித்தவ விடுதலை இயக்கம் தமிழகத் திருஅவையில் தலித் மக்களின் நியாயமான உரிமைகளுக்கான போராட்டங்களைத் தமிழகத்தின் பல்வேறு இடங்களில் நடத்தினர். இதன் தாக்கத்தால்:

1. தலித் மக்கள் மாண்போடும் மதிப்போடும் திருஅவையில் நடத்தப்படவேண்டும் என எல்லா மக்களுக்கும் விழிப்புணர்வு கொடுக்கும் நோக்கத்தோடு 1991-இல் நீதி ஞாயிறு ஆயர்களால் ஏற்படுத்தப்பட்டது.

2. 1988 செப்டம்பர் 24-25 தேதிகளில் தலித் கிறித்தவர்களுக்கு அரசு சலுகைகள் கொடுக்கப்பட வேண்டும் என்று திருச்சியில் தமிழக கிறித்தவ தார்மீக மாநாடு நடந்தது. இதில் கத்தோலிக்கர், லூத்தர் அவையினர், தென்னிந்தியத் திருஅவைக் கிறித்தவர்கள், ஆயர்கள் என ஏறக்குறைய மூன்று இலட்சம் பேர் கலந்து கொண்டனர். தலித் கிறித்தவர்களுடைய பணிக்குழுவின் அன்றையத் தலைவர் வேலூர் மறைமாவட்ட ஆயர் மைக்கிள் அகஸ்டின் அவர்களது ஈடுபாடு இதில் சிறப்பாக அமைந்திருந்தது.[8]

3. 1990-ஆம் ஆண்டு, சனவரி மாதம் 28-31 தேதிகளில் வேலூரில் கூடிய தமிழக ஆயர்களும் துறவு அவைகளின் தலைவர்களும், 20-ஆம் நூற்றாண்டின் இறுதிப்பத்தாண்டுகளை **ஷெட்யூல்ட்டு** (அட்டவணைப்படுத்தப்பட்ட) வகுப்பினரின் ஆண்டு என அறிவித்தனர். தலித் மக்களின் மேம்பாட்டிற்காக உழைக்க அனைத்துத்தரப்பு மக்களுக்கும் அழைப்பு விடுத்தனர். 1. திருவழிபாடு, 2. இறை அழைத்தல், 3. கல்விச் சேவை மற்றும் அனைத்து மறைமாவட்டப் பங்கு நிறுவனங்கள், 4. ஆசிரிய மற்றும் தொழிற்பயிற்சி மையங்கள், 5. தொழில் மற்றும் நுணுக்கக் கல்வி, 6. துறவு அவைகளின் கல்வி நிறுவனங்கள், 7. சமூக சேவை நிறுவனங்கள் தீட்டும் திட்டங்கள், 8. SC/ST பணிக்குழு உருவாக்கல், 9. தலித்களுடைய உயர்கல்விக்கு ஆயர்களும் துறவு அவையினரும் இணைந்து மூலதனம் உருவாக்குவது, 10. தலித்துகளுக்கு மைய மாநில அரசுகளிடமிருந்து உரிமைபெற போராட்டங்கள் நடத்துவது என தலித்களுக்கு முன்னுரிமை கொடுக்கும் 10 அம்சத்திட்டம் உருவாக்கப்பட்டது.[9] இத்திட்டச் செயல்பாடுகள் 2004-இல் **'மிட்ஸ்'** (MIDS) அமைப்பால் ஆய்வுசெய்யப்பட்டு 8 அம்சத் திட்டமாக்கப்பட்டது.

தலித் கிறித்தவர்களை SC பட்டியலில் சேர்க்க ஆயர்கள் தமிழக முதல்வரிடம் கோரிக்கை சமர்ப்பித்தனர் (காண், நம்வாழ்வு, 02.09.2007, பக் 3,4). இதுபோல டெல்லியிலும் ஒரு போராட்டம் நடத்தி, மைய அரசுக்கும் மனுக்கொடுத்தனர்.

## 2. பெண்கள்

தமிழர்கள் வாழ்வில் தந்தைவழியிலான ஆணாதிக்கமும் பெண் அடிமைத்தனமும் அனைத்து நிலைகளிலும் புரையோடிப்போய் நிற்கின்றன. தமிழர்கள் ஒருபக்கம் பெண்ணை மலைமகளாக, சரசுவதியாக, தாய்த் தெய்வமாகப் பார்க்கின்றனர். மறுபக்கம் பெண்களை இரண்டாம் தர அடிமைகளாக நடத்துகின்றனர். திருஅவையிலும் இதே நிலை தொடர்கிறது. 'உயர்த்தப்பட்ட சாதிக்காரன், பணக்காரன், எசமான் இவர்களுக்கும் முறையே தாழ்த்தப்பட்ட சாதிக்காரர், ஏழைகள், பணியாட்களுக்கும் சம்பந்தம் ஏற்படும் சமயங்களில் மாத்திரம் தாழ்மையாய், சமமற்றவராய் நடத்துகின்றனர், ஆனால் ஆண்களோ பெண்களைப் பிறப்பு முதல் இறப்புவரை அடிமைகளாகவும் கொடுமையாகவும் நடத்துகின்றனர். 'தமிழர்களின் விடுதலைக்கான முன்நிபந்தனை பெண் விடுதலையே' என்பார் பெரியார்.

1987-இல் தமிழகத் திருஅவையில் மரியன்னை ஆண்டு கொண்டாடப்பட்டது. அப்போது தமிழக ஆயர்கள் பெண்களுடைய பிரச்சினைகளைக் கருசனையோடு நோக்கினர். சமூகத்திலும் திருஅவையிலும் பெண்களுக்குச் சமவாய்ப்புகளை உருவாக்க திருஅவையின் எல்லா நிலைகளிலும் முயற்சிகள் மேற்கொள்ளப்படவேண்டும் என்றனர்.

"பெண்ணடிமைத்தனம் மறையவும், பெண்களுக்கெதிரான கொடுமைகள் நீங்கவும், பெண்கள் அனைவரும் மரியாளின் சகோதரிகளாக வாழவும், அதற்கான முயற்சிகள் எடுக்கவும் வேண்டும்." எனத் தமிழக ஆயர்கள் மரியன்னை ஆண்டை முன்னிட்டு இறைமக்களைக் கேட்டுக் கொண்டனர்.[10]



2002-ஆம் ஆண்டை பெண்கள் ஆண்டாக அறிவித்து, ஆயர்கள் 16.12.2001 அன்று ஒரு சுற்றுமடலை வெளியிட்டனர். அதில், பெண்களுக்கெதிரான அநீதிகள் நாளுக்குநாள் பெருகிக்கொண்டிருக்கின்றன என்று கவலை தெரிவிக்கின்றனர். பெண்களை சக்தியுடையவர்களாக, சம உரிமை உடையவர்களாக மாற்ற சில ஆக்கப்பூர்வமான செயல்திட்டங்களை முன்மொழிகின்றனர். அவை பெண்களுக்கு சமூக விழிப்புணர்வு மன்றங்களை ஏற்படுத்துவது, மகளிர் சுய உதவிக் குழுக்களை ஏற்படுத்துவது, பெண்கல்விக்கும் வேலை வாய்ப்புக்கும் முன்னுரிமை தருவது, தலித் பெண்களின் உரிமைக்காகப் போராடுவது, சாதி உடைப்புத் திருமணங்களை ஆதரிப்பது போன்றவையாகும்.[11]

## 3. ஒருங்கிணைக்கப்படாத தொழிலாளர்கள்

தமிழக ஆயர்கள் 1989-ஆம் ஆண்டு மே தினச் செய்தியாக ஒருங்கிணைக்கப்படாத தொழிலாளர்கள் குறித்து தங்களது கவனத்தைத் திருப்புகின்றனர்.

"இவர்கள் (ஒருங்கிணைக்கப்படாத தொழிலாளர்கள்) பலவிதமான கொடுமைகளுக்கு நாளும் பலியாகின்றனர். வேலைப் பாதுகாப்பற்ற நிலை, குறைந்த ஊதியம், சலுகைகளற்ற நிலை போன்றவை... இவர்களுடன் வீட்டு வேலைக்காரர்கள் அதிகமான அடக்குமுறைகளுக்கும் அவமதிப்புக்கும் ஆளாகிறார்கள்... ஒருங்கிணைக்கப்படாத தொழிலாளர்களின் பெரும்பான்மையோர் தாழ்த்தப்பட்டவர்களும் பழங்குடி வகுப்பைச் சார்ந்தவர்களும் ஆவர். இவர்கள் பொருளாதார ரீதியிலும் சமூக ரீதியிலும் பற்பல அடக்குமுறைகளுக்கு ஆளாகிறார்கள்" என்கின்றனர்.[12]

மீண்டும் 1992-இல் தமிழக ஆயர்கள் மதுரையில் ஒருங்கிணைக்கப்படாத தொழிலாளர்கள் குறித்து "வேளாண்மையில் ஈடுபட்டிருப்போர், மீன்பிடித் தொழிலாளர், கொத்தடிமைகள், கல்லுடைப்போர், இடம்விட்டு இடம்போகும் கைவினைத் தொழிலாளர்கள், தோல் பதனிடுவோர், இன்னும் எத்தனையோ வகைகளில் அன்றாடக் கூலிவாங்கி உழைக்கும் தொழிலாளர்கள் யாதொரு பாதுகாப்புமின்றி, நீதியான சம்பளமுமின்றி அல்லலுறுகிறார்கள்... இவர்களது உரிமைகளுக்காகப் போராடுகின்ற

சங்கங்கள் இல்லாததால் இவர்கள் எளிதில் சுரண்டப்படுகிறார்கள்'' என மிகுந்த அக்கறையோடு பேசுகின்றனர்.[13]

இதை எதிர்கொள்ளத் தமிழக ஆயர்கள் இரு வழிமுறைகளை முன்வைக்கின்றனர். 1. நமது நிறுவனங்களில், இல்லங்களில், தொழிற்கூடங்களில் பணியாற்றும் தொழிலாளர்களுக்குத் தகுந்த மரியாதையும், ஊதியமும், வேலைப் பாதுகாப்பும், மருத்துவ வசதிகளும் செய்துதரப்பட வேண்டும். 2. ஒருங்கிணைக்கப்படாத தொழிலாளர்களின் வாழ்க்கை வளர்ச்சிக்காகப் பாடுபடும் அனைத்து இயக்கங்களோடும் இணைந்து இவர்களுடைய உரிமைக்காகப் போராட வேண்டும் என்கின்றனர்.

இராமேசுவரத்தில் மீன்பிடித் தொழிலாளர்களுக்கு சிங்கள இராணுவத்தினர் இழைக்கும் கொடுமைகளைக் கண்டித்தும், 5 அப்பாவி மீனவர்களுக்குத் தூக்குத் தண்டனை வழங்கியதைக் கண்டித்தும் அவர்களை விடுவிக்க சிவகங்கை மறைமாவட்ட ஆயர் செ. சூசை மாணிக்கம் அறிக்கையிட்டிருக்கிறார் (காண். நம்வாழ்வு, 30.1.2014, பக். 9,10).

### 4. பொதுநிலையினர்

இரண்டாம் வத்திக்கான் பொதுச் சங்கம் 'இறைமக்களே திருஅவை' என்றது. சங்கம் முடிந்து 50 ஆண்டுகளுக்குப் பின்னும் திரு அவையில் பொதுநிலையினருக்கு உரிய இடமும் பணிகளும் போதுமான அளவுக்குத் தரப்படவில்லை என்பதுதான் உண்மை. மேலும் பொதுநிலையினரும் தங்களது உரிமைகளையும் கடமைகளையும் தமதாக்கப் போதுமான முன்முனைப்புக் காட்டவில்லை என்பதும் உண்மை.

இப்பின்புலத்தில் வத்திக்கான் சங்கம் நிறைவுபெற்று ஏறக்குறைய 30 ஆண்டுகளுக்குப்பிறகு, 1994-ஆம் ஆண்டு தமிழக ஆயர்களும் பொதுநிலையினரும் திருச்சியில் கூடினர். அதில் தமிழகத் திருஅவை சந்திக்கும் சவால்களையும், திருஅவையின் பணியையும் ஆராய்ந்து மதிப்பீடு செய்தனர். அதன் இறுதியில் ''நீதியும் அமைதியும் உலவும் சமூகத்தை உருவாக்கும் நோக்குடன் செயல்படும் இயக்கங்களுடனும், தன்னார்வக் குழுக்களுடனும் இணைந்துநின்று, அநீதியான அமைப்புகளை மாற்றி நீதி நிலவும் சமுதாயத்தை உருவாக்கும் பணியில் ஈடுபடுவது காலத்தின் கட்டாயம்'' என்றனர்.[14]



அடுத்து 1998-ஆம் ஆண்டைப் பொதுநிலையினரின் ஆண்டாகக் கொண்டாட தமிழக ஆயர்கள் திட்டமிட்டனர். இதற்குத் தயாரிப்பாக 1996-இல் ''திருஅவையிலும் சமுதாயத்திலும் பொதுநிலையினர்'' என்ற மடலை வெளியிட்டனர். அதில்,

• பொதுநிலையினருக்கான பங்கேற்பு அமைப்புகள் (பங்குப் பேரவை, நிதிக்குழு, பொதுநிலையினர் பணிக்குழு, தமிழ்நாடு பாண்டிச்சேரி கத்தோலிக்கப் பேரவை, மறைமாவட்ட நிதிக்குழு) உருவாக்கப்பட வேண்டும். பொதுநிலையினரின் கருத்துக்கள், விருப்பங்கள், பங்கேற்பு, பங்களிப்பு, பிரதிநிதித்துவம் உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்றனர்.

• பொதுநிலையினர் சங்கத்தின் வழிகாட்டுதல்படி திருஅவையிலும் சமுதாயத்திலும் ஈடுபாட்டோடு பணி செய்ய (திருஅவையின் மறைத்தூதுப் பணி, 20, இன்றைய உலகில் திருச்சபை, 75, பொதுநிலையினரின் திருத்தூதுப்பணி 7) அவர்களுக்குத் தேவைப்படும் பல்வேறு உருவாக்கப் பயிற்சிகளும், இறையியல், சமூகவியல், மானிடவியல் சார்ந்த பயிற்சிகளும் கொடுக்கப்பட வேண்டும் என்கின்றனர்.

• ''சாதி சமய வேறுபாடுகளால் ஏற்படுகின்ற கலவரங்கள், தீண்டாமைக் கொடுமையினைச் சமுதாயத்தில் கட்டிக்காக்கும் மனிதாபிமானமற்ற செயல், அடிப்படைவாதம் எழுப்பும் சிக்கல், அரசியல் துறையில் நிலவும் ஊழல், சமூகப் பொருளாதார ஏற்றத் தாழ்வுகள், பண்பாட்டுச் சீரழிவுகள், பெண்களுக்கு எதிராக இழைக்கப்படும் கொடுமைகள் போன்ற சவால்களைப் பொதுநிலையினர் சந்திக்க வேண்டும்'' என்கின்றனர்.[15]

2007-இல் கேரளாவிலுள்ள ஆலுவாவில் **'திருஅவையிலும் உலகிலும் பொது நிலையினரின் அழைப்பும் பணியும்'** என்ற தலைப்பில் இந்திய ஆயர்களின் பேரவைக்கூட்டம் நடந்தது. இதை அடியொற்றி தமிழக ஆயர்கள் 2007-2008-ஆம் ஆண்டைப் பொதுநிலையினரின் ஆண்டு என்று அறிவித்தனர். இதில் முடிவெடுக்கும் தளங்களில் பொதுநிலையினரின் பங்களிப்பு இருக்க வேண்டும் என்றும் பொதுநிலையினரின் தலைமைத்துவத்தை வளர்த்தெடுக்க வேண்டும் என்றும் வலியுறுத்தினர் (காண். நம்வாழ்வு, 21.01.2007, பக் 5-8).

ஈழத்தமிழர்களின் பிரச்சினையும் அதனால் தமிழகத்திற்கு வந்து கொண்டிருந்த அகதிகளின் பரிதாப நிலையும் ஆயர்களின் கரிசனத்தை அதிகம் பாதித்ததாகத் தெரியவில்லை. ஆனால் அன்றைய மதுரைப் பேராயர் ஆரோக்கியசாமி அவர்கள் **"விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்குக"** எனத் துணிந்து குரல்கொடுத்தார். இது தமிழக ஆயர்கள் பேரவைக்குப் பெருமிதம் சேர்ப்பதாக அமைந்தது.[16] இதே பேராயர்தான், திருஅவையின் சமூகப்போக்கு – அன்றையத் தந்தையரும் இன்றைய ஆயர்களும் – என்ற அருள்கிராமத்தார் நூலுக்குக் கொடுத்த அணிந்துரையில் **"மொத்தத்தில் சமூக நீதியை மையமாகக்கொண்டு நம்முடைய போக்குகள் மாற வேண்டும்"**[17] எனச் சொல்வது தமிழகத் திருஅவையின் சமுதாயப் போதனை குறித்து சிந்திக்கும்போது, நாம் கவனத்தில் கொள்ளவேண்டும்.

### 5. இளைஞர்கள்

1985-ஆம் ஆண்டு அனைத்துலக இளைஞர்கள் ஆண்டு என ஐக்கிய நாடுகளின் அவை அறிவித்தது. திருத்தந்தை இரண்டாம் யோவான் பவுலும் இதை அவ்வாறே அறிவித்தார். இளைஞர்களைப் பெரும்பாலும் இழந்து நின்றது தமிழகத் திருஅவை. எனவே இளைஞர்கள் ஆண்டில் தமிழக ஆயர்களுடைய கவனம் இளைஞர்கள்பால் திரும்பியது. ஆயர்கள் கீழ்க்கண்ட அழைப்பை இளைஞர்களுக்கு விடுக்கின்றனர்.

- இளைஞர்களின் நல்வாழ்வு திருஅவையின் நலனுக்கு இன்றியமையாதது. இளைஞர்களை ஒன்று திரட்டி, நற்செய்திக்குச் சான்றுபகரச் செய்யும் முயற்சிக்குத் திருஅவை தனிக்கவனம் செலுத்தவேண்டும்.
- பெற்றோர்கள், பெரியோர்கள், திருஅவைப் பணியாளர்கள், ஆசிரியர்கள், இன்னும் பொறுப்புள்ள அனைவரும் இளைஞர்களை ஈர்ப்பவை எவை என்பதைக் கண்டறிந்து, திருஅவையானது சமுதாய ஏற்றமிகு வாழ்வுக்கு அவர்களை நெறிப்படுத்த வேண்டும் என்கின்றனர்.
- இளைஞர்கள் ஆண்டை முன்னிட்டு தமிழக ஆயர்கள் தனித்தனியாகவும் தங்கள் மறைமாவட்ட மக்களுக்கு மடல் எழுதுகின்றனர்.



- கோட்டாறு ஆயர் – 'இளைஞர்களும் இளம் பெண்களும் மனித மாண்புடன் மனித விடுதலைக்காக நிறைவளர்ச்சியை நோக்கிப் பயணிக்க உதவ வேண்டும்' (ஆயர் மடல், எண். 141:91).
- சென்னை – மயிலைப் பேராயர் – 'குறிப்பாக ஏழைகள்பால் அக்கறையும் சமூக நீதிக்கான தாகமும் கொண்டவர்களாக இளைஞர்களை உருவாக்க வேண்டும்.'
- மதுரை உயர் மறைமாவட்டப் பேராயர் – 'விடுதலை வேட்கை, பொது நன்மை, முற்போக்கு எண்ணம் போன்றவற்றால் இளைஞர்கள் இயல்பாகவே தூண்டப்பட்டு மானிடம் சந்திக்கும் பல்வேறு பிரச்சனைகளில் தங்களை ஈடுபடுத்திக் கொள்வது இளைஞர்கள் இயல்பு.'
- திண்டிவனத்தில் கூடிய இளைஞர் பேரவையில் ycs/ysm குறிக்கோள் தெளிவுபடுத்தப்பட்டது. 'இறைநம்பிக்கையால் உந்தப்பட்டு, தேவையில் உள்ளோரைச் சென்றடைவது.' 'இளைஞர்கள் முழுவளர்ச்சியில் ஈடுபட்டு, அவர்களுக்குக் கிறித்தவ மதிப்பீடுகளைக் கொடுத்து, அவர்கள் வழியாக இறையரசை இம்மண்ணில் மலரச் செய்வதே இளைஞர் பணிக் குழுவின் நோக்கம்' எனவும் தெளிவுபடுத்தியது.'[18]
- 2010-ஆம் ஆண்டு தமிழகக் கத்தோலிக்க இளைஞர்களின் வெள்ளிவிழா (1985–2010). இதை அடியொற்றி தமிழக ஆயர்கள் **'இளைஞரே! விழித்தெழு, ஒளிவீசு'** என்ற தலைப்பில் இளைஞர் உருவாக்கம், பங்கேற்பு குறித்து அழுத்தம் தந்து, **'இளமையே நம் வருங்கால வளமை'** என்கின்றனர் (காண், நம்வாழ்வு, 20.06.2010, பக், 7-8).

### தமிழகக் கத்தோலிக்கத் திருஅவையின் அருள்பணித் திட்டம்

20.07.2005-இல் **'தமிழகக் கத்தோலிக்கத் திருஅவையின் இலட்சியமும் செயல்திட்டமும்'** என்ற சிற்றேட்டைத் தமிழக ஆயர்கள் வெளியிட்டனர். பின் அது புத்தாக்கம் பெற்று 2008-இல் **'தமிழகக் கத்தோலிக்கத் திருஅவையின் அருள்பணித் திட்டம்'** என்ற தலைப்பில் வெளிவந்தது. இதில்:

• தமிழகத் திருஅவை இறையாட்சியைத் தமிழகத்தில் கட்டியெழுப்புவதை இலட்சியமாகக் கொண்டுள்ளது. இந்த இலட்சியத்தை அடைய இது வெளியிலிருந்தும் உள்ளிருந்தும் எதிர்கொள்ளும் சவால்களைப் பட்டியலிடுகிறது (5:9). இறையாட்சியைக் கட்டி எழுப்பும் அருள்பணித்திட்டத்தில் 18 பணிக் குழுக்களின் பணிகளைப் பட்டியலிடுகிறது (6.1 லிருந்து 6.16 வரை).

• இதில் நீதி, அமைதி, சமூக முன்னேற்றப் பணி இலட்சியத்தில் ஆயர்களின் சமுதாயப் போதனை தெளிவாகத் தெரிகிறது (6.16). ''நற்செய்தியின் ஒளியில் அன்பு, அமைதி, நீதி, சமத்துவம், சகோதரத்துவம், சமவாய்ப்பு, தியாகம், எளிமை, மன்னிப்பு, மனித நேயம் போன்ற இறையாட்சியின் விழுமியங்கள் அடங்கிய புதிய சமுதாயத்தையும் சூழலையும் தமிழகத்தில் உருவாக்குவது'' என்கிறது. மேலும், இதன் செயல்பாடுகளிலும் சமுதாயப் போதனையின் தாக்கத்தைக் காண முடிகிறது. (1லிருந்து 18 வரை). குறிப்பாக ''மாற்றுச் சமுதாயம் படைக்கும் பணிகளில் அரசுத் துறைகள், தனியார் சேவை நிறுவனங்கள், தன்னார்வலர்கள், மக்கள் இயக்கங்கள் ஆகியவற்றுடன் இணைந்து செயல்படுவது'' (14) என்கிறது.

• தொடர்ந்து சமுதாயத்தில் நிலவும் அநீதி, சமத்துவமின்மை, சாதிய மற்றும் பொருளாதார ஏற்றத்தாழ்வு, சுயநலம், சுரண்டல், உண்மையின்மை, நேர்மையின்மை, மனித உரிமை மறுப்பு, வறுமை ஆகியவை நிகழும் போது, மானுடம் மறுக்கப்படுகிறது எனக்கண்டு, இந்த அவல நிலை மாறிடத் துணிவோடு செயல்படுவது'' (16) வேண்டும் என்கின்றனர்.

• இப்பணிகளைக் கண்காணிக்க 'கண்காணிப்புக் குழு'வும் ஏற்படுத்தப்பட்டது. நிறைவாக, **''மாற்று உலகம் சாத்தியமே என்ற நம்பிக்கை தீபத்தை மக்கள் மனதில் ஏற்றி, இறையாட்சியைக் கட்டி எழுப்பும் பணியில் அனைவரும் அயராது உழைக்க அழைக்கப்படுகிறோம்''** (8) என்ற நம்பிக்கையோடு போதனை நிறைவு பெறுகிறது.[19]

• உண்மையிலேயே தமிழக ஆயர்களின் சமுதாயப் போதனையில் இது ஒரு மைல்கல் வளர்ச்சி என்றே சொல்ல வேண்டும், பாராட்ட வேண்டும்.



தனிப்பட்ட முறையில் பல்வேறு தமிழக ஆயர்கள், தங்களது மறைமாவட்ட சமூகப் பிரச்சினைகள் குறித்து பல மடல்கள் எழுதியிருக்கின்றனர். இடம் கருதி அவை அனைத்தையும் இங்கு குறிப்பிட இயலவில்லை. ஆயினும், 1986-ஆம் ஆண்டு, **'கோட்டாறு மறைமாவட்டத்தில் கிறித்தவ வாழ்வும் பணியும்'** என்ற திருமுகம் மற்ற மறைமாவட்டங்களுக்கு ஓர் எடுத்துக்காட்டாக விளங்கியதால், அது குறித்து சில கருத்துக்கள் இங்கு இடம் பெறுகின்றன.

மூன்று ஆண்டுகள் பல மட்டங்களிலும், கட்டங்களிலும் நடந்த பல உரையாடல்கள், கலந்தாய்வுகள், கேள்வி பதில்கள், கருத்துக் கணிப்புகளுக்குப் பிறகு வெளிவந்த திருமுகம் இது. ஏதோ ஆயரிடமிருந்தோ அல்லது ஆயரும் அருட்பணியாளர்களும் மட்டுமே சேர்ந்து தயாரித்த மடல் அல்ல இது. மாறாக, பொதுநிலையினர், சமூகவியலார்கள், இறையியலார்கள், அருட்பணியாளர்கள், துறவியர், இயக்கங்கள், சங்கங்கள், ஆணைக் குழுக்கள் இணைந்து தயாரித்த கூட்டு மடல் இது. இந்த அணுகுமுறை திருத்தந்தை 6-ஆம் பவுலும் தற்போதைய திருத்தந்தை பிரான்சிசு அவர்களும் குறிப்பிட்ட அணுகுமுறையாகும். அதாவது, 'கிறித்தவ சமூகங்கள் (தலத் திருஅவை) தங்களுக்கே உரித்தான பிரச்சினைகளை அலசி ஆராய்ந்து நற்செய்தியை அதன் மீது ஒளிரச் செய்து, தங்களது பண்பாட்டிற்கு ஏற்ப செயல்பாட்டிற்காக வழிமுறைகளை முன்னெடுப்பதாகும்.' இதோ, இம்மடலிலிருந்து ஒரு சில கருத்துக்கள் மட்டும்.

• ''நீதிக்காக மனித உரிமைகளுக்காக நடத்தப்படும் போராட்டங்களின்போது வெறும் பார்வையாளராக நமது மறைமாவட்டம் இராமல், அந்தப் போராட்டங்களுக்கு ஆதரவு அளித்து, அவற்றில் கலந்துகொள்ள வேண்டும். இப்பணியில் பொது நிலையினரின் பங்கு மிகப் பெரிது.'' (எண் 24, பக். 10, காண், எண் 23).

• ''சமுதாய மாற்றத்தை அடிப்படையாகக் கொண்டுள்ள முற்போக்கு கட்சிகளுடனும் தொழிற்சங்கங்களுடனும் பொறுப்புணர்வோடும் விவேகத்தோடும் நாம் ஒத்துழைத்துப் பணியாற்ற வேண்டும்... இக்கண்ணோட்டத்தில் பார்க்கும்பொழுது இடதுசாரி கட்சிகளுடன் பல நல்ல சந்தர்ப்பங்களில் நாம் ஒத்துழைப்பது தேவையாகிறது'' (எண், 25, பக். 10-11).

• திருஅவை இறையரசின் பணியாளராகத் திகழ இது உலகில் நிலவும் அநீதியினை மட்டுமின்றி, தன்னுள்ளே நிலவும் அநீதிகளையும் அகற்றப் பாடுபட வேண்டும். (எண். 28, பக். 11).

• "திருஅவையில் உள்ள அதிகாரங்களும் பொறுப்புகளும் பொதுநிலையினரோடு இன்னும் அதிகமாகப் பகிர்ந்துகொள்ளப்பட வேண்டும். பொதுநிலையினர் நடுவே தலைமைப் பொறுப்பு வளரும்படியாகச் செய்ய வேண்டும்." (எண். 30-31, பக் 2).

• பெண்களுக்குப் பங்குப் பேரவை மற்றும் பங்கு, மறைவட்ட அளவில் உள்ள அனைத்து அமைப்புகள், இயக்கங்களில் சமத்துவமும், சம வாய்ப்பும், சம உரிமையும் கொடுக்க வேண்டும். (எண், 48-49, பக் 15).[20]

## அண்மைக்காலப் போதனைகள் - நிலைப்பாடுகள்

• இக்கட்டுரையின் இடக்கட்டுப்பாடு கருதி, ஒரு சில அண்மைக்காலப் போதனை நிலைப்பாடுகள் குறித்து மிகச் சுருக்கமாகக் காண்போம். இக்கட்டுரை எழுத எனக்கு உதவி செய்த நம் வாழ்வு அலுவலகப் பணியாளர்கள் குறிப்பாக **திரு. பிலிப்,** இன்னும் சிறப்பாக இணையாசிரியர் **அருள்பணி. எட்வர்ட்,** முதன்மை ஆசிரியர் **அருள்பணி. தஞ்சை டோமி,** தமிழ்நாடு-பாண்டிச்சேரி அருள்பணிப் பேரவை செயலர் **அருள்பணி. ஆர். ஜோசப்ராஜ்** அனைவருக்கும் அடியேன் உளம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

• 'விடுதலைப் புலிகளை அழிக்கிறோம் என்ற போர்வையில், இலங்கை அப்பாவித் தமிழர்களைக் கொன்று குவிக்கும் இனப்படுகொலைப் போரை உடனடியாக நிறுத்தவும், அரசியல் பேச்சு வார்த்தைகள் மூலம் சுமூகமான தீர்வை எட்டவும் வேண்டும்' எனத் தமிழக ஆயர்கள் பேரவையின் தலைவர் பேராயர் பீட்டர் அவர்கள் இந்திய மைய அரசை வலியுறுத்த தமிழக முதல்வரைக் கேட்டுக்கொண்டார். (காண், நம் வாழ்வு, 01.03.2009).

• கூடங்குளம் அணுமின் நிலையம், அதைச் சுற்றி வாழுகின்ற பல இலட்சம் மக்களின் வாழ்வுரிமைகளையும் வாழ்வாதாரங்களையும் பாதிப்பதாலும், சுற்றுச் சூழலுக்கும் மக்கள் நலவாழ்வுக்கும் பெரும் பங்கம் விளைவிப்பதாலும் மனித அக்கறை கொண்டவர்கள் மைய-மாநில



அரசுகளுக்கு எதிர்ப்புத் தெரிவிப்பதில் ஒன்றிணைய வேண்டுமென தமிழக ஆயர்கள் சார்பில் பேராயர் ஏ. எம். சின்னப்பா அவர்கள் அறிக்கையிட்டிருக்கிறார்கள் (காண். நம் வாழ்வு 06.11.2011, பக். 4,5). மேலும் 400 நாட்களுக்கு மேலாக தொடர்ந்து எவ்வித ஆயுதமும் வன்முறையும் இன்றி அமைதியாகப் போராட்டம் நடத்திய கூடங்குளம் அணுமின் நிலைய எதிர்ப்பாளர்கள் மற்றும் பொதுமக்கள் மீது தடியடி, துப்பாக்கிச் சூடு நடத்திய காவல்துறையினரின் செயலுக்குத் தமிழக ஆயர் பேரவை கடுமையான கண்டனம் தெரிவித்திருக்கிறது. (காண். நம் வாழ்வு, 23.09.2012, பக். 4).

• 2014 பாராளுமன்றத் தேர்தலில் 'நம் நாட்டின் சனநாயகம், சமயச் சார்பின்மை, பன்முகத் தன்மை, சமய நல்லிணக்கம், சிறுபான்மையினரின் பாதுகாப்பு, சுற்றுச்சூழல் பாதுகாப்பு, இயற்கை வளங்கள் பாதுகாப்பு, இளைஞர்களின் எதிர்காலம், தேசிய இனங்களின் உரிமைகள், ஏழை மக்களின் வாழ்வுரிமைகள், தாழ்த்தப்பட்ட / பிற்படுத்தப்பட்ட / பழங்குடி மக்களின் உரிமைகள், சமூக நீதி, பாலின சமத்துவம், கருத்துரிமை, பாசிச எதிர்ப்பு, மதவெறி எதிர்ப்பு இவற்றைக் கண்முன் நிறுத்தி வாக்களிக்க' வழிகாட்டும் நெறிகளை மக்களுக்குக் கொடுத்திருக்கின்றனர் (தமிழக ஆயர்கள் பேரவை, கிறித்தவர் வாழ்வுரிமை இயக்கம், தமிழ்நாடு-புதுவை அறிக்கை).

• 'ஆர். எஸ் . எஸ் தலைமையிலான சங்கப்பரிவாரங்களின் மதவெறித் தூண்டலால் சிறுபான்மைச் சமயத்தாருக்கு எதிராகப் படுகொலைகளும், கலவரங்களும் திட்டமிட்டு நடத்தப்படுவதைக் கண்டித்தும், இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் தரும் சமயச் சார்பின்மையைப் பேணிக்காக்கவும் தமிழக ஆயர்கள் பேரவைத் தலைவர் ஆயர் பீட்டர் ரெமிஜியசு அறிக்கையிட்டிருக்கிறார்கள். (காண். நம் வாழ்வு, 11.01.2015, பக். 5-6).

• பாரதிய ஜனதா ஆட்சியின் புதிய கல்விக் கொள்கை வரைவானது வேதகாலக் கல்வியையும், குருகுல முறையையும் கொண்டுவந்து மாணவர்கள் மத்தியிலே பாகுபாட்டைப் புகுத்த முயற்சிப்பதையும், இந்தியப் பன்மைப் பண்பாட்டை, இந்துத்துவ ஒற்றைக் கலாச்சாரத்தால் அழிக்க முனைவதையும், கல்விப் பணியில் கிறிஸ்தவர்கள் பங்களிப்பை இருட்டடிப்பு

செய்து வரலாற்றை மறைப்பதையும் கண்டித்து அறிக்கையிட்டிருக்கிறது (காண், நம் வாழ்வு, 07.08.2016, பக். 11,12).

## நிறை-குறை ஆய்வு

• தமிழகச் சூழலுக்கு ஏற்ப ஆயர்கள் சமுதாயப் போதனைகளைத் தந்திருப்பதற்காக அவர்களைப் பாராட்ட வேண்டும். இன்னும் குறிப்பாகச் சொன்னால், தமிழ் சமுதாயத்தில் மிகவும் அதிகமாகப் பாதிக்கப்படுகின்ற தலித் மக்கள், பெண்கள், ஒருங்கிணைக்கப்படாத தொழிலாளர்களுக்குத் தங்களது போதனைகளில் முன்னுரிமை கொடுத்திருப்பது மிகவே பாராட்டுதற்குரியது.

• இரண்டாவது, தமிழகத் திருஅவையில் 98 விழுக்காடு இருக்கும் பொது நிலையினரது பங்கேற்பும் பங்களிப்பும் இல்லாமல், திருஅவை வளம்பெற முடியாது என்ற ஆயர்களது உணர்வு நலமானது. இதுபோல உயிர்த்துடிப்பும், செயல் ஈடுபாடும், விமர்சன மனநிலையும் உள்ள இளைஞர்களை விடுத்து, தமிழகத் திருஅவை உயிரோட்டமுள்ள திருஅவையாக விளங்க இயலாது என்ற உணர்வும் நலமானதே.

• மூன்றாவது, ஆணாதிக்கச் சமுதாயத்திலும், திருஅவையிலும் பெண்களுக்கு முன்னுரிமை கொடுத்து, அவர்களது சமத்துவ உரிமைக்காகக் குரல் எழுப்பி, மக்களைப் போராட அழைப்பது சிறப்பானது. '**பெண்களைச் சமமாக மதித்துப் போற்றாத எந்த சமுதாயமும் எக்காலத்திலும் முன்னேறாது**' என்பது நமது கவனத்தில் இருக்க வேண்டிய ஒன்று.

• நான்காவது, பல்வேறு பங்கேற்பு அமைப்புகளையும் பணிக்குழுக்களையும் உருவாக்கி, இறையாட்சிப் பணிகளை சமய-சமூகத் தளங்களில் முன்னெடுக்க முனைந்திருக்கும் செயல் திட்டங்களும், செயல்பாடுகளும் பாராட்டப்பட வேண்டியவை.

• ஐந்தாவது, தமிழகச் சமூகப்பணிமையம், கிறித்தவ வாழ்வுரிமை இயக்கம் - இவற்றின் வழியாக சமுதாய - அரசியல் ஈடுபாட்டுச் செயல்களுக்கு வழிவகுத்திருப்பதும் போற்றப்பட வேண்டும்.



## குறைகளைக் களைந்து நிறைவை நோக்கி நகர...

**1. பழைய சிந்தனையில் புதிய இரசம்:** தமிழக ஆயர்களின் சமுதாயப் போதனைகள் ஓரளவு காலத்திற்கும் சூழலுக்கும் ஏற்பப் புரட்சிகரமாக இருக்கின்றன. ஆனால், போதனைகள் செயல்பாட்டின் ஒளியை அதிகம் காண இயலாத அளவுக்குத் தமிழகத் திருஅவையின் நிறுவன அமைப்புகள் இன்னும் கெடுபிடியாகவும், இறுக்கமாகவும் இருக்கின்றன. இதனால், போதனைக்கும் செயல்பாட்டுக்கும் இடையே ஒரு பெரிய இடைவெளி இருக்கிறது. இதை சிறிது சிறிதாகக் குறைக்கும் வழிகளை ஆயர்கள் கண்டுபிடிக்க வேண்டும்.

நீதிக்கான போராட்டங்கள் என்று வரும்போது, திருஅவை தனது நிறுவன அமைப்புக்களை காத்துக்கொள்வதிலே அதிகக் கவனம் செலுத்துகிறது. நீதியைக் கைகழுவிவிடுகிறது. மேலும், மரபுப் பணிகளைக் கடந்து சமுதாய மாற்றுப் பணிக்கு, விடுதலைப் பணிக்கு நிறுவனத் திருஅவை அதிகம் ஆதரவு கொடுப்பதில்லை என்பது உண்மை. மாறிவரும் காலச் சூழலுக்கு ஏற்ப, மாற்றுப் பணிகள் உருவாக்கப்பட வேண்டும்.

**2. அரசியல் செயல்பாடு அவசியம்:** அரசியல் செயல்பாடுகள், அரசியல் குறுக்கீடுகள் செய்வதிலிருந்து தமிழகத் திருஅவை இன்னும் பெரும்பாலும் விலகியே நிற்கிறது. கிறித்தவர்கள் அரசியல் விழிப்புணர்வு பெற்று செயல்படத் தடையாயுள்ள அவர்கள் சார்ந்திருக்கும் அரசியல் கட்சிகள், சாதிகள், சமயப்போக்குகள், குறுங்குழுக்கள் இவைகளின் ஆதிக்கத்திலிருந்து விடுபட்டு, சமூக நீதியை, மானிட உரிமைகளை, மனித நேயத்தை நிலைநாட்டும் சமயம் கடந்த அரசியல் போராட்டங்களில், குறிப்பாகப் பொதுநிலையினர் ஈடுபடும் முன்னெடுப்புக்கள் காலத்தின் கட்டாயமாகும்.

**3. பரந்துபட்ட பார்வை - செயல்பாடு தேவை:** கிறித்தவர்கள் தாக்கப்படும்போது, கத்தோலிக்க நிறுவனங்களுக்குப் பாதிப்பு ஏற்படும்போது, கிறித்தவக் கோட்பாடுகளுக்கு எதிர்ப்பு வரும்போது ஆயர்களும், கிறித்தவர்களும் போராடத் தெருவுக்கு வருகின்றனர். 1992-இல் பாபர் மசூதி இடிக்கப்பட்டபோது, 1995-இன் இறுதியில் தமிழகத்தின் தென்மாவட்டங்களில் சாதியக் கலவரங்கள் வெடித்தபோது, தற்போது (2016) காசுமீரில் சாமானியர்

உயிரைத் தியாகம் வைத்து தங்களது சுயநிர்ணய உரிமைக்காகப் போராடும்போது கத்தோலிக்கத் திருஅவை பெரும்பாலும் பார்வையாளராகவே இருக்கிறது. அதிகம் போனால், பாதிப்பில்லா, ஈடுபாடற்ற ஓர் அறிக்கையோடு அமைந்துவிடுகிறது.

எங்கல்சு குறிப்பிடுவதுபோல “தொடக்க காலத்தில் கிறித்தவம் ஒடுக்கப்பட்ட மக்களின் இயக்கமாக இருந்தது. முதலில் அது அடிமைகள், எந்த உரிமைகளும் அற்ற ஏழைகள், விடுவிக்கப்பட்டவர்கள் இயக்கமாகத் தோன்றியது.”[21] பரந்துபட்ட இறையாட்சிப் பார்வையோடு சமுதாய நீதியை, சமதர்ம சமுதாயத்தை, சமயச் சார்பற்ற சனநாயகத்தை இலக்காகக்கொண்ட அடித்தள மக்கள் இயக்கங்களை (அன்பியங்கள் தளத்தில்) கட்டி எழுப்பவும், இத்தகைய பிற இயக்கங்களோடு இணைந்து போராடவும், இதற்குத் தடையான அதிகாரக் குவிப்பு மையங்களை (திருஅவை அமைப்புகள் உட்பட) உடைத்து, புத்துருவாக்கம் செய்யும் முன்னெடுப்புத் தேவை (எரே 1:10).

**4. தமிழகத் திருஅவையின் போதனையா?:** தமிழகத் திருஅவையின் சமுதாயப் போதனை என்கிறோம். ஆனால், எதார்த்தத்தில் இது தமிழக ஆயர்களுடைய போதனையாகவே இருக்கிறது. மக்கள்தான் திருஅவை என்கிறோம்; ஆனால், திருஅவையின் போதனை எனும்போது அது தமிழக ஆயர்களது போதனையாய் இருக்கிறது. ஏனெனில், ஒப்பீட்டளவில் ஆயர்களைவிட மக்கள்தான் சமுதாய எதார்தங்களோடு நெருங்கிய தொடர்பு கொண்டு வாழ்பவர்கள். மேலும், போதனைகளைச் செயல்படுத்துவதில் மக்களது பங்கு இல்லையெனில் போதனை ஏட்டளவில்தான் இருக்கும். செயல்பாட்டில் மக்கள் ஈடுபாடு அதிகம் இருக்க வேண்டுமென்றால், அவர்களுடைய வாழ்வு அனுபவங்களும், அவர்களது பங்களிப்பும் சமுதாயப் போதனை உருவாக்கத்தில் இடம் பெற வேண்டும். அப்போதுதான் அது உண்மையில் தமிழகத் திருஅவையின் போதனையாக, அமையும்.

**5. நம் வீட்டை முதலில் சுத்தம் செய்வோம்:** நிறைவாக, தலித் மக்களுடைய மனித மாண்பு, உரிமைகள், நீதிக்காகப் போராட வேண்டுமெனத் தமிழக ஆயர்கள் போதிப்பது சரியே. ஆனால் தமிழகத் திருஅவை அதிகார தலைமைத்துவத்திற்குள் சாதியப் பார்ப்பனியப் படிமுறையையும் சாதி சார்ந்த செயல்பாடுகளையும் தக்கவைத்துக்கொண்டு,



எப்படி தார்மீக உணர்வோடு புறத்தே இருக்கும் சாதி அமைப்புச் செயல்பாடுகளை எதிர்க்க முடியும்? தமிழகத்தில் புனித அருளானந்தர், அருள்பணியாளர்கள் திரிங்கால், கௌசானல், பேராயர் பீட்டர் இலெயெனார்டு போன்ற வெளி நாட்டவர்கள் சாதியை எதிர்த்து நிலைப்பாடு எடுத்து நின்றதுபோல, ஏன் தமிழக ஆயர்களும் அருள்பணியாளர்கள், அருள்சகோதரிகளும் நிலைப்பாடு எடுக்க முடியவில்லை என்று ஆன்ம சோதனை செய்து மனம் திரும்புவதற்கான வழிகளைத் தேட வேண்டும். சாதி, தீண்டாமை ஒழிப்புப் போராட்டம் தமிழகத் திருஅவைக்குள் தொடங்க வேண்டும். இயேசுவும் இதைச் செய்தார். 17.11.2003 அன்று திருத்தந்தை இரண்டாம் யோவான் பவுல் தமிழக ஆயர்களுக்குக் கொடுத்த அறிவுரையை இவண் நினைவு கூறுவோம். “நீங்கள் (தமிழக ஆயர்கள்) எல்லாக் காலத்திலும் தலித் மக்களுக்குத் தனிக்கவனம் செலுத்துவதில் உறுதியாய் இருக்க வேண்டும்... சாதிய அடிப்படையிலான எத்தகைய முற்சார்பு வெளித்தோற்றமும்கூட உண்மையான மானிடத் தோழமைக்கு எதிரான அறிகுறி; ஆக்கப்பூர்வமான அருள்வாழ்வுக்கு அச்சுறுத்தல், திருஅவையின் நற்செய்திப் பணிக்கு மிக மோசமான தடைக்கல் ஆகும்.”[22]

சமுதாயப் போதனையை செயல்படுத்தத் தேவையான சமுதாய ஆன்மீகம் / சமுதாய அருள்வாழ்வு மிகவும் இன்றியமையாதது. இன்றிருக்கும் ஆன்மீகம் பெரும்பாலும் தனிமனித, உளவியல் சார்ந்த, பக்திப் போதை நிறைந்த ஆன்மீகமாக இருக்கிறது. மாறாக, நம் தமிழ் சமுதாயத்தில் இறையாட்சியைக் கொண்டுவர, சமூகம் சார்ந்த, நீதிவயப்பட்ட இயேசுவின் இறைவாக்கினர் தன்மைகொண்ட ஆன்மீகம் உருவாக்கப்பட வேண்டும்.[23]

## அடிக்குறிப்புகள்

1 Catholic Social Teaching – Our Best Kept Secret – (ed.) by Edward P. De Berri and others. Orbis, New York, 2004, p. 63. This is the fourth revised and expanded edition.

2 Promotion of Social Justice, *Octagesima Adveniens,* Indian Social Institute, New Delhi, 1980, p. 28. தமிழ் மொழிபெயர்ப்பு என்னுடையது.

3 மேலது. எண் 4; காண் “ஒவ்வொரு பொது விதியும்... மதிக்கப்படவும் நடைமுறைப்படுத்தப்படவும் வேண்டுமென்றால் அது பண்பாட்டுமயமாக்கப்பட

வேண்டும்.'' திருத்தந்தை பிரான்சிசு. *அன்பின் மகிழ்ச்சி*, (தமிழாக்கம் - அருள்பணி சு. சந்தியாகுராசா மற்றும் பலர்), தேடல்வெளியீடுகள், திருச்சிராப்பள்ளி, 2016, பக்கங்கள் 2-3.

4 காண். ச. தே. செல்வராசு, *ஆன்ம வாழ்வு – சில தேடல்கள், தெளிவுகள், தொடர் தேடல்கள்*, வைகறைப் பதிப்பகம், திண்டுக்கல், 2004, பக். 107.

5 1982 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 14-15 தேதிகளில் திருச்சியில் நடந்த தமிழக ஆயர்கள் கூட்டத்திலிருந்து மக்களுக்குக் கொடுக்கப்பட்ட போதனை, காண், ச.தே. செல்வராசு, *ஆன்ம வாழ்வு* – மேலது, பக். 108.

6 காண். *ஆன்ம வாழ்வு*, மேலது, பக். 108.

7 அதே.

8 காண், *நம் வாழ்வு* 16.10.1988, பக்கங்கள். 7-8.

9 அருள்கிராமத்தார் அருள்தாஸ் மற்றும் 13 பேர், *திருஅவையின் சமூகப் போக்கு – அன்றையத் தந்தையரும் இன்றைய ஆயர்களும்* - வைகறைப் பதிப்பகம், திண்டுக்கல், 1993, பக்கங்கள். 137-138.

10 அருள்கிராமத்தார், மேலது, பக். 160.

11 பணி. க. வலண்டின் ஜோசப், "தமிழக ஆயர்களின் சமுதாயப் படிப்பினை," *புத்துலகம் படைக்கவே*, மேலது, பக். 189.

12 *ஆன்ம வாழ்வு*, பக். 111.

13 மேலது.

14 *திருச்சபை சந்திக்கும் சவால்கள், தமிழகத் திருச்சபை மதிப்பீடு*, திருச்சி, 1944, பக். 12.

15 பணி. க. வலண்டின் ஜோசப், மேலது, பக். 187.

16 காண், பேராயர் ஆரோக்கியசாமி அறிக்கை, *நம் வாழ்வு*, 01.06.2004.

17 காண், அருள்கிராமத்தார், மேலது, பக். vi.

18 காண், அருள்கிராமத்தார், மேலது, பக். 167.

19 காண், தமிழக ஆயர்கள் பேரவை, *தமிழகக் கத்தோலிக்கத் திருச்சபையின் அருள்பணித்திட்டம்*, தமிழக ஆயர்கள் பேரவை வெளியீடு, 2008, பக்கங்கள் 5-46 முடிய.

20 காண், *கோட்டாறு மறைமாவட்டத்தில் கிறித்தவ வாழ்வும் பணியும்*, 1986. இத்திருமுகம் முழுவதையும் வாசித்துப் பயனடையலாம். பிற மறைமாவட்டங்களும் இவ்வாறு செய்வது பயன்தரும்.

21 cf. Karl Marx and Frederick Engles, *On Religion,* New York, 1966, p. 316.

22 பணி. செபமாலைராசா, சே.ச., *"சாதி ஒழிப்பும் தமிழகத் திருச்சபையும்," புத்துலம் படைக்கவே,* மேலது, பக்கங்கள், 200-201.

23 காண், Donal Dorr, *Option for the Poor – A Hundred years of Catholic Social Teaching* – Orbis, New York, 1992, p. 149. This is the revised and expanded edition.



# பிற்சேர்க்கை

## திருஅவையின் சமுதாயப் படிப்பினை ஏடுகளில் முக்கியமானவை

1. தொழிலாளர் நிலைமை (*Rerum Novarum*),
   13–ஆம் லியோவின் சுற்றுமடல் : 1891
2. சமூக ஒழுங்கமைப்பு (*Quadragesimo Anno*),
   11–ஆம் பயஸின் சுற்றுமடல் : 1931
3. 12–ஆம் பயஸின் கிறிஸ்மஸ் செய்தி : 1942
4. அன்னையும் ஆசிரியையும் (*Mater et Magistra*),
   23–ஆம் ஜானின் சுற்றுமடல் : 1961
5. அவனியில் அமைதி (*Pacem in Terris*),
   23–ஆம் ஜானின் சுற்றுமடல் : 1963
6. இன்றைய உலகில் திருஅவை (*Gaudium et Spes*),
   2–ஆம் வத்திக்கான் சங்கம் : 1965
7. மக்களின் முன்னேற்றம் (*Populorum Progressio*),
   6–ஆம் பாலின் சுற்றுமடல் : 1967
8. 'நீதி, அமைதி, திருஅவையின் ஏழ்மை' – மெதயீன் முடிவுகள்
   இலத்தீன் அமெரிக்க ஆயர்கள் (*CELAM*) பேரவைகள்
   குழுவின் போதனை : 1968
9. அரசியல் அதிகாரம், கருத்தமைவு. சமூக ஈடுபாடு
   (*Octogesima Adveniens*),
   6–ஆம் பாலின் மறைத்தூது திருமுகம் : 1971

10. உலகில் நீதி (*Justice in the World*), ஆயர் மன்றம் : 1971

11. இன்றைய உலகில் நற்செய்தி அறிவிப்பு (*Evangelii Nuntiandi*), 6-ஆம் பாலின் மறைத்தூது அறிவுரை : 1975

12. புவேப்லா ஏடு : 1979

13. மனித உழைப்பு (*Laborem Exercens*), 2-ஆம் ஜான் பாலின் சுற்றுமடல் : 1981

14. விடுதலை இறையியலில் சில அம்சங்கள் பற்றிய அறிக்கை, விசுவாசப் போதனைப் பேராயம் : 1984

15. கிறித்தவ சுதந்திரம், விடுதலை பற்றிய அறிக்கை, விசுவாசப் போதனைப் பேராயம் : 1986

16. 'திருஅவையின் சமூக ஈடுபாடு' (*Sollicitudo Rei Socialis*), 2-ஆம் ஜான் பாலின் சுற்றுமடல் : 1987

17. 'குருத்துவப் பயிற்சியில் திருஅவையின் சமுதாயப் படிப்பினைகள்', கத்தோலிக்கக் கல்விப் பேராயம் : 1988

18. நூறாம் ஆண்டு (*Centesimus Annus*), 2-ஆம் ஜான் பாலின் சுற்றுமடல் : 1991

19. உண்மையில் அன்பு (*Caritas in Veritate),* 16-ஆம் பெனடிக்ட் சுற்றுமடல் : 2009

20. மகிழ்வின் நற்செய்தி (*Evangelii Gaudium),* பிரான்சிஸின் சுற்றுமடல் : 2013